Jude

www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 12/00

දිනමුරසු වාරමලර් ஜூன். 27-ஜூலை.03,1999

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 315



## யுத்த களத்தில் கிரிக்கெட் எதிரொலி

## தொண்டாவுக்கு சாட்டையடி

## இராஜதந்திரியின் அலசல்

## மன்றில் அவமானம்

## செம்மணி புதைக்கப்பட்ட உண்மைகள்



## ஆகாய-கடல்-வெளி சமர்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## தோண்டலும் அவதானிப்பும்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

செம்மணி புதைகுழி
தோண்டும் படலம்
பரபரப்பாக நடந்தேறியுள்ளது!

புதைகுழி விவகாரத்தை
முற்றாகவே மூடிமறைக்க
பலத்த முயற்சிகள் நடந்தன!

பொறுப்பான அமைச்சர்கள்
சிலர்கூட
புதைகுழி விவகாரம் பொய்
என்று பாராளுமன்றத்திலேயே
பதில் கூறியிருந்தனர்!

தமிழ்க் கட்சிகள்
வழக்கம் போல சம்பிரதாயமாக
கோரிக்கைவிட்டன.
அதற்கும் வழக்கம் போல
'விரைவில் நடவடிக்கை'
என்று கூறப்பட்டது!

ஆனால் பதினொரு மாதங்களாக
இழுத்தடிப்புகள் தொடர்ந்தன!
தமிழ்க் கட்சிகளும்
மௌனம் சாதித்தன!

செம்மணிப் பகுதியில்
சந்தேகத்துக்கிடமான நடமாட்டங்கள்
பற்றிய புகார்களைக்கூட
அரசு செவி மடுக்காதிருந்தது.

காணாமல் போனோரின்
குடும்பத்தினரும், உறவினரும்
தொடர்ந்து குரல் கொடுத்தனர்!

மனித உரிமை அமைப்புக்கள்
ஒரு சிலவும்
ஓயாது பிரச்சனை கிளப்பின!

முரசு உட்பட பத்திரிகைகளும்
அடிக்கடி புதைகுழி விவகாரத்தை
நினைவூட்டிக் கொண்டிருந்தன!

சர்வதேச மன்னிப்புச்சபை
கடும் கண்டனம் தொடுத்தது!

மன்னிப்புச் சபையின்
கண்டனத்தைக் கண்டுதான்
ஆட்சியாளர்கள் ஆடிப்போயினர்!

தோண்டுவதைத் தவிர
வேறு வழியில்லை என்னும்
நிர்ப்பந்தத்தின் பின்னர்தான்
வேண்டா வெறுப்பாக
தோண்டும் முயற்சிகள்
தொடங்கப்பட்டன!

செம்மணி புதைகுழியை
தோண்டுவதைவிட
தோண்டாதிருப்பது மூலம்தான்
வெளியுலகில் கெட்ட பெயர்
என்பது வெளிநாட்டமைச்சுக்கு
நன்கு புரிந்துவிட்டது!

இதன் பின்னர்தான்
செம்மணி விவகாரத்தில்
வெளிநாட்டமைச்சு
விழுந்தடித்து அறிக்கை விட்டது!

செம்மணி புதைகுழிப் பகுதி
யாழ் நீதிபதியால்
செம்மையாக நோக்கப்பட்டதாக
அறிக்கை கூறியது!

இதனை யாழ் நீதிபதி
மறுத்ததும்,
வேறு வழியின்றி
வெளிநாட்டமைச்சு
தவறை ஒப்புக்கொண்டதும்
நாடறிந்த செய்தி!

வெளிநாட்டமைச்சின்
இந்த அறிக்கை அவசரம்
செம்மணி விவகாரம்
உலக அரங்கில்
இலங்கை அரசுக்கு
ஏற்படுத்தியிருந்த நெருக்கடியின்
பிரதிபலிப்புத்தான்!

எனவே, உள்நாட்டில்
செம்மணி புதைகுழி தொடர்பான
தொடர் வற்புறுத்தல்களே
வெளியுலகின் கவனத்தை
திருப்பியிருந்தன!

வெளியுலகின் கவனம்
திரும்பியதால்தான்
புதை குழி தோண்டும் படலம்
தவிர்க்க முடியாத நிர்ப்பந்தமானது.

புதைகுழி தோண்டுவதை
பார்வையிட வந்திருந்த
சர்வதேச அவதானிகள்
ஆட்சியாளரை பாராட்டியதாக
செய்திகள் வந்திருந்தன!

அது உண்மையானால்
தமிழ்பேசும் தரப்பு
தலையில் அடித்துக்கொள்ளட்டும்!

ஒருவருடமாக காலத்தை
இழுத்தடித்து
நடைபெற்ற நாடகங்களை
வெளியுலகுக்கு விளக்க
யாருமே இல்லையா?

மெல்ல ஆறப்போட்டு
மறந்த கதையாக
மூடி மறைக்க
எத்தனை முயற்சிகள்...?

அத்தனை முயற்சிகளையும்
முறியடித்தது
காணாமல் போனோரது
குடும்பங்களதும்,
கட்சி சார்பற்ற அமைப்புகளதும்
சளையாத முயற்சிகள்தானே?

அந்த முயற்சிகளின்
விளைவுகளால்தானே
சர்வதேச மன்னிப்புச் சபை
[illegible] அமைப்புக்கள்
[illegible]கு அழுத்தமளித்தன!

தற்போது கூட
புதைகுழி தோண்டல்
பற்றிய
பரபரப்பான செய்திகளால்
நம் விழிப்பை
தளர்த்திவிடக்கூடாது!

மூடிமறைப்புகள்
என்னென்ன நடந்துள்ளன?
இனி என்ன
மூடிமறைப்புகள் நடக்கவுள்ளன?
என்பதை அவதானிக்கவேண்டும்!

ராஜபக்ஷ கூறியது
உண்மையென்றாகிவிட்டதால்,
அவர் சுட்டிக்காட்டும்
அதிகாரிகள்மீது
எத்தகைய நடவடிக்கைகள்
எடுக்கப்படுகின்றன
என்பதையும் நோக்க வேண்டும்!

ராஜபக்ஷ கூறியுள்ள
திடுக்கிடவைக்கும் உண்மைகள்
குடாநாட்டில் நடைபெற்றது
மக்களை விடுவிக்கும் யுத்தம்,
என்பதை பறைசாற்றியுள்ளன!
ஆம், தமிழ் மக்களை
உலக பந்தங்களில் இருந்து
'விடுவிக்கும் யுத்தம்'
செம்மையாக நடந்திருக்கிறது!

மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை,
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்



## பூனையின் பல்

உலகம் நல்லதா, கெட்டதா? என்ற கேள்வியைக் கேட்டார் ஒருவர்.

பூனையின் பல் நல்லதா, கெட்டதா? என்று திருப்பிக் கேட்டார் அவரிடமே! கேள்வி கேட்டவர் குழம்பிப்போனார். பதில் அளித்தவர் விளக்கினார்.

"தாய்ப் பூனையின் பல் நல்லதா, கெட்டதா? என்று அதன் குட்டியிடம் கேட்டால் அது என்ன சொல்லும்." கருணைக்கு இருப்பிடமாக அது இருக்கிறது என்றுதானே சொல்லும்! பூனைக்குட்டி, பூனைக்குட்டி தாயையே முற்றிலும் நம்பி இருக்கிறது. சில சமயம் அது குட்டியை தன் பல்லால் கவ்விக்கொண்டு போய் சாம்பல் குழியில் வைக்கிறது. வேறு சமயம் படுக்கையடியில் பாதுகாப்பாக வைக்கிறது. இவ்விதம் தாய், குட்டியை பல்லாலேயே காப்பாற்றுகிறது. எனவே பூனைக்குட்டிக்கு பூனையின் பல் கருணையின் இருப்பிடமாக விளங்குகின்றது. அதே தாய்ப்பூனையின் பல்லைப் பற்றி ஒரு எலியிடம் கேட்டால் அது என்ன சொல்லும்? "இந்தப் பாழாய்ப் போன தெய்வம் பூனையைத்தான் படைத்தான் ஒழியட்டும்! குத்தூசியைப் போன்று அதற்கு பல்லையும் படைத்துவிட்டிருக்கிறானே!" உலகம் நல்லதா கெட்டதா என்பது உலகத்தின் தன்மையைக் காண்பவரைப் பொறுத்தது என்று கூறினார் ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

தொகுப்பு: கோஸலந்தை எஸ்.என். ராஜரட்ணம்.

## உழைத்தே உண்

இமாம் ஜஃபர் சாதிக் (றழி) அவர்களிடம் ஒரு நாள் ஒரு மனிதர் வந்தார். அவர் மிகவும் குழம்பிய நிலையில் இருக்கிறார் என்பது அவரைப் பார்த்த மாத்திரத்தில் விளங்கியது.

இமாமவர்களைப் பார்த்து, "பெரியவரே! நானோ பரம ஏழை எனக்கு அன்றாட உணவுக்குக்கூட வழியில்லை. தயை கூர்ந்து பெரு மனம் வைத்து எனக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள். அருள் சொரிந்து எனக்கு 'றிஸ்க்' (ஆகாரம்) அளிக்குமாறு அவரிடம் பிரார்த்தியுங்கள்!" என்று பணிவோடு வேண்டினார்.

இருந்தாலும் இமாம் சாதிக் அவர்களோ பிரார்த்திக்க மறுத்து விட்டார்கள். மிகவும் ஆச்சரியமடைந்த அம்மனிதர், "எனக்காக ஏன் பிரார்த்திக்க மறுக்கிறீர்கள் பெரியவரே?" எனக் கேட்க,

அதற்கு இமாமவர்கள்,

"நாமே முயற்சி செய்து நமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும். பிறரை நாடக்கூடாது என்று அல்லாஹ் எம்மைப் பணித்துள்ளான். அப்படியிருக்க, வீட்டிலே உட்கார்ந்துகொண்டு, 'றிஸ்க்' கிடைக்க வேண்டுமென்று பிரார்த்தனை மட்டும் புரிந்தால் போதுமா? அதனை அல்லாஹ் விரும்புவானா? ஆகவே, அல்லாஹ்வின் கட்டளைப்படி உனது 'றிஸ்க்'கை நீயே கஷ்டப்பட்டு உழைத்துத் தேடிக்கொள்!" என்று நயமாகச் சொல்லி அனுப்பினார்கள் இமாம் சாதிக் (றழி) அவர்கள்.

ஆக்கம்: ஜப்பார் எம். ஜெஸில், சாய்ந்தமருது-08.

# கவிதைப் போட்டி இல. 312

## பரிசுக்குரிய கவிதை

### பா(ர்)வைகள்

பாதிப் பார்வையின்
பாதிப்பை விட(வும்)
தூர நோக்கில்லா...
துயரம் கொடுமை!

க. நாகராசா-நுணாவில்,
சாவகச்சேரி.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

### யார் இவர்?

"சிவனுக்கு கண்கொடுத்த
கண்ணப்பரோ-அல்ல
செல்துண்டுக்கு கண் கொடுத்த
செந்தமிழனோ?"

வை. சரண்யா-பெரியபோரதீவு.

### தமிழ்க் கட்சிகள்

இன்றைய அரசின்
அரசியல் களத்தில்
துள்ளி விளையாடும்
தமிழ்க் கட்சிகளின்
நிலையும் இதுதான்!!

செ. சுகுமார்-மாங்கேணி,
வாகரை.



### என்ன பயன்?

கண்ணான
கண்மணிகள்!
கை தவறி
போனபின்!
ஒற்றைக் கண்ணென்ன
உயிரே
இருந்தென்ன லாபம்?

மு.பெ.ஜெயராஜ்- ஹொப்டன்.

### பார்த்தாயா?

"கண்ணான கண் போச்சு!
கற்கண்டு மொழி போச்சு!
மண்ணான மண் போச்சு!
மாநிலமே பார்த்தாயா?"

செல்வி இ. தமிழரசி-ஈச்சந்தீவு,
கிண்ணியா.

### சொந்தம் இல்லை

கண்ணால் காண்பதெல்லாம்
கண்களுக்கு சொந்தமில்லை.
நீ யுத்தத்தை பார்த்ததனால்
உன் கண் உனக்கு
சொந்தமில்லை.

எஸ். பிரேமவதனி-தெமட்டகொடை.

### இறைவா நீயே சொல்!

புண்பட்ட நெஞ்சங்கள் புண் ஆற்ற முன்பே
கண்போகும் துயர்மிகு காலமொன்று வரவே
என் செய்வோம் இறைவா இது எமது விதியா?
என்றழுது புலம்புவதே நாளும் இவர் கதியா?

பசறையூர் மல்லிகா பத்மநாதன்.

### என்ன செய்ய...?

செல் அடியில்
கண் போனது..?
செம்மணியில்,
என் உறவுகளே
போனது!

எஸ்.பி. பாலமுருகன்-பதுளை.

### மருந்துக்கு...?

அறுந்த கொடும் போரால்-என்னில்
இருந்தவோர் கண்ணும் போச்சு
அருந்தநீ ரில்லா முகாமில்-நான்
மருந்துக்கு எங்கே போவேன்?

ச. மகாலிங்கம்-வெலிமடை குரூப்,
வெலிமடை.

### துணிவு

"இரட்டைக்கண் கொண்டோர்,
ஒற்றைக் 'கண்' கொண்டு
ஒற்றைக் கண் கொய்தாலும்,
இற்றரையில் இனிதுவாழ
இருக்கிறது துணிவு உன்னில்!"

நா. ஜெயபாலன், பிபிலை.

### புலம்பும் கண்

அழுதழுது
காய்ந்த ஒரு விழியில்
மறு பொழுது
எது நேரும் நம் வழியில்?
என் மகவு
செம்மணிப் படுகுழியில்!

மயில்வாகனம் கேகயராஜா-மட்/கரவெட்டி.

# கவிதைப் போட்டி இல.315




எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 03.07.1999

முகவரி: கவிதைப் போட்டி இல.315
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.


# வாசக(ர்)சாலை




## கணிப்பு கச்சிதம்

தென் மாகாண சபையில் ஜே.வி.பி. பிரதான பாத்திரம் வகிக்கும் என்றும், அதன் உதவியுடன்தான் மாகாண ஆட்சியை பொ.ஜ.முன்னணி நிறுவும் என்றும் முரசு தந்த கணிப்பு அபாரம். முடிவுகள் அவ்வாறே அமைந்தது கச்சிதம். பாராட்டுக்கள்.

எம்.இர்பான், காலி.



## வாரியிறைத்தனர்

யாழ் குடாநாடு இன்று திறந்தவெளிச் சிறைச் சாலையாக மாறிவிட்டது. அபிவிருத்தி என்றும் வேலை வாய்ப்புக்கள் என்றும் தமிழ்க் கட்சிகள் தேர்தல் முழக்கங்களை வாரியிறைத்தன. அதில் துளியளவுகூட நிறைவேறவில்லை. நிறைவேறவும் மாட்டாது. தமிழ்க் கட்சிகள் அரசுக்கு நோகாமல் தாளம் போடுகின்றன. புலிகளை எதிர்க்க மட்டும் முன்நின்று மார்தட்டும் இவர்கள், மறுதரப்பு அநீதிகளை எதிர்க்காது பெட்டிப் பாம்புகளாக சுருண்டு போகிறார்கள்.

ஆ.சிவபாதம், நல்லூர்.

## அவசர காலம்

அவசரகாலச் சட்டத்தை எதிர்க்க மறுப்பதற்கு இ.தொ.கா. தலைமை கூறியுள்ள விளக்கம் மக்களை முட்டாள்களாக்கும் விளக்கமாகும். வீரவிதானவுக்கு எதிரான போராட்டத்திலும் இ.தொ.கா.வின் தடுமாற்றமும் ஊசலாட்டமும் வெளிப்படை! அவசரகாலச் சட்டம் தமிழ் மக்களுக்கு எதிரான சட்டம். அதனை ஆதரிப்பதை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது. மக்கள் முட்டாள்களல்ல.

சி.பிரான்சிஸ், அப்புத்தளை.



முரசு ஓர் அழகான நறுமணம் மிக்க மலர்மாலைபோன்றது! எந்த மலர் அழகு என்று சொல்லுவோமா? ஒவ்வொன்றும் அழகே! ஒவ்வொரு ஆக்கமும் ஓஹோதான்!

'திருமறை தரும் பொது நெறி' கட்டுரையின் ஒவ்வொரு அத்தியாயமும் 'ஆண்டவர்' என்ற சொற்றொடரை முதலாகக் கொண்டே ஆரம்பிக்கிறது, 'அற்புதமே!'

'அர்த்தமுள்ள இந்து மதம்' எழுதிய கவிஞர் கண்ணதாசன்தான் 'ஜேசு காவிய'மும் படைத்தார். இராமாயணத்தை எழுதிய சகோதரரே 'திருமறை தரும்பொது நெறி'யும் எழுதி வருகிறார்! அற்புதத்திலும் அற்புதமே!

'அற்புத தேவன் அவர் ஆற்றலை வளர்க்கட்டும்' எங்கள் வாழ்த்துக்கள்!

சித்தன்கேணி குணா, ராஜகிரிய.

## மூன்றாவது சக்தி

அன்பு முரசுக்கு:

தென் மாகாணசபைத் தேர்தல் பற்றிய முரசின் கணிப்பு துல்லியம். இனப்பிரச்சனைக்கு தீர்வு காண அரசும், ஐ.தே.கட்சியும் இணக்கம் கண்டால் போதும் என்பது இனிமேல் அர்த்தமற்ற கதை. ராஜதந்திரி கூறியது உண்மை. ஜே.வி.பி.யிடம் பொ.மு. அரசின் மாகாண சபைகளது 'ரிமோட் கண்ட்ரோல்' இருக்கிறது. அதனை மறந்துவிடக் கூடாது. ஆகவே, அரசு, ஐ.தே.க. ஒன்றுபட வேண்டும் என்ற பல்லவியை நிறுத்திவிட்டு, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு பாடுபடவேண்டும். முரசின் கருத்தே நம் கருத்து.

இ.பஞ்சலிங்கம், கரவெட்டி.

## தீர்ப்பும் கணிப்பும்

முரசு வந்தது வியாழன். தேர்தல் முடிவு வந்ததோ வெள்ளியன்று. வாக்காளர் தீர்ப்பளிக்க முன்னரே, தீர்ப்பை கணிப்பிட்டு தகவல் தந்துவிட்டாயே. ஐ.தே.கட்சி **ஆட்சியை பிடிக்கவே பிடிக்காது**. ஜே.வி.பி.யின் முதுகில் ஏறித்தான் பொதுஜன முன்னணி ஆட்சி நடத்தும் என்று அடித்துக் கூறியிருந்தாயே. வாழ்த்துக்கள்.

எ.ஃப். நிலாப்தீன்,
கொழும்பு-09.

## கோகிலா

'கோகிலா என்ன செய்துவிட்டாள்' முரசின் ஆரோக்கியமான தொடர். 'தாய்', 'தூக்குமேடைக் குறிப்பு' போன்ற அற்புதமான கதைகளை, உண்மைச் சித்திரங்களை தந்த முரசு, ஜெயகாந்தன் நாவலையும் தருவது சிறப்பு.

எஸ்.தயானினி, திருமலை.

அகிம்சையாலும், ஆயுதத்தாலும் வெள்ளையின அரசை தோற்கடித்த மாமனிதர் நெல்சன் மண்டேலா பற்றிய ஆசிரியர் கருத்து பிரமாதம். இரட்டைவேடம் போடும் கிளின்டனை கிழித்த முரசு மகத்தான மாமனிதரை புகழ்ந்திருப்பது வரவேற்கத்தக்கது.

பி. ஆர்.அசோககுமார்,
ஸ்டேம் போடில், டிக்கோயா.


மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266


## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.



படிப்பகம்

www.padippakam.com

# அரியாலை கிணற்றுக்குள் எலும்புகள்?

## அரசு அலட்சியம்! தமிழ்க் கட்சிகள் மௌனம்! மக்கள் விசனம்!

யாழ்ப்பாணம் அரியாலை, கொட்டடி போன்ற பகுதிகளில் புதைகுழிகள் இருப்பதாக ராஜபக்ஷ கூறியிருந்தார் அல்லவா? இது தொடர்பாக அரசாங்கம் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதேவேளை அரியாலைப் பகுதியில் ஒன்றுக்கு மேற்பட்ட புதைகுழிகள் இருப்பதாக அப்பகுதி மக்கள் பலரும் தெரிவித்துள்ளனர்.

அரியாலையில் உள்ள கிணறு ஒன்றுக்குள் ஐம்பதுக்கு மேற்பட்ட உடல்கள் போடப்பட்டன என்றும், அக் கிணறு மூடப்பட்ட நிலையில் உள்ளது என்றும் தகவல்கள் கூறுகின்றன.

தமக்குத் தெரிந்த தகவல்களை பொலிசாரிடம் தெரிவிக்க மக்கள் அஞ்சுகின்றனர். ராஜபக்ஷவை அழைத்து வந்து அரியாலையில் உள்ள புதைகுழியை தோண்டினால், தமக்கு தெரிந்த தகவல்களை கூறத் தயார் என்று அரியாலைவாசியான ஆசிரியர் ஒருவர் முரசுக்கு தெரிவித்தார்.

அரியாலையில்தான் சூரியக் கதிர் இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர் பலர் கைது செய்யப்பட்டனர்; காணாமல் போயினர். வேறு பகுதிகள் சிலவற்றில் கைதானவர்களும் அரியாலையில் வைத்து விசாரிக்கப்பட்டனர்.

எனவே அரியாலையில் ஒன்றுக்கு மேற்பட்ட புதைகுழிகள் இருக்க வாய்ப்புள்ளன என்றும் அரியாலைவாசிகள் கூறியுள்ளனர்.

அரியாலை மற்றும் கொட்டடி பகுதிகளில் புதைகுழிகள் இருப்பதாக தெரிவிக்கப்பட்ட பின்னரும், யாரும் அது குறித்து அக்கறைப்படாதது, காணாமல் போனோரின் குடும்பத்தினரிடம் பலத்த குமுறலை ஏற்படுத்தியுள்ளது.

"மனித உரிமை, ஜனநாயகம் என்று அறிக்கைகள் விடும் தமிழ்க் கட்சிகள் புதைகுழிகளை தோண்டுமாறு போராட்டம் நடத்தத் தயாரா?" என்று காணாமல் போனோர் சங்க உறுப்பினர் ஒருவர் கோபத்தோடு கேள்வி எழுப்பினார்.

**பாதுகாப்பு**

"அரியாலை-கொட்டடிப் பகுதிகளில் உள்ள புதைகுழிகளை தோண்டுவதற்கு முன்னர், அவை எங்குள்ளன என்று கண்டறிந்து பாதுகாப்பு வழங்கவேண்டும். அரச சார்பற்ற நிறுவனங்களது பிரதிநிதிகள் அப்பகுதிகளில் கண்காணிப்பில் ஈடுபட அனுமதி வழங்க வேண்டும்" என்று யாழ்ப்பாண அரச சார்பற்ற நிறுவன ஒன்றிய பிரதிநிதி முரசுக்கு தெரிவித்தார்.

ராஜபக்ஷ உட்பட கிருஷாந்தி கொலை வழக்கு குற்றவாளிகள் தமது கடைசி நேரத்தில் நல்ல காரியம் செய்ய நினைக்கின்றனர்.

அரசுக்கு மனித உரிமைகள்மீது அக்கறை இருக்குமானால் அவர்களை ஊக்குவித்து பல திடுக்கிடும் உண்மைகளை வெளியே கொண்டுவர முடியும்.

ஆனால் அரசின் நடவடிக்கைகள் அவர்களை ஊக்குவிப்பதற்கு பதிலாக எதிரிகளாக நோக்குவது போன்றே இருக்கின்றன.

ராஜபக்ஷ பொய்யர் அல்ல என்பது வெகு தெளிவாக தெரிந்த பின்பும் அவர் கூறிய புதைகுழி தகவல்களை அரசு உதாசீனம் செய்திருப்பது சரியல்ல. இப்போக்கு தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தியையே உருவாக்கும் என்று மனித உரிமை அமைப்பின் பிரதிநிதி ஒருவர் கூறியிருக்கிறார்.

# போரைத் தொடர்வதிலேயே சந்திரிக்கா நாட்டம்!

# பேச்சு நடத்த நாம் என்றும் தயார்!

## விடுதலைப் புலிகள் உத்தியோக பூர்வமாக தெரிவிப்பு

சர்வதேச மத்தியஸ்தத்தோடு, சிறிலங்கா அரசுடன் பேச்சு நடத்த தாம் தயாராக உள்ளதாகவும், சந்திரிக்கா அரசாங்கம் அதற்கு தயாரில்லை எனவும் புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர். இது தொடர்பாக தமது உத்தியோகபூர்வ பத்திரிகையான 'விடுதலைப் புலிகளி'ல் அவர்கள் தெரிவித்துள்ள கருத்துக்கள் பின்வருமாறு:

"இலங்கைத்தீவின் இனச் சிக்கலுக்கு சமாதான வழி முறையில் நியாயமான நிரந்தர தீர்வொன்றைக் காணும் இலக்குடன் சிறிலங்கா அரசுடன் அரசியல் பேச்சுக்களில் ஈடுபட புலிகள் இயக்கம் தயாராகவே உள்ளது.

**பதிலில்லை**

கடந்த (1998 நவம்பர்) மாவீரர் நாள் செய்தியில் தலைவர் பிரபாகரன் அவர்கள் சமாதான முயற்சி பற்றிய தெளிவான கருத்தை முன்வைத்திருந்தார். சர்வதேச மத்தியஸ்தத்தையும் கோரியிருந்தார்.

ஆறுமாதங்கள் கடந்துவிட்ட இன்றைய நிலையிலும் தலைவரின் சமாதான அழைப்புக்கு சாதகமாக சந்திரிக்கா அரசு பதிலளிக்கவில்லை. இதற்குப் பதிலாக போர்க் கூச்சல்களே சிறீலங்கா அரசின் பக்கமிருந்து தொடர்ச்சியாக வந்தவண்ணமுள்ளன.

படையினர் கைப்பற்றியுள்ள தமிழர் நிலத்தின் விஸ்தீரணத்தை உதாரணத்துக்காக காட்ட விரும்பும் சந்திரிகா அம்மையார், தமிழரின் இனப்பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு கண்டுவிட முடியும் என்பதிலேயே நம்பிக்கையாக இருக்கிறார்.

வன்முறையின் கொடூரத்தையும், போரின் துயரத்தையும் உணர்ச்சி பூர்வமாக எடுத்து விளக்கி, வாக்குத் திரட்டி அதிகாரத்தை கைப்பற்றிய அம்மையார், இப்போது, படையினர் கைப்பற்றிய தமிழர் நிலங்களை அடையாளம் காட்ட நிறம் தீட்டப்பட்ட நிலவரைப்படங்களை விநியோகித்து வாக்குத் திரட்டி ஆட்சி அதிகாரத்தை நிலைநாட்ட முயல்கின்றார்.

போர் பிரசவித்துவரும் பெரும் தொகையான உயிரழிவுகளைப் பற்றியோ, பிரமாண்டமான பொருளாதார நாசத்தைப் பற்றியோ அம்மையார் சிறிதும் கவலைப்படவில்லை.

சிறீலங்காவின் அடுத்த ஜனாதிபதித் தேர்தலையும் வென்று போரைத் தொடர அவர் திடசங்கற்பம் பூண்டுள்ளார்.

**போர்க் கொள்கை**

இதேவேளை தமிழரின் இனப் பிரச்சனையைத் தீர்க்க தம்மிடம் நல்ல திட்டம் உள்ளது என்று ஐ.தே.கட்சி அடிக்கடி அறிவிக்கிறது. அது என்ன திட்டம் என்று இன்றுவரை அது பகிரங்கப்படுத்தவில்லை.

முன்னைய ஐ.தே.கட்சி அரசாங்கம் போரை நடத்தியபோது சந்தித்த உயிரிழப்பு குறைவு என்றும், இப்போதைய பொ.ஐ.முன்னணி அரசாங்கம் நடத்தும் போரில் பாரிய உயிர் அழிவுகளை படையினர் எதிர்கொள்கின்றனர் என்று எண்ணிக்கையைக் கூறி, ஒப்பிட்டுக்காட்டி தமது அரசாங்கமே போரை திறம்பட நடாத்தியது என சிங்கள மக்களுக்கு எடுத்து விளக்குகின்றதே தவிர, தமிழினத்திற்கு எதிரான போர்க் கொள்கையை கண்டிக்கவில்லை.

**பேரினவாத சிந்தனை**

கொழும்பில் அரசாங்கங்கள் மாறினாலும் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறை ஆட்சியானது மாற்றமற்ற ஒன்று என்பது இலங்கைத் தமிழரின் அரசியல் வரலாறு.

தமிழரின் இனப்பிரச்சனையை இராணுவ அணுகுமுறை மூலம் தீர்த்து வைக்க வேண்டும் என்ற பேரினவாத சிந்தனையே சிங்கள அரசின் நிரந்தர கொள்கையாகும்.

இந்த ஆட்சிக் குதிரையை ஓட்டுவதற்காக பதவியில் அமர்த்தப்படும் எந்த அரசாங்கமும் அரசின் போர்க்கொள்கையை தொடர்ந்து முன்னெடுத்தே தீரும்.

இந்த நிலையில் தமிழீழ மக்களாகிய நாம் ஒரு உண்மையை ஏற்றுக் கொண்டு செயற்பட வேண்டும்.

தமிழீழ மக்கள்மீது சிறீலங்கா அரசு ஓர் ஒட்டுமொத்தப் போரைத் தொடுத்து இன அழிப்பை நடத்திக்கொண்டிருக்கிறது.

இந்த இன அழிப்புப் போருக்கு முகம் கொடுத்து களத்தில் சமராட வேண்டிய வரலாற்று கட்டாயத்திற்குள் எமது இனம் உள்ளது. இந்த இராணுவச் சவாலை எமது மக்கள் எதிர்கொள்ளத்தான் வேண்டும்.

போரில் நாம் வெற்றி பெறுவதும், நிம்மதியான-கௌரவமான-சுதந்திரமான எமது மக்களின் வாழ்க்கையும் பிரிக்க முடியாதபடி ஒன்று கலந்துள்ளன" என்று 'விடுதலைப் புலிகள்' தனது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

# கரும்புலிகள் தினம்-படைகள் உஷார் நிலை!

எதிர்வரும் ஜூலை 05ம் திகதி கரும்புலிகள் தினம் அனுஷ்டிக்கப்பட உள்ளது.

இதனை முன்னிட்டு நாடெங்கும் பாதுகாப்பு படையினர் உஷார்படுத்தப்பட்டுள்ளனர்.

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு புலிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்பதால் முக்கிய பிரமுகர்களது நடமாட்டங்களும் தவிர்க்கப்படுவது வழக்கமாகும்.

இம்முறை வன்னியிலும், மட்டக்களப்பிலும் கரும்புலிகள் தினம் பெரியளவில் அனுஷ்டிக்கப்பட ஏற்பாடுகள் நடந்துள்ளன.

சமீபத்தில் ராசிக் கரும்புலி தாக்குதலில் கொல்லப்பட்டார். அத்தாக்குதலில் பங்கு கொண்ட சயந்தன் படைப்பிரிவைச் சேர்ந்த மேஜர் அரசப்பனுக்கு இம்முறை கிழக்கில் பெரும் கௌரவம் அளிக்க புலிகள் முடிவு செய்துள்ளனர்.

யாழ் குடாநாட்டிலும் கரும்புலித் தாக்குதல் நடக்கக்கூடும் என்று கருதி மேலதிக பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளதாக தெரிகிறது.

படையினர்மீது மட்டுமன்றி தமிழ்க் கட்சிகள்மீதும் புலிகள் குறிவைத்திருப்பதால் குடாநாட்டில் பதட்டமான சூழல் தோன்றியுள்ளது. இந்நிலையில் கரும்புலிகள் தினமும் வந்திருக்கிறது.

ஜூலை- 05, 1987 நெல்லியடி படை முகாம் மீதான கரும்புலித் தாக்குதலில் மில்லர் பலியான தினமாகும். அதனையே கரும்புலிகள் தினமாக புலிகள் அனுஷ்டித்து வருகின்றனர்.

# ஐ.தே.கட்சிக்குள் விரிசல்

## வேகம் போதாத தலைமை!

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பாரிய விரிசல் ஏற்பட்டு வருவதாக அவதானிகள் கருதுகின்றனர். அண்மையில் ஒன்றன் பின் ஒன்றாக நடைபெற்ற தேர்தல்களில் இக்கட்சி மிக மோசமான தோல்வியைத் தழுவியது. இதற்கு கட்சியில் தலைமைப் பீடத்தின் தான் தோன்றித்தனமான போக்கே காரணம் என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

கட்சி உறுப்பினர்களைக் கட்டி அணைத்துக் கொண்டு போவதை விடுத்து, முக்கியமானவர்களையெல்லாம் வெட்டுவதிலேயே கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தீவிரமாக இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

கடந்த வாரம் கொழும்பு நகர வீதிகளில் பல வர்ணச் சுவரொட்டிகள் திடுதிப்பெனக் காணப்பட்டன. இதில் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. 'இவரை யாரென்று தெரிகிறதா?' என்ற கேள்வி அச்சுவரொட்டி வாசகங்களில் ஒன்று.

கொழும்பு சுகததாச உள்ளரங்கத்தில் ஜனாதிபதி பிரேமதாசாவின் 75வது பிறந்த நாள் விழாவைக் கொண்டாடப்போவதாக அந்தச் சுவரொட்டியின் வாசகங்கள் மேலும் தெரிவித்தன.

இந்தச் சுவரொட்டிகளை ஐக்கிய தேசியக் கட்சி ஒட்டவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் பிரபலமான தலைவரின் 75வது பிறந்த நாளைத்தானும் கொண்டாடுவதற்கு தற்போதைய,தலைமைப் பீடம் எதுவித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. சுகததாச விளையாட்டரங்கில் பிரேமதாசாவின் பிறந்தாள் விழாவினை ஐ.தே.கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரான சிறிசேன குரே அவர்கள்தான் ஏற்பாடு செய்திருந்தார்.

# தாக்க முடியவில்லை!

## படையினர் சலிப்பு!

மட்டக்களப்பு-வாகரை ஆலங்குளப் பகுதியிலிருந்து இரண்டு உழவு இயந்திரங்களில் புலி அணியினர் வாகனேரிப் பகுதியை நோக்கி முன்னேறி வருவதைப் அப்பகுதியில் பதுங்கியிருந்த படையினர் அவதானித்து விட்டனர். எனினும் அவர்களைத் தாக்கி ஆபத்தை விளைவிக்க முடியாத தூரத்தில் புலிகள் சென்று கொண்டிருந்ததால் படையினரால் எதுவும் செய்ய முடியாத சூழ்நிலையில் மோட்டார் தாக்குதலை மேற்கொண்ட போதும் அது பயனளிக்கவில்லை.

எனினும்-மோட்டார் தாக்குதலால் புலிகளின் பயணம் சற்றுத் தடைப்பட்டுப் பின்னர் உரிய இடத்திற்குச் சென்றனர். 16.06.99 அன்று மாலை ஐந்து மணிக்கு இது நடந்தது.

பெருந்தொகையான புலிகளைக் கண்ட போதும் தாக்க முடியாமற் போனதால் படையினர் சலிப்படைந்தனர்.

# "என்னைக் கொன்றாலும் இங்கிருந்து போகமாட்டேன்"

## புலிகளிடம் படைவீரர் சரணடைவு!

மட்டக்களப்பு-வாழைச்சேனை இராணுவ தலைமையகத்தைச் சேர்ந்த படைவீரர் ஒருவர் புலிகளிடம் ஓடிச்சென்று சரணடைந்துள்ளார்.

நடந்த சம்பவம் பற்றி அறியப்படுவதாவது: வாழைச்சேனை காவத்தை முனைக் காப்பரணில் கடமையாற்றிய படைவீரர் இருவர் புலிகளிடம் ஓடித்தப்பும் தீர்மானத்தோடு ஆயுதங்களையும் எடுத்துக் கொண்டு தலைமறைவாகினர்.

அதேவேளை இவர்களது துரதிருஷ்டம் 16.06.99 அன்று மியான்குளப் பகுதியில் படையினர் பதுங்கியிருந்தனர்.

இவ்வேளையில் புலிகளிடம் தப்பிச் செல்லத் தலைமறைவாகிக் கொண்டிருந்த படைச் சிப்பாய்கள் இருவரும் பதுங்கியிருந்த படையினரின் கண்ணில் பட்டு மாட்டிக் கொண்டனர்.

அவ்விருவரையும் உடனடியாகக் கைது செய்து ஆயுதங்களையும் பறித்துக் கொண்டு முகாமுக்கு அழைத்துச் செல்ல ஆயத்தமான வேளையில் மாட்டிக் கொண்டவரில் ஒருவர் சமயம் பார்த்துப் படையினரின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டுப் புலிகளிடமே ஓடித் தப்பிவிட்டார்.

தம்மிடம் சரணடைந்த படைவீரரை ஐ.சி.ஆர்.சி.யிடம் ஒப்படைக்கப் புலிகள் முயற்சி மேற்கொண்டு அவர்களை அழைப்பித்தனர். ஆனால் படைவீரர் "என்னைக் கொன்றாலும் நான் உங்களிடமிருந்து வேறெங்கும் போகமாட்டேன். புலிகளிடம்தான் இருக்கப் போகின்றேன்!" என்று படைவீரர் உறுதியாகக்கூறி மறுத்துவிட்டார். பின்னர் ஐ.சி.ஆர்.சியினர் இத்தகவலைப் படை அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளனர்.

# உரப் பைக்குள் துப்பாக்கி!

## பொலிஸார் இருவர் பலி!

மட்டக்களப்பு-செங்கலடியில் அமைந்துள்ள பொலிஸ் சாவடியிலுள்ள பொலிஸார் இருவரைப் புலிகள் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள்.

பாதுகாப்புக் கடுமையாக உள்ள அப்பகுதிச் சோதனைச் சாவடிக்குள் தக்க தருணம் பார்த்து, உரப்பைக்குள் துப்பாக்கிகளை மறைத்து வைத்துக் கொண்டு சென்று அவ்விடத்தில் நின்ற பொலிஸார் இருவரைச் சுட்டுக் கொன்றுவிட்டு துப்பாக்கி ஒன்றையும் எடுத்துக் கொண்டு சமயோசிதமாக வந்த வழியே தப்பிச் சென்றனர் புலி இயக்க உறுப்பினர் மூவர்.

சமீபத்தில் றாசிக் குழுவிலிருந்து தப்பித்துப் புலிகளிடம் ஓடிச் சென்ற மகேந்திரன் என்பவரே பொலிஸாரைச் சுட்டுத் தள்ளி விட்டு ஆயுதத்தையும் அபகரித்துச் சென்றார் என்றும், இவருடன் மேலும் இருபுலிகள் அன்றைய தாக்குதலுக்கு வந்தனர் என்றும் தெரிய வருகிறது. சம்பவம் 17.06.99 காலை 8.22 இற்கு நடந்தது.

**ரெலோ சூடு**

வாகனப் போக்குவரத்து ஒரு மணி நேரம் தடைப்பட்டது. இந்தத் துப்பாக்கிச் சலசலப்பையடுத்து செங்கலடியிலிருந்த ரெலோ இயக்கத்தினர் கண்மூடித்தனமாகச் சுட்டதில் செங்கலடி ம.வித்தியாலயத்தில் கற்கும் 7 வயதுச் சிறுவர்கள் மூவர் காயமடைந்தனர். சம்பவம் நடந்த இடத்திலிருந்து 1 1/2 மைல் தொலைவிலுள்ள ஏறாவூரில் ஒரு முஸ்லிம் பெண்ணும் துப்பாக்கிச் சூட்டினால் காயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்த ஏழு பொது மக்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். இது விடயமாக அப்பகுதிக் கிராம சேவை உத்தியோகத்தரும் உறவினர்களும் மட்டக்களப்பு பா.உ. அலிஸாஹிர் மௌலானாவிடம் முறையிட்டுள்ளனர். தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை சிறைச்சாலைக்குச் சென்று எம்.பி பார்வையிட்டார்.

# மீண்டும் மர்மக்கொலைப் பேர்வழி!

## பொதுமக்கள் கிலிகொண்டு நடமாட்டம்!

மட்டக்களப்பு-முறக்கொட்டாஞ்சேனைப்பகுதியில் பல மர்மக் கொலைகளின் சூத்திரதாரி எனப் பேசப்பட்டு வந்த நபர் ஒருவர் தான் மாட்டுப்பட்டு விடக்கூடும் என்ற காரணத்தினால் சீருடையினரின் 'ஆசீர்வாதத்துடன்' கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக அப்பகுதியை விட்டுத்தலைமறைவாகி, வவுனியாப் பகுதிக்குத் தப்பியோடினார். இதனால் முறக்கொட்டாஞ்சேனைப் பகுதி மக்கள் பெரிதும் நிம்மதியடைந்திருந்தனர்.

எனினும் அந்த நிம்மதி நீடிக்கவில்லை. தலைமறைவாகியிருந்த அந்த நபர் மீண்டும் அப்பகுதியிலுள்ள சீருடையினரின் முகாமொன்றில் தலைகாட்டத் தொடங்கியுள்ளார். இதனால் மக்கள் கிலி கொண்டு நடமாடுகின்றனர்.

எந்தவொரு தமிழ் இயக்கத்தையும் சார்ந்திராத இவரும், இவரது சகோதரரும் பொதுமக்கள்மீது அட்டூழியங்களைச் செய்வதில் கில்லாடிகள் என்று பெயர் பெற்றவர்கள்.

இந்த நபரது பெயர் சபாநாயகம். முறக்கொட்டாஞ்சேனையில் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் கிராம சேவை உத்தியோகத்தர் தர்மலிங்கம் மற்றும் அவருடன் சென்ற பிரபா என்னும் கூட்டுறவு சங்க ஊழியர் ஆகியோரது கொலைகளோடு இவருக்கும் சம்பந்தம் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையே 20.06.99 அன்று இரவு 8 மணியளவில் கணபதி குணரத்னம் என்னும் 18 வயது இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். கரிமுட்டி பண்ணை இராணுவ முகாமருகே இவரது உடல் கண்டெடுக்கப்பட்டது.

இந்த மர்மக் கொலைக்கும் சபாநாயகம் தான் துண்டுதலோ என்று பொதுமக்கள் சந்தேகிக்கின்றனர்.

# "துரோகிகளே ஆபத்தானவர்கள்!"

## புலிகள் சுவரொட்டி

"எதிரிகளைவிட துரோகிகளே ஆபத்தானவர்கள்" என்ற வாசகங்களைப் புலிகள் கிழக்கில் தமது ஆளுகையின் கீழுள்ள பகுதிகளில் தொங்கவிட்டுள்ளனர்.

பொதுமக்கள் கூடுமிடங்களில் கண்ணில் படும்படியாக பெரிய வடிவத்தில் காணப்படும் இந்த வாசகங்கள் அரச படைகளுடன் சேர்ந்து இயங்கும் தமிழ்க் குழுக்களைச் சுட்டிக்காட்டியே எழுதப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

சமீப சில நாட்களாக அரசாங்கப் படைகளுடன் அணி சேர்ந்து செயற்படும் தமிழ்க் குழுக்களுக்கெதிரான பிரசாரங்களைப் பொது மக்கள் மத்தியில் புலிகள் தீவிரப்படுத்தியுள்ளனர்.

# ரணகோஷவின் பின்னர் சேவைக்கு பஸ் இல்லை

(மன்னார் நிருபர்)

படையினரால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ரணகோஷ-4 நடவடிக்கையின் மூலம் பாப்பாமோட்டை, பரப்புக்கடந்தான் உட்பட 22 கிராம சேவகர் பிரிவுகள் புதிதாக கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

புதிய பிரதேசத்தில் 2187 குடும்பங்களைச் சேர்ந்த 8247 பேர் வசிக்கின்றனர். இவர்களுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்குவதில் மன்னார் செயலக அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். இங்கு 20 ஆயிரம் பேர் வசிப்பதாக அரச வானொலி அறிவித்தது முற்றிலும் தவறான செய்தியாகும்.

இவர்கள் மன்னார் நகருக்கு வந்து செல்வதற்கான போக்குவரத்து சேவை இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. வீதிகள் படுமோசமாக இருப்பதே இதற்குக் காரணமாகும்.

அத்துடன் போதியளவு பஸ்களும் மன்னாரில் இல்லை. புதிது புதிதாக கைப்பற்றப்படும் பகுதிகளுக்கு பஸ்களை சேவையிலீடுபடுத்துமாறு உயர்மட்டம் வற்புறுத்துகின்றது. தற்போதைய நிலையில் குறைந்தது 10 பஸ்களாவது தேவை எனவும், இந்த பஸ்கள் கிடைக்காதவரை புதிதாக கைப்பற்றப்பட்ட பகுதிகளுக்கான பஸ் சேவையை நடத்த முடியாது எனவும் மன்னார் டிப்போ முகாமையாளர் ஜெகநாதன் முரசிடம் தெரிவித்தார்.

இதேவேளை முன்பு இடம் பெற்ற வன்னிக்கான போக்குவரத்துப்பாதை கடந்த 22.06.99 முதல் உயிலங்குளத்தில் இருந்து பாப்பாமோட்டைக்கு மாற்றப்பட்டுள்ளது. தொடர்ந்தும் இப்பாதையே போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படும் என செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.


படிப்பகம்

www.padippakam.com

# கிழக்கில் மூடிக்கிடக்கும் விவசாயப் பண்ணை!

## ஆரம்பிக்கும் முயற்சியில் விவசாயிகள் கம்பனி!

(மட்டக்களப்பு நிருபர்)

இலங்கையில் சிறந்த விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சிப் பண்ணையாக விளங்கிய மட்டக்களப்பு-கரடியனாறு விவசாய ஆராய்ச்சிப் பயிற்சிப் பண்ணை கடந்த பல வருடங்களாக மூடப்பட்டுக் கிடக்கிறது.

இந்தப் பண்ணையை ஆரம்பத்தில் EROS இயக்கத்தினர், படையினர் நிலை கொள்வர் என்பதால் அழித்துச் சேதப் படுத்தினர்.

எனினும், அதன் பின்னர் இந்தியப் படையினரும், இலங்கை இராணுவத்தின ரும் நிலை கொண்டனர். அவர்கள் அகன்ற பின் புலிகளும் முகாம் அமைத்திருந் தனர்.

கன்னொருவ விவசாய ஆராய்ச்சி நிலையத்துடன் ஆரம்பிக்கப்பட்ட கரடிய னாறு விவசாயப் பண்ணையில் பிராந்திய ஆராய்ச்சி நிலையம், உட்களப் பயிற்சி நிலையம், மாவட்டப் போதனா நிலையம், மற்றும் விவசாயப் பண்ணை போன்ற பிரிவுகள் இயங்கி வந்தன.

பதுளை வீதியில் இருந்து படையினர் விலக்கிக் கொள்ளப்பட்டதும் விவசாயப் பண்ணையும் மூடப்பட்டது. இதனால் அங்கு தொழில் வாய்ப்புப் பெற்றிருந்த நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந் துள்ளார்கள்.

தற்சமயம் தூர்ந்து போய்க் கிடக்கும் இந்த விவசாய ஆராய்ச்சிப் பண்ணையைப் புனரமைத்து மீளத் துவங்க மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் மக்கள் கம்பனி முயற்சி மேற்கொண்டுள்ளது. வடக்கு கிழக்கு மாகாணத் தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள முதலாவது விவசாயிகள் கம்பனி இதுவாகும்.

விவசாயப் பண்ணையை ஆரம்பிக்கும் விவசாயிகளின் முயற்சிக்குப் புலிகள் தரப்பிலி ருந்து பூரண ஒத்துழைப்புக் கிடைத்துள்ளதாக வும் அறியப்படுகிறது.

# குடிப்பதற்கு நீரில்லை–நீர்த்தாங்கி அமையுமா?

(திருமலை நிருபர்)

திருக்கோணமலை நகர எல்லைக்குட் பட்ட உவர்மலையைச் சேர்ந்த குடியிருப் பாளர்கள் குடிப்பதற்குக்கூட நீரின்றி சிரமப்படு கிறார்கள். கடந்த வருடம் தண்ணீரில்லாக் கொடுமையால் நூற்றுக்கணக்கான பெண்கள் வெற்றுக் குடங்களை ஏந்திய வண்ணம் ஆளுநர் பணிமனையை நோக்கி ஊர்வலம் நடத்தியிருந்தார்கள்.

இப்பகுதி மக்களின் நிலைபற்றி முரசு தேசிய நீர்வழங்கல் வடிகாற் சபையின் வடக்கு கிழக்கு மாகாண பிரதிப் பொது முகாமையாளர் திரு.இ.நாகராஜேஸ்வரனுடன் தொடர்பு கொண்டபோது, "நீர்த்தாங்கி யொன்று மேட்டு நிலத்தில் அமைப்பதன் மூலமே இப்பிரச்சனையைத் தீர்க்கலாம்.

ஏழு மில்லியன் ரூபா இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. பிரதேசச் செயலாளரால் இடமும் வழங்கப்பட்டிருக்கிறது. பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் இவ் வருடத்துள் நீர்த்தாங்கி அமைக்கப்பட்டு விடும் எனத் தெரிவித்தார்.

உடனடி நிவாரணம் பற்றிக் குறிப்பிடுகை யில் "தற்காலிக நடைமுறைகள் சிலவற்றைக் கையாண்டு அம்மக்களது சிரமங்களைக் குறைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளோம்.

ஏற்கனவே இருந்த நிலைகளுக்கேற்ப விட்டம் குறைந்த குழாய்களே பதிக்கப்பட் டுள்ளன. கோடை காலங்களில் நிலத்தைக் குளிர்மைப்படுத்த, மரங்களுக்கு தண்ணீரூற்ற என்று உவர்மலை தாழ்ந்த பகுதிகளிலிருக்கும் மக்கள் கூடுதல் நேரம் குழாய்களைத் திறந்து வைத்திருப்பதனால் மேட்டு நிலப் பகுதி மக்களுக்கு அழுத்தக்குறைவு காரணமாக நீர் செல்வதில்லை.

குழாய்களின் விட்டம் போதாமை, கூடுதல் கேள்வி என்பவையும் காரணிகளாக இருப்ப தனாலேயே கோடை காலங்களில் சிரமங்கள் ஏற்படுகின்றன. எனினும் நீர்த்தாங்கி வேலை முடிந்ததும் இக்குறைகள் தானாக மறைந்துவிடும்" என்றும் கூறினார்.

வேலைகள் துரிதப்படுத் தப்பட்டு உவர்மலை மக்கள் வாழ்த்தும்போது முரசும் இணைந்து வாழ்த்தும்.

## வாக்காளர் இடாப்பு மீளாய்வு

திருக்கோணமலை மாவட்டத்தின் 1999ம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு மீளாய்வு ஜூன் 1ந் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

கிராம சேவகர்கள் ஊடாக இதற்கெனப் படிவங்கள் வீடுவீடாக விநியோகிக்கும் வேலை கள் தொடக்கப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக தேர்தல் அலுவலக உதவிப் பதிவலுவலர் திரு.எஸ்.அருமைநாயகம் பொதுமக்களுக்கு விடுத்த வேண்டுகோள் ஒன்றில் உரிய படிவங்களைப் பெற்று கேட்கப்பட்ட விபரங்களைத் தெளிவாகப் பதிந்து வாக்காளர் இடாப்பில் விபரங்கள் சேர்க்கப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்துமாறு கேட்டிருக்கிறார்.

# பயிற்சி ஆசிரியர்கள் சிரமதானம்

(மன்னார் நிருபர்)

இலங்கையில் முன்னணி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் ஒன்றாக விளங் கும் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அண்மைக்காலமாக இன உறவுகளை மேம்படுத்தவும் சமூகங்களி டையே புரிந்துணர்வை ஏற்படுத்தக்கூடிய விதமாகவும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் ஓர் அங்கமாக கடந்த 04,05,06 ஆம் திகதிகளில் இக்கலாசாலையின் பிரதி அதிபர் ஏ.ஆதம் லெப்பை தலைமையில் 70 பேரடங்கிய ஆசிரியர்கள் குழுவொன்று பொத்துவில்-சின்ன உல்லை அல்-அக்ஸா வித்தியாலயத்தில் சிரமதான வைபவம் ஒன்றை நடத்தியது.

இப்பாடசாலையில் நூற்றுக்கும் மேற் பட்ட தளபாடங்கள் திருத்தப்பட்டதுடன், வகுப்பறை ஒன்றுக்கு புதிதாக தளம் போடப்பட்டது. அத்துடன் மண்ணரிப் பைத் தடுக்கும் வகையில் சுமார் 50 ட்ரக்டர் மண், களி, புல் கற்றைகள் கொண்டு அழகிய முறையில் பாடசாலை அலங்கரிக்கப்பட்டது.

அத்துடன் பாடசாலை வகுப்பறை களை இனம் காணும் பலகைகள் போடப் பட்டதுடன், மிகப்பெரிய பாடசாலை பெயர்ப்பலகையும் செய்து வைக்கப்பட்டது.

மேலும் பாடசாலையைச் சுற்றி தென்னங்கன்றுகள் நடப்பட்டன. இச் சிரமதான வைபவத்திற்கு பொத்துவில் பிரதேச சபை மற்றும் பொது மக்கள் ட்ரக்டர்களை வழங்கித் தம் ஆதரவைத் தெரிவித்தனர்.



## 31ம் நாள் நினைவஞ்சலி

இராஜகோபால் கங்கேசன்

மண்ணில் 11.01.81
விண்ணில் 24.05.99

கொக்குவில் இந்துக் கல்லூரி வர்த்தகப் பிரிவு 99 மாணவனும் மாணவத்தலைவனும் துடுப்பாட்ட அணித்தலைவனும் வளர்மதி முன்னேற்றக் கழக பொருளாளரும் K.C.C.C அணியின் துடுப்பாட்ட வீரனும் எமது கனிஷ்ட புதல்வனுமாகிய செல்வன் இராஜகோபால் கங்கேசன் அவர்கட்கு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கை ஆக்குகிறோம்.

"மலர்கையில் மரணித்த மலர்
இவன் உதிக்கையில் உதிர்ந்த
நிலவு- விளைகையில்
களையப்பட்டாலும்
கங்கென்ற எம் கதிரவன்
நிலைப்பான் நம்மில் நிரந்தரமாய்"

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.

தகவல்: தாய் (திருமதி ஜெ. இராஜகோபால்)

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திரு சின்னவர்- சின்னத்துரை

தோற்றம்:- 01.07.1930

மறைவு:- 24.05.1998

திதி:- 12.06.1999

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் அன்பின் திருவுருவாய் - பண்பின் பிறப்பிடமாய்- பாசத்தின் பாசறையாய்- நேர்மையின் நிறை குடமாய் திகழ்ந்து எம் அனைவருக்கும் நல் வழிகாட்டி வாழ்ந்த எங்கள் அன்பு அப்பாவே! நீங்கள் எமை விட்டுப் பிரிந்து ஆண்டு ஒன்று ஆகிடினும் உங்கள் நினைவுகள் என் றும் எம் உள்ளங்களில் நீங்காத நினைவுகளாக நிலைத்து நிற்கும். அப்பா உங்கள் பாதக் கமலங்களுக்கு எங்கள் சிரம் தாழ்த்தி கரம் கூப்பி வணங்குகின்ற இன்றைய தினத்திலே உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் சகோதரர்கள்.

தகவல்:- திருமதி சின்னத்துரை


## தபால் மூலம் விஞ்ஞானம்

G.C.E. (A/L) ~ இரசாயனவியல்
Year - 9, 10, 11 ~ விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
Year - 5 ~ ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர்: குமார் சிவப்பிரகாசம்

விபரங்களுக்கு சுயவிலாசமிட்ட தபாலுறையுடன் விண்ணப்பிக்கவும்

P.T.C 14, Covington Road, Batticaloa.

## இலவச தபால் மூல ஆங்கில பாடநெறி

சரளமாக ஆங்கிலம் எழுத, பேச, வாசிக்க பயிற்சியை அளிக்கும் 90 நாட்கள் ஆங்கில பாடநெறி

500 SCHOLARSHIP PROGRAMME

விண்ணப்ப முடிவுத் திகதி : 15.07.1999

இப்பாடநெறிக்காக பதிவுக் கட்டணம் மட்டும் அறவிடப்படும். பாடநெறிக் கட்டணம் முற்றிலும் இலவசம்!!!

மேலதிக விபரங்களுக்கு சுயவிலாசம் எழுதப்பட்ட ரூபா 3.50 முத்திரை ஒட்டிய நீள கடிதவுறையை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். அல்லது 077-802849 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

I.L.C. International

P.O.Box-119,
Kandy.

Tel. : 08-222664, 077-801245

The Student ஆங்கில கல்வி இதழ் 6 மாதங்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.

## உங்கள் தினமுரசின் அனுசரணையுடன்

மாபெரும் இசை நிகழ்ச்சி

அறிவிப்பாளர் சீதாராமன்–இக்பால், ஜெகனுடன் வழங்கும்

சீத்தாராவின் இசைமாலை

திரையிசை நிகழ்ச்சி

நிகழ்ச்சி அமைப்பு: V.M. சந்திரசேகர்

பிரபல பாடகர்களுடன் உங்கள் அபிமான தொலைக்காட்சி, வானொலி அறிவிப்பாளர்கள் ஒரே மேடையில்

நிகழ்ச்சி முடிவில் அபிமான அறிவிப்பாளர்களுடன் புகைப்படம் பிடிக்கவும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

இரண்டுகாட்சிகள்

காலம்:27.06.1999 – நேரம்:3.30 p.m / 6.30 p.m.

இடம்: பண்டாரவளை நகர மண்டபம்

டிக்கட் : 100/- 150/- 200/-

## ஜேர்மன்-தமிழ் அகராதி

- 30 ஆயிரத்திற்கும் அதிகமான ஜேர்மன் மொழிச் சொற்களுக்கான தமிழ் மொழிச் சொற்கள்.
- இலக்கண விளக்கம்.
- புதிய அணுகு முறையிலான சரியான உச்சரிப்பு விளக்கம்.
- மாதிரிக்கடிதங்கள்.

தொடர்பு கொள்ளவும்

K. Chandrasegaran (Swiss) 01/461 57 - 49, 01/241 16 30
Natel 079/285 83 09, Kanonengasse 19, 8004 Zurich
V.Sivanesarajah (Swiss) 01/492 02 61

தமிழ் விற்பனை நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

Colombo K.Ketheeswaran
124 Kotahena Street, Colombo-13. T.P:- 334330

## CIMA ASIAN TAKE AWAY

Indische Spezialitated

இந்திய இலங்கை அறுசுவை உணவுகளை சுவைத்து மகிழ்ந்திட நாடுங்கள்

CIMA ASIAN TAKE AWAY

Kanonengasse 19, 8004 Zurich. Zurich Kaserne யின் பின் புறம்

தினசரி சைவ- அசைவ உணவுகள்

புரியாணி
தண்டூரி வகைகள்
சப்பாத்தி
கொத்து ரொட்டி
நாண்
சமோசா மற்றும்
அனைத்துவகை தமிழ் உணவுகள்

Take away & Party Service

CIMA ASIAN TAKE AWAY

Kanonengasse - 19,
8004 Zurich.
Tel: 01/241 16 30 Natel 079/285 83 09

## Bern மாநகரில் பாசல் எஸ்.பி.ரி.யின்

மாபெரும் கோடைகால மலிவு விற்பனை

காலம் : 01.07.99 முதல்04.07.99வரை
(வியாழன் முதல் சனி வரை)
இடம் : Rest. Buerger haus
(பழைய Mc Donalds ற்கு அருகில்)
நேரம் : 10 மணி முதல் 18 மணிவரை

கோலம் சாறி 165 Chf இல் இருந்து....
பஞ்சாபி வகைகள் 10 Chf இல் இருந்து....
பலதரப்பட்ட சாறி வகைகள் 9 Chf இல் இருந்து....
சிறுவர்களின் சூட் வகைகள் 10 Chf இல் இருந்து....
சிறுமிகளின் பஞ்சாபிகள் 5 Chf இல் இருந்து....
ஆண்களின் ரவுசர் சேட் வகைகள் 10 Chf இல் இருந்து....
ரீ சேட் வகைகள் 8.50 Chf இல் இருந்து....
Ramiy யின் CD 5 Chf இல் இருந்து....

BASEL ரவி கடை

22 கரட் தங்க நகைகள் மிக மிக மலிவு விலையில்

பட்டு புடவைகளும் தங்க நகைகளும்
அணியும் நாளெல்லாம் ஆனந்த திருநாளே

Mai,Juni, Juli ஆகிய மூன்று மாதங்களில் வெளிவந்த படையப்பா, மோனிசா என் மோனோலிசா, துள்ளாத மனமும் துள்ளும், மனம் விரும்புதே உன்னை போன்ற சாறி வகைகளும், தரமான கோலம், றங்கோலி, பனாறஸ் சாறிகளும் மற்றும் மங்கள வைபவங்களுக்கு ஏற்ற பட்டுவேட்டி, கூறை வகைகளும் ஹாவ்சாறி வகைகளும் மற்றும் குசிறாத்தி, ரேகிசி, வைக்ஸ்சிலி, காலமெல்லாம் காதல் வாழ்க போன்ற பஞ்சாபி வகைகளும் மிக குறைந்த விலையில் வாங்கிட விரைந்து வருவீர்!

விபரங்களிற்கு: S.P.Textiles & Jewellery
Elisabethenanlage-9, 4051 Basel.
Tel & Fax:- 061/272 09 90 Mobile:- 079/356 22 76

## NISACO STEEL FURNITURE



Special Discount on This Month Only · Open on Every Sunday 8.am to 8.pm

நிசாகோ இன்டஸ்ட்ரீஸ்

304, ஆஸ்பத்திரி வீதி, களுபோவில, தெஹிவல. Tel : 074-201727 Fax : 075-515168
(Opposite Buddagosha Vidyalaya)
FACTORY & SHOW ROOM
Millagaha Estate, Aturugiriya Road,-Hokandara North, Hokandara. Tel: 561367
(Near the telecommunication Exchange Hokandara)




## 3வது பிறந்தநாள் வாழ்த்து

செல்வி பிலீஸியா
தேவேந்திரராஜா-1999.06.23

திருக்கோவில் தேவேந்திர ராஜா- பற்றிமா தம்பதிகளின் செல் வப் புதல்வி பிலீஸியா தனது மூன் றாவது பிறந்தநாளை இல்லத் தில் விமரிசையாகக் கொண்டா டினார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பம்மா, சித்தி மார், சித்தப்பாமார், அண்ணாமார், அக்காமார், தம்பிமார், தங்கை, மாமா மார், மாமிமார், மச்சாள்மார், அத்தான் மார் மற்றும் உற்றார் உறவினர் பல் கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# கண்டெடுக்கப்பட்ட எலும்புகளும் காணாமல்போன எலும்புகளும்!

## குடாநாடெங்கும் செம்மணிகள்

நாரதர்



செம்மணிப் புதைகுழிப் பகுதியில் தோண்டல் நடைபெற்ற செய்திகள் பெரிதாக வெளியாகியுள்ளன.

இந்த பரபரப்புகளுக்கு இடையே அதிர்ச்சிகரமான பல உண்மைகள் பின்தள்ளப்பட்டுள்ளன.

செம்மணி பகுதியில் மனிதப் புதைகுழிகள் இருப்பதாக ராஜபக்ஷ கூறிய பின்னர் பதினொரு மாதங்கள் சென்றுவிட்டன.

புதைகுழியை தோண்டாது இழுத்தடிக்க அரசாங்கம் பலத்த முயற்சிகளை மேற்கொண்டிருந்தது.

புதைகுழிகள் அங்கிருப்பது உண்மை என்பதை அரசு ஊர்ஜிதம் செய்ததால்தான் இழுத்தடிப்பு நடந்தது. இல்லையானால் உடனடியாக தோண்டிக்காட்டி நற்பெயரை சம்பாதித்திருப்பர். 'பார்த்தீர்களா? இப்படித்தான் அநியாயமாக புகார்கள் கூறப்படுகின்றன. எம் ஆட்சியில் மனித உரிமை மீறல் என்ற பேச்சுக்கே இடமில்லை' என்று உலகுக்கு நிருபிக்க தக்க சந்தர்ப்பமாக பயன்படுத்தியிருப்பர்.

ராஜபக்ஷ கூறியது பொய்யாக இருந்திருந்தால், யாழ் குடாநாட்டில் கைதாகி காணாமல் போன அறுநூறுக்கு மேற்பட்டோர் பற்றிய புகார்கள்கூட பொய் என்று மிகச் சுலபமாக தூக்கியெறியப்பட்டிருக்கும்.

அதனைத்தான் அரசும் விரும்பியது. காணாமல் போனோர் பற்றிய சர்வதேச மன்னிப்புச்சபை அறிக்கையை இலங்கை அரசு குறைகூறியபோதே, யாழ் குடாநாட்டில் நிகழ்ந்த மனித அவலத்தை மறைக்க அரசும் ஆவலாக இருக்கிறது என்பது நிருபணமானது.

காணாமல் போனோர் பற்றி ஆராய கமிஷன் நியமிப்பதாக ஜனாதிபதி தம்மிடம் உறுதி கூறியதாக கூட்டணி, ஈ.பி.டி.பி. ஆகிய கட்சிகள் தெரிவித்திருந்தன. அவ்வாறு கூறியே இரண்டு வருடங்களாகி விட்டன.

காணாமல் போனதாக கூறப்படுவோர் புலிகளுடன் போய்ச் சேர்ந்துவிட்டனர் என்று ஜனாதிபதி முன்பாகவே படை உயரதிகாரி ஒருவர் தமிழ்க் கட்சிகளுக்கு விளக்கமளித்தார்.

ராஜபக்ஷ மட்டும் கடைசி நேரத்தில் உண்மைகளை கூறியிருக்காதுவிட்டால், செம்மணி விவகாரம் வெளியே தெரிந்திருக்காது.

யாழ் குடாநாட்டில் காணாமல் போனோர் கதி பற்றி அரசு அக்கறைப்பட்டிருக்கப் போவதில்லை. படிப்படியாக மறக்கப்பட்ட விஷயமாக கைவிடப்பட்டிருக்கும்.

ராஜபக்ஷ நீதிமன்றத்தில் தெரிவித்த தகவல்களை அறிந்து அரசு வேதனைப்படவில்லை. உண்மையைக் கூறியதற்காக அவர் மீது வெஞ்சினம் கொண்டது. அவரைப் பொய்யராக சித்தரிக்கவே முற்பட்டது.

இன விவகாரங்களுக்கு பொறுப்பான அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே பாராளுமன்ற உரையில், "மரண தண்டனைக் கைதி கூறுவதையெல்லாம் உண்மையானதாக எடுத்துக் கொள்ள முடியாது!" என்று கூறினார்.

சிறையில் வைத்து ராஜபக்ஷவை மிரட்டி 'வாக்குமூலம் பொய்' என்று எழுதி வாங்கவும் முயற்சி நடந்தது.

இந்த பாரதூரமான விஷயம் வெளியே தெரிந்ததும் அரசு திணறிப்போனது. முன்னுக்குப்பின் முரணாக தகவல்கள் கூறப்பட்டன. இந்த விடயத்தில் அரசுக்கு தொடர்பு இல்லையானால், ராஜபக்ஷவை மிரட்டி கையெழுத்து பெற முனைந்த சிறைக்காவலர் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், விசாரணை நடத்தப்படும் என்று நீதியமைச்சர் வழக்கம்போல அறிவித்ததோடு சரி. அதன் பின்னர் எத்தகைய நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மறுபக்கத்தில், செம்மணி புதைகுழிப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான நடமாட்டங்களும், வாகனங்களின் இரைச்சல்களும் இரவு நேரங்களில் அவதானிக்கக்கூடியதாக உள்ளது என்று பல புகார்கள் கூறப்பட்டன.

இரவோடு இரவாக குழிகளைத் தோண்டி உடல்களை எரிப்பதற்கு அடையாளமாக புகைமூட்டமும் அப்பகுதியில் தெரிகிறது என்றும் கூறப்பட்டது.

இந்த விடயத்தில் நியாயமாக நடந்து கொள்ள அரசு விரும்பியிருந்தால், உடனடியாக சில விசாரணையாளர்களை அனுப்பி ஆராய்ந்திருக்கலாம்.

குழிகள் தோண்டப்பட்டிருந்தாலோ, எரியூட்டப்பட்டிருந்தாலோ காணப்படக்கூடிய அடையாளங்களை கடும் மழை பொழிந்து அழித்துவிடும். அதற்கு முன்னர் செம்மணி புதைகுழி விசாரணைகளை நடத்தவேண்டும் என்றும் கோரப்பட்டது. அக் கோரிக்கையும் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

இத்தகைய பின்னணியில்தான் தற்போதைய புதைகுழி தோண்டலை அவதானிக்க வேண்டும். அரசும், படைகளும் ஆரம்பம் முதலே புதைகுழி விவகாரத்தில் நம்பகமற்ற முறையில்தான் நடந்து வருகின்றன. முடிமறைப்பதில்தான் அதிக ஆர்வம் காட்டியுமுள்ளன.

முதலில் நீதிபதியாக அருள்சாகரனை நியமித்தனர். இவர் அரசுக்கு தோதாக விசாரணைகளை நடத்தக்கூடியவர் என்று புலிகள் உஷாராகினர். அவர் பற்றிய விபரங்களை திரட்டத் தொடங்கினர் என்று தகவல். அதனை அருள் சாகரனும் அறிந்துதானோ என்னவோ நாட்டைவிட்டு சென்றுவிட்டார்.

வேறு வழியின்றியே தற்போது மன்னார் நீதிபதி நியமிக்கப்பட்டதாக தெரிகிறது. மன்னார் நீதிபதி இளஞ்செழியன் பற்றி நல்ல அபிப்பிராயங்களே உள்ளன. துணிச்சலாக செயற்படக்கூடியவர் என்று பெயர்.

இம்மாதம் 16ம் 17ம் திகதிகளில் புதைகுழி தோண்டப்பட்டது. இரண்டு எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

ராஜபக்ஷ பொய் கூறவில்லை. அவர் காட்டும் இடமெல்லாம் தோண்டத் தோண்ட எலும்புக்கூடுகள் எட்டிப்பார்க்கும் என்பதும், மிகப் பாரிய மனிதப் படுகொலை குடாநாட்டில் நிகழ்த்தி முடிக்கப்பட்டுள்ளது என்பதும் உறுதியாகியுள்ளன.

ஆனால் புதைகுழி தோண்டப்பட்டது பற்றிய செய்திப் பரபரப்புக்கிடையே அமுங்கிப் போன ஒரு விஷயம் இருக்கிறது. மிக முக்கிய விஷயம் அது.

அதுதான் மண் ஆய்வு அறிக்கை. செம்மணிப் புதைகுழி தோண்டலை இழுத்தடிக்க மண் ஆய்வுக்கு என்று சில மாதங்கள் அரசு அனுமதித்தது. இழுத்தடிப்புக்காக செய்த ஆய்வு அரசுக்கு தலைவலியாக மாறியுள்ளது.

செம்மணியில் மண் அமைப்பு குழப்பப்பட்டுள்ளது என்பதையும், அங்கு வேண்டுமென்றே பழைய தகரங்கள், பாம்பு, எலி, போன்றவை புதைக்கப்பட்டுள்ளன என்பதையும் மண் ஆய்வு அறிக்கை காட்டிக் கொடுத்துவிட்டது.

புதைகுழிகளை கிளறி மனித எலும்புக்கூடுகளை அகற்றிவிட்டு, அதற்குள் தகரங்களையும், எலி, பாம்பு போன்றவற்றையும் போட்டு முடியிருக்கலாம்.

இந்த மண் ஆய்வு அறிக்கைக்கு பின்னர்தான் சர்வதேச மன்னிப்புச் சபை பிரதிநிதிகளை அழைக்க அரசு முடிவு செய்திருக்கலாம்.

சர்வதேச பார்வையாளர்களுக்கு முன்பாக குழிகள் தோண்டப்பட்டன என்று செய்திகள் வந்தால், தடயங்கள் முன்கூட்டியே அகற்றப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழாது என்று புத்திசாலித்தனமாக கணக்குப் போட்டிருக்கலாம்.

ஏனெனில் செம்மணி புதைகுழி விசாரணைகளை முதலில் ஆரம்பிக்கும்போது சர்வதேச பார்வையாளர்களை அழைக்க அரசு மறுத்துவிட்டது. பின்னர் திடீரென்று அழைப்பு விடுக்கப்பட்டது.

ஆனால் இங்கும் முக்கியமான ஒன்றை மறைத்துவிட்டனர். செம்மணிப் புதைகுழி தோண்டப்படும்போது சர்வதேச நிபுணர்கள் உதவி பெறப்பட வேண்டும் என்றுதான் மனித உரிமை அமைப்புக்கள் முன்னர் கோரியிருந்தன.

அதாவது, புதைகுழிகளில் இருந்த தடயங்கள் அகற்றப்பட்டுவிட்டனவா என்று கண்டறியவும், சேதம் இன்றி மீட்பு பணியில் ஈடுபடக்கூடியவர்களுமான நிபுணர்கள்தேவை என்றே கோரப்பட்டது.

ஆனால், தற்போது வந்திருப்பவர்கள் பார்வையாளர்களே தவிர, புதைகுழி தோண்டப்பட்டுள்ளதா? தடயங்கள் அழிக்கப்பட்டுள்ளதா? என்று ஆராயும் நிபுணர்களல்ல. புதைகுழி தோண்டலுக்கு உதவுபவர்களும் அல்ல.

'சர்வதேச நிபுணர்கள் வருகை, சர்வதேச பிரதிநிதிகள் வருகை' என்று வெளியான செய்திகளில் மேற்படி பிரதான வேறுபாடு வெளிப்படாமல் போய்விட்டது.

சர்வதேச நிபுணர்களை அழைத்து செம்மணிப் பகுதியில் மண் ஆய்வு செய்திருந்தால், தடயங்களை அகற்ற நடந்த அவசர தோண்டல்கள் பற்றி அகில உலகமும் அறிந்திருக்கும். அது தெரிந்துதான் பார்வையிட மட்டும் சர்வதேச பிரதிநிதிகளை அழைத்துள்ளது அரசு.

புதைகுழி உள்ள பகுதியில் மண் குழப்பப்பட்டுள்ளது என்று உள்ளூர் மண்ணியல் நிபுணர் கொடுத்த அறிக்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. மெல்ல சந்தடி சாக்கில் அமுக்கப்பட்டுள்ளது. ஆனால் புதைகுழி விவகாரத்தில் பிரதான விஷயமே இதுதான்.

ராஜபக்ஷ அடையாளம் காட்டிய புதைகுழியில்கூட மண் கிளறப்பட்டுள்ளது. இவற்றின் அருகே இருந்த குழிகளில்தான் பாம்பு, எலி போன்றவை புதைக்கபட்டிருந்தன.

மண் தோண்டப்பட்டதை கண்டு பிடித்தால் கூட எலிகளும், பாம்புகளும் புதைக்கத்தான் தோண்டப்பட்டன என்று நினைக்க வைப்பதற்கும் அவை புதைக்கப் பட்டிருக்கலாம்.

ஆனால் கிட்டத்தட்ட நாலரை வருடகாலமாக செம்மணியில் மக்கள் நடமாட்டமே கிடையாது. அப்படியிருக்க பாம்புகளையும், எலிகளையும் அங்கு கொண்டுபோய் புதைக்க வாய்ப்பில்லை. எனவே புதைத்தவர்கள் மக்களல்ல என்பதும், ஆகவே திட்டமிட்ட திசை திருப்பல் என்பதும் அம்பலமாகியிருக்கிறது.

செம்மணிப் பகுதியில் உடல்கள் குழிகளில் இருந்து அகற்றப்பட்டதாக தனக்கும் தகவல் கிடைத்ததாக ராஜபக்ஷவும் கூறியிருக்கிறார்.

எனவே, செம்மணியில் புதைக்கப்பட்ட உடல்களில் ஒரு பகுதி அகற்றப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் வலுத்துள்ளது.

முழுவதையும் அகற்றினால் யாரும் நம்ப மாட்டார்கள் என்பதால் ஒரு பகுதி மட்டும் அகற்றப்படாமல் விட்டுவைக்கப்பட்டதா? என்று ஆராயவேண்டும்.

குறைந்தது நூறு உடல்களாவது செம்மணியில் புதைக்கப்பட்டதாக தகவல்கள் கூறுகின்றன. ஆனால் அவற்றில் தற்போது மீதமிருப்பவை எத்தனை? என்பதை கேள்விக் குறி.

கண்டெடுக்கப்படும் எலும்புக்கூடுகள் பற்றிய செய்திகளால், அதனைவிட பெரியளவில் மறைக்கப்பட்ட எலும்புக்கூடுகள் பற்றிய உண்மைகளை முடிவிடலாம் என்றும் திட்டம் போட்டிருக்கலாம்.

அதுமட்டுமன்றி யாழ்ப்பாண குடாநாட்டில் மேலும் பல மனிதப் புதைகுழிகள் இருப்பதாக ராஜபக்ஷ கூறியிருக்கிறார்.

ராஜபக்ஷ அவ்வாறு கூறி ஒருவாரமாகிவிட்டது. அதுபற்றி அரசோ, பாதுகாப்புத் தரப்போ, பொலிசாரோ அலட்டிக் கொள்ளவேயில்லை.

நீதிபதி இளஞ்செழியனும் ராஜபக்ஷ கூறிய புதைகுழிகள் பற்றிய விபரங்களை அறிந்து, குறிப்பிட்ட பகுதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு உத்தரவிடவில்லை. செம்மணி விவகாரத்துடன் மட்டும் நின்று கொண்டார்.

சூரியகந்தை புதைகுழியை நேரில் சென்று பார்வையிட்டு தோண்ட வைத்தவர் ஜனாதிபதி சந்திரிக்கா.

ஆனால் செம்மணி புதைகுழி பற்றிய தகவல்கள் உண்மையான பின்னரும் ஜனாதிபதியோ, அவரது செயலகமோ எவ்வித செய்தியையும் தமிழ் மக்களுக்கு கூறவில்லை. வருத்தம் தெரிவிக்கவில்லை. அதுமட்டுமன்றி ராஜபக்ஷ கூறிய ஏனைய புதைகுழி விபரங்களை ஆராயுமாறு உத்தரவிடவும் இல்லை.

யாழ் குடாநாட்டில் அறுநூறுக்கு மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர். அத்தனை பேரும் சித்திரவதையின் பின்னர் கொல்லப்பட்டனர் என்று சர்வதேச மன்னிப்புச் சபையும் கூறிவிட்டது.

அறுநூறு உடல்களையும் செம்மணியில் புதைத்திருக்க முடியாது. குடாநாடெங்கும் பலவேறு பகுதிகளில் புதைக்கப்பட்டிருக்கலாம்.

அவற்றில் அரியாலை, கொட்டடி பகுதிகளில் உள்ள புதைகுழிகள் பாரியவை என்று கூறப்படுகிறது.

அவற்றை காண்பிக்கத் தயார் என்று ராஜபக்ஷ நீதிமன்றத்திலேயே கூறிவிட்டார்.

எனவே குறிப்பிட்ட புதைகுழிகள் இனம் காணப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்படாவிட்டால், அங்கும் தடயங்கள் மறைக்கப்படலாம்.

ராஜபக்ஷ மட்டுமன்றி கிருஷாந்தி கொலை வழக்கின் ஏனைய குற்றவாளிகளும் தாம் அறிந்த கொலை பாதகச் செயல்களைகூற முன்வந்துள்ளனர்.

அவ்வாறிருந்தும் அவர்களிடம் விசாரணை நடத்த அரசு முன்வரவில்லை.

தென்னிலங்கையில் ஜே.வி.பி. காலத்தில் நடந்த மனித உரிமை மீறல்களை தேடித் தேடி, துருவித் துருவி விசாரித்தனர். ஆயிரத்தெட்டு விசாரணைக்கமிஷன் நியமித்தனர்.

ஆனால் யாழ் குடாநாட்டில் புதைகுழிகளை காட்டுவதற்கு ஆள் இருக்கிறார். நடந்த அநியாயங்களை கூற பலர் தயாராய் உள்ளனர். விசாரணைக்கு உத்தரவிட அரசு தயங்குகிறது.

யாழ் குடாநாட்டு படுகொலைகள் தொடர்பாக ராஜபக்ஷ சில அதிகாரிகளின் பெயர்களை கூறியுள்ளார்.

சர்வதேச மன்னிப்புச் சபை போன்றவற்றை திருப்திப்படுத்துவதற்காக சில அதிகாரிகள்மீது விசாரணைகள் நடத்தப்படலாம்.

ஆனால் உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அர்த்தமில்லை.

ஏனெனில், பொல்கொட வாவியில் தமிழர்களை கொன்று வீசியவர்களுக்கு என்ன நடந்தது? என்பது தெரிந்த சேதி.

அவர்களை கைது செய்தபோது, அரசின் துணிச்சலான நடவடிக்கை- மனித உரிமைகள் மீதான அக்கறை என்றெல்லாம் பிரசாரம் செய்யப்பட்டது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தை பத்திரிகையாளர் மாநாடு நடத்தி, 'தக்க நடவடிக்கை எடுக்கப்படும்' என்று உறுதியளித்தார்.

ஆதாரபூர்வமாக கைதான அத்தனை படையினரும் பின்னர் காதும் காதும் வைத்தது போல விடுதலையாகினர்.

அதேவேளை ஐ.தே.கட்சி ஆட்சிக் காலத்தில் சிங்கள இளைஞர்களை கொன்று குவித்ததாக கூறப்பட்ட படை மற்றும் பொலிஸ் அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்க அரசு தயக்கம் எதனையும் காட்டவில்லை.

இதற்கிடையே சில தமிழ்க் கட்சிகள் படையினர்தான் மோசம், அரசுக்கு இவற்றில் தொடர்பில்லை என்பதுபோல சித்தரிக்க முனைகின்றன.

அரசை ஆதரிக்கும் தம் நிலைப்பாட்டுக்கு செம்மணி புதைகுழி விவகாரம் ஏற்படுத்தியுள்ள நெருக்கடியில் இருந்து தப்பிக்கொள்ள, படைமீது மட்டும் பழியை போட்டு அரசை காப்பாற்ற முயற்சிக்கிறார்கள்.

ஆனால், செம்மணி விவகாரத்திலும் ஏனைய புதைகுழி விவகாரங்களிலும் அரசின் மெத்தனப் போக்கு வெகு துல்லியமாக வெளிப்பட்டுவிட்டது.

செம்மணி புதைகுழி விவகாரம் உட்பட யாழ் குடாநாட்டில் உள்ள புதைகுழிகள் பற்றிய விசாரணைகளை முடுக்கிவிடுமாறு அரசிடம் கோரிக்கை விடுவது அர்த்தமற்றது.

சர்வதேச சமுகத்தை நோக்கியும், சர்வதேச மன்னிப்புச் சபை போன்றவற்றிடமும் உண்மைகளை எடுத்துக் கூறுவதற்கு தமிழ்க் கட்சிகள் துணியுமா? அதற்கு துணியாமல் அம்மையாருக்கு கடிதம், அம்மையாருடன் சந்திப்பு, அம்மையார் உத்தரவாதம் என்ற பல்லவிகளையே பாடிக் கொண்டிருக்கப் போகிறார்களா?

●●●

ரணகோஷ 04 நடவடிக்கை தன் இலக்கை எட்டாது முடிந்துள்ளது. விடத்தல்தீவுவரை கைப்பற்றியதாக கூறிய போதும் பாப்பா மோட்டையில்தான் முன்னரங்க நிலைகள் உள்ளன. விடத்தல்தீவில் புலிகளது நடமாட்டமும் காணப்படுகிறது.

பாப்பா மோட்டையில் இருந்து பெரிய மடுவரை தரைத் தொடுப்பு ஏற்படுத்தும் முயற்சியும் இதுவரை கைகூடவில்லை.

இதற்கிடையே 17.06.99 அன்று மாங்குளம் முன்னரங்க முனையில் திடீர் தாக்குதல் ஒன்றை புலிகள் நடத்தியுள்ளனர். இதில் நான்கு படையினர் பலியாகினர். புலிகள் தரப்பில் எவ்வித இழப்பும் அறிவிக்கப்படவில்லை.

முன்னரங்க நிலைகளை நோக்கி மோட்டார் ஷெல்கள் முதலில் ஏவப்பட்டன.

சரமாரியான ஷெல்வீச்சை அடுத்து முன்னரங்க பகுதியை நெருங்கிய புலியணி ஒன்று குறும்தூர ஆயுதங்களால் தாக்குதல் நடத்தின.

ரணகோஷ நடவடிக்கை மூலம் படையினர் கைப்பற்றிய பகுதிகளுக்குள் தாக்குதல் நடத்தும் பொறுப்பு புலிகளது விசேஷ அணியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த எல்லைக்கு பின்னர் ரணகோஷ படையினரை தடுத்து நிறுத்துவது, ஊடுருவி தொடர் தாக்குதலை நடத்துவது ஆகிய பொறுப்புக்கள் விசேஷ அணியிடம் கொடுக்கப்பட்டுள்ளன. ○

## அதிரடி அப்பாத்துரை



***அரச பத்திரிகையான*** 'டெயிலி நியுஸ்' செம்மணி புதைகுழி பற்றி வெளியிட்ட கருத்து என்ன தெரியுமோ? "அங்கு மனித எலும்புகள் இல்லை. எலியின் எலும்புக் கூடுதான் கிடக்கிறது." என்று எழுதியிருந்தது. இது முதல்நாள் குழி தோண்டப்பட்ட பின்னர் வெளியிட்ட செய்தி. மறுநாள் இரண்டு எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன. ஒருவேளை தமிழர்களை புலிகள் என்றும், புலிகளோடு சேராதவர்களை எலிகள் என்றும் இரண்டாக கருதித்தான், செம்மணியில் எலிகளது எலும்புக்கூடுகள்தான் இருக்கின்றன என்று கூறியவையோ?!

***பாம்பின் தலைகளும்,*** எலிகளது எலும்புகளும் செம்மணியில் கண்டெடுக்கப்பட்டதாக முன்பக்கத்தில் தடித்த எழுத்தில் தலைப்பு வெளியிட்ட இன்னொரு நடுநிலை பத்திரிகை 'ஐலண்ட்'. இதே பத்திரிகைகள் தென்னிலங்கையில் புதைகுழிகள் தோண்டப்படும்போது மனித உரிமைக்காக விட்ட கண்ணீர் கடலைவிட அதிகம் என்பதும் யாமறிந்ததே!

***செம்மணிப் பகுதியில்*** எலும்புக்கூடுகள் மீட்கப்பட்ட சங்கதியால் தமிழ்க் கட்சிகள் பாடுதான் தர்மசங்கடம். யாழ் குடாநாட்டில் எதிர்ப்பலை எழுந்துவிட்டது. காணாமல்போன அறுநூறுக்கு மேற்பட்டோர் கொலையாகினர் என்ற உண்மையை மன்னிப்புச் சபை கண்டறிந்து சொன்னதுகூட காதில் விழாததுமாதிரி, தேடிப்பிடித்து தருமாறு கோரிக்கை விட்டுக் கொண்டிருந்தவை. இனி மறைக்க முடியாதல்லோ?

***வன்னியில் ரெண்டு*** எழுத்தாரின் பயிற்சியால் வயதான ஆட்களும் இளமை திரும்பியது மாதிரி கம்பீரமாக நடந்து திரியினமாம். உடல் நிலை ஒத்துக் கொள்ளாது என்று வயோதிபர் ஒருவருக்கு பயிற்சி கொடுக்க மறுத்தனராம். அவருக்கு வந்த கோபத்தில் ரெண்டு எழுத்தாரை ஒருபிடி பிடித்துப்போட்டாராம். அதன்பின்னர் அவருக்கும் உடற்பயிற்சிகள் தரப்பட்டதாம்!

***ரெண்டு எழுத்து ஆலோசகர்*** சீமைக்குப் போன விவகாரம்தான் அதிகாரத் தரப்பாருக்கு பெரும் தலையிடியாக இருக்கிறதாம். இந்த நேரம் பார்த்து புதைகுழி விவகாரமும் வெளியே வருவதும் அவரது பிரசாரத்திற்கு சாதகமாக இருக்கப்போகிறது என்று நினைக்கினமாம்.

***யாழ் செல்லும்*** பயண விவகாரத்தில் ஏகப்பட்ட சம்பாத்தியம் நடக்குதாம். ஒரே நாளில் பயண ஏற்பாடு தேவையா? அதற்கும் தரகர்கள் உண்டாம். கடும் விதி காசில்லாத ஆட்களை மட்டும்தான் கஷ்டப்படுத்தும் 20 ஆயிரம் கொடுத்து அவசரமாகப் போனவையும் இருக்கினம்.

***யாழ் குடாநாட்டில்*** நடப்பது என்ன சிவில் நிர்வாகமா? என்று அரச அதிபரிடம் வெகுஜனப் பிரதிநிதி ஒருவர் கேட்டாராம். சந்திரமான அந்தப் பிரதிநிதிக்கு அரச அதிபர் நேரடியாகக் கூறிய பதில்: "இல்லை!" மேலும் கூறுகையில் "சீருடையினர் சொல்வதைச் செய்வதுதான் எங்கள் பணி!" என்றும் சொன்னாராம்.

***அவசரகாலச் சட்டத்தை*** காட்டி தமிழ்ச் சனத்தை மிரட்டலாம். டாக்டர்களை மிரட்ட முடியுமோ? டாக்டர்கள் வேலைக்குத் திரும்ப மறுத்தால் பென்சன் டாக்டர்களை வேலைக்கு அழைக்க உள்ளதாகக் கூறப்பட்டது. அதைக் கேள்விப்பட்ட நண்பர் ஒருவர் பதறிப்போனார். "இது என்ன இழவப்பா? வயதான காலத்திலை அவை எப்படி ஒப்பரேஷன் செய்வினம்? கை நடுங்கிப் போட்டா கதை காலியல்லோ?" என்று நெஞ்சைப் பிடித்துக்கொண்டார். நியாயம்தான்!

***தலைநகரில் ஆர்ப்பாட்டப்*** பேரணி நடத்தப்போவதாக மலையக தனித்துவக் கட்சி நினைக்கவே இல்லையாம். சும்மா ஒரு மிரட்டல் விடுப்பதுதான் திட்டமாம். அதிகாரத்தரப்பையும் பகைக்கக் கூடாது. தன் மதிப்பையும் காட்ட வேண்டும் என்பதுதான் தனித்துவத் தலைவரது ஆசை. நடவடிக்கை எடுப்போம் என்று உத்தரவாதம் தந்துவிட்டனர் என்று கூறியதுகூட 'சமாளிப்புக்கேஷன்'தான். அப்படி எந்த நடவடிக்கையும் எவர்மீதும் எடுக்கப்படவேயில்லையாம்!

***கிழக்கின் தனித்துவ*** தலைவருக்கும் தென்னிலங்கை அமைச்சருக்கும் இடையிலான பலப் பரீட்சையின் வெளிப்பாடுதான் தனித்துவத் தலைவருக்கு எதிரான கறுப்புக்கொடி.. அவரது மாகாணத்திலேயே எதிர்ப்பு நடத்திக் காட்டி தன் பலத்தை நிருபித்தாராம்.

**கவியரசு கண்ணதாசனின் பொன்மொழி இந்த வாரம்**

**"உலகிலுள்ள**
**எல்லோருமே யோக்கியர்கள்தான்!**
**எப்போது?**
**தூங்கும்போது!"**



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

# ஆனையிறவு தளம்மீதான ஆகாய கடல் வெளி சமர்




விடுதலைப் புலிகள் இயக்கத்தால் முதன் முதலில் தாக்கப்பட்ட இராணுவ தளம் ஆனையிறவுத் தளம்தான்.

பலமுகாம்களை கொண்டதே ஒரு இராணுவ தளம் என்று அழைக்கப்படுகிறது.

புலிகள் அதற்கு முன்னர் பல இராணுவ முகாம்களை தாக்கியுள்ளனர். இராணுவ தளம்மீது தாக்குதல் தொடுத்ததில்லை.

வடபகுதியின் பெரு நிலப்பரப்பை யாழ் குடாநாட்டுடன் இணைக்கும் தரைப்பகுதியில் ஆனையிறவு தளம் அமைந்துள்ளது.

வடபகுதியில் பல இராணுவ முகாம்கள் தாக்கப்பட்ட பின்னரும் ஆனையிறவு தளம் தனித்து நின்றது.

புலிகள் இத் தளத்தின்மீது தாக்குதல் நடத்தப்போவதாக படையினருக்கும் செய்தி எட்டவே செய்தது.

ஆனாலும் புலிகளால் தளத்தை கைப்பற்றுவது கஷ்டமான காரியம் என்று படைத்தரப்பு கருதியிருந்தது.

படைத்தரப்பு அவ்வாறு எண்ணுவதற்கு ஆனையிறவு தளம் அமைந்திருக்கும் பூகோள அமைப்பும் முக்கிய காரணமாகும்.

தளத்தின் பெரும் பகுதி உப்புநீரேரியால் அரண் செய்யப்பட்டுக் கிடக்கிறது. தளத்தை சூழ பெரும் வெளிப் பிரதேசம் இருக்கிறது.

பெரும் கடலுடன் தொடுக்கப்பட்ட ஆனையிறவுப் பகுதி முழுவதும் பொட்டல் வெளிகளையும், நீர் நிலைகளையும் கொண்டதாக இருக்கிறது.

இந்த பூகோள அமைப்பு புலிகளுக்கு பாதகமானது.

தளத்தை முற்றுகையிட்டு தாக்குதல் தொடுத்தால் வான் தாக்குதல் மூலம் முறியடித்துவிடலாம்.

பரந்த வெளிகளில் வான் மார்க்கமாக தரையிறக்கம் நடத்தி மேலதிக படைகளை சண்டையில் இறக்கலாம். கடல் மார்க்கமாகவும் தரையிறக்கம் மேற்கொள்ளலாம்.

ஆனையிறவு தளத்தின் ஒருமுனையாகிய தடை முகாம் பகுதியில் இருந்து மறுமுனையாகிய உல்லாச விடுதி முகாம் வரை சுமார் மூன்று கிலோ மீட்டர் தூரம் வவுனியா-யாழ் நெடுஞ்சாலை உள்ளடங்கியிருந்தது.

இந்த நெடுஞ்சாலையை உள்வாங்கியதாக உப்புக் கூட்டுத்தாபனம், சந்தை, பாடசாலை, மற்றும் கட்டடங்கள் இராணுவ தளத்துக்குரியதாக இருந்தன.

ஆனையிறவு தளம் ஐந்து பெரிய முகாம்களை அப்போது கொண்டிருந்தது.

1. தடை முகாம்
2. உப்பள அலுவலக முகாம்.
3. உப்புக் கூட்டுத்தாபன முகாம்.
4. பாடசாலை முகாம்.
5. உல்லாச விடுதி முகாம்.

இவற்றில் மையப்பகுதியில் இருந்த உப்புக் கூட்டுத்தாபன முகாமே தளத்தின் பெரியதும், பிரதானமானதுமான முகாமாக இருந்தது.

இங்குதான் உலங்குவானூர்தி இறங்குவதற்கான தளமும் இருந்தது. வாரத்தில் ஒருநாள் தளத்துக்கான உணவு மற்றும் வெடிமருந்து விநியோகங்கள் நடக்கும்.

### காவலரண்கள்

தளத்தின் வடபகுதியில் (இயக்கச்சிப் பக்கம்) இருக்கும் தடைமுகாமுக்கும், தென்பகுதியில் (பரந்தன் பக்கம்) இருக்கும் உல்லாச விடுதி முகாமுக்கும் முன்னால் புலிகளது காவலரண்கள் இருந்தன.

தடை முகாமுக்கு முன்பாக சுமார் 200-300 மீட்டர் தூரத்திலும், உல்லாச விடுதிக்கு முன்னால் சுமார் 500-600 மீட்டர் தூரத்திலும் புலிகளின் காவலரண்கள் இருந்தன.

காவலரண்களில் இருந்து புலிகள் முகாமை நெருங்கமுடியாதளவுக்கு இடைப்பட்ட பகுதிகளில் மிதி வெடிகள் படையினரால் புதைத்து வைக்கப்பட்டிருந்தன.

மோட்டார்கள், ஆட்டிலறிகள், பீரங்கிகள், கவசவாகனங்கள் என்பனவும் நவீனரக ஆயுதங்களும் ஆனையிறவு தளத்தில் இருந்தன.

ஆனையிறவு பகுதியில் நிலக்கீழ் நீர்மட்டம் உயர்ந்து காணப்படுகிறது. அதனால் வெளிப் பகுதிகளில் தரையைத் தோண்டி பதுங்குகுழி அமைப்பதும் புலிகளுக்கு கடினம். இரண்டு மூன்றுஅடி தோண்டும்போதே நீர் சுரந்துவிடும்.

இத்தனையையும் கருத்தில் கொண்டே ஆனையிறவு தளம் துணிந்து நின்றது.

இத்தனையையும் கருத்தில் எடுத்தே ஆனையிறவுத் தளத்தை தாக்கியழிக்கும் போர்த்திட்டத்தை புலிகள் வரைந்தனர்.

### பெயர் சூட்டல்

புலிகள் பல சமர்களை நடத்தியுள்ளனர். ஆனால் முதலில் பெயர் சூட்டப்பட்டு நடைபெற்ற சமர் ஆனையிறவுச் சமர்தான்.

'ஆகாய-கடல் வெளிச் சமர்' என்று இதற்கு பெயரிட்டனர்.

ஆனையிறவுச் சண்டையை இரண்டு பரிமாணத்தில் நடத்துவது என்று புலிகள் முடிவு செய்தனர்.

1. தளம்மீது தாக்குதல் போர் முறையை பிரயோகித்தல்.

2. தரையிறக்கப்படும் படையினருடன் ஒரு தற்காப்புப் போர் முறையைக் கைக்கொள்ளல்.

இந்த இரண்டு போர் முறைக்கும் படையினரின் வான்படையே பொது எதிரியாக இருக்கும் என்றும் புலிகள் முடிவு செய்தனர்.

எனவே விமானங்களையும், உலங்கு வானூர்திகளையும் எதிர்கொள்ள விமான எதிர்ப்பு துப்பாக்கிகளை பயன்படுத்தும் வழிவகைகள் செய்யப்பட்டன.

அப்போது விமான எதிர்ப்பு ஏவுகணைகள் புலிகளிடம் இருக்கவில்லை. அதனால் விமான எதிர்ப்பு துப்பாக்கிகளை பயன்படுத்தக்கூடியதாக விமான எதிர்ப்புப் படையணிக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

யாழ் குடாநாட்டிலிருந்து, குறிப்பாக தென்மராட்சியிலிருந்து ஆனையிறவுக்கு செல்லும் நெடுஞ்சாலை திருத்தி அமைக்கப்பட்டது.

புலியணிகள் வேகமாக போக்குவரத்தில் ஈடுபட வசதியாகவும், மருத்துவ சேவைகளை போர்முனைக்கு விரைவாக செய்ய வசதியாகவுமே நெடுஞ்சாலை செப்பனிடப்பட்டது.

தென்மராட்சியில் புலியணிகள் ஓடுப்பட்டுத் திரிந்தன. பாரிய தாக்குதலுக்கான தயாரிப்பு என்பதால், ஆனையிறவு தளம் குறிவைக்கப்படப்போகிறது என்று மக்கள் ஓரளவு ஊகித்தனர்.

கொழும்புக்கு வந்த சிலர் மூலம் படைத்தரப்புக்கும் தகவல் கசிந்தது. ஆனையிறவு தளத்தை தாக்க புலிகள் திட்டமிடுவதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளது என்று படைத்தரப்பு பகிரங்கமாகவே அறிவித்தது.

அவ்வாறு அறிவித்தால் இரகசியம் கசிந்துவிட்டது என்று புலிகள் தாக்குதல் திட்டத்தை கைவிடக்கூடும் என்பதும் ஒரு தந்திரம்.

ஆனால் புலிகள் கைவிடத் தயாராக இருக்கவில்லை. இவ்வாறான பாரிய சமரில் தகவல் தெரிவது சகஜம். எதிரி தயாராக இருந்தாலும் தாக்குவோம் என்பதே புலிகளது நிலையாக இருந்தது.

### தளபதிகள்

ஆகாய கடல் வெளிச்சமரை நடத்த ஒவ்வொரு போர்முனைக்கும் அனுபவம் வாய்ந்த தளபதிகள் நியமிக்கப்பட்டனர்.

சமர் முழுவதற்கும் பொறுப்பாக பொட்டு அம்மான் நியமிக்கப்பட்டார்.

ஆனையிறவு இராணுவத் தளத்தின் தென்பகுதி முனையில் நடைபெறும் சண்டைகளுக்கு பொறுப்பாக சாள்ஸ் அன்ரனி சிறப்பு படையணித் தளபதி பால்ராஜ் நியமிக்கப்பட்டார்.

பால்ராஜின் தலைமையில் அப்பகுதி தாக்குதல் அணிகளுக்கு நேரடித் தலைமை தாங்க சூசை நியமிக்கப்பட்டார். அவருடன் மகளிர் படையணித் தளபதிகளில் ஒருவரான ஜெனா நியமிக்கப்பட்டார்.

இப்பகுதியில் வான்வழி தரையிறக்கத்தை எதிர்கொள்ளும் அணிக்கு தண்டோஸ் பொறுப்பாக இருந்தார். இவருடன் மகளிர் படையணியின் துணைத்தளபதி ராதாவும் நியமிக்கப்பட்டார்.

இப்பகுதியில் விநியோக நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக வன்னிப் பிராந்திய புலிகளின் தளபதிகளில் ஒருவரான குட்டியும், வன்னி மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மனோவும் நியமிக்கப்பட்டனர்.

இப்பகுதி மீட்பு வேலைகளுக்கு பொறுப்பாக வன்னி மாவட்ட தளபதிகளில் ஒருவரான மல்லி நியமிக்கப்பட்டார். மருத்துவ வேலைகளுக்கு பொறுப்பாக வன்னிமாவட்ட புலிகளது மருத்துவ பிரிவுப் பொறுப்பாளர் திவாகர் நியமிக்கப்பட்டார்.

ஆனையிறவு தளத்தின் வடமுனையில் (இயக்கச்சிப் பக்கம்) நடைபெறும் சண்டைகளுக்குப் பொறுப்பாக புலிகளின் யாழ் மாவட்ட தளபதி தினேஷ் (தமிழ்ச் செல்வன்) நியமிக்கப்பட்டார்.

தமிழ்ச் செல்வனின் தலைமையின் கீழ் செயற்பட்ட தாக்குதல் அணிகளுக்கு தென்மராட்சிப் பொறுப்பாளர் குணாவும், மகளிர் படையணித் தளபதிகளில் ஒருவரான விதுஷாவும் நியமிக்கப்பட்டனர்.

வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு கடற்கரை சண்டைகளுக்கு பொறுப்பாக குட்டி நியமிக்கப்பட்டிருந்தார்.

வடமுனை விநியோகங்களுக்கு பொறுப்பாக பாப்பா நியமிக்கப்பட்டிருந்தார். இப்பகுதி மீட்பு வேலைகளுக்கு பொறுப்பாக ஆஞ்சநேயர் நியமிக்கப்பட்டிருந்தார். இப்பகுதியில் மருத்துவ வேலைகளுக்கு பொறுப்பாக மனோச் நியமிக்கப்பட்டிருந்தார்.

### ஜூலை 10

ஜூலை மாதம் 10ம் திகதி ஆனையிறவுச் சமருக்கான திகதி குறிக்கப்பட்டது.

அந்த நாளும் வந்தது. அன்று வளர்பிறைக் காலம். அதனால் முன்னிரவு அடர்த்தியான கருமையாக இருந்தது.

தென்மராட்சியின் பரந்த தென்னம் தோட்டம் ஒன்றுக்குள் புலிகள் நிரம்பி நின்றனர்.

புலிகளின் தளபதிகளும் அங்கு கூடியிருந்தனர். இரவு எட்டு மணியளவில் திடீரென விசில் சப்தங்கள் எழுந்தன.

ஒரு சில நிமிடத்தில் அந்தத் தென்னம் தோட்டத்தின் மத்தியில் அமைக்கப்பட்டிருந்த மாவீரர் கல்லறையருகே புலிகள் அனைவரும் குழுமினார்கள்.

ஜெனரேட்டர் இயங்கத் தொடங்குகின்றது. சில மின்குமிழ்கள் ஒளியை உமிழ்கின்றன.

கல்லறைக்கு அருகில் நிற்கும் கம்பத்தில் புலிகொடி பறந்து கொண்டிருந்தது. துப்பாக்கி குழாய்கள் வானை நோக்கிப் பார்க்கும் வண்ணம் அணைத்தபடி புலிகள் அனைவரும் வரிசையாக தரையில் அமர்கின்றனர்.

அவர்கள் பிரபாகரனை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். சில நொடிகளில் அங்கு பிரபாகரன் வந்து சேருகிறார். கதிரையில் அமருகிறார்.

பிரபாகரன் அங்கு உரையாற்றத் தொடங்குகிறார்:

"எதிரியின் அழிவில்தான் எங்கள் வெற்றி தங்கியிருக்கிறது. எங்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டுக் கொண்டிருக்கும் இராணுவ வீரனது உயிர் பிடுங்கப்படும்வரை எமது போராளிகள் உயிரிழந்து கொண்டிருப்பார்கள். எனவே, எதிரியின் அரண்களுக்குள் வேகமாக செல்லுங்கள். முடிந்தவரை எதிரிகளை வேகமாக வீழ்த்துங்கள். அதன்மூலம் வெற்றியைப் பெறுங்கள்..." என்று பிரபாகரன் உரையாற்றினார்.

அதன் பின்னர் சமர் குறித்து சுமார் ஒருமணிநேரமாக பிரபாகரனும் தளபதிகளும் விளக்கினார்கள்.

அக்கூட்டம் முடிவடைந்த ஒரு சில நிமிடங்களில் வானத்தில் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் இரைச்சலுடன் தோன்றின.

(தொடர்ந்து வரும்)



ஆனையிறவுக் களத்தில் புலிகளின் தளபதிகள் பால்ராஜ்-சூசை

# சிவராசனுடன் சில நாட்கள்

ராஜீவ் கொலை [illegible] தண்டனையின் [illegible]ம்பில் இருந்து [illegible]த். கன்னடக்காரரான இவர் தனது அனுப[illegible] எழுதியுள்ளார். அதில் இருந்து முக்கிய பகுதிகள் இங்கு தரப்படுகின்றன.

வலியப்போய் உண்மைகளைச் சொன்ன என்னை பொலிஸும் சி.பி.ஐ.யும் பட்டறையில் இரும்பை உருக்குகிற மாதிரி போட்டு உருக்குவார்கள் என்று நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை.

என் கை கால்களைக் கட்டி முகத்தைத் துணியால் மூடி பெங்களூரில் இருந்து சி.பி.ஐ. ஆபீஸுக்குக் கொண்டு போனார்கள். அங்கு என்னுடைய மனைவி, சிவராசனை என் வீட்டுக்கு அனுப்பிவைத்த ராஜன், பால்காரர்கள், என் பக்கத்து வீட்டுக்காரர்கள், அப்பாஜிகௌடா, வீடு பிடித்துக் கொடுத்த புரோக்கர்கள் என்று அத்தனை பேரும் ஆபீஸுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தனர்.

மாத்யூ என்ற சி.பி.ஐ. அதிகாரி "உண்மையைச் சொல்லு... உன்னை சாட்சியாகத்தான் போடுவார்கள். இல்லையென்றால், மெட்ராஸில் மல்லிகைக்குக் கொண்டு போய் இன்னும் உதைப்பார்கள்." என்றார்.

அவர் "உன் வாய் சரியில்லை.. பெரிய டெல்லிக்காரங்க பெயரையெல்லாம் சொல்லுகிறாய். காங்கிரஸ்காரங்க வீட்டுலேயே குடியிருந்திருக்கிறாய். ஒன்றுக்கு இன்னொன்று குழப்பமாகச் சேர்ந்து மிஸ்ஃபயர் ஆகிவிடும். பிறகு நீதான் தூக்கில் தொங்கவேண்டும்" என்று பயமுறுத்தினார். பிறகு, கார்த்திகேயன் "இனி உன்னை நான் பார்க்கமாட்டேன். என்னுடைய ஜூனியர்கள்தான் விசாரிப்பார்கள். அவங்க கிட்ட உன் முடிவைச் சொல்லு. சந்திராசாமி பற்றி அரைகுறையா யாரோ சொன்னதையெல்லாம் சொல்லக்கூடாது!" என்று சொல்லிவிட்டுக் கிளம்பிப் போனார்.

சிவராசன் என்னுடைய வீட்டில் தங்கியிருந்தபோது ஒரு சூட்கேஸில் ரூபாய் நோட்டுக்களையும் டாலர் நோட்டுக்களையும் வைத்து பத்திரிகைகளால் போட்டு மூடி வைத்திருந்ததை நான் பார்த்தேன். இந்த ரூபாய் நோட்டுக் கட்டுக்களில் வங்கி முத்திரைகளும் இருந்தன. இதோடு வெளிநாட்டுக் கரன்ஸி நோட்டுகளை மாற்றும் ஒரு நிறுவனத்தின் சீட்டுகளும் இருந்தன.

அவற்றை புது வீட்டுக்குப் போனபோது சிவராசன் கையோடு கொண்டுபோய்விட்டார்.

சிவராசனையும் சுபாவையும் சி.பி.ஐ. சுற்றிவளைத்து துப்பாக்கிச் சண்டை நடத்திக் கடைசியில் பிணமாகப் பிடித்தது. அதன் பிறகும், அந்த டாலர் நோட்டுக்கள் பற்றி எங்குமே வழக்கில் வந்தமாதிரி தெரியவில்லை.

அந்த டாலர் நோட்டுக்கள், என் வீட்டிலிருந்து சிவராசன் கொண்டுபோன காஸ் ஸ்டவ் மூலம் மொத்தமாகப் போட்டு எரிக்கப்பட்டிருக்கலாம் என்று பிறகுதெரிந்துகொண்டேன். அந்த நோட்டுக்களை மட்டும் அப்படியே எடுத்து புலன்விசாரணை செய்திருந்தால், அதில் உள்ள எண்களை வைத்து யார் மூலமாக இந்தப் பணம் சிவராசனிடம் ஒப்படைக்கப்பட்டது என்ற உண்மையை வெளியில் கொண்டுவந்திருக்க முடியும்.

எட்டு வருடங்கள் சிறையில் இதுபற்றி எண்ணி எண்ணி புழுங்கிச் செத்துக் கொண்டிருந்ததால்தான், சிறையிலிருந்து விடுதலையாகி வெளியே வந்ததுமே ஆத்திரம் தாங்காமல் என் மனதில் இருந்ததை சில வார்த்தைகளாகப் பத்திரிகையாளர்கள் முன் கொட்டித்தீர்த்தேன்.

இதுமட்டுமல்ல... ராஜீவின் பயணத் திட்டம் சிவராசனுக்குக் கிடைத்தது எப்படி என்பது பற்றியும் ஒரு கேள்வி வந்தது. இந்த திட்டத்தை நான்தான் காங்கிரஸ் புள்ளி அஷ்வத் நாராயணா வீட்டில் திருடி சிவராசனிடம் கொடுத்ததாக வழக்கில் காட்ட இருந்தனர்.

இதற்காக சிவராசனு[illegible] வரை நான் [illegible] துருவினார்கள்.

கடைசியில், அப்படிப்போட்டால் குழப்பம் வரும் என்று புரிந்துகொண்டு அந்த எண்ணத்தைக் கைவிட்டனர்.

ஒருவழியாக கிட்டத்தட்ட பத்து நாட்கள் விசாரணைக்குப் பின்னர், என்னை பெங்களூர் கோர்ட்டில் ஆஜர்படுத்தி, சென்னைக்குக் கொண்டு சென்றனர். என்னை சங்கிலியால் கட்டி ஹெலிகாஃப்டரில் கொண்டுவந்தனர். தாம்பரம் விமானப்படை தளத்தில் இறக்கி, மல்லிகைக்குக் கொண்டுவரப்பட்டேன்.

நான் மல்லிகைக்குக் கொண்டு செல்லப்படுவதற்கு முன்பே, சி.பி.ஐ. விசாரணையில் இருந்த கோடியக்கரை மிராசுதார் சண்முகம் தூக்கில் மர்மமாகத் தொங்கி இறந்து போயிருந்தார். சி.பி.ஐ-க்கு இதனால் கெட்ட பெயர்.

சிவராசன் எங்கள் வீட்டுக்கு வந்தது... எங்களை மிரட்டியது பற்றி என் மனைவி மிருதுளாவும் குற்றவியல் நடைமுறைசட்டப்பிரிவு 164-ன் படி வாக்குமூலம் [illegible].

"[illegible] சிவ ராசன் கும்பல் மிரட்டித்தான் அடைக்கலம் இருந்தனர்" என்று என் மனைவி மிருதுளா கிரண்மை முதலில் வாக்குமூலம் கூறியிருந்தாள். ஆனால், ஸ்பெஷல் கோர்ட்டில் "என் கணவரை மிரட்டினார்களா என்பது எனக்குத் தெரியாது. என்கணவர் சிவராசன் கும்பலுக்கு எல்லா உதவிகளையும் விருப்பப்பட்டுத்தான் செய்தார்" என்று சாட்சியம் அளித்தாள்.

குடும்பத்தில் பகைமையைச் சேர்த்துக் கொண்டு நான் கைபிடித்த என் மனைவி எனக்கெதிராக மாறிப்போனதில் இடிந்து போனேன். ஏன் அவள் இப்படி ஆனாள் என்று சிறையில் இருந்தபடியே கொஞ்சம் கொஞ்சமாகத் தெரிந்துகொண்டேன்.



அவளுக்கு பெங்களூர் நகர ஆயுதப் பொலிஸ் நலவாழ்வு மையத்தின் பள்ளி ஆசிரியை வேலையை வாங்கிக்கொடுத்தது யார்? சிவராசனைக் கண்டுபிடித்துக் கொடுத்ததாக கணிசமான பரிசுத்தொகை அவளுக்கு அளிக்கப்பட்டது ஏன்?

என்னை ஒரேயடியாகக் கைவிட்டு, அந்த ஆயுதப் படையில் உள்ள கான்ஸ்டபிளை அவள் இன்னொரு திருமணம் செய்து கொண்டது எப்படி?

இதற்கெல்லாம் முழு விடை தெரிந்தவர்கள் 'எல்லாம் வல்ல' சி.பி.ஐ. பெரிய அதிகாரிகள்தான்.



படிப்பகம்

www.padippakam.com

## அலசுவது - இராஜதந்திரி

# கிரிக்கெட்டும் வெற்றி கிட்டாத யுத்தமும்

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்று முடிந்துள்ளன. இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளில் இலங்கை அணி படு தோல்வியை சந்தித்திருந்தது.

இந்த படுதோல்வியை அடுத்து தென்னிலங்கையில் ஏற்பட்ட உணர்வலைகள் ஆழ்ந்து கவனிக்கத்தக்கதாகும்.

உத்தியோகபூர்வமற்ற துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது போன்றே சில நாட்களாக நாடு சோகத்தில் மூழ்கிக்கிடந்தது.

சூப்பர் சிக்ஸ் போட்டிக்கு நுழைய முடியாதளவுக்கு இந்தியாவிடம் படுதோல்வி கண்டதையடுத்து தென்னிலங்கை எங்கும் சோகம் கவிந்திருந்தது.

தேசியத் தலைவர்களது மறைவுக்கு அரசால் நாடெங்கும் துக்கதினம் அனுஷ்டிக்கப்படும்போதும் இத்தகைய சோக இருள் மண்டிக்கிடப்பதில்லை.

விளையாட்டுப் போட்டிகள் என்பதே வெற்றி தோல்விகளை சமமாக ஏற்கும் மனப் பக்குவத்தை உருவாக்குவதற்கும், நட்புறவுகளை வளர்ப்பதற்குமே நடைபெற்று வருகின்றன.

எனினும் தமது அணிகள் தோல்வி காணும்போது அந்த அணியின் ரசிகர்கள் கவலை கொள்வதும் இயல்பான ஒன்றேயாகும்.

ஆனால், இலங்கை கிரிக்கெட் அணியின் தோல்வியை அடுத்து தென்னிலங்கையில் ஏற்பட்ட உணர்வலைகள் விளையாட்டு தொடர்பான மனோபாவங்களுக்கு அப்பாற்பட்ட ஒன்றாகவே திகழ்ந்திருந்தது.

எனினும் இத்தகைய மனோபாவம் சிங்கள மக்களிடம் மட்டுமே ஏற்பட்டிருந்தது என்பதும் மிக முக்கியமான அம்சமாகும்.

இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு தமிழ், முஸ்லிம் ரசிகர்களும் ஓரளவு உள்ளனர். எனினும் தோல்வி தொடர்பாக வழக்கமான கவலையைவிட மேலதிகமான துக்கத்தில் அவர்கள் ஆழ்ந்து போய்விடவில்லை.

சிங்கள மக்களைப் பொறுத்தவரை இலங்கை அணியை தங்கள் சொந்த இனத்தின் அணியாக கருதும் போக்கே காணப்படுகிறது.

தமிழர்கள் இந்திய அணிக்கும், முஸ்லிம்கள் பாகிஸ்தான் அணிக்கும் ஆதரவானவர்கள் என்ற அபிப்பிராயமே சிங்கள மக்களிடம் உள்ளது.

இலங்கை அணியினர் கடந்த காலத்தில் இந்திய அணியை படுதோல்வி காணச் செய்த சந்தர்ப்பங்களில், சிங்கள மக்கள் பலர் தமது நண்பர்களான தமிழர்களிடம் பெருமையோடு சுட்டிக்காட்டிய சம்பவங்களும் உண்டு.

எனவே, இலங்கைக் கிரிக்கெட் அணியை தமது தேசியப் படை போன்றும், கிரிக்கெட் போட்டிகளை சிங்கள தேசத்திற்கும் ஏனைய நாடுகளுக்கிடையேயுமான யுத்தம் போன்றும் மனோபாவம் கொள்ளும் போக்கே மேலோங்கியுள்ளது.

சிங்கள இனத்திற்கு இந்த நூற்றாண்டில் கிடைத்த மிகப் பாரிய பெருமிதமாக சென்ற உலகக் கிண்ண வெற்றி கொண்டாடப்பட்டதோடு, கிரிக்கெட் அணியையும் தேசிய பெருமிதத்தின் சின்னமாகவே நோக்கி நின்றனர்.

யாழ் குடாநாட்டைப் படையினர் கைப்பற்றியபோதும் தென்னிலங்கையில் பெருமித உணர்ச்சி பொங்கி வழிந்தது.

பாராளுமன்றத்திற்கு பிரதிபாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை ஆளும் தரப்பு பிரதிநிதிகளால் தோளில் சுமந்து செல்லப்பட்டார்.

ஜனாதிபதி சந்திரிக்கா 'யாப்பா பட்டுனவை' கைப்பற்றிய வெற்றித் தேவதையாக வியாக்கியானப்படுத்தப்பட்டார்.

இந்த வெற்றிப் பெருமிதம் நீடித்திருக்குமானால் சிங்கள மக்களுக்கு கிரிக்கெட் வெற்றிகள் இரண்டாம் பட்சமானதாக இருந்திருக்கக் கூடும்.

ஆனால், யாழ் குடாநாட்டை படையினர் கைப்பற்றிய பின்னர் புலிகள் முல்லைத்தீவு இராணுவ தளத்தை தாக்கியழித்தனர். ஓயாத அலைகள்-01 என்று பெயரிடப்பட்ட அந்த தாக்கியழிப்புச் சமர் குடாநாடு மீதான



வெற்றிப் பிரசாரங்களுக்கு பேரிடியாக அமைந்திருந்தது.

பின்னர் யாழ் குடாநாட்டில் நடைபெற்ற கரும்புலித் தாக்குதல்களும், புலிகளது பிரசன்னமும் நிலப்பகுதிகளை பிடிப்பது நிரந்தர வெற்றியாகாது என்ற உண்மையை பறைசாற்றின.

எனவே, போர்க்களத்தில் தமது படைகளது சாகசங்களை ரசிக்கும் மனோநிலையை ஏற்படுத்தி, அந்த சாகசங்களுக்கு காரணம் தாமே என்று உரிமை கோரும் ஆட்சியாளரின் திட்டமும் பலவீனமடைந்தது.

ஐ.தே.கட்சி ஆட்சிக்காலம் போன்றே மறுபடியும் முடிவில்லாத யுத்தம் ஒன்றையே இன்றைய ஆட்சியாளரும் நடத்தவேண்டியுள்ளது என்பதை களநிலவரங்கள் கோடிட்டுக் காட்டியிருந்தன. எனவே, யுத்தம் தொடர்பான சுவாரசியமான, பெருமிதமான எதிர்பார்ப்புக்கள் தென்னிலங்கையில் வீழ்ச்சியடைந்தன.

இந்தக் கட்டத்தில்தான் இலங்கை கிரிக்கெட் அணி விசுவரூபமெடுத்திருந்தது. உலகை வியக்க வைக்குமளவுக்கு உலகக் கிண்ணப் போட்டிகளில் உத்வேகமாகவும், ஒற்றுமையாகவும் ஆடி வெற்றியை தனதாக்கிக் கொண்டது.

யுத்த களத்தில் பெற்ற வெற்றிகளுக்கு உரிமை கோரியது போன்றே, கிரிக்கெட் வெற்றிக்கும் பொது ஜன முன்னணி ஆட்சியாளர்கள் உரிமை கோரியதையும் மறந்துவிடலாகாது.

போர்முனையில் போரிடும் அரச படைகளைவிட, கிரிக்கெட் அணிக்கே தென்னிலங்கையில் அபிமானமும், ஆதரவும் அதிகரித்திருந்தது.

களமுனைச் சாவுகள் ஏற்படுத்தாத அதிர்ச்சியையும், சோகத்தையும் சனத் ஜெயசூரியா ஆட்டமிழக்கும் காட்சியால் ஏற்படுத்த முடிந்தது.

## டென்சில் கொப்பேகடுவ சனத் ஜெயசூரிய, அரவிந்த டி சில்வா!

'ஒப்பரேசன் லிபரேசன்' போன்ற இராணுவ நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்கிச் செயற்பட்ட டென்சில் கொப்பேகடுவவை சிங்கள மக்கள் தங்கள் தேசிய வீரராகவே மதித்துப் போற்றுகின்றனர். அதே சமயம் தெற்கில் ஜே.வி.பி. கிளர்ச்சியை அடக்கிய சிசில் வைத்தியரத்ன போன்ற இராணுவ தளபதிகளை தேசிய வீரர்களாக போற்றுவதில்லை என்பதையும் கவனித்தாக வேண்டும்.

வடக்கு-கிழக்கு யுத்தம் என்பது பிறிதொரு இனத்தின்மீதான, தேசத்தின்மீதான யுத்தமாகவே சிங்கள மக்களால் நோக்கப்படுகிறது. அதனால்தான் டென்சில் கொப்பக்கடுவ போன்றோர் தேசிய வீரர்களாக மதிக்கப்படுகின்றனர்.

கிரிக்கெட்டும் யுத்தமாக, சிங்கள தேசத்தின் பெருமிதமாக கொள்ளப்பட்டதால் சனத் ஜெயசூரியா, அரவிந்த டி சில்வா போன்றோரும், கப்டன் ரணதுங்காவும் தேசிய வீரர்களாகவே நோக்கப்பட்டனர்.

இந்த இடத்தில் இன்னொன்றையும் நோக்க வேண்டும். சனத் ஜெயசூரியா, அரவிந்த டி சில்வா ஆகியோருக்கு கிடைத்த அதேயளவான வரவேற்பு, இங்கிலாந்தில் டெஸ்ட் போட்டியில் அதிக விக்கெட்டுக்களை சாய்த்து முரளிதரன் உலக சாதனை படைத்தபோது கிடைத்ததாக சொல்ல முடியாது.

முத்தையா முரளிதரனின் சாதனையைப் பாராட்டி தமிழ் அமைப்பு ஒன்றுதான் கொழும்பில் விழா எடுக்க வேண்டியிருந்தது. ஆனால் சனத் மற்றும் அரவிந்த டி சில்வா ஆகியோருக்கு சிங்கள வர்த்தகப் பெருமக்கள் பெரும் வெகுமதிகளை தாமாக முன்வந்து வழங்கியிருந்தனர்.

முத்தையா முரளிதரன் எத்தகைய சாதனை படைத்தாலும் அவரை தமது தேசிய வீரராக சனத், அரவிந்தா போன்றோரின் பட்டியலில் சேர்த்துப் பார்க்க சிங்கள ரசிகர்கள் முன்வரமாட்டார்கள். நல்ல திறமைசாலி, சிறந்த பந்து வீச்சாளர் என்று பாராட்டுவதோடு நிறுத்திக் கொண்டுவிடுவர்.

மொத்தத்தில் இலங்கை கிரிக்கெட் அணியும், அதன் வெற்றிகளும் சிங்கள தேசத்தின் வெற்றிப் பெருமிதங்களாகவே கருதப்பட்டு வந்தன.

உள்நாட்டில் யுத்தத்தின் விளைவுகளையும், அது தொடர்பான பொருளாதார நெருக்கடிகளையும்கூட கிரிக்கெட் வெற்றிகளது ஆரவாரம் பின் தள்ளிக் கொண்டிருந்தது.

1996இல் உலகக் கிண்ண வெற்றியுடனும், வேறு சில போட்டிகளில் இலங்கை அணி வெற்றி பெற்ற சந்தர்ப்பங்களிலும் பொருட்களின் விலைகளை ஆட்சியாளர்கள் உயர்த்தியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அது மட்டுமன்றி யுத்த களத்தில் ஏற்பட்ட பின்னடைவுகள் ஆட்சியாளரது காலவரையறைகளை காணாமல் போக வைத்திருந்தன. அது குறித்து சிங்கள மக்களை கவனம் கொள்ளாது திசை திருப்பவும் கிரிக்கெட் வெற்றிகள் உதவிகரமாக அமைந்திருந்தன.

இலங்கை கிரிக்கெட் அணி யாராலும் வெல்லப்பட முடியாத அணி என்று அளவுக்கதிகமான நம்பிக்கை ஏற்படுத்தப்பட்டது. இதற்கு ஆட்சியாளரும் துணைபோயிருந்தனர்.

விமான நிலையத்தில் கிரிக்கெட் வீரர்களை வரவேற்க அமைச்சர்கள் சென்று காத்திருந்ததோடு, அவர்களோடு இணைந்து படம் எடுத்துக் கொள்ளவும் முண்டியடித்தனர்.

அமைச்சர்களே இவ்வாறு முண்டியடித்தமையால் சாதாரண சிங்கள பாமர மக்கள் கிரிக்கெட் வீரர்களை தேசிய வீரர்களாகவும், கிரிக்கெட் கடவுள்களாகவும் கருதியதில் ஆச்சரியமில்லை.

இன்றைய ஆட்சியாளர்களுக்கு சிங்கள மக்களைக் கவர வடக்கு-கிழக்கு யுத்தமும், கிரிக்கெட் யுத்தமும் தேவையாக இருந்தன. இவற்றின் வெற்றி ஆரவாரங்கள் இடையே தங்கள் ஆட்சித் தேரை மேலும் பத்து வருடங்களுக்கு நகர்த்திச் செல்லலாம் என்றே நம்பியிருந்தனர்.

அதேசமயம் வெளியுலகில் இலங்கையின் மதிப்பை உயர்த்துவதிலும், பற்றி எரியும் தேசிய இனப்பிரச்சனையை மூடி மறைக்கவும் கிரிக்கெட் வெற்றிகள் உதவியிருக்கின்றன.

இலங்கை என்றதும் உள்நாட்டு யுத்தத்தால் உருக்குலையும் நாடு என்ற நினைப்பு எழுவதற்கு பதிலாக, உலகக்கிண்ண சாம்பியன் என்ற நினைப்பே மேலோங்கும் சூழலும் தோன்றியிருந்தது.

இதனால் சிங்கள மக்களுக்கு எவ்வித பாதகமும் இல்லையென்றாலும், தமிழ் பேசும் தரப்புக்கு பின்னடைவேயாகும்.

இன்றைய ஆட்சியாளரின் யுத்த நகர்வாலும், இராணுவத் தீர்வு முனைப்பாலும் குடாநாட்டில் காணாமல் போனோர் புதைகுழிகளுக்குள் பிணமாகக் குவிக்கப்பட்டதைவிட, கிரிக்கெட் அணியின் ஓட்டக் குவிப்புத்தான் வெளியுலகின் கண்களுக்கு தெரிந்திருந்தது.

மொத்தத்தில் கிரிக்கெட் என்பது விளையாட்டுகளில் ஒன்றாக அல்லாது, சிங்கள மக்களுக்கு தேசிய பெருமிதமான விஷயமாகவும், ஆட்சியாளர்களுக்கு தம் நலன்களை பாதுகாக்கும் கவசங்களில் ஒன்றாகவுமே கடந்த ஐந்து வருடங்களாக திகழ்ந்துள்ளது.

இவ்வாறான பின்னணியில்தான் இலங்கை அணியின் தோல்விகளை நாட்டின் தோல்வியாக கருதும் மனப்போக்கு தற்போது தோன்றியிருக்கிறது. தோல்வியை ஜீரணிக்க முடியாத நிலையும் காணப்பட்டது.

இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளிலும் கிரிக்கெட் ஒரு முக்கியமான பிரபல விளையாட்டேயாகும். அணிகள் தோற்கும்போதும் அந்த நாட்டு ரசிகர்கள் கோபப்படுவதும், தம் வீரர்களை தூஷிப்பதும் வழக்கமேயாகும்.



ஆனால், நாடே துக்கத்தில் மூழ்கும் அளவுக்கு கிரிக்கெட் தோல்விகள் அந்த நாடுகளை பாதித்தது கிடையாது.

கொழும்பில் இம்முறை வெசாக் கொண்டாட்டங்கள்கூட கிரிக்கெட் தோல்வியால் சோபையிழந்திருந்தன.

கிரிக்கெட் தோல்வியின் பின்னர் ரசிகர்களும், ஆட்சியாளர்களும் நடந்து கொண்ட முறையும் ஆழ்ந்து நோக்கத்தக்கது.

தோல்வியோடு திரும்பிய அணியை தேறுதல் கூறி அழைத்துவர எந்தவொரு அமைச்சரும் விமான நிலையம் சென்றிருக்கவில்லை.

விமான நிலையத்தில் வி.ஐ.பி.கள் வருகை தரும் பகுதியூடாகவே கிரிக்கெட் வீரர்கள் வருவது வழக்கம். இம்முறை அதற்கும் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

கிரிக்கெட் அணித் தலைவரை தாக்கும் அளவுக்கும் திட்டங்கள் தீட்டப்பட்டிருந்தன. அதனால் அணித்தலைவரும், உதவித் தலைவரும் வெளிநாட்டிலேயே மேலும் சில வாரங்கள் தலைமறைவாக இருக்க நேர்ந்தது.

ஆட்சியாளருக்கு சார்பான பத்திரிகைகளில் ரணதுங்காவுக்கு எதிரான பிரசாரம் முடுக்கிவிடப்பட்டிருந்தது. கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தேர்தலில் ஆட்சியாளரது உயர்பீட விருப்பம் ரணதுங்கா குழுவினரால் நிராகரிக்கப்பட்டமையும் இதற்கு ஒரு காரணமாகும்.

எனவே, தோல்வி என்பது தேசத்துரோகம் என்பது போன்ற மனநிலையைத்தான் ஆட்சியாளர்கள், அரச சார்பு செய்தி ஊடகங்கள் போன்ற சகல தரப்பாரும் இணைந்து உருவாக்கியுள்ளனர்.

இதனால் சாதாரண ரசிகன் தன் முன்னாள் 'கிரிக்கெட் கடவுள்களது' படங்களுக்கு சாணியடிக்க ஆரம்பித்தான். அரவிந்த டி சில்வாவின் உணவகமும் ஒரு கும்பலால் சூறையாடப்பட்டது.

யுத்தகள நிலவரத்தை அறிவிப்பதுபோல, தாம் ஏன் தோல்வி கண்டோம்? என்று கப்டன் ரணதுங்கா வெளிநாட்டிலிருந்து அறிக்கை விடுமளவுக்கு நிலமை தீவிரமடைந்திருந்தது.

கிரிக்கெட் அணியின் இந்த வீழ்ச்சியால் ஏற்பட்டுள்ள வெறுமையை யுத்தகள வெற்றிச் செய்திகளால்தான் ஆட்சியாளர் நிரப்ப வேண்டியிருக்கும்.

சிங்கள மக்களிடையே பெருமிதத்தை தூண்டி, ஆரவாரத்தை ஏற்படுத்தி சந்தடி சாக்கில் விலையேற்றங்கள் நடத்தவும் இனி கிரிக்கெட்டை நம்பியிருக்க இயலாது. ஆகவே, யுத்தத்தைத்தான் அதற்கும் எதிர்பார்க்க வேண்டியிருக்கும்.

எனவே, தற்போது ஆட்சியாளரின் கையிலுள்ள ஒரே ஒரு துருப்புச்சீட்டு யுத்தமேயாகும். இதனையும் கைவிட்டால் சிங்கள மக்களிடம் உற்சாகத்தை ஏற்படுத்தும் வேறு வேலைத்திட்டம் எதுவும் ஆட்சியாளரிடம் கிடையாது.

கிரிக்கெட் பற்றி ஏற்படுத்திய அளவுக்கதிகமான மாயைகள் தோல்வியை ஜீரணிக்க முடியாது செய்துள்ளன. தம்மால் கடவுள்களாக கருதப்பட்ட வீரர்கள் மீதே காறி உமிழும் நிலைக்கு ரசிகர்கள் சென்றுள்ளனர்.

இதேபோன்றே, யுத்தம் தொடர்பாக சந்திரிக்கா அம்மையாரும், ஆட்சியாளரும் செய்துவரும் பிரசாரங்கள் புலிகளை ஒழித்துக் கட்டிவிடலாம் என்ற மாயைகளை உருவாக்கும் விதமாக அமைந்து வருகின்றன.

யுத்தத்தை கூறியே பொருளாதாரச் சுமைகளுக்கும் அரசு காரணம் சொல்லிச் சமாளித்து வருகிறது.

விடுதலைப் புலிகள் களமுனையில் பாரிய தாக்குதல் தொடுத்து அதனால் படையினர் பெரும் இழப்புக்களை சந்தித்தால், கிரிக்கெட் அணிமீது ஏற்பட்டது போன்ற வெறுப்பும் எதிர்ப்புமே சந்திரிக்கா அரசுமீதும் தென்னிலங்கையில் ஏற்படும் என்பது திண்ணம்.

அவ்வாறில்லாது யுத்தத்தில் தாம் கூறிய வெற்றிச் செய்திக்கு பதிலாக புலிகளுடன் பேசுவதற்குகூட சந்திரிக்கா அம்மையார் முன்வர முடியாது. ஏனெனில் "புலிகளை ஒழித்தே தீருவோம். இன்னமும் சிறு பகுதி நிலமே மீட்கப்பட வேண்டியுள்ளது" என்றுதான் சிங்கள மக்களிடம் ஆட்சியாளர்கள் கூறிவருகின்றனர்.

ஆதலால், தாம் கூறியதை நிறைவேற்றாது புலிகளுடன் ஆட்சியாளர் பேசச் சென்றால், அது புலிகளுடன் ஏற்பட்ட தோல்வியாகவே கருதப்படும்.

'சிங்கள மக்களது வெற்றித் தேவதை, புலிகளை வென்று தமிழ் பேசும் தரப்பின் பேரம் பேசும் பலத்தை தகர்க்கும் தலைவி' என்று உருவாகிவரும் தோற்றப்பாட்டை சிதைக்க சந்திரிக்கா அம்மையார் துணியப்போவதில்லை.

கிரிக்கெட் தோல்வி தேசத்துரோகம் போல கருதப்பட்டதையே ஆட்சியாளர்கள் கண்டிக்கத் துணியவில்லை. அதேபோன்று வெல்ல முடியாத போர் என்ற உண்மையைக் கூறி சமாதானக் கதவை திறக்கவும் ஆட்சியாளர்களால் முடியப் போவதுமில்லை. துணியப்போவதுமில்லை.

கிரிக்கெட் அணிமீது சிங்கள மக்களுக்கு ஏற்பட்ட கோபாவேசம் ஆட்சியாளருக்கும் ஒரு எச்சரிக்கைதான். நீங்களும் தோல்வி கண்டு திரும்பி வந்தால் தூக்கியெறியப்படுவீர்கள் என்று சொல்லாமல் சொல்லியுள்ளனர்.

## சந்திக்கு வராத சங்கதிகள் — நக்கீரன்

### பாராளுமன்றத்தில் பளீர்-பளீர்

இ.தொ.கா. தலைவர் தொண்டமான் மட்டுமல்ல, முன்னாள் தமிழ்த் தலைவர்கள் பலரும் தாம் மட்டுமே விவேகிகள் என்றுதான் தம்பட்டம் அடித்திருக்கின்றனர். ஆனால் மிகவும் பரிதாபமாக சிங்கள அரசியல் தலைவர்களிடம் ஏமாந்தும் தோற்றும் போனதுதான் வரலாறு.

அண்மையில் 15.06.99 அன்று பாராளு மன்றத்தில் தொண்டாவுக்கும், அவரது கட்சியினருக்கும் கிடைத்த மரியாதையே தனிதான்.

அவசரகாலச் சட்டம் என்பது தமிழ் மக்களுக்கு எதிரான ஒன்றுதான். ஜனநாயக விரோதமானது தான் என்பது நூற்றுக்கு நூறு ஏற்கப்பட்ட விடயம்.

அந்தச் சட்டத்தை எதிர்ப்பதால் அரசு கைவிடுகிறதோ இல்லையோ, அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதும், அடிமேல் அடி அடிப்பதும் ஜனநாயக சக்திகளது கடமை.

வீரவிதான இயக்க ஊர்வலம் ஒன்றுக்கு இரண்டு தடவை கொழும்பில் நடந்துவிட்டது. அந்த ஊர்வலத்தை எட்டி நின்று பார்த்த தமிழ் இளைஞர் ஒருவரை வீரவிதானக்காரர் பிடித்து பொலிசில் கொடுக்க, அவசரகாலசட்டத்தின் கீழ் அவரை உள்ளே வைத்தனர்.

மறுமுறை வீரவிதான இயக்கம் இ.தொ.கா. அலுவலகத்திற்குள் புகுந்து கொடி எரித்து கூத்தாடியது.

அவசரகால சட்டத்தை கையில் வைத்துக் கொண்டு வேடிக்கை பார்த்தது பொலிஸ். யாரையும் கைது செய்யாது விலக்குப் பிடித்து விட்டனர்.

ஆனால் வீரவிதானவுக்கு எதிராக தமிழ் அமைப்புக்கள் சில பேரணி நடத்த முன்வந்தபோது அவசரகால சட்டத்தின் கீழ் தடைபோடப்பட்டது.

இதன் பின்னும் அவசரகால சட்டம் என்றால் என்ன? யாருக்கு எதிராக பெரும்பாலும் பாவிக்கப்படுகிறது? என்பதற்கு விளக்கம் தேவையில்லை. கைப்புண்ணுக்கு கண்ணாடி எதற்கு?

யாழ் குடாநாட்டில் அத்துமீறிய கைதுகளுக்கு வகை செய்ததும் அவசரகால சட்டம்தான். இன்றைய புதைகுழிகளில் இருந்து மீட்கப்படும் உடல்கள் அவசரகால சட்ட அதிகாரத்தை பயன்படுத்தி கைதாகி காணாமல் போனவர்களுடையதுதான்.

மலையக இளைஞர்கள், யுவதிகள் ஏராளமானோர் கைதாகி, விசாரணையின்றி சிறைகளில் வாடவும் ஏதுவாக இருப்பது அவசரகாலச் சட்டம்தான்.

ஆனால், 15.06.99 அவசரகால சட்ட விவாதத்தில் உரையாற்றிய யோகராஜன் எம்.பி.க்கு அவசரகால சட்டம் பாரபட்சமானது என்பது அப்போதுதான் தெரிந்திருக்கிறது. அப்படியிருந்தும் அதனை தாம் எதிர்க்க விரும்பவில்லை என்றும் அவர் கூறியதுதான் வேடிக்கை. 'உதைக்கிறீர்கள் என்பது தெரியும். ஆனாலும் அக் காலுக்கு முத்தமிட தயங்க மாட்டோம்' என்று கூறுவதற்கு ஒப்பானதாக இருந்தது அப் பேச்சு.



இவர்களது பேச்சுக்களையெல்லாம் வெகு அலட்சியமாக செவிமடுத்த பிரதிபாதுகாப்பு அமைச்சர் தனது உரையில் சாட்டையடி கொடுத்தார்.

'அவசரகால சட்டத்தை ஆதரிப்பதும் விடுவதும் உங்கள் விருப்பம்' என்று கூறிவிட்டார். 'நீ ஆதரித்து வாக்குப் போட்டால் போடு. போடா விட்டால் போ' என்ற பாணியில் தூக்கி எறிந்துவிட்டார்.

இ.தொ.கா. உறுப்பினர்கள் முகத்தில் ஈயாடவில்லை. வாக்களிப்பு நேரத்தில் பவ்வியமாக எழுந்து ஆதரவாக வாக்களித்தனர்.

அமைச்சர் எடுத்தெறிந்து பேசியும் இந்த சட்டத்தை ஆதரிக்கும் அளவுக்கு அதில் என்ன இருக்கிறது?

அங்குதான் இருக்கிறது விஷயம். 'மோசமான சட்டத்தை ஆதரிக்கிறோம்' என்று ஆட்சியாளரிடம் நற்பெயர் எடுப்பது, நல்ல சட்டத்தை ஆதரிப்பதைவிட இலாபகரமானது.

இ.தொ.கா. தலைமைக்கு எத்தனையோ பிரச்சனைகள் உள்ளன. அரசியலுக்கு அப்பாற்பட்ட அந்தப் பிரச்சனைகளது பிடி அரசிடம் இருக்கிறது. சந்திரசேகரனும் தொண்டா விலகினால் அவர் இடத்தை பிடிக்க ஆவலாக உள்ளார். ஆகவே அவசரகால சட்டத்தை எதிர்க்க இ.தொ.கா. முன்வராது.

'அவசரகால சட்டத்தை எதிர்க்க வேண்டி ஏற்படும். ஆதரவை வாபஸ் பெற வேண்டியிருக்கும்' என்று முன்புபோல பாச்சா காட்ட முடியாது. அரச தரப்புக்கு இவர்களைப் பற்றி நன்கு தெரியும். 'எதிர்க்க விருப்பமானால் செய்து பாருங்கள்' என்று முகத்தில் அடித்தது போல சொன்னால் மூச்சுவிட மாட்டார்கள் என்றும் தெரியும்.

இ.தொ.கா.வின் ஆதரவு தமக்கு தேவையில்லை என்ற தொனியில் அமைச்சர் கொடுத்த பதிலடி அவமானம்தான். வெளியே தெரியாமல் துடைத்துக்கொண்டனர். பழைய சாணக்கியம் இனி எடுபடாது.


படிப்பகம்

www.padippakam.com

## உண்மைத் தொடர்

### அதிர் இடி 67

**கடந்தவாரம்**

**உகண்டாவை முஸ்லிம் நாடாக மாற்றுவதற்கு அமீன் விரும்பினான். பெரும்பான்மையினரான கிறிஸ்தவர்கள் எதிர்த்தனர். அவர்களை ஏமாற்ற அவர்கள் மத்தியிலேயே பிரமுகர்களை உருவாக்கி, அறிக்கைகள் விட வைக்கிறான். அவர்கள் அமீனை நல்லவனாகக் காண்பிக்க முயல்கிறார்கள். உகண்டா இராணுவத்திலும் முஸ்லிம்கள் பொறுப்பாக நியமிக்கப்படுகிறார்கள்.**

**இனி....**

# இடி அமீன்

### தருவது ரசிகன்

உகண்டாவை முஸ்லிம் நாடாக்குமாறு தீவிரவாதிகள்தான் கோரிவருகின்றனர். அமீனுக்கு அதில் இஷ்டமில்லை என்பதுபோல கிறிஸ்தவப் பிரமுகர்கள் சிலர் பிரசாரம் செய்தனர்.

அமீனை நல்லவனாக நம்பவைக்கும் பிரசாரத்தில் ஈடுபட்ட அப்பிரமுகர்களுக்கு ஏராளமான வெகுமதிகள் ஜனாதிபதி மாளிகையில் இருந்து கிடைத்துக்கொண்டிருந்தன.

சகல இனங்களுக்கும் பொதுவான ஒருத்தராக தன்னைக் காட்டிக்கொண்டு, எதிர்ப்பே இல்லாமல் உகண்டாவை முஸ்லிம் நாடாக மாற்றவே அமீன் விரும்பியிருந்தான்.

ஆனாலும் அமீனின் உண்மையான நோக்கத்தை சகலரும் அறியும் சந்தர்ப்பம் கிட்டியது.

1975இல் பாகிஸ்தானில் முஸ்லிம் நாடுகளது தலைவர்களது மாநாடு நடைபெற்றது.

உகண்டாவையும் மாநாட்டில் கலந்துகொள்ள அனுமதிக்க வேண்டும் என்று அமீன் கோரிக்கை விடுத்திருந்தான்.

மாநாட்டில் கலந்துகொண்ட சில நாடுகள் 'உகண்டா முஸ்லிம் நாடல்ல என்பதால், அதனுடைய கோரிக்கையை ஏற்க முடியாது' என்று எதிர்ப்புத் தெரிவித்தன.

அதற்கு "படிப்படியாக உகண்டா முஸ்லிம் நாடாக மாறிவருகிறது. அதற்கான சகல முயற்சிகளையும் நான் செய்து வருகிறேன்!" என்று பதில் கூறினான்.

அமீனின் கோரிக்கையும், அது மறுக்கப்பட்டதற்கு அவன் கூறிய பதிலும் மாநாட்டில் பகிரங்கமாக விவாதிக்கப்பட்டன. அதனால் அது பத்திரிகைகளிலும் இடம்பெற்றது.

இதனை அறிந்த உகண்டா கிறிஸ்தவ மக்கள் கொதித்தனர். அமீனுக்காக வாதாடிய உள்ளூர் பிரமுகர்கள் ஓடி ஒளிந்தனர்.

சிலரது வீடுகள் ஆத்திரம் கொண்ட கூட்டத்தினரால் கல்வீச்சுக்கு இலக்காயின.

அவர்களை அடக்க இராணுவம் ரோந்தில் ஈடுபட்டது. பலரைக் கைது செய்து தாக்கியது.

பாகிஸ்தான் மாநாட்டில் கலந்துகொண்டு முஸ்லிம் நாடாக ஏற்கப்பட்டால் ஏராளமான நிதி உதவிகள் குவியும். அதனை வைத்து ஆடம்பரமாக ஆட்சி நடத்தலாம் என்றுதான் அமீன் கணக்குப் போட்டிருந்தான்.

அதனாலேயே அவசரப்பட்டு தன் சுயரூபத்தை வெளிக்காட்டிக் கொண்டான்.



இனிமேலும் தன்னை கிறிஸ்தவ மதத்தினர் நம்பப் போவதில்லை என்று தெரிந்ததும் தனது பாணியில் நடவடிக்கைகளில் இறங்கினான்.

இஸ்லாம் மதத்தை தழுவுபவர்களுக்கு சலுகைகள் வழங்கப்பட்டன. முன்னுரிமை கொடுக்கப்பட்டது.

**"வறுமையில் வாடும் மக்களை மதம் மாற்றுவது சுலபம். பெரும்பான்மையினராக கிறிஸ்தவர்கள் இருப்பதால்தானே பிரச்சனை. அவர்களை சிறுபான்மையாக்கிவிட்டால்?"** என்று கேட்டு சிரித்தான் அமீன்.

அவன் சிரித்தபோது எதிரே முஸ்லிம் மதப் பிரசாரத்திற்கும், மதமாற்றத்துக்கும் பொறுப்பான குழுவினர் அமர்ந்திருந்தனர்.

**"உங்களை நம்பி முக்கிய பொறுப்பை ஒப்படைக்கிறேன். ஆறுமாத காலத்திற்குள் உகண்டாவை முஸ்லிம் நாடாக மாற்றித் தாருங்கள்!"** என்றான்.

அப்போது 'முன்னோ' என்றொரு பத்திரிகை வெளியாகிக் கொண்டிருந்தது. மதமாற்றக்குழுவுக்கு அப் பத்திரிகை பெரும் சவாலாக இருந்தது.

கத்தோலிக்க திருச்சபையின் ஆதரவுடன் அப் பத்திரிகை வெளிவந்தது. அப் பத்திரிகை பற்றி அமீனிடம் 'மதமாற்றக் குழு' முறையிட்டது.

**"பணத்தை வீசி பத்திரிகை ஆசிரியரை வாங்கமுடியுமா?"** என்று விசாரித்தான் அமீன்.

'பெரிய அச்சுக்கூடம் ஒன்று அமைத்துத்தர அரசு ஆவலாக உள்ளது. கடதாசியும் நியாய விலையில் கடனுக்குத் தரப்படும்' என்று பத்திரிகை நிறுவனத்திடம் ஆசை காட்டிப் பார்த்தனர்.

அவர்கள் மசிய மறுத்தனர். மதமாற்றத்தைக் காட்டமாக கண்டித்ததுடன், உகண்டா ஆட்சிக்கு எதிராகவும் மறைமுகமான பிரசாரம் செய்தனர்.

**"ஆசிரியரின் பெயர் என்ன?"** என்று கேட்டான் அமீன்.

**"கிளமண்ட் சிக்குண்டு"** என்று பதில் சொல்லப்பட்டது.

**"கொன்று விடுங்கள்!"** என்று சர்வ சாதாரணமாக உத்தரவு உதிர்ந்தது அமீனிடமிருந்து.

உண்மையாகத்தான் கூறுகிறானா என்று புரியாமல் புருவம் உயர்த்திய புலனாய்வு அதிகாரியைப் பார்த்து சிரித்த அமீன்; **"என்ன என் பாணியில் சொன்னால்தான் நம்புவீர்களா? ம்... சொர்க்கத்துக்கு விஸா குத்திவிடுங்கள்!"** என்று சிரித்தான்.

அன்றிலிருந்து இரண்டாம் நாள் சாலையோரத்தில் சூட்டுக் காயங்களுடன் கிடந்தது 'முன்னோ' பத்திரிகை ஆசிரியரின் உடல்.

1973 ஜனவரி 16இல் நடைபெற்ற 'முன்னோ' பத்திரிகை ஆசிரியர் கொலை மூலம் கிறிஸ்தவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக வெளிநாடுகளில் கண்டனங்கள் எழுந்தன.

கிறிஸ்தவ மக்களிடையேயும் இடி அமீன் ஆட்சிக்கு பெரும் எதிர்ப்புக்கள் தோன்றின.

**"'முன்னோ' ஆசிரியர் கொலை பற்றி விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளேன். குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர். யாவருக்கும் ஒரே நீதிதான்!"** என்று அறிவித்தான் அமீன்.

சிலர் கைது செய்யப்பட்டதாகவும், துப்புகள் கிடைத்திருப்பதாகவும் பொலிசார் கூறியதாக செய்திகள் வெளியாகின.

'முன்னோ ஆசிரியர் கொலை வழக்கில் திருப்பம்! கொலையாளிகள் இனம் காணப்பட்டுள்ளனர்.' என்றும் செய்திகள் வரும்.

'கடும் தண்டனை வழங்க அதிபர் அமீன் தீர்மானம்' என்று வானொலியும் கூறியது.

இவையெல்லாமே அமீனது செய்தித் தொடர்பாளர்களால் மக்களை ஏமாற்ற வெளியான பரபரப்புச் செய்திகள்.

இச் செய்திகளை கொட்டை எழுத்துக்களில் வெளியிட்ட பத்திரிகைகளுக்கு பத்திரிகை காகிதம் மலிவு விலையில் கொடுக்கப்பட்டது.

சில காலத்தின்பின்னர் அச் செய்திகள் ஓய்ந்தன. அந்தக் கொலை விவகாரமும் அப்படியே ஆறிப்போனது.

உகண்டா வானொலியில் திடீரென்று புதிய நடைமுறை ஒன்று அமுலுக்கு வந்தது. வானொலி அறிவித்தல்களை அரபு மொழியில் வாசிக்குமாறு அமீன் கட்டளையிட்டான்.

உகண்டாவில் பெரும்பாலான மக்களுக்கு ஆரபு மொழி தெரியாது. அதனால் அரபு மொழியிலான அறிவித்தல்களை முஸ்லிம்களும், வெளிநாட்டு இராஜதந்திரிகள் சிலருமே புரிந்துகொண்டனர்.

அரபு நாடுகள் போன்று வெள்ளிக்கிழமை விடுமுறை நாளாகவும், ஞாயிறு வேலை நாளாகவும் அறிவிக்கப்பட்டது.

ஆனால் கிறிஸ்தவ மக்கள் தமக்கு ஞாயிறு அன்று கட்டாயம் விடுமுறை தேவை என்று கோரினார்கள்.

கிறிஸ்தவ மக்களை முற்றாக பகைக்க விரும்பாத அமீன், **"ஞாயிற்றுக்கிழமையும் விடுமுறை நாளாக அறிவிக்கப்படுகிறது. எந்த மதத்தினரையும் புண்படுத்த மாட்டேன். நியாயமான கோரிக்கைகளை ஏற்கத் தயங்கவும் மாட்டேன்!"** என்று அறிவித்தான்.

பாடப் புத்தகங்களிலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. சில வரலாற்று நிகழ்வுகள் அகற்றப்பட்டன.

'பிரிட்டிஷ்காரர்களால் அரபு நாட்டவர்கள் மேலைத் தேசங்களுக்கு அடிமைகளாக கொண்டு செல்லப்பட்டனர். சந்தைகளில் விற்பனையும் செய்யப்பட்டனர்.' என்ற வரலாற்றுச் செய்திகளும், குறிப்புகளும் பாடப் புத்தகங்களில் இருந்து நீக்கப்பட்டன.

உகண்டாவில் இருந்த அரபு நாடுகளது இராஜதந்திரிகளுக்கு தனது இத்தகைய செயற்பாடுகளை அடிக்கடி தொடர்புகொண்டு அமீன் தெரிவித்தான்.

உகண்டா தொலைக் காட்சியில் தொடர் ஒன்று ஒளிபரப்பாகியது. கிழக்கு ஆபிரிக்காவில் 19ம் நூற்றாண்டில் அடிமை வியாபாரம் நடைபெறுவதை அத் தொடர் சித்தரித்தது.

தற்செயலாக ஒருநாள் இந்த நிகழ்ச்சியைப் பார்த்து விட்டான் அமீன். உண்மையில் அந்த நிகழ்ச்சி அடிமை வியாபாரம் நடத்திய பிரிட்டிஷ்காரர் களுக்கும், மேலைய தேசத்தவர்களுக்கும் எதிரானதாக தயாரிக்கப்பட்டிருந்தது.

இடைநடுவே திடீரென்று பார்த்ததால் அந்த நிகழ்ச்சியின் அடி எது, நுனி எதுவென்று அமீனுக்குப் புரியவில்லை.

"இத் தொடரை உடனே நிறுத்துங்கள்!" என்று உத்தரவிட்டான். ஏன், எதற்கு? என்று கேட்கவா முடியும். நிறுத்தி விட்டனர்.

அந்த நிகழ்ச்சி வரலாற்று மாணவர்களுக்குப் பயனுள்ள நிகழ்ச்சியாக இருந்தமையால் கல்வி அமைச்சரிடமிருந்து கண்டனம் எழுந்தது.

அதனை அமீன் எதிர்பார்க்கவில்லை. கல்வியமைச்சராக இருந்தவர் ஒரு கிறிஸ்தவர். அமீனுக்கு விசுவாசமானவர். அமீன் கீறிய கோட்டை தாண்டாதவர்.

அப்படிப்பட்ட ஒருவர் துணிந்து கண்டித்ததும் அமீனுக்கே நம்பமுடியவில்லை.

"ஏனய்யா துள்ளுகிறீர்? உம்மைப் பதவியில் அமரவைத்து அழகு பார்த்ததுக்கு இதுதான் நன்றியா?" என்று கேட்டான்.

"என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். இதற்கு மேலும் என் மனச்சாட்சிக்கு மாறாக நடக்க நான் இஷ்டப்படவில்லை!" என்று கூறிவிட்டார் அமைச்சர்.

**"அப்படியானால் என்னையும் நீர் மன்னித்துக்கொள்ளும். இந்த நிமிடம் முதல் உமது பதவி காலியாகிறது. இப்படியே வீட்டுக்கு சென்று ஓய்வு எடுத்துக்கொள்ளும். உமது உயிர் இனி உம்முடைய கையில்தான்! தேவையற்ற விடயங்களில் மூக்கை நுழைத்தால் உயிர் என்னாகும் என்பது உமக்கே தெரியுமல்லவா?"** என்று கேட்டான்.

மௌனமாக எழுந்து வெளியேறினார் அமைச்சர். உள்ளே அமைச்சராக வந்தவர், வெளியே செல்லும்போது முன்னாள் அமைச்சராகச் சென்றார்.

இக் காலகட்டத்தில் அமீனுக்கு தன் பாதுகாப்பு தொடர்பான அக்கறை அதிகமாகியது.

தன் காதலிகளைச் சந்திக்க நம்பிக்கையான சில பாதுகாவலர்களுடன் சென்றுவந்த அமீன், பிஸ்டலையும், கத்தியையும் தன் இடுப்பில் எப்போதும் வைத்திருப்பான்.

பாதுகாப்புத் தொடர்பான அச்சம் எழுந்த பின்னர் சில கைக்குண்டுகளையும் தன்னுடனேயே வைத்திருக்க ஆரம்பித்தான்.

தனது மனைவியர்களதும், காதலிகளதும் வீடுகளை கண்காணிக்க நம்பகமான புலனாய்வாளர்களை நியமித்தான்.

எங்கிருந்தும் ஆபத்து வரக்கூடும் என்ற எச்சரிக்கை உணர்வுதான் அதற்குக் காரணம்.

அப்போது அமீனுக்கு ஐந்து மனைவியரும், எண்ணிலடங்காத காதலிகளும் இருந்தனர். 34 பிள்ளைகள் இருந்தனர்.

அமீனின் ஐந்தாவது மனைவியின் வீட்டைக் கண்காணித்த புலனாய்வாளன் கூறிய தகவலால் சந்தேகப் புத்தி கொண்ட அமீன் உஷாரானான்.

'மனைவியே சதி செய்வாளா? செய்வாள்.' என்று நம்பினான்.

ஐந்தாவது மனைவிக்கு ஆபத்து காத்திருந்தது.

அவளை கொடூரமான முறையில் கொல்வது என்று முடிவு செய்தான் அமீன்.

(இடி தொடரும்)

# இணைத்துப் பேசலாமா

## சோனாலி கோபம்

இந்திய கிரிக்கெட் அணி உலகக் கோப்பையை தவறவிட்டாலும் அந்த அணி வீரர்களுக்கு நட்சத்திர மதிப்பு குறையவில்லை.

இந்திய அணியின் துணை கப்டன் ஜடேஜா. இந்தி நடிகைகள் பலருடன் வெகு நெருக்கம். ஜடேஜாவின் துடிப்பான ஆட்டத்தில் நடிகைகளுக்கு ஒரு மயக்கம்.



மாதுரி டிக்ஷித்துடன் பல்வேறு விதமாக இணைத்துப் பேசப்பட்டு வருகிறார் ஜடேஜா. இதேநேரம் இந்தி நடிகை சோனாலி பந்ரேயுடனும் ஜடேஜா நெருங்கிப் பழகுவதாக செய்திகள் உலாவுகின்றன.

இப்படியான செய்திகள் உண்மையாக இருந்தாலும் அடித்து மறுப்பதுதான் வழக்கம். சோனாலி என்ன சொல்கிறார் பார்க்கலாம்.

"எனக்கு கிரிக்கெட்டில் ஆர்வம் எதுவும் கிடையாது. ஆனால் நான் கிரிக்கெட்டை வெறுக்கவில்லை. என்னால் பிறரைப் போல கிரிக்கெட்டைப் பார்ப்பதற்கு தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்பாக தவம் கிடக்க முடியாது.

நான் இப்படிப் பேசுவதால் கோடிக் கணக்கான கிரிக்கெட் ரசிகர்கள் என்மீது ஆத்திரம் கொள்ளக்கூடும். ஆனால் நான் உண்மையைத்தான் கூறுகிறேன்.

இந்தியாவுக்கும், இந்தியர்களுக்கும் கிரிக்கெட்டும், திரைப்படமும் அவசியமாக மாறிவிட்டன.

எனவே, கிரிக்கெட்டும் திரைப்படமும் நெருங்கிய தொடர்புள்ளனவாக மாறிவிட்டன. எனக்குக்கூட தொடர்புடையதாக கிரிக்கெட் உள்ளது.

ஏனென்றால் நான் இந்திய அணியின் துணை கப்டன் ஜடேஜாவை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. சென்னையிலும் சந்தித்தோம். இந்த சந்திப்புக்களை வைத்து என்னையும் ஜடேஜாவையும் இணைத்து பேசப்பட்டது.

நாங்கள் இருவரும் திருமணம் ஆகாதவர்கள் என்பதால் எங்களைப் பற்றி பல்வேறு விதமான வதந்திகள் உலாவந்தன. எங்களைப் பற்றிய பேச்சுக்கள் வேகப்பந்து வீச்சுப் போன்று இருந்தன. இதற்காக நான் மூன்றாவது நடுவரை அழைத்தா சரியான தீர்ப்பளிக்குமாறு கோர முடியும்?

சில நேரங்களில் இதுபோல வீசப்படும் 'நோபோல்'கூட நல்லது என்றே கருதுகிறேன்!" என்று கூறியிருக்கிறார் சோனாலி.

இந்திய கிரிக்கெட் வீரர்களுக்குள்ளேயே தீராத விளையாட்டுப் பிள்ளை என்றால் அது ஜடேஜாதான்.

# நிஜமான நிழல்

ரஜினியின் 'வள்ளி' படத்தின் மூலம் அறிமுகமானவர் ப்ரியாராமன்.

தமிழில் வாய்ப்புக்கள் இல்லை என்பதால் தெலுங்கு மற்றும் மலையாளப் படங்களில் நடித்தார். முதலில் கவர்ச்சி காட்ட மறுத்தவர் பின்னர் கவர்ச்சி நடிகைகளையே மிஞ்சும் விதமாக தாராளமாக நடித்தார்.

ப்ரியாராமன் பற்றி பல்வேறு கிசுகிசு செய்திகள் வெளியாகத் தொடங்கின. சென்னையின் புறநகர் பகுதியில் உள்ள கடற்கரையில் வீடு ஒன்றை எடுத்து தங்கியுள்ளார். தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் போன்றோரை அங்கேதான் சந்திக்கிறார் என்று செய்திகள் வெளியாகின.



'நேசம் புதிது' என்னும் படத்தில் ரஞ்சித் கதாநாயகனாக நடிக்க அவருடன் இணைந்து நடித்தார் ப்ரியாராமன். ஏற்கனவே 'புதுமைப்பித்தன்' படத்தில் நடித்தபோது ரஞ்சித்துடன் நெருக்கமானார் ப்ரியாராமன். 'நேசம் புதிது' படத்தில் அந்த நெருக்கம் மேலும் இறுக்கமானது. இதுபற்றி சினிவிசிட் 'காதோடு சொல்லுகிறோம்' பகுதியில் பல வாரங்களுக்கு முன்னர் தகவல் வெளியாகியதும் குறிப்பிடத்தக்கது.

படத்தில் நெருங்கி நடித்ததுபோன்றே வாழ்க்கையிலும் நெருங்கி இருக்க முடிவு செய்தனர். நண்பர்கள் முன்னிலையில் திருமணம் செய்துகொண்டனர். இரு வீட்டாரின் சம்மதமும் கிடைத்துள்ளது. 'திருமணத்தின் பின்னர் நடிக்கமாட்டேன்' என்று வழக்கமான வாக்குமூலம் கொடுத்துள்ளார் ப்ரியாராமன்.

# 21 கொலைகள்

தமிழ்நாட்டையே கலக்கியுள்ள செய்தி அது. மொத்தம் 21 பெண்களை கழுத்தை நெரித்து கொன்றிருக்கிறான்.

கழுத்தில் துணியைப் போட்டு ஒரே இறுக்கு. மூச்சுத்திணறியே 21 பேரும் செத்துப் போனார்கள்.

அந்தக் கொலைகாரனின் பெயர்: மருதமுத்து. சமீபத்தில்தான் அந்த பயங்கரமான கொலை பாதகனை பொலிசார் கண்டுபிடித்திருக்கின்றனர்.

எல்லாமே நகைகளுக்காக நடந்த கொலைதான். நகையைப் பறிகொடுத்த பெண்கள் தன்னைக் காட்டிக் கொடுத்து விடக்கூடாது என்ற முன்னெச்சரிக்கையில் கொலை செய்திருக்கிறான்.



"அநியாயமாக கொலைகள் செய்திருக்கிறாயே?" என்று பொலிஸ் காவலில் உள்ள மருதமுத்துவிடம் நிருபர்கள் கேட்டனர்.

அதற்கு அவன் சொன்ன பதில்: "முதன் முதலில் செல்லம்மா என்ற பெண்ணின் நகையை திருடிவிட்டு உயிரோடு விட்டதால் மாட்டிகொண்டேன். அதன்பின்னர் உஷாராகிவிட்டேன்.

ஆனால் ஒன்று, கல்யாணமாகாத பெண்ணையும், கர்ப்பமான பெண்ணையும் நான் நெருங்குவதில்லை. கர்ப்பமான பெண்ணைக் கொன்றால் அநியாயமாக இரண்டு உயிர் போய்விடுமே. அதேமாதிரி வாழ்க்கையில் பெண்ணாகப் பிறப்பவர்கள் ஆண் சுகம் அனுபவிக்க வேண்டும். அதற்கு முன்பாக சாகக்கூடாது. அதற்காகத்தான் கல்யாணமாகாத பெண்களை கொலை செய்ததில்லை." என்று கூறுகிறான்.

இந்த கொடூர கொலைஞனை தடுப்புக்காகவலில் வைத்திருந்து தொடர்ந்து விசாரணை நடத்துகின்றனர்.

# பெண் வேட்டை

இங்கிலாந்தைச் சேர்ந்தவன் ரிச்சர்ட் பேக்கர். 34 வயது. பயங்கரமான பெண் சபல ஆசாமி.



இவன் இரவு விடுதி ஒன்றில் வேலை பார்த்து வந்தான். விடுதிக்கு வரும் பெண்களுக்கு மயக்க மருந்து கொடுத்து உறவு வைத்துக் கொள்ளுவான். ஆசைக்கு இணங்காத பெண்களை கொல்லவும் தயங்கமாட்டான்.

இவனது கொடுமை தாளாது சகோதரனே பொலிசில் புகார் செய்து இருக்கிறார். கைதுசெய்து நாலு போட்டிருக்கிறார்கள். உண்மைகளை கக்கி விட்டான்.

சாதாரண உண்மைகளல்ல. அதிர்ச்சிகரமான சங்கதிகள். நூற்றுக்கு மேற்பட்ட பெண்களுடன் மயக்க மருந்து கொடுத்து உறவு கொண்டிருக்கிறான்.

அவன்மீது பொலிசார் வழக்குத் தொடுத்தனர். நீதிபதியே சுதி கலங்கிப் போனார். நான்கு ஆயுள் தண்டனைகளை அள்ளிக் கொடுத்துவிட்டார்.

www.padippakam.com

# கிரிக்கெட்டும் வெற்றி கிட்டாத யுத்தமும்

## அலசுவது - இராஜதந்திரி

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்று முடிந்துள்ளன. இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளில் இலங்கை அணி படு தோல்வியை சந்தித்திருந்தது.

இந்த படுதோல்வியை அடுத்து தென்னிலங்கையில் ஏற்பட்ட உணர்வலைகள் ஆழ்ந்து கவனிக்கத்தக்கதாகும்.

உத்தியோகபூர்வமற்ற துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது போன்றே சில நாட்களாக நாடு சோகத்தில் மூழ்கிக்கிடந்தது.

சூப்பர் சிக்ஸ் போட்டிக்கு நுழைய முடியாதளவுக்கு இந்தியாவிடம் படுதோல்வி கண்டதையடுத்து தென்னிலங்கை எங்கும் சோகம் கவிந்திருந்தது.

தேசியத் தலைவர்களது மறைவுக்கு அரசால் நாடெங்கும் துக்கதினம் அனுஷ்டிக்கப்படும்போதும் இத்தகைய சோக இருள் மண்டிக்கிடப்பதில்லை.

விளையாட்டுப் போட்டிகள் என்பதே வெற்றி தோல்விகளை சமமாக ஏற்கும் மனப் பக்குவத்தை உருவாக்குவதற்கும், நட்புறவுகளை வளர்ப்பதற்குமே நடைபெற்று வருகின்றன.

எனினும் தமது அணிகள் தோல்வி காணும்போது அந்த அணியின் ரசிகர்கள் கவலை கொள்வதும் இயல்பான ஒன்றேயாகும்.

<u>ஆனால், இலங்கை கிரிக்கெட் அணியின் தோல்வியை அடுத்து தென்னிலங்கையில் ஏற்பட்ட உணர்வலைகள் விளையாட்டு தொடர்பான மனோபாவங்களுக்கு அப்பாற்பட்ட ஒன்றாகவே திகழ்ந்திருந்தது.</u>

எனினும் இத்தகைய மனோபாவம் சிங்கள மக்களிடம் மட்டுமே ஏற்பட்டிருந்தது என்பதும் மிக முக்கியமான அம்சமாகும்.

இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு தமிழ், முஸ்லிம் ரசிகர்களும் ஓரளவு உள்ளனர். எனினும் தோல்வி தொடர்பாக வழக்கமான கவலையைவிட மேலதிகமான துக்கத்தில் அவர்கள் ஆழ்ந்து போய்விடவில்லை.

சிங்கள மக்களைப் பொறுத்தவரை இலங்கை அணியை தங்கள் சொந்த இனத்தின் அணியாக கருதும் போக்கே காணப்படுகிறது.

தமிழர்கள் இந்திய அணிக்கும், முஸ்லிம்கள் பாகிஸ்தான் அணிக்கும் ஆதரவானவர்கள் என்ற அபிப்பிராயமே சிங்கள மக்களிடம் உள்ளது.

<u>இலங்கை அணியினர் கடந்த காலத்தில் இந்திய அணியை படுதோல்வி காணச் செய்த சந்தர்ப்பங்களில், சிங்கள மக்கள் பலர் தமது நண்பர்களான தமிழர்களிடம் பெருமையோடு சுட்டிக்காட்டிய சம்பவங்களும் உண்டு.</u>

எனவே, இலங்கைக் கிரிக்கெட் அணியை தமது தேசியப் படை போன்றும், கிரிக்கெட் போட்டிகளை சிங்கள தேசத்திற்கும் ஏனைய நாடுகளுக்கிடையேயுமான யுத்தம் போன்றும் மனோபாவம் கொள்ளும் போக்கே மேலோங்கியுள்ளது.

சிங்கள இனத்திற்கு இந்த நூற்றாண்டில் கிடைத்த மிகப் பாரிய பெருமிதமாக சென்ற உலகக் கிண்ண வெற்றி கொண்டாடப்பட்டதோடு, கிரிக்கெட் அணியையும் தேசிய பெருமிதத்தின் சின்னமாகவே நோக்கி நின்றனர்.

யாழ் குடாநாட்டைப் படையினர் கைப்பற்றியபோதும் தென்னிலங்கையில் பெருமித உணர்ச்சி பொங்கி வழிந்தது.

பாராளுமன்றத்திற்கு பிரதிபாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை ஆளும் தரப்பு பிரதிநிதிகளால் தோளில் சுமந்து செல்லப்பட்டார்.

ஜனாதிபதி சந்திரிக்கா 'யாப்பா பட்டுனவை' கைப்பற்றிய வெற்றித் தேவதையாக வியாக்கியானப்படுத்தப்பட்டார்.

<u>இந்த வெற்றிப் பெருமிதம் நீடித்திருக்குமானால் சிங்கள மக்களுக்கு கிரிக்கெட் வெற்றிகள் இரண்டாம் பட்சமானதாக இருந்திருக்கக் கூடும்.</u>

ஆனால், யாழ் குடாநாட்டை படையினர் கைப்பற்றிய பின்னர் புலிகள் முல்லைத்தீவு இராணுவ தளத்தை தாக்கியழித்தனர். ஓயாத அலைகள்-01 என்று பெயரிடப்பட்ட அந்த தாக்கியழிப்புச் சமர் குடாநாடு மீதான வெற்றிப் பிரசாரங்களுக்கு பேரிடியாக அமைந்திருந்தது.



பின்னர் யாழ் குடாநாட்டில் நடைபெற்ற கரும்புலித் தாக்குதல்களும், புலிகளது பிரசன்னமும் நிலப்பகுதிகளை பிடிப்பது நிரந்தர வெற்றியாகாது என்ற உண்மையை பறைசாற்றின.

எனவே, போர்க்களத்தில் தமது படைகளது சாகசங்களை ரசிக்கும் மனோநிலையை ஏற்படுத்தி, அந்த சாகசங்களுக்கு காரணம் தாமே என்று உரிமை கோரும் ஆட்சியாளரின் திட்டமும் பலவீனமடைந்தது.

<u>ஐ.தே.கட்சி ஆட்சிக்காலம் போன்றே மறுபடியும் முடிவில்லாத யுத்தம் ஒன்றையே இன்றைய ஆட்சியாளரும் நடத்தவேண்டியுள்ளது என்பதை களநிலவரங்கள் கோடிட்டுக் காட்டியிருந்தன. எனவே, யுத்தம் தொடர்பான சுவாரசியமான, பெருமிதமான எதிர்பார்ப்புக்கள் தென்னிலங்கையில் வீழ்ச்சியடைந்தன.</u>

இந்தக் கட்டத்தில்தான் இலங்கை கிரிக்கெட் அணி விசுவரூபமெடுத்திருந்தது. உலகை வியக்க வைக்குமளவுக்கு உலகக் கிண்ணப் போட்டிகளில் உத்வேகமாகவும், ஒற்றுமையாகவும் ஆடி வெற்றியை தனதாக்கிக் கொண்டது.

யுத்த களத்தில் பெற்ற வெற்றிகளுக்கு உரிமை கோரியது போன்றே, கிரிக்கெட் வெற்றிக்கும் பொது ஜன முன்னணி ஆட்சியாளர்கள் உரிமை கோரியதையும் மறந்துவிடலாகாது.

போர்முனையில் போரிடும் அரச படைகளைவிட, கிரிக்கெட் அணிக்கே தென்னிலங்கையில் அபிமானமும், ஆதரவும் அதிகரித்திருந்தது.

<u>களமுனைச் சாவுகள் ஏற்படுத்தாத அதிர்ச்சியையும், சோகத்தையும் சனத் ஜெயசூரியா ஆட்டமிழக்கும் காட்சியால் ஏற்படுத்த முடிந்தது.</u>

வீரர்களாகவே நோக்கப்பட்டனர்.

இந்த இடத்தில் இன்னொன்றையும் நோக்க வேண்டும். சனத் ஜெயசூரியா, அரவிந்த டி சில்வா ஆகியோருக்கு கிடைத்த அதேயளவான வரவேற்பு, இங்கிலாந்தில் டெஸ்ட் போட்டியில் அதிக விக்கெட்டுக்களை சாய்த்து முரளிதரன் உலக சாதனை படைத்தபோது கிடைத்ததாக சொல்ல முடியாது.

<u>முத்தையா முரளிதரனின் சாதனையைப் பாராட்டி தமிழ் அமைப்பு ஒன்றுதான் கொழும்பில் விழா எடுக்க வேண்டியிருந்தது. ஆனால் சனத் மற்றும் அரவிந்த டி சில்வா ஆகியோருக்கு சிங்கள வர்த்தகப் பெருமக்கள் பெரும் வெகுமதிகளை தாமாக முன்வந்து வழங்கியிருந்தனர்.</u>

முத்தையா முரளிதரன் எத்தகைய சாதனை படைத்தாலும் அவரை தமது தேசிய வீரராக சனத், அரவிந்தா போன்றோரின் பட்டியலில் சேர்த்துப் பார்க்க சிங்கள ரசிகர்கள் முன்வரமாட்டார்கள். நல்ல திறமைசாலி, சிறந்த பந்து வீச்சாளர் என்று பாராட்டுவதோடு நிறுத்திக் கொண்டுவிடுவர்.

மொத்தத்தில் இலங்கை கிரிக்கெட் அணியும், அதன் வெற்றிகளும் சிங்கள தேசத்தின் வெற்றிப் பெருமிதங்களாகவே கருதப்பட்டு வந்தன.

உள்நாட்டில் யுத்தத்தின் விளைவுகளையும், அது தொடர்பான பொருளாதார நெருக்கடிகளையும்கூட கிரிக்கெட் வெற்றிகளது ஆரவாரம் பின் தள்ளிக் கொண்டிருந்தது.

<u>1996இல் உலகக் கிண்ண வெற்றியுடனும், வேறு சில போட்டிகளில் இலங்கை அணி வெற்றி பெற்ற சந்தர்ப்பங்களிலும் பொருட்களின் விலைகளை ஆட்சியாளர்கள் உயர்த்தியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.</u>

அது மட்டுமன்றி யுத்த களத்தில் ஏற்பட்ட பின்னடைவுகள் ஆட்சியாளரது காலவரையறைகளை காணாமல் போக வைத்திருந்தன. அது குறித்து சிங்கள மக்களை கவனம் கொள்ளாது திசை திருப்பவும் கிரிக்கெட் வெற்றிகள் உதவிகரமாக அமைந்திருந்தன.

<u>இலங்கை கிரிக்கெட் அணி யாராலும் வெல்லப்பட முடியாத அணி என்று அளவுக்கதிகமான நம்பிக்கை ஏற்படுத்தப்பட்டது. இதற்கு ஆட்சியாளரும் துணைபோயிருந்தனர்.</u>

விமான நிலையத்தில் கிரிக்கெட் வீரர்களை வரவேற்க அமைச்சர்கள் சென்று காத்திருந்ததோடு, அவர்களோடு இணைந்து படம் எடுத்துக் கொள்ளவும் முண்டியடித்தனர்.

அமைச்சர்களே இவ்வாறு முண்டியடித்தமையால் சாதாரண சிங்கள பாமர மக்கள் கிரிக்கெட் வீரர்களை தேசிய வீரர்களாகவும், கிரிக்கெட் கடவுள்களாகவும் கருதியதில் ஆச்சரியமில்லை.

<u>இன்றைய ஆட்சியாளர்களுக்கு சிங்கள மக்களைக் கவர வடக்கு-கிழக்கு யுத்தமும், கிரிக்கெட் யுத்தமும் தேவையாக இருந்தன. இவற்றின் வெற்றி ஆரவாரங்கள் இடையே தங்கள் ஆட்சித் தேரை மேலும் பத்து வருடங்களுக்கு நகர்த்திச் செல்லலாம் என்றே நம்பியிருந்தனர்.</u>

அதேசமயம் வெளியுலகில் இலங்கையின் மதிப்பை உயர்த்துவதிலும், பற்றி எரியும் தேசிய இனப்பிரச்சனையை மூடி மறைக்கவும் கிரிக்கெட் வெற்றிகள் உதவியிருக்கின்றன.

இலங்கை என்றதும் உள்நாட்டு யுத்தத்தால் உருக்குலையும் நாடு என்ற நினைப்பு எழுவதற்கு பதிலாக, உலகக்கிண்ண சாம்பியன் என்ற நினைப்பே மேலோங்கும் சூழலும் தோன்றியிருந்தது.

இதனால் சிங்கள மக்களுக்கு எவ்வித பாதகமும் இல்லையென்றாலும், தமிழ் பேசும் தரப்புக்கு பின்னடைவேயாகும்.

இன்றைய ஆட்சியாளரின் யுத்த நகர்வாலும், இராணுவத் தீர்வு முனைப்பாலும் குடாநாட்டில் காணாமல் போனோர் புதைகுழிகளுக்குள் பிணமாகக் குவிக்கப்பட்டதைவிட, கிரிக்கெட் அணியின் ஒட்டக் குவிப்புத்தான் வெளியுலகின் கண்களுக்கு தெரிந்திருந்தது.

<u>மொத்தத்தில் கிரிக்கெட் என்பது விளையாட்டுகளில் ஒன்றாக அல்லாது, சிங்கள மக்களுக்கு தேசிய பெருமிதமான விஷயமாகவும், ஆட்சியாளர்களுக்கு தம் நலன்களை பாதுகாக்கும் கவசங்களில் ஒன்றாகவுமே கடந்த ஐந்து வருடங்களாக திகழ்ந்துள்ளது.</u>

இவ்வாறான பின்னணியில்தான் இலங்கை அணியின் தோல்விகளை நாட்டின் தோல்வியாக கருதும் மனப்போக்கு தற்போது தோன்றியிருக்கிறது. தோல்வியை ஜீரணிக்க முடியாத நிலையும் காணப்பட்டது.

இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளிலும் கிரிக்கெட் ஒரு முக்கியமான பிரபல விளையாட்டேயாகும். அணிகள் தோற்கும்போதும் அந்த நாட்டு ரசிகர்கள் கோபப்படுவதும், தம் வீரர்களை தூஷிப்பதும் வழக்கமேயாகும்.



ஆனால், நாடே துக்கத்தில் மூழ்கும் அளவுக்கு கிரிக்கெட் தோல்விகள் அந்த நாடுகளை பாதித்தது கிடையாது.

கொழும்பில் இம்முறை வெசாக் கொண்டாட்டங்கள்கூட கிரிக்கெட் தோல்வியால் சோபையிழந்திருந்தன.

## டென்சில் கொப்பேகடுவ சனத் ஜெயசூரிய, அரவிந்த டி சில்வா!

'ஒப்பரேசன் லிபரேசன்' போன்ற இராணுவ நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்கிச் செயற்பட்ட டென்சில் கொப்பேகடுவவை சிங்கள மக்கள் தங்கள் தேசிய வீரராகவே மதித்துப் போற்றுகின்றனர். அதே சமயம் தெற்கில் ஜே.வி.பி. கிளர்ச்சியை அடக்கிய சிசில் வைத்தியரத்ன போன்ற இராணுவ தளபதிகளை தேசிய வீரர்களாக போற்றுவதில்லை என்பதையும் கவனித்தாக வேண்டும்.

<u>வடக்கு-கிழக்கு யுத்தம் என்பது பிறிதொரு இனத்தின்மீதான, தேசத்தின்மீதான யுத்தமாகவே சிங்கள மக்களால் நோக்கப்படுகிறது. அதனால்தான் டென்சில் கொப்பக்கடுவ போன்றோர் தேசிய வீரர்களாக மதிக்கப்படுகின்றனர்.</u>

கிரிக்கெட்டும் யுத்தமாக, சிங்கள தேசத்தின் பெருமிதமாக கொள்ளப்பட்டதால் சனத் ஜெயசூரியா, அரவிந்த டி சில்வா போன்றோரும், கப்டன் ரணதுங்காவும் தேசிய வீரர்களாகவே நோக்கப்பட்டனர்.

கிரிக்கெட் தோல்வியின் பின்னர் ரசிகர்களும், ஆட்சியாளர்களும் நடந்து கொண்ட முறையும் ஆழ்ந்து நோக்கத்தக்கது.

தோல்வியோடு திரும்பிய அணியை தேறுதல் கூறி அழைத்துவர எந்தவொரு அமைச்சரும் விமான நிலையம் சென்றிருக்கவில்லை.

விமான நிலையத்தில் வி.ஐ.பி.கள் வருகை தரும் பகுதியூடாகவே கிரிக்கெட் வீரர்கள் வருவது வழக்கம். இம்முறை அதற்கும் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

<u>கிரிக்கெட் அணித் தலைவரை தாக்கும் அளவுக்கும் திட்டங்கள் தீட்டப்பட்டிருந்தன. அதனால் அணித்தலைவரும், உதவித் தலைவரும் வெளிநாட்டிலேயே மேலும் சில வாரங்கள் தலைமறைவாக இருக்க நேர்ந்தது.</u>

ஆட்சியாளருக்கு சார்பான பத்திரிகைகளில் ரணதுங்காவுக்கு எதிரான பிரசாரம் முடுக்கிவிடப்பட்டிருந்தது. கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தேர்தலில் ஆட்சியாளரது உயர்பீட விருப்பம் ரணதுங்கா குழுவினரால் நிராகரிக்கப்பட்டமையும் இதற்கு ஒரு காரணமாகும்.

எனவே, தோல்வி என்பது தேசத்துரோகம் என்பது போன்ற மனநிலையத்தான் ஆட்சியாளர்கள், அரச சார்பு செய்தி ஊடகங்கள் போன்ற சகல தரப்பாரும் இணைந்து உருவாக்கியுள்ளனர்.

இதனால் சாதாரண ரசிகன் தன் முன்னாள் 'கிரிக்கெட் கடவுள்களது' படங்களுக்கு சாணியடிக்க ஆரம்பித்தான். அரவிந்த டி சில்வாவின் உணவகமும் ஒரு கும்பலால் சூறையாடப்பட்டது.

யுத்தகள நிலவரத்தை அறிவிப்பதுபோல, தாம் ஏன் தோல்வி கண்டோம்? என்று கப்டன் ரணதுங்கா வெளிநாட்டிலிருந்து அறிக்கை விடுமளவுக்கு நிலமை தீவிரமடைந்திருந்தது.

கிரிக்கெட் அணியின் இந்த வீழ்ச்சியால் ஏற்பட்டுள்ள வெறுமையை யுத்தகள வெற்றிச் செய்திகளால்தான் ஆட்சியாளர் நிரப்ப வேண்டியிருக்கும்.

சிங்கள மக்களிடையே பெருமிதத்தை தூண்டி, ஆரவாரத்தை ஏற்படுத்தி சந்தடி சாக்கில் விலையேற்றங்கள் நடத்தவும் இனி கிரிக்கெட்டை நம்பியிருக்க இயலாது. ஆகவே, யுத்தத்தைத்தான் அதற்கும் எதிர்பார்க்க வேண்டியிருக்கும்.

<u>எனவே, தற்போது ஆட்சியாளரின் கையிலுள்ள ஒரே ஒரு துருப்புச்சீட்டு யுத்தமேயாகும். இதனையும் கைவிட்டால் சிங்கள மக்களிடம் உற்சாகத்தை ஏற்படுத்தும் வேறு வேலைத்திட்டம் எதுவும் ஆட்சியாளரிடம் கிடையாது.</u>

கிரிக்கெட் பற்றி ஏற்படுத்திய அளவுக்கதிகமான மாயைகள் தோல்வியை ஜீரணிக்க முடியாது செய்துள்ளன. தம்மால் கடவுள்களாக கருதப்பட்ட வீரர்கள் மீதே காறி உமிழும் நிலைக்கு ரசிகர்கள் சென்றுள்ளனர்.

இதேபோன்றே, யுத்தம் தொடர்பாக சந்திரிக்கா அம்மையாரும், ஆட்சியாளரும் செய்துவரும் பிரசாரங்கள் புலிகளை ஒழித்துக் கட்டிவிடலாம் என்ற மாயைகளை உருவாக்கும் விதமாக அமைந்து வருகின்றன.

யுத்தத்தை கூறியே பொருளாதாரச் சுமைகளுக்கும் அரசு காரணம் சொல்லிச் சமாளித்து வருகிறது.

விடுதலைப் புலிகள் களமுனையில் பாரிய தாக்குதல் தொடுத்து அதனால் படையினர் பெரும் இழப்புக்களை சந்தித்தால், கிரிக்கெட் அணிமீது ஏற்பட்டது போன்ற வெறுப்பும் எதிர்ப்புமே சந்திரிக்கா அரசுமீதும் தென்னிலங்கையில் ஏற்படும் என்பது திண்ணம்.

<u>அவ்வாறில்லாது யுத்தத்தில் தாம் கூறிய வெற்றிச் செய்திக்கு பதிலாக புலிகளுடன் பேசுவதற்குகூட சந்திரிக்கா அம்மையார் முன்வர முடியாது. ஏனெனில் "புலிகளை ஒழித்தே தீருவோம். இன்னமும் சிறு பகுதி நிலமே மீட்கப்பட வேண்டியுள்ளது" என்றுதான் சிங்கள மக்களிடம் ஆட்சியாளர்கள் கூறிவருகின்றனர்.</u>

ஆதலால், தாம் கூறியதை நிறைவேற்றாது புலிகளுடன் ஆட்சியாளர் பேசச் சென்றால், அது புலிகளுடன் ஏற்பட்ட தோல்வியாகவே கருதப்படும்.

'சிங்கள மக்களது வெற்றித் தேவதை, புலிகளை வென்று தமிழ் பேசும் தரப்பின் பேரம் பேசும் பலத்தை தகர்க்கும் தலைவி' என்று உருவாகிவரும் தோற்றப்பாட்டை சிதைக்க சந்திரிக்கா அம்மையார் துணியப்போவதில்லை.

கிரிக்கெட் தோல்வி தேசத்துரோகம் போல கருதப்பட்டதையே ஆட்சியாளர்கள் கண்டிக்கத் துணியவில்லை. அதேபோன்று வெல்ல முடியாத போர் என்ற உண்மையைக் கூறி சமாதானக் கதவை திறக்கவும் ஆட்சியாளர்களால் முடியப் போவதுமில்லை. துணியப்போவதுமில்லை.

கிரிக்கெட் அணிமீது சிங்கள மக்களுக்கு ஏற்பட்ட கோபாவேசம் ஆட்சியாளருக்கும் ஒரு எச்சரிக்கைதான். நீங்களும் தோல்வி கண்டு திரும்பி வந்தால் தூக்கியெறியப்படுவீர்கள் என்று சொல்லாமல் சொல்லியுள்ளனர்.

---

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

### பாராளுமன்றத்தில் பளீர்-பளீர்

இ.தொ.கா. தலைவர் தொண்டமான் மட்டுமல்ல, முன்னாள் தமிழ்த் தலைவர்கள் பலரும் தாம் மட்டுமே விவேகிகள் என்றுதான் தம்பட்டம் அடித்திருக்கின்றனர். ஆனால் மிகவும் பரிதாபமாக சிங்கள அரசியல் தலைவர்களிடம் ஏமாந்தும் தோற்றும் போனதுதான் வரலாறு.

அண்மையில் 15.06.99 அன்று பாராளு மன்றத்தில் தொண்டாவுக்கும், அவரது கட்சியினருக்கும் கிடைத்த மரியாதையே தனிதான்.

அவசரகாலச் சட்டம் என்பது தமிழ் மக்களுக்கு எதிரான ஒன்றுதான். ஜனநாயக விரோதமானது தான் என்பது நூற்றுக்கு நூறு ஏற்கப்பட்ட விடயம்.

அந்தச் சட்டத்தை எதிர்ப்பதால் அரசு கைவிடுகிறதோ இல்லையோ, அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதும், அடிமேல் அடி அடிப்பதும் ஜனநாயக சக்திகளது கடமை.

வீரவிதான இயக்க ஊர்வலம் ஒன்றுக்கு இரண்டு தடவை கொழும்பில் நடந்துவிட்டது. அந்த ஊர்வலத்தை எட்டி நின்று பார்த்த தமிழ் இளைஞர் ஒருவரை வீரவிதானக்காரர் பிடித்து பொலிசில் கொடுக்க, அவசரகாலசட்டத்தின் கீழ் அவரை உள்ளே வைத்தனர்.

மறுமுறை வீரவிதான இயக்கம் இ.தொ.கா. அலுவலகத்திற்குள் புகுந்து கொடி எரித்து கூத்தாடியது.

அவசரகால சட்டத்தை கையில் வைத்துக் கொண்டு வேடிக்கை பார்த்தது பொலிஸ். யாரையும் கைது செய்யாது விலக்குப் பிடித்து விட்டனர்.

ஆனால் வீரவிதானவுக்கு எதிராக தமிழ் அமைப்புக்கள் சில பேரணி நடத்த முன்வந்தபோது அவசரகால சட்டத்தின் கீழ் தடைபோடப்பட்டது.

இதன் பின்னும் அவசரகால சட்டம் என்றால் என்ன? யாருக்கு எதிராக பெரும்பாலும் பாவிக்கப்படுகிறது? என்பதற்கு விளக்கம் தேவையில்லை. கைப்புண்ணுக்கு கண்ணாடி எதற்கு?

யாழ் குடாநாட்டில் அத்துமீறிய கைதுகளுக்கு வகை செய்ததும் அவசரகால சட்டம்தான். இன்றைய புதைகுழிகளில் இருந்து மீட்கப்படும் உடல்கள் அவசரகால சட்ட அதிகாரத்தை பயன்படுத்தி கைதாகி காணாமல் போனவர்களுடையதுதான்.

மலையக இளைஞர்கள், யுவதிகள் ஏராளமானோர் கைதாகி, விசாரணையின்றி சிறைகளில் வாடவும் ஏதுவாக இருப்பது அவசரகாலச் சட்டம்தான்.

ஆனால், 15.06.99 அவசரகால சட்ட விவாதத்தில் உரையாற்றிய யோகராஜன் எம்.பி.க்கு அவசரகால சட்டம் பாரபட்சமானது என்பது அப்போதுதான் தெரிந்திருக்கிறது. அப்படியிருந்தும் அதனை தாம் எதிர்க்க விரும்பவில்லை என்றும் அவர் கூறியதுதான் வேடிக்கை. 'உதைக்கிறீர்கள் என்பது தெரியும். ஆனாலும் அக் காலுக்கு முத்தமிட தயங்க மாட்டோம்' என்று கூறுவதற்கு ஒப்பானதாக இருந்தது அப் பேச்சு.

இவர்களது பேச்சுக்களையெல்லாம் வெகு அலட்சியமாக செவிமடுத்த பிரதிபாதுகாப்பு அமைச்சர் தனது உரையில் சாட்டையடி கொடுத்தார்.

'அவசரகால சட்டத்தை ஆதரிப்பதும் விடுவதும் உங்கள் விருப்பம்' என்று கூறிவிட்டார். 'நீ ஆதரித்து வாக்குப் போட்டால் போடு, போடா விட்டால் போ' என்ற பாணியில் தூக்கி எறிந்துவிட்டார்.

இ.தொ.கா. உறுப்பினர்கள் முகத்தில் ஈயாடவில்லை. வாக்களிப்பு நேரத்தில் பவ்வியமாக எழுந்து ஆதரவாக வாக்களித்தனர்.



அமைச்சர் எடுத்தெறிந்து பேசியும் இந்த சட்டத்தை ஆதரிக்கும் அளவுக்கு அதில் என்ன இருக்கிறது?

அங்குதான் இருக்கிறது விஷயம். 'மோசமான சட்டத்தை ஆதரிக்கிறோம்' என்று ஆட்சியாளரிடம் நற்பெயர் எடுப்பது, நல்ல சட்டத்தை ஆதரிப்பதைவிட இலாபகரமானது.

இ.தொ.கா. தலைமைக்கு எத்தனையோ பிரச்சனைகள் உள்ளன. அரசியலுக்கு அப்பாற்பட்ட அந்தப் பிரச்சனைகளது பிடி அரசிடம் இருக்கிறது. சந்திரசேகரனும் தொண்டா விலகினால் அவர் இடத்தை பிடிக்க ஆவலாக உள்ளார். ஆகவே அவசரகால சட்டத்தை எதிர்க்க இ.தொ.கா. முன்வராது.

'அவசரகால சட்டத்தை எதிர்க்க வேண்டி ஏற்படும். ஆதரவை வாபஸ் பெற வேண்டியிருக்கும்' என்று முன்புபோல பாச்சா காட்ட முடியாது. அரச தரப்புக்கு இவர்களைப் பற்றி நன்கு தெரியும். 'எதிர்க்க விருப்பமானால் செய்து பாருங்கள்' என்று முகத்தில் அடித்தது போல சொன்னால் மூச்சுவிட மாட்டார்கள் என்றும் தெரியும்.

இ.தொ.கா.வின் ஆதரவு தமக்கு தேவையில்லை என்ற தொனியில் அமைச்சர் கொடுத்த பதிலடி அவமானம்தான். வெளியே தெரியாமல் துடைத்துக்கொண்டனர். பழைய சாணக்கியம் இனி எடுபடாது.


படிப்பகம்

www.padippakam.com

# உண்மைத் தொடர்

## அதிர் இடி 67

**கடந்தவாரம்**

**உகண்டாவை முஸ்லிம் நாடாக மாற்றுவதற்கு அமீன் விரும்பினான். பெரும்பான்மையினரான கிறிஸ்தவர்கள் எதிர்த்தனர். அவர்களை ஏமாற்ற அவர்கள் மத்தியிலேயே பிரமுகர்களை உருவாக்கி, அறிக்கைகள் விட வைக்கிறான். அவர்கள் அமீனை நல்லவனாகக் காண்பிக்க முயல்கிறார்கள். உகண்டா இராணுவத்திலும் முஸ்லிம்கள் பொறுப்பாக நியமிக்கப்படுகிறார்கள்.**

**இனி....**

# இடி அமீன்

உகண்டாவை முஸ்லிம் நாடாக்குமாறு தீவிரவாதிகள்தான் கோரிவருகின்றனர். அமீனுக்கு அதில் இஷ்டமில்லை என்பதுபோல கிறிஸ்தவப் பிரமுகர்கள் சிலர் பிரசாரம் செய்தனர்.

அமீனை நல்லவனாக நம்பவைக்கும் பிரசாரத்தில் ஈடுபட்ட அப்பிரமுகர்களுக்கு ஏராளமான வெகுமதிகள் ஜனாதிபதி மாளிகையில் இருந்து கிடைத்துக்கொண்டிருந்தன.

சகல இனங்களுக்கும் பொதுவான ஒருத்தராக தன்னைக் காட்டிக்கொண்டு, எதிர்ப்பே இல்லாமல் உகண்டாவை முஸ்லிம் நாடாக மாற்றவே அமீன் விரும்பியிருந்தான்.

ஆனாலும் அமீனின் உண்மையான நோக்கத்தை சகலரும் அறியும் சந்தர்ப்பம் கிட்டியது.

1975இல் பாகிஸ்தானில் முஸ்லிம் நாடுகளது தலைவர்களது மாநாடு நடைபெற்றது.

உகண்டாவையும் மாநாட்டில் கலந்துகொள்ள அனுமதிக்க வேண்டும் என்று அமீன் கோரிக்கை விடுத்திருந்தான்.

மாநாட்டில் கலந்துகொண்ட சில நாடுகள் 'உகண்டா முஸ்லிம் நாடல்ல என்பதால், அதனுடைய கோரிக்கையை ஏற்க முடியாது' என்று எதிர்ப்புத் தெரிவித்தன.

அதற்கு **"படிப்படியாக உகண்டா முஸ்லிம் நாடாக மாறிவருகிறது. அதற்கான சகல முயற்சிகளையும் நான் செய்து வருகிறேன்!"** என்று பதில் கூறினான்.

அமீனின் கோரிக்கையும், அது மறுக்கப்பட்டதற்கு அவன் கூறிய பதிலும் மாநாட்டில் பகிரங்கமாக விவாதிக்கப் பட்டன. அதனால் அது பத்திரிகைகளிலும் இடம்பெற்றது.

இதனை அறிந்த உகண்டா கிறிஸ்தவ மக்கள் கொதித்தனர். அமீனுக்காக வாதாடிய உள்ளூர் பிரமுகர்கள் ஓடி ஒளிந்தனர்.

சிலரது வீடுகள் ஆத்திரம் கொண்ட கூட்டத்தினரால் கல்வீச்சுக்கு இலக்காயின.

அவர்களை அடக்க இராணுவம் ரோந்தில் ஈடுபட்டது. பலரைக் கைது செய்து தாக்கியது.

பாகிஸ்தான் மாநாட்டில் கலந்துகொண்டு முஸ்லிம் நாடாக ஏற்கப்பட்டால் ஏராளமான நிதி உதவிகள் குவியும். அதனை வைத்து ஆடம்பரமாக ஆட்சி நடத்தலாம் என்றுதான் அமீன் கணக்குப் போட்டிருந்தான்.

அதனாலேயே அவசரப்பட்டு தன் சுயரூபத்தை வெளிக்காட்டிக் கொண்டான்.



இனிமேலும் தன்னை கிறிஸ்தவ மதத்தினர் நம்பப் போவதில்லை என்று தெரிந்ததும் தனது பாணியில் நடவடிக்கைகளில் இறங்கினான்.

இஸ்லாம் மதத்தை தழுவுபவர்களுக்கு சலுகைகள் வழங்கப்பட்டன. முன்னுரிமை கொடுக்கப்பட்டது.

**"வறுமையில் வாடும் மக்களை மதம் மாற்றுவது சுலபம். பெரும்பான்மையினராக கிறிஸ்தவர்கள் இருப்பதால்தானே பிரச்சனை. அவர்களை சிறுபான்மையாக்கிவிட்டால்?"** என்று கேட்டு சிரித்தான் அமீன்.

அவன் சிரித்தபோது எதிரே முஸ்லிம் மதப் பிரசாரத்திற்கும், மதமாற்றத்துக்கும் பொறுப்பான குழுவினர் அமர்ந்திருந்தனர்.

**"உங்களை நம்பி முக்கிய பொறுப்பை ஒப்படைக்கிறேன். ஆறுமாத காலத்திற்குள் உகண்டாவை முஸ்லிம் நாடாக மாற்றித் தாருங்கள்!"** என்றான்.

அப்போது 'முன்னோ' என்றொரு பத்திரிகை வெளியாகிக் கொண்டிருந்தது. மதமாற்றக்குழுவுக்கு அப் பத்திரிகை பெரும் சவாலாக இருந்தது.

கத்தோலிக்க திருச்சபையின் ஆதரவுடன் அப் பத்திரிகை வெளிவந்தது. அப் பத்திரிகை பற்றி அமீனிடம் 'மதமாற்றக் குழு' முறையிட்டது.

**"பணத்தை வீசி பத்திரிகை ஆசிரியரை வாங்கமுடியுமா?"** என்று விசாரித்தான் அமீன்.

'பெரிய அச்சுக்கூடம் ஒன்று அமைத்துத் தர அரசு ஆவலாக உள்ளது. கடதாசியும் நியாய விலையில் கடனுக்குத் தரப்படும்' என்று பத்திரிகை நிறுவனத்திடம் ஆசை காட்டிப் பார்த்தனர்.

அவர்கள் மசிய மறுத்தனர். மதமாற்றத்தைக் காட்டமாக கண்டித்ததுடன், உகண்டா ஆட்சிக்கு எதிராகவும் மறைமுகமான பிரசாரம் செய்தனர்.

**"ஆசிரியரின் பெயர் என்ன?"** என்று கேட்டான் அமீன்.

**"கிளமண்ட் சிக்குண்டு"** என்று பதில் சொல்லப்பட்டது.

**"கொன்று விடுங்கள்!"** என்று சர்வ சாதாரணமாக உத்தரவு உதிர்ந்தது அமீனிடமிருந்து.

உண்மையாகத்தான் கூறுகிறானா என்று புரியாமல் புருவம் உயர்த்திய புலனாய்வு அதிகாரியைப் பார்த்து சிரித்த அமீன்; **"என்ன என் பாணியில் சொன்னால்தான் நம்புவீர்களா? ம்... சொர்க்கத்துக்கு விசா குத்திவிடுங்கள்!"** என்று சிரித்தான்.

அன்றிலிருந்து இரண்டாம் நாள் சாலையோரத்தில் சூட்டுக் காயங்களுடன் கிடந்தது 'முன்னோ' பத்திரிகை ஆசிரியரின் உடல்.

1973 ஜனவரி 16இல் நடைபெற்ற 'முன்னோ' பத்திரிகை ஆசிரியர் கொலை மூலம் கிறிஸ்தவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக வெளிநாடுகளில் கண்டனங்கள் எழுந்தன.

கிறிஸ்தவ மக்களிடையேயும் இடி அமீன் ஆட்சிக்கு பெரும் எதிர்ப்புக்கள் தோன்றின.

**"'முன்னோ' ஆசிரியர் கொலை பற்றி விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளேன். குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர். யாவருக்கும் ஒரே நீதிதான்!"** என்று அறிவித்தான் அமீன்.

சிலர் கைது செய்யப்பட்டதாகவும், துப்புகள் கிடைத்திருப்பதாகவும் பொலிசார் கூறியதாக செய்திகள் வெளியாகின.

'முன்னோ ஆசிரியர் கொலை வழக்கில் திருப்பம்! கொலையாளிகள் இனம் காணப்பட்டுள்ளனர்.' என்றும் செய்திகள் வரும்.

'கடும் தண்டனை வழங்க அதிபர் அமீன் தீர்மானம்' என்று வானொலியும் கூறியது.

இவையெல்லாமே அமீனது செய்தித் தொடர்பாளர்களால் மக்களை ஏமாற்ற வெளியான பரபரப்புச் செய்திகள்.

இச் செய்திகளை கொட்டை எழுத்துக்களில் வெளியிட்ட பத்திரிகைகளுக்கு பத்திரிகை காகிதம் மலிவு விலையில் கொடுக்கப்பட்டது.

சில காலத்தின்பின்னர் அச் செய்திகள் ஓய்ந்தன. அந்தக் கொலை விவகாரமும் அப்படியே ஆறிப்போனது.

உகண்டா வானொலியில் திடீரென்று புதிய நடைமுறை ஒன்று அமுலுக்கு வந்தது. வானொலி அறிவித்தல்களை அரபு மொழியில் வாசிக்குமாறு அமீன் கட்டளையிட்டான்.

உகண்டாவில் பெரும்பாலான மக்களுக்கு ஆரபு மொழி தெரியாது. அதனால் அரபு மொழியிலான அறிவித்தல்களை முஸ்லிம்களும், வெளிநாட்டு இராஜதந்திரிகள் சிலருமே புரிந்துகொண்டனர்.

அரபு நாடுகள் போன்று வெள்ளிக்கிழமை விடுமுறை நாளாகவும், ஞாயிறு வேலை நாளாகவும் அறிவிக்கப்பட்டது.

ஆனால் கிறிஸ்தவ மக்கள் தமக்கு ஞாயிறு அன்று கட்டாயம் விடுமுறை தேவை என்று கோரினார்கள்.

கிறிஸ்தவ மக்களை முற்றாக பகைக்க விரும்பாத அமீன், **"ஞாயிற்றுக்கிழமையும் விடுமுறை நாளாக அறிவிக்கப்படுகிறது. எந்த மதத்தினரையும் புண்படுத்த மாட்டேன். நியாயமான கோரிக்கைகளை ஏற்கத் தயங்கவும் மாட்டேன்!"** என்று அறிவித்தான்.

பாடப் புத்தகங்களிலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. சில வரலாற்று நிகழ்வுகள் அகற்றப்பட்டன.

'பிரிட்டிஷ்காரர்களால் அரபு நாட்டவர்கள் மேலைத் தேசங்களுக்கு அடிமைகளாக கொண்டு செல்லப்பட்டனர். சந்தைகளில் விற்பனையும் செய்யப்பட்டனர்.' என்ற வரலாற்றுச் செய்திகளும், குறிப்புகளும் பாடப் புத்தகங்களில் இருந்து நீக்கப்பட்டன.

உகண்டாவில் இருந்த அரபு நாடுகளது இராஜதந்திரிகளுக்கு தனது இத்தகைய செயற்பாடுகளை அடிக்கடி தொடர்புகொண்டு அமீன் தெரிவித்தான்.

உகண்டா தொலைக் காட்சியில் தொடர் ஒன்று ஒளிபரப்பாகியது. கிழக்கு ஆபிரிக்காவில் 19ம் நூற்றாண்டில் அடிமை வியாபாரம் நடைபெறுவதை அத் தொடர் சித்தரித்தது.

தற்செயலாக ஒருநாள் இந்த நிகழ்ச்சியைப் பார்த்து விட்டான் அமீன். உண்மையில் அந்த நிகழ்ச்சி அடிமை வியாபாரம் நடத்திய பிரிட்டிஷ்காரர் களுக்கும், மேலைய தேசத்தவர்களுக்கும் எதிரானதாக தயாரிக்கப்பட்டிருந்தது.

இடைநடுவே திடீரென்று பார்த்ததால் அந்த நிகழ்ச்சியின் அடி எது, நுனி எதுவென்று அமீனுக்குப் புரியவில்லை.

**"இத் தொடரை உடனே நிறுத்துங்கள்!"** என்று உத்தரவிட்டான். ஏன், எதற்கு? என்று கேட்கவா முடியும். நிறுத்தி விட்டனர்.

அந்த நிகழ்ச்சி வரலாற்று மாணவர்களுக்குப் பயனுள்ள நிகழ்ச்சியாக இருந்தமையால் கல்வி அமைச்சரிடமிருந்து கண்டனம் எழுந்தது.

அதனை அமீன் எதிர்பார்க்கவில்லை. கல்வியமைச்சராக இருந்தவர் ஒரு கிறிஸ்தவர். அமீனுக்கு விசுவாசமானவர். அமீன் கீறிய கோட்டை தாண்டாதவர்.

அப்படிப்பட்ட ஒருவர் துணிந்து கண்டித்ததும் அமீனுக்கே நம்பமுடியவில்லை.

**"ஏனய்யா துள்ளுகிறீர்? உம்மைப் பதவியில் அமரவைத்து அழகு பார்த்ததுக்கு இதுதான் நன்றியா?"** என்று கேட்டான்.

"என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். இதற்கு மேலும் என் மனச்சாட்சிக்கு மாறாக நடக்க நான் இஷ்டப்படவில்லை!" என்று கூறிவிட்டார் அமைச்சர்.

**"அப்படியானால் என்னையும் நீர் மன்னித்துக்கொள்ளும். இந்த நிமிடம் முதல் உமது பதவி காலியாகிறது. இப்படியே வீட்டுக்கு சென்று ஓய்வு எடுத்துக்கொள்ளும். உமது உயிர் இனி உம்முடைய கையில்தான்! தேவையற்ற விடயங்களில் மூக்கை நுழைத்தால் உயிர் என்னாகும் என்பது உமக்கே தெரியுமல்லவா?"** என்று கேட்டான்.

மௌனமாக எழுந்து வெளியேறினார் அமைச்சர். உள்ளே அமைச்சராக வந்தவர், வெளியே செல்லும்போது முன்னாள் அமைச்சராகச் சென்றார்.

இக் காலகட்டத்தில் அமீனுக்கு தன் பாதுகாப்பு தொடர்பான அக்கறை அதிகமாகியது.

தன் காதலிகளைச் சந்திக்க நம்பிக்கையான சில பாதுகாவலர்களுடன் சென்றுவந்த அமீன், பிஸ்டலையும், கத்தியையும் தன் இடுப்பில் எப்போதும் வைத்திருப்பான்.

பாதுகாப்புத் தொடர்பான அச்சம் எழுந்த பின்னர் சில கைக்குண்டுகளையும் தன்னுடனேயே வைத்திருக்க ஆரம்பித்தான்.

தனது மனைவியர்களதும், காதலிகளதும் வீடுகளை கண்காணிக்க நம்பகமான புலனாய்வாளர்களை நியமித்தான்.

எங்கிருந்தும் ஆபத்து வரக்கூடும் என்ற எச்சரிக்கை உணர்வுதான் அதற்குக் காரணம்.

அப்போது அமீனுக்கு ஐந்து மனைவியரும், எண்ணிலடங்காத காதலிகளும் இருந்தனர். 34 பிள்ளைகள் இருந்தனர்.

அமீனின் ஐந்தாவது மனைவியின் வீட்டைக் கண்காணித்த புலனாய்வாளன் கூறிய தகவலால் சந்தேகப் புத்தி கொண்ட அமீன் உஷாரானான்.

'மனைவியே சதி செய்வாளா? செய்வாள்.' என்று நம்பினான்.

ஐந்தாவது மனைவிக்கு ஆபத்து காத்திருந்தது.

அவளை கொடூரமான முறையில் கொல்வது என்று முடிவு செய்தான் அமீன்.

**(இடி தொடரும்)**

**தருவது ரசிகன்**

# இணைத்துப் பேசலாமா

## சோனாலி கோபம்

இந்திய கிரிக்கெட் அணி உலகக் கோப்பையை தவறவிட்டாலும் அந்த அணி வீரர்களுக்கு நட்சத்திர மதிப்பு குறையவில்லை.

இந்திய அணியின் துணை கப்டன் ஜடேஜா. இந்தி நடிகைகள் பலருடன் வெகு நெருக்கம். ஜடேஜாவின் துடிப்பான ஆட்டத்தில் நடிகைகளுக்கு ஒரு மயக்கம்.



மாதுரி டிக்ஷித்துடன் பல்வேறு விதமாக இணைத்துப் பேசப்பட்டு வருகிறார் ஜடேஜா. இதேநேரம் இந்தி நடிகை சோனாலி பந்ரேயுடனும் ஜடேஜா நெருங்கிப் பழகுவதாக செய்திகள் உலாவுகின்றன.

இப்படியான செய்திகள் உண்மையாக இருந்தாலும் அடித்து மறுப்பதுதான் வழக்கம். சோனாலி என்ன சொல்கிறார் பார்க்கலாம்.

"எனக்கு கிரிக்கெட்டில் ஆர்வம் எதுவும் கிடையாது. ஆனால் நான் கிரிக்கெட்டை வெறுக்கவில்லை. என்னால் பிறரைப் போல கிரிக்கெட்டைப் பார்ப்பதற்கு தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்பாக தவம் கிடக்க முடியாது.

நான் இப்படிப் பேசுவதால் கோடிக் கணக்கான கிரிக்கெட் ரசிகர்கள் என்மீது ஆத்திரம் கொள்ளக்கூடும். ஆனால் நான் உண்மையைத்தான் கூறுகிறேன்.

இந்தியாவுக்கும், இந்தியர்களுக்கும் கிரிக்கெட்டும், திரைப்படமும் அவசியமாக மாறிவிட்டன.

எனவே, கிரிக்கெட்டும் திரைப்படமும் நெருங்கிய தொடர்புள்ளனவாக மாறிவிட்டன. எனக்குக்கூட தொடர்புடையதாக கிரிக்கெட் உள்ளது.

ஏனென்றால் நான் இந்திய அணியின் துணை கப்டன் ஜடேஜாவை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. சென்னையிலும் சந்தித்தோம். இந்த சந்திப்புக்களை வைத்து என்னையும் ஜடேஜாவையும் இணைத்து பேசப்பட்டது.

நாங்கள் இருவரும் திருமணம் ஆகாதவர்கள் என்பதால் எங்களைப் பற்றி பல்வேறு விதமான வதந்திகள் உலாவந்தன. எங்களைப் பற்றிய பேச்சுக்கள் வேகப்பந்து வீச்சுப் போன்று இருந்தன. இதற்காக நான் மூன்றாவது நடுவரை அழைத்தா சரியான தீர்ப்பளிக்குமாறு கோர முடியும்?

சில நேரங்களில் இதுபோல வீசப்படும் 'நோபோல்'கூட நல்லது என்றே கருதுகிறேன்!" என்று கூறியிருக்கிறார் சோனாலி.

இந்திய கிரிக்கெட் வீரர்களுக்குள்ளேயே தீராத விளையாட்டுப் பிள்ளை என்றால் அது ஜடேஜாதான்.

# நிஜமான நிழல்

ரஜினியின் 'வள்ளி' படத்தின் மூலம் அறிமுகமானவர் ப்ரியாராமன்.

தமிழில் வாய்ப்புக்கள் இல்லை என்பதால் தெலுங்கு மற்றும் மலையாளப் படங்களில் நடித்தார். முதலில் கவர்ச்சி காட்ட மறுத்தவர் பின்னர் கவர்ச்சி நடிகைகளையே மிஞ்சும் விதமாக தாராளமாக நடித்தார்.

ப்ரியாராமன் பற்றி பல்வேறு கிசுகிசு செய்திகள் வெளியாகத் தொடங்கின. சென்னையின் புறநகர் பகுதியில் உள்ள கடற்கரையில் வீடு ஒன்றை எடுத்து தங்கியுள்ளார். தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் போன்றோரை அங்கேதான் சந்திக்கிறார் என்று செய்திகள் வெளியாகின.

'நேசம் புதிது' என்னும் படத்தில் ரஞ்சித் கதாநாயகனாக நடிக்க அவருடன் இணைந்து நடித்தார் ப்ரியாராமன். ஏற்கனவே 'புதுமைப்பித்தன்' படத்தில் நடித்தபோது ரஞ்சித்துடன் நெருக்கமானார் ப்ரியாராமன். 'நேசம் புதிது' படத்தில் அந்த நெருக்கம் மேலும் இறுக்கமானது. இதுபற்றி சிவிவிசிட் 'காதோடு சொல்லுகிறோம்' பகுதியில் பல வாரங்களுக்கு முன்னர் தகவல் வெளியாகியதும் குறிப்பிடத்தக்கது.



படத்தில் நெருங்கி நடித்ததுபோன்றே வாழ்க்கையிலும் நெருங்கி இருக்க முடிவு செய்தனர். நண்பர்கள் முன்னிலையில் திருமணம் செய்துகொண்டனர். இரு வீட்டாரின் சம்மதமும் கிடைத்துள்ளது. 'திருமணத்தின் பின்னர் நடிக்கமாட்டேன்' என்று வழக்கமான வாக்குமூலம் கொடுத்துள்ளார் ப்ரியாராமன்.

# 21 கொலைகள்

தமிழ்நாட்டையே கலக்கியுள்ள செய்தி அது. மொத்தம் 21 பெண்களை கழுத்தை நெரித்து கொன்றிருக்கிறான்.

கழுத்தில் துணியைப் போட்டு ஒரே இறுக்கு. மூச்சுத்திணறியே 21 பேரும் செத்துப் போனார்கள்.

அந்தக் கொலைகாரனின் பெயர்: மருதமுத்து. சமீபத்தில்தான் அந்த பயங்கரமான கொலை பாதகனை பொலிசார் கண்டுபிடித்திருக்கின்றனர்.

எல்லாமே நகைகளுக்காக நடந்த கொலைதான். நகையைப் பறிகொடுத்த பெண்கள் தன்னைக் காட்டிக் கொடுத்து விடக்கூடாது என்ற முன்னெச்சரிக்கையில் கொலை செய்திருக்கிறான்.

"அநியாயமாக கொலைகள் செய்திருக்கிறாயே?" என்று பொலிஸ் காவலில் உள்ள மருதமுத்துவிடம் நிருபர்கள் கேட்டனர்.

அதற்கு அவன் சொன்ன பதில்: "முதன் முதலில் செல்லம்மா என்ற பெண்ணின் நகையை திருடிவிட்டு உயிரோடு விட்டதால் மாட்டிகொண்டேன். அதன்பின்னர் உஷாராகிவிட்டேன்.

ஆனால் ஒன்று, கல்யாணமாகாத பெண்ணையும், கர்ப்பமான பெண்ணையும் நான் நெருங்குவதில்லை. கர்ப்பமான பெண்ணைக் கொன்றால் அநியாயமாக இரண்டு உயிர் போய்விடுமே. அதேமாதிரி வாழ்க்கையில்



பெண்ணாகப் பிறப்பவர்கள் ஆண் சுகம் அனுபவிக்க வேண்டும். அதற்கு முன்பாக சாகக் கூடாது. அதற்காகத்தான் கல்யாணமாகாத பெண்களை கொலை செய்ததில்லை." என்று கூறுகிறான்.

இந்த கொடூர கொலைஞனை தடுப்புக்காவலில் வைத்திருந்து தொடர்ந்து விசாரணை நடத்துகின்றனர்.

# பெண் வேட்டை

இங்கிலாந்தைச் சேர்ந்தவன் ரிச்சர்ட் பேக்கர். 34 வயது. பயங்கரமான பெண் சபல ஆசாமி.

இவன் இரவு விடுதி ஒன்றில் வேலை பார்த்து வந்தான். விடுதிக்கு வரும் பெண்களுக்கு மயக்க மருந்து கொடுத்து உறவு வைத்துக் கொள்ளுவான். ஆசைக்கு இணங்காத பெண்களை கொல்லவும் தயங்கமாட்டான்.



இவனது கொடுமை தாளாது சகோதரனே பொலிசில் புகார் செய்து இருக்கிறார். கைதுசெய்து நாலு போட்டிருக்கிறார்கள். உண்மைகளை கக்கி விட்டான்.

சாதாரண உண்மைகளல்ல. அதிர்ச்சிகரமான சங்கதிகள். நூற்றுக்கு மேற்பட்ட பெண்களுடன் மயக்க மருந்து கொடுத்து உறவு கொண்டிருக்கிறான்.


அவன்மீது பொலிசார் வழக்குத் தொடுத்தனர். நீதிபதியே கதி கலங்கிப் போனார். நான்கு ஆயுள் தண்டனைகளை அள்ளிக் கொடுத்துவிட்டார்.



படிப்பகம்

www.padippakam.com





# உடன் பிறப்பு

← இது என்ன புதுவிதமான தலை அலங்காரம்? என்று முடியைப் பிய்க்காதீர்கள். இது கட்சிப் பற்றின் வெளிப்பாடு.

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியின் பவள விழா அண்மையில் நடந்தது. அப்போது கட்சிச் சின்னமான உதயசூரியனை போலவே சிகை அலங்காரம் செய்து காட்சியளிக்கிறார் இந்தத் தொண்டர். தி.மு.க. பாஷையில் சொல்வதானால் 'உடன் பிறப்பு.' இந்த உடன்பிறப்பின் தலையில் உதிக்கிறது உதயசூரியன்.

# 75 வயதில் இளமை



→ அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர் ஜோர்ஜ் புஷ். வளைகுடா யுத்தம் இவரது காலத்தில்தான் ஆரம்பம். ஈராக்கை அடிபணியவைக்க ஆசைப்பட்ட அதிபர். தற்போது ஓய்வில் இருக்கிறார். ஜூன் 12ம் திகதி 75வது பிறந்த நாளை கொண்டாடினார். அதற்கு முன்னர் தன் அமோக இளமையை நிரூபிக்க விமானத்திலிருந்து பாரசூட் மூலம் குதித்து சாகசம் காட்டினார்.

இந்த வயதிலும் உடலை இவ்வாறு திடகாத்திரமாக வைத்திருப்பது ஆச்சரியம்தான். மனதில் இளமை இருந்தால் முதுமை தோற்றுப்போகும்.

# அழகுக் கடை




↘ இவரைப் பார்த்ததும் அடடே... டெண்டுல் கர் என்று நினைத்தால் ஏமாந்து போனீர்கள். இவரை டெண்டுல்கர் என்று நினைத்து பலர் ஏமாந்திருக்கிறார்கள்.

இந்தியாவில் லூர்தியானா மருத்துவக் கல்லூரியில் பணிபுரிகிறார். தனக்கும் டெண்டுல்கருக்கும் இடையேயுள்ள உருவ ஒற்றுமையை கண்டுவிட்டு, தனது தலை முடியமைப்பையும் டெண்டுல்கர் போல மாற்றிக்கொண்டார். டெண்டுல்கர் போலவே உடைகளையும் அணிகிறார்.

இதனால் இவரைக் கண்டதும் டெண்டுல்கரின் ரசிகர்கள் மொய்த்துவிடுகிறார்கள். அது மட்டுமல்ல, 'ஹீரோ க்ரூப்' என்னும் நிறுவனம் இவரை தன் பொருட்களுக்கான விளம்பரப் படங்களில் நடிக்க மூன்று வருட ஒப்பந்தம் செய்துள்ளது. சுனில் கவாஸ்கரும் இவரை சந்தித்து பேட்டி கண்டுள்ளார். ஆனால் இன்னமும் இந்த நகல் தன் அசலான டெண்டுல்கரை சந்திக்கவில்லை. உருவ ஒற்றுமையால் வருமானம்.

# 'நான் அவரில்லை'



↘ 'பேனாவால் வரலாற்றையே மாற்றலாம். எதனையும் சாதிக்கலாம்.' என்றெல்லாம் கூறப்படுவதுண்டு. படத்தில் உள்ள பால்பாயிண்ட் பேனா உலக சாதனையே படைத்து கலக்கிவிட்டது.

இந்தச் சாதனை இதன் எழுத்தாற்றலால் அல்ல. எடையாற்றலால்! ராட்சத வடிவில் பேனாவை தயாரித்து, நீளமான டிரைலர் வாகனத்தில் ஏற்றிச் செல்கிறார்கள். இந்த ராட்சத பேனாவை செய்து உலக சாதனை படைத்திருப்பவர் பெயர்: ஆண்டன் குளோ. எழுதாமலேயே சாதனை படைத்துவிட்டது இந்தப் பேனா.

# சாதனைப் பேனா



← உடையா? இது உடையா? நடையா? இது நடையா? இடையா இது இடையா? இவர்களெல்லாம் என்ன அழகுக் கடை போடவந்த பெண்கள் படையா? என்று மடை திறந்தது போல் கேள்விகள் எழும் இடம் 'பாஷன் ஷோ.' புதிய புதிய ஆடைகளை, நழுவ நழுவ நடந்து வந்து நங்கையர் அறிமுகம் செய்வது நவநாகரிகம்.

இது, கியூபா மொடல் அழகி புதிய ஆடை ஒன்றை அணிந்து பார்வையாளர்களை கிறுகிறுக்க வைத்தபோது சுட்ட படம்.

↓ மிக நீளமாக காட்சியளிக்கும் இந்த ஆடைதான் தற்போது உலகில் மிக நீளமான ஆடை என்று நம்பப்படுகிறது. எனினும் கின்னஸில் இது இன்னமும் சேர்க்கப்படவில்லை.

இந்த ஆடையின் நீளம்: 13 மீட்டர். எடை: 200 கிலோ. இந்த ஆடையின் பெயர். பிளாமன்கோ. ஸ்பெயின் நாட்டின் கலாசார ஆடை.

இதை அணிந்து பெரும் கூட்டம் மத்தியில் நடந்து போவதும் ஸ்பெயின் அழகிதான். இடை முறியாமல் எடை தாங்கியது எப்படியோ?

# நீள ஆடை



# ஊழல் தாய்



↑ பிலிப்பைன்ஸ் நாட்டின் முன்னாள் பேராசை பிடித்த ஜனாதிபதி மார்க்கோஸ். அவர் மனைவியான ஆடம்பரப் பிரியை இமெல்டா. இருவரும் இங்கு காட்சியளிக்கின்றனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் பொதுச் சொத்தை விழுங்கிய திமிங்கிலங்கள் இவர்கள். மொத்தமாக சுருட்டிய தொகை எவ்வளவு தெரியுமா? 860.08 மில்லியன் அமெரிக்க டொலர். அதாகப்பட்டது 6 ஆயிரத்தி 25 கோடியே 60 இலட்சம்.

இந்த திமிங்கில தம்பதியின் ஆடம்பர வாழ்க்கையால் 1965 முதல் பிலிப்பைன்ஸ் தேசிய நிதியில் ஏற்பட்ட நஷ்டம், 40 ஆயிரம் கோடி முதல் 70 ஆயிரம் கோடி வரை என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இமெல்டாவின் சொந்தப் பாவனைக்கு மூவாயிரம் கோடி பாதணிகள், பாலே நடன விருந்துகளில் அணியும் அணிகள், இரண்டாயிரம் உள்ளாடைகள், அதுவரை திறக்கப்படாதிருந்த ஆயிரம் புதிய மார்பணிகள் ஆகியவை குவிந்து கிடந்தன. இது உலக சாதனை.

பிலிப்பைன்ஸில் இருந்து இந்தத் தம்பதி தப்பியோடியது. மார்க்கோஸ் ஹவாய்தீவில் இறந்துபோனார். அவரது உடலை பாதுகாப்பாக கண்ணாடிப் பேழையில் வைத்திருந்து பிலிப்பைன்ஸில் கொண்டு வந்து புதைத்தார் இமெல்டா.

பிலிப்பைன்ஸை சூறையாடிய இந்தப் பெண்மணிக்கு இப்போதும் ஆதரவாளர்கள் இருப்பதுதான் கொடுமை. அதுமட்டுமா, அண்மையில் இந்த ஊழல் தாய்க்கு 'சிறந்த தாய்' என்ற விருது கிடைத்துள்ளதுதான் பெரிய அநியாயம். ஜனாதிபதி பதவியையும் குறிவைத்திருக்கிறார் இமெல்டா. ஏற்கனவே ஒரு தடவை போட்டியிட்டு தோற்றும் போனார். நல்லதுக்கு காலமில்லை என்பது இதுதானோ? இவரோடு ஒப்பிட்டால் ஜெயலலிதா எம் மாத்திரம்?



படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 108

தமிழ்நாட்டிலிருந்து மயன்

# பாரிசில் முற்றுகையிடப்பட்ட நடிகை
# நடிகைகள் சந்திக்கும் அவலம்

நட்சத்திரம் ஒன்றின் பெயர் கொண்ட மூன்றெழுத்து நடிகை அவர். இவர் தமிழ்ப்பட உலகில் ஆறெழுத்து நாயகனை முதலில் காதலித்து ஏமாந்தவர். பின்னர் விநாயகர் பெயர் கொண்ட இளம் நடிகரின் வலையில் விழுந்து, அங்கும் ஏமாற்றப்பட்டார்.

அந்த இளம் நடிகர் வேறொரு பெண்ணைக் காதலித்து கல்யாணம் செய்து கொண்டார். கல்யாணத்தின் பின்பும் நடிகைக்கு மாதாமாதம் படியளந்தார். பின்னர் நடிகைக்கு வேறு தொடர்புகள் ஏற்பட்டதால் நடிகர் கழன்று கொண்டார்.

தனக்கு ஏற்பட்ட ஏமாற்றங்களால் சினிமா உலகில் எவரையும் நம்புவதில்லை என்று முடிவு செய்தார் நடிகை.

அதனால் காதலித்து ஏமாறுவதற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு, காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள ஆரம்பித்தார்.

நட்சத்திர கலை விழாக்களுக்கும் சென்றுவரத் தொடங்கினார். சமீபத்தில் பாரிசுக்குப் போயிருந்தார்.

அங்கு களியாட்டங்களுக்கு தடையே இருப்பதில்லை. அதனால் சேவை விரும்பியவர்களுக்கு தாராளமாக சேவை செய்தாராம்.

தங்குவதற்கு என்று தீர்மானித்த நாட்களைவிட மேலும் ஒருவார காலம் அதிகமாகத் தங்கி 'கலைச் சேவை' செய்திருக்கிறார்.

இந்திய, இலங்கைத் தமிழர்கள் பாரிசில் ஏராளமாக உள்ளனர். அவர்கள் மத்தியில் மூன்றெழுத்து நடிகையின் பெயர் கிளுகிளுப்பாக அடிபட, நடிகை தங்கியிருந்த விடுதிக்கு முன்னால் ஏகப்பட்ட கூட்டமாம்.

இப்படியே போனால் விபரீதம் ஏதாவது ஏற்பட்டுவிடுமோ என்று பயந்து கலைச்சேவையை இடையே நிறுத்திவிட்டு திரும்பினாராம்.

திரும்பும்போது ஏகப்பட்ட பொதிகளோடு வந்து சுங்கப் பகுதியினரை புருவம் உயர்த்த வைத்துவிட்டாராம்.

♠♣♦

## எதற்கும் தயார்

திரையுலகில் பெண்களது நிலை குறித்து தமிழக சஞ்சிகை ஒன்று வெளியிட்டுள்ள தகவலைப் பார்ப்போம்.

"திரைப்படங்களில் மட்டுமல்ல, திரைப்படத் துறையிலும் பெண்கள் நிலை கவலைக்கிடம்தான்.

திரையுலக ஆண்களின் பார்வையில் பெண்கள்-குறிப்பாக நடிகைகள்- செக்ஸ் இயந்திரமாகவே இருக்கிறார்.

ரசிகை என்ற பெயரில் திரையுலகப் பிரபலங்களைத் தேடி வரும் பெண்கள் அவர்களது காலடியில் வீழ்ந்து கிடக்க விரும்புகிறார்கள். நடிக்க வாய்ப்புத் தேடிச் செல்லும் பெண்களோ, எதற்கும் தயார். ஏனெனில் நடிகையாக இப்போது திறமை தேவையில்லை. திரண்ட உடம்பு மட்டுமே தகுதி.

இதை உணர்ந்தும் பிழைக்க வேறுவழியின்றி பெண்கள் திரையுலகுக்கு வருகிறார்கள். தங்கள் சரீரத்தை சான்றிதழாக பயன்படுத்த தயார் நிலையிலும் உள்ளனர்.

இவர்களது பலவீனத்தை தங்களின் பாலியல் பசிக்கு தீனியாக்கிக் கொள்கிறார்கள் திரையுலக ஆண்கள். இதில் நடிகர்கள் பிரதான பங்கு வகித்தாலும், இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், இடைத்தரகர்கள் என்று பலரும் அடக்கம்.

இப்படியாக பலபேருடைய இரவுப் பசிக்கு தீனியான பின்னரே நடிகை என்ற அந்தஸ்து கிடைக்கிறது. அதன்பிறகும் அவலம் தொடர்கிறது.

மார்க்கெட்டில் உள்ள கதாநாயகனின் கடைக்கண் பார்வை தன்மீது படவேண்டும் என்பதற்காகவும், பணத் தேவைக்காகவும் என்று தொடர்ந்து ஆண்களின் நுகர்வுப் பொருளாகின்றனர்.

இந்த வகையில் அரிதார நாயகிகளுக்கு அடிக்கடி 'அந்த சுகம்' கிடைத்தாலும், அது மனப்பூர்வமாக சரீர சுகமாக இருப்பதில்லை.

இவ்வாறு ஆண்களால் காயப்பட்டுப்போன நடிகைகள், திரையுலக ஆண்கள் தவிர்ந்த வேறு ஆண்களுடன் பழகவும் வாய்ப்பில்லை. இந்நிலையில் நடிகைகள் சிலர் தங்களுக்குள் தங்கள் துயரங்களை மனம்விட்டுப் பேசி தோழிகளாகிறார்கள். இந்த உறவுதான் பின்னர் அவர்களது சூழ்நிலை காரணமாக எல்லையை தாண்டுகிறது.

இத்தகைய உறவை நாடும் நடிகைகளில் 'ஐஸ்' நடிகையின் பெயரும், மூன்றெழுத்து ரசிப்பான நடிகையின் பெயரும் பிரபலம்.

தற்போது மூன்றெழுத்து 'ரம்ப' நடிகையின் பெயரும், காதல் கோட்டை நடிகையும் அந்தப் பட்டியலில் சேர்ந்துள்ளனர். இவர்கள்தவிர இந்தியிலும், தமிழிலும் அறிமுகமான பெயரில் மதுவை வைத்துள்ள நடிகையின் பெயரும் பேசப்படுகிறது. இந்த 'மது' நடிகையின் சித்தி இந்தியில் முன்னர் கனவுக்கன்னியாக இருந்தவர்.



ரம்யா கிருஷ்ணன்
படம்: எனக்கு நீ உயிரம்மா

## ஷாலினி கல்யாணம்

'அலைபாயுதே' படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடந்து கொண்டிருக்கிறது. 'இருவர்' படத்தின் பின்னர் தமிழில் இடிந்து போன தன் மார்க்கெட்டை மறுபடி கட்டியமைக்க அயராது பாடுபடுகிறார் மணிரத்னம்.

'அலைபாயுதே' படக் கதை மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது. காதில் விழுந்த கதையைக் கேளுங்கள்.

'ரோஜா' படத்தில் வரும் பெண் பார்க்கும் படலம்போல இதிலும் ஷாலினியை பெண்பார்க்க வருகிறார்கள். "நான் மாப்பிள்ளையோடு தனியாகப் பேசணும்" என்கிறார் ஷாலினி.

"எனக்கு கல்யாணம் ஆகிவிட்டது. ஆனால் வீட்டுக்குத் தெரியாது. இதை நீ யாரிடமும் சொல்லாதே. என்னைப் பிடிக்கவில்லை என்று கூறிவிடு" என்று குண்டைத் தூக்கிப் போடுகிறார் ஷாலினி.

ஷாலினியை திருமணம் செய்தவர் சினிமா உதவி இயக்குநர். அவர் இயக்குநராகும் வரை தங்கள் கல்யாணத்தை வெளியே சொல்வதில்லை என்று முடிவு செய்தனாராம்.

அப்படிப் போகிறது 'அலைபாயுதே' படத்தின் கதை.

## இசை ஆல்பம்

இளையராஜா இசையமைக்கும் ஒலி, ஒளி ஆல்பம் ஒன்றை இயக்குநர் கே.ராஜேஸ்வர் தயாரித்தார். 'ஜெய ஜெய ஜெயஹே' என்று பெயர் சூட்டியிருந்தனர். பின்னர் ஏதோ விவகாரத்தால் கைவிடப்பட்டது. தற்போது அதனை இளையராஜவே தன் செலவில் தயாரிக்கிறார். சன்.ரி.வி. போன்ற வற்றுக்கும் இந்த ஆல்பத்தில் உள்ள சில பாடல்களை கொடுக்க உள்ளனர். இதற்காக சிங்கப்பூரில் படப்பிடிப்புக்களும் நடந்துள்ளன.

முரளி-சிம்ரான்
படம்: 'கனவே கலையாதே'



மம்முட்டி-ஜூஹி சவ்லா-மோகன்லால்
படம்: ஹரிகிருஷ்ணன்ஸ்



## மீனாவின் ஆசை விந்தியாவின் இளமை

'மாமன் மகள்' படத்தில் கவர்ச்சி காட்ட மறுத்தார் மீனா. தொப்புள் காட்டி நடிக்க மாட்டேன் என்று கூறிவிட்டார். மீனாவின் தொப்புள் கவர்ச்சியை காட்டியே தீரவேண்டும் என்று இயக்குநர் குருதனபாலுக்கு ஆசையோ ஆசை.

கதாநாயகன் சத்யராஜிடம் விஷயத்தை கொண்டுபோனார். மீனாவை அழைத்த சத்யராஜ் இதம், பதமாக எடுத்துரைக்க, மீனாவும் சம்மதித்தார். இயக்குநர் சொன்னபடி நடித்தார்.

அப்படிப்பட்ட மீனாவை சமீபத்தில் சத்யராஜ் கைவிட்டுவிட்டார். 'ஆறுவது சினம்' படத்தை மணிவண்ணன் இயக்க, சத்யராஜ் இரட்டை வேடத்தில் வாலிபனாகவும், வியோதிபராகவும் அசத்துகிறார்.

இப்படத்தில் வாலிப சத்யராஜின் காதலியாக நடிக்க ஆசைப்பட்ட மீனா தூதுவிட்டாராம். ஆனால் விந்தியா என்னும் இளம் புயல் முன்னால் மீனாவை மறந்துவிட்டார் சத்யராஜ். பாவம் மீனா வருத்தத்தில் இருக்கிறார். சத்யராஜ் ஜோடியாக நடிப்பவர் விந்தியா.

## ஜூகியின் சம்பளம்

'மிஸ் இந்தியா' பட்டத்தை பெற்றவர் ஜூகி சாவ்லா. இந்தியில் முதலிடம் பெறுவதற்கு படாதபாடு பட்டும் பயனில்லை.

அதனால் இந்தியில் மட்டும் கவனம் செலுத்தாது மலையாளம், தெலுங்கு போன்ற மொழிகளிலும் நடித்தார்.

சமீபத்தில் வெளியாகிய 'ஹரி கிருஷ்ணன்ஸ்' படத்தில் இரு கதாநாயகர்கள் மத்தியில் நேர்த்தியாக ஈடுகொடுத்து பாராட்டுப்பெற்றார்.

ஹரிகிருஷ்ணன்ஸ் தமிழிலும் வெளியாகி சுமாராக ஓடி முடித்தது. ஜூகி சாவ்லாவுக்கு தமிழிலும் நேரடியாக நடிக்க ஆசை.

கவர்ச்சியைப் பொழியவும் தயாராக உள்ளார். ஆனால் சம்பளம் மட்டும் எக்கச்சக்கம். ஒரு படத்தில் நடிக்க இந்திய மதிப்பில் 30 இலட்சம் கேட்கிறார். முப்பது லட்சத்துக்குள் மூன்று நான்கு மும்பாய் புது முகங்களை கொண்டு வந்து நடிக்க வைத்துவிடலாம்.

## ரசிகர் தினம்

ஞாயிற்றுக்கிழமைகளில் விஜய் படப்பிடிப்புக்கு செல்வதில்லை. தனது அலுவலகத்தில் இருந்து ரசிகப் பெருமக்களை (ரசிகைகள் உட்பட) சந்திக்கிறார். பஸ் வண்டிகளில் ரசிகர்கள் வந்து குவிகிறார்கள்.

இதனால் குறிப்பிட்ட தெருப் போக்குவரத்து நாள் முழுக்க பாதிக்கப்படுகிறதாம். ரசிகர்களுக்காக வாரத்தில் ஒருநாள் ஒதுக்குவது பாராட்டத்தக்க விஷயம்தானே.

## வில்லன் ராஜ்

'ஒருவன்' படத்தின் வருகையை சரத்குமார் பெரிதும் நம்பியிருக்கிறார். சமீபகாலப் படங்கள் தோல்வி கண்டிருப்பதால் 'ஒருவன்'தான் கைதூக்கி விடவேண்டும்.

'ஒருவன்' படத்தின் வெற்றிக்கு பிரார்த்திக்கும் இன்னொருவர் ஆனந்தராஜ். 'தெய்வ மகன்' சிவாஜி போல ஒரு பக்க முகம் கருகிய ஒப்பனையோடு வில்லனாக நடித்திருக்கிறார். அதனால் படம் வெளியானதும் தன் வில்லன் நடிப்புக்கு வரவேற்பு அதிகரிக்கும் என்று எதிர்பார்த்திருக்கிறார்.

## நடிக்க ஆசை நாயகியில் பிரியம்

கவியரசு கண்ணதாசனின் கதை, வசனத்தில் எஸ்.எஸ்.ராஜேந்திரன் கதாநாயகனாக நடித்த படம் 'சிவகங்கை சீமையிலே'. அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்த மருது பாண்டியரின் கதை.

இப்போது அதே பெயரில் காதல் கதை ஒன்றை படமாக்குகிறார்கள். இதில் விமல்ராஜ் என்பவர் கதாநாயகனாக நடிக்கிறார்.

பணவசதி படைத்த விமல்ராஜுக்கு சினிமாவில் நடிக்க ஆசை. ஐஸ்வர்யாமீதும் ஒரு பிடிப்பு. அதனால் ஐஸ்வர்யாவையே தனது ஜோடியாகப் போட்டு, தானே கதாநாயகனாக நடிக்கிறார்.

எத்தனையோ இளம் நடிகைகள் இருந்தும் ஐஸ்வர்யாவை நாயகியாக போட்டுள்ளார் என்றால், எத்தனை பிரியம் இருக்க வேண்டும்? படம் ஓடுகிறதோ இல்லையோ, விமல்ராஜின் ஆசைகள் பூர்த்தியாகும்.

'சிவகங்கை சீமையிலே' படத்தை இயக்குபவர் உதய். கே.ஆர்.விஜயா, ரம்யாதேவி, அஜய் ரத்னம், கவிதா உட்பட பலர் நடிக்கின்றனர்.

www.padippakam.com

## இயக்கும் சுந்தர்

ல்யாணம் தோல்வியில் முடிந்த பின்னர், குஷ்புவுடன் ட்டவர் ஜெயராம்.

சனம்', பத்தினி, 'முறைமாமன்', 'கோலங்கள்' ஆகிய ல் பொருத்தமான ஜோடியாக பெயர் பெற்றனர். இதற்கிடையே 'முறைமாமன்' படத்தை இயக்கிய ர்.சி. குஷ்புவை தீவிரமாக காதலித்தார். அதனால் ராம் மெல்ல ஒதுங்கினார்.

சுந்தர்.சி. குஷ்பு இருவரும் காதலர்களான பின்னர் ர்.சி. இயக்கத்தில் நடிப்பதில்லை என்று குஷ்பு வு செய்திருந்தார்.

அந்த முடிவை 'சுயம்வரம்' படம் மாற்றியது. உலக னைப்படமான சுயம்வரத்தில் சத்யராஜ்-குஷ்பு நடித்த சிகளை சுந்தர்.சி.தான் இயக்கினார்.

அதன்பின்னர் தற்போது குஷ்புவை வைத்து 'பார்வை' றொரு படத்தை இயக்க முடிவு செய்துள்ளார் ர். இப்படத்தில் கதாநாயகன் யார் தெரியுமா? புவின் முன்னாள் காதலர் ஜெயராம். மற்றும் மணி ணன், ரகுவரன், ஸ்ரீவித்யா ஆகியோரும் நடிக்கின்ற இசை: எஸ்.ஏ.ராஜ்குமார். பாடல்கள்: பழனிபாரதி.

## காதோடு சொல்லுகிறோம்

சூப்பர் நட்சத்திரத்துடன் நடித்த பின்னர் ரம்யமான கக்கு மவுசு மளமளவென்று ஏறி விட்டதாம். றெழுத்தால் சுருக்கமாக அழைக்கப்படும் தமிழக பிரமுகர் ஒருவர் அவரது நடிப்பை பாராட்டி னாராம். உருகுவது ஏன் என்று தெரியாதோ க்கு?

ரம்ப' நடிகையின் வீட்டில் சிறிதும், பெரிதுமாக போத்தல்கள் அடுக்கிவைத்துள்ளார். இது எனக் . விருந்தினர்களுக்கு மட்டும் என்கிறாராம். லாமா?

மா' எழுத்தை தன் பெயரில் முதல் எழுத்தாக ண்டு சமீபத்தில் அறிமுகமான நடிகை அவர். ரிக்காவுக்கு ஓய்வு எடுக்கப் போகும் கதாநாயகன் டன் அவரையும் அழைத்தாராம். படப்பிடிப்புக்கள் பதைக்கூறி நாசூக்காக தவிர்த்துவிட்டாராம் நடிகை.

ரீன் நடிகைக்கு திருமண ஆசை வந்துவிட்டதாம். ல் தாய்க்குலம் தடை போட்டுள்ளாராம். உழைக்கும் ப்பு உள்ளபோது குடித்தன ஆசை குறுக்கிடலாமா? கொதித்துப்போனாராம்.

## ஹேராம்' பட்டாளம்

'ஹேராம்' படத்தை இயக்கிவரும் கமல் நட்சத்திரப் பட்டாளத்தை நடிக்க வைத்து வருகிறார். அப்பாஸ், ரகுமான், ஜோதிகா ஆகியோர் புதிதாகச் கப்பட்டுள்ளனராம். மேலும் நட்சத்திரங்களை கோர்க்க ாராம்.

ருதநாயகம்' போலவே 'ஹேராம்' படமும் நீண்டு றது. நிறைய சரித்திர ஆதாரங்கள் சேகரித்து பட ப்படுகிறது.



பிரசாந்த்-சாந்தினி
படம்: ஆசையில் ஓர் கடிதம்




ரம்பா
படம்: சேவகன்

## மினி சினி

♠ 'கண்ணெதிரே தோன்றினாள்' ரவிச்சந்திரன் இயக்கும்' சந்தித்த வேளை' படத்தில் கார்த்திக்-இஷாவுடன் சிம்ரானும் நடிப்பதாக இருந்தது. இப்போது சிம்ரானுக்குப் பதிலாக கௌசல்யா நடிக்கிறார்.

♠ 'ஹேராம்' முடிவடைந்ததும் கமல் அடுத்து, கே.எஸ்.ரவிக்குமார் இயக்கித் தயாரிக்கும் படமொன்றில் நடிக்கவுள்ளார். கே.எஸ்.ரவிக்குமார் சொந்தமாகத் தயாரிக்கும் முதல் படம் இது.

♠ வில்லத்தனமான நாயகனாக விஜய்யை வைத்து 'ப்ரியமுடன்' படத்தை இயக்கிய வின் சென்ட் செல்வா அடுத்து முரளி வில்லத்தனமான நாயகனாக நடிக்கும் படத்தை இயக்கவுள்ளார்.

♠ 'பிரவீன் காந்த் இயக்கத்தில் பிரசாந்த்-சிம்ரான்-ஐஸ்வர்யாராய் நடிக்கும் 'ஜோடி' படத்தில் கௌரவ வேடமொன்றில் இஷாவும் நடிக்கிறார்.

♠ இந்தியில் முன்னணியில் இருக்கும் ஷாருக்கான் முதன் முறையாக சொந்தப்படம் ஒன்றைத் தயாரிக்கப் போகிறார். இதில் ஷாருக்கானுடன் ஜூஹி சாவ்லா நடிக்கிறார்.

♠ தனது மகன் அம்சவிர்தனை வைத்து 'மானசீகக் காதல்' படத்தை ராமன் என்று தன் நிஜப்பெயரிலேயே இயக்கி வருகிறார் நடிகர் ரவிச்சந்திரன்.

♠ பாரதிராஜா இயக்கத்தில் அவரது மகன் மனோஜ் கதாநாயகனாக நடிக்கும் 'தாஜ்மஹால்' படத்தில் கள்ளச்சாராயம் விற்கும் பிடாரி என்ற வித்தியாசமான வேடத்தில் நடிக்கிறார் ராதிகா.

♠ 'வாலி' படத்தை இயக்கிய சூர்யா அடுத்து ஏ.எம்.ரத்னம் தயாரிப்பில் அஜித்குமார் நடிக்கும் படத்தை இயக்குவதாக இருந்தது. தற்போது இப்படத்தில் அஜித்திற்குப் பதிலாக விஜய் நடிக்கவுள்ளார்.

♠ 'ஜீன்ஸ்' படத்தில் ஒரு பாடல் காட்சியில் 7 உலக அதிசயங்களைக் காட்டியதுபோல், முரளி-சிம்ரான் நடிக்கும் 'கனவே கலையாதே' படத்தில் இந்தியாவின் 7 அதிசயங்களைக் காட்டவுள்ளார்கள்.

♠ மணிரத்னம் இயக்கும் 'அலைபாயுதே' படத்தில் சின்னத்திரை நட்சத்திரங்களான விஜய் ஆதிராஜ், சொர்ணமால்யா, 'தில்லானா தில்லானா' மேதா ஆகியோரும் நடிக்கிறார்கள்.



அம்சவிர்தன்-சுஷ்பா
படம்: மானசீகக் காதல்

## எங்கிருந்து படையப்பா?

'படையப்பா' படத்தின் மூலம் ஒரு கன்னடப்படம். 'ஜீவன சைத்ரம்' என்பது அப்படத்தின் பெயர். அந்தப் படத்தின் நாயகன் ராஜ்குமார். இவர் கன்னட நாயகன். இப்படம் கன்னடத்தில் இருந்து தமிழுக்கு மொழிமாற்றப்படவில்லை. மிகப் பழைய படமான இதனைத்தான் 'படையப்பா'வாக மறுபிறவி எடுக்க வைத்தனர். நீலாம்பரி பாத்திரம் மட்டும் ரஜினி, கே.எஸ்.ரவிக்குமார் ஆகியோரின் கற்பனை. காட்சியமைப்புகளும் கே.எஸ்.ரவிக்குமாரின் கற்பனைதான். இது எப்படி இருப்பினும், 'படையப்பா' தெலுங்கிலும் வசூல் கொட்டுகிறது. இதுவரை தமிழ் நாட்டைவிட இரண்டு மடங்கு வசூலாகியுள்ளது.

www.padippakam.com

## செய்ய முடியாது!

சில்லறை வானில்
சிறகடிக்கத் தெரியாத நீ
என் நம்பிக்கை நிலவை
ஏன் நாசமாக்கினாய்?
*
கடற்கரை இதத்தின்
வாசம் தெரியாத நீ
காதலில் இதயத்தை
ஏன்
பொசுக்கிப் போனாய்?
*
கவிதை வரிகளின்
கருத்துப் புரியாத நீ
காதல் வார்த்தைகளால்
ஏன்
கசக்கிப் பிழிந்தாய்?
*
இதயத்தின் ஓலம்
துன்பமாய் அறியாத நீ
என்
புனித அன்பை
ஏன்
புதைத்து விட்டாய்?
*
நீ போ.....!
உன்னால்
ஒன்றைத் தவிர
வேறெதையும்
உருப்படியாகச்
செய்ய முடியாது!
அது
இதயத்தின் கற்பழிப்பு!
*

உதயா பசுபதி-
மல்லாவி.

## விடலாமா?

என்ன தம்பி இங்கே வா,
ஏற வில்லையா செவியில்?
சொன்னேனே சமாதானம்,
சொல்லேன் அதைத்திரும்ப!
நாலாண்டு போனாலும்
நாமதனை விடலாமா?
ஏலாதா நாவுண்டே,
எலும்பேது இங்கதற்கு?
ஒரு பொய்யைக் "கோயபல்ச"
ஒன்பதாய்ச் சொல்லியன்றோ
வருமெய்யா யாக்கினவன்!
வாய் வீரம் சும்மாவா?
இப்படியே நாம் சொல்ல
எம் காலம் ஓடிவிடும்!
அப்படித்தான் பின்னோரும்,
ஆம் வெள்ளைப் புறா வாழ்க!

'அகதிக் கவிராயர்'
திரு.சோ.இராசேந்திரம்,
திருமலை.

## இது எங்கள் தேசம்

அந்திசாய இருள்சூழும்
வெளியே மட்டுமல்ல-உள்ளே
எம் மனங்களிலும் பய இருள்!
***
அமைதியைக் கிழிக்கும்
வேட்டோசைகள் வாழ்க்கையின்
நம்பிக்கைகளுக்கும்
வேட்டு வைக்கும்!
***
வெறிச்சென்ற மயானமாகிப்போனது
பூமி மட்டுமல்ல-எம்
இதயங்களும்தான்!
***
இப்போதெல்லம் ஊரில்
தனியாக மயானமில்லை
ஊரே மயானம்தான்!
***
அமவாசை இருட்டில்
கிழக்கு எங்கே?
விடியல் இன்னும் வெகுதூரமோ?

தமிழ்மகள்-மன்னார்.

## தேன் கிண்ணம்

## இலங்கைத் தமிழர்


ஓடக் காண்பது அகதிகள்கூட்டம்
ஓடுங்கக் காண்பது படையினர் வரவால்
வாடக் காண்பது பிஞ்சு மழலைகள்
வருந்தக் காண்பது மக்களை இழந்தோர்
போடக் காண்பது புதைகுழிப்பிணங்கள்
புலம்பக் காண்பது விதவையர் கூட்டம்
தேடக் காண்பது அயல்நாட்டுரிமை
இலங்கைத் தமிழர் நிலையிதுதானே?

திருமதி லீலாவதி சிவலிங்கம்-
திருமலை.

## அவள்

அவள்,
என் நினைவுக்
கூட்டுக்குள்
வழுக்கி விழுந்த
பால் நிலா!
••
அமாவாசையிலும்
பௌர்ணமியாய்
விகசிக்கும்
முழுநிலா!
••
ஆகாய பவனியில்
அவள் செல்வது
என்
நெஞ்சத்து
நினைவுகளில்!
••
அவளுக்காக
நான்
வானமாக
மாறிவிட்டேன்
நிரந்தரமாய்!
••
'மாரி' மட்டும்
இன்று சொந்தமானது
வசந்த நிலா
அண்ட வெளியில்
சிக்கித் தொலைந்தது!

ப.ராதா-வவுனியா



## யார் இவர்?

இந்த எழுபத்தாறு வயது இளைஞர் யார் என்று தெரிகிறதா? கற்கண்டு தமிழுக்கு சொந்தக்காரர். களையாத உழைப்புக்கும் சொந்தக்காரர்.
ஊகிப்பது கடினமில்லையல்லவா?
விடை உதவிக்கு விரைக: பக்கம் 18.

## இந்தவாரம் உங்கள் பலன்

**27.06.99 முதல் 03.07.99வரை**

ஜோதிடர் 'கார்னா'

**மேடம்:**
கிரகப் பரப்பு ஜாதகருக்கு சாதகமாகக் காணப்படுவதால் செய் கருமங்கள் காரிய சித்தியாகும். பொருளாதார வசதி சிறக்கும். அச்சுவினி, கார்த்திகை நட்சத்திரம் கொண்டவர்களுக்கு பலரின் உதவிகள் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை; எண்: 5.
அதிஷ்ட திகதிகள் : 28,30.

**இடபம்:**
12ம் இடம் கிரக மறைவுஸ்தானம் பெற்றாலும் இவ்வாரம் அனுகூலமாக உள்ளதால் இவ்வாரம் சிறப்பான சிலமாற்றங்கள் நடைபெறும். தொழில், திருமண விடயங்கள் கைகூடும். ரோகினி, மிருகச்சீட நட்சத்திரக்காரருக்கு புதிய முயற்சிகளுக்கு இடமுண்டு.
அதிஷ்ட நாட்கள் : புதன், திங்கள்.
அதிஷ்ட நிறம் : மஞ்சள், எண்: 3.
அதிஷ்ட திகதிகள் : 30, 3.

**மிதுனம்:**
கிரக பலத்தில் 11ம் இடத்தில் சஞ்சாரம் செய்வதும் ஜென்ம வீட்டில் புதன் உள்ளதும் தடைகள் ஏற்பட்டிருப்பினும்கூட நன்மைகள் கிடைக்கும். பயணங்களைக் கொடுக்கும், புநர்பூச நட்சத்திரக்காரருக்கு முன்னேற்றங்களைக் கொடுக்கும்.
அதிஷ்ட நாட்கள் : சனி, வியாழன்.
அதிஷ்ட நிறம் : நீலம்; எண்: 6.
அதிஷ்ட திகதிகள்: 3, 27.

**கடகம்:**
கிரபார்வைகள் வேறுபடுவதாலும் அமைப்பொத்த பார்வைகள் நன்றாக உள்ளன. நன்மை தீமைகள் கலந்த பலன்கள் கிட்டும். தூரதேச தொடர்புகள் ஏறபடும். திருமணமாகாதோருக்கு நிச்சயதார்த்தம் ஏற்படும். புநர்பூச, திருவாதிரை நட்சத்திரக்காரர்களுக்கு சிறப்பு அமையும். அதிஷ்டத்தையும் தரும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மண்ணிறம்; எண்: 3.
அதிஷ்ட திகதிகள் : 27, 28.

**சிம்மம்:**
பாக்கியஸ்தான வியாழன் சனி கிரக நிலைகள் நன்றாக உள்ளதும் கிரக அனுகூலங்கள் உள்ளதும் எடுத்த விடயங்கள் சித்தியடையும். எதிர்பாராத நன்மைகள் வந்து சேரும். மக, பூர நட்சத்திரக்காரருக்கு மனதில் மகிழ்ச்சி ஏற்படும். பணவருவாய் அமையும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இளம் பச்சை; எண்: 1.
அதிஷ்ட திகதிகள் : 28,1.

**கன்னி:**
அட்டம, பூர்வ புண்ணியஸ்தானங்கள் கிரக பார்வைகள் உள்ளதால் பல்வேறுபட்ட நன்மை தீமைகள் ஏற்படலாம். கடும் முயற்சிகள் செய்தாலும் பயன் கிடைப்பது கடினம். உடலில் நோய்துன்பங்கள் ஏற்படும். உத்தர நட்சத்திரப் பெண்களுக்கு எச்சரிக்கை தேவை.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 6.
அதிஷ்ட திகதிகள் : 30, 1.

**துலாம்:**
7ம் இடத்தில் கிரக சுபபார்வை பெறுவதால் மனதில் உறுதி பிறக்கும் எடுத்த விடயங்கள் அனுகூலமாகும். பண வசதிகள் ஏற்படும். குடும்ப சகோதரர்களின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெறும். சுவாதி, விசாக நட்சத்திரக்காரர்கள் நன்மை பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : றோஸ் வர்ணம்; எண்: 8.
அதிஷ்ட திகதிகள் : 28,3.

**விருட்சிகம்:**
கிரகச் சேர்வு ஸ்தானம் நன்றாக உள்ளதால் பலரின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும். பண வசதிகள் ஏற்படும். உடல் அசதியாக இருக்கும். வெளிவட்டாரத் தொடர்பு ஏற்படும். அனுஷ நட்சத்திரப் பெண்களுக்கு பண உதவிகள் வந்துசேரும். யோசனைகளும் அதிகமாகும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், புதன்.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள், எண்: 2.
அதிஷ்ட திகதிகள் : 29, 2.

**தனுசு:**
பிரயாண முயற்சிகளுக்கு அடித் தளம் இடப்படும். பண உதவிகள் கிடைக்கும். மிதுன இராசிக்காரரின் உதவிகள் ஒத்துழைப்புக்கள் அமையப் பெறும். கல்வி, தொழில், வசதிகள் கிடைக்கும். வார நடுப்பகுதியில் பல்வேறுபட்ட முன்னேற்றங்கள் அமையும்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன்; சனி.
அதிஷ்ட நிறம் : இளம் சிவப்பு, எண்: 5.
அதிஷ்ட திகதிகள் : 30,3.

**மகரம்:**
சனி வீட்டில் உள்ள இராசியினருக்கு இவ்வாரம் சோதனையான வாரமாகும். சுபசெய்தியும் கிடைக்கும். மனதில் பயமும் ஏற்படும். உடலில் நோய், துன்பம் வந்துபோகும். திருவோண நட்சத்திரப் பெண்களுக்கு திருமணம் நிச்சயப்படும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை- எண்: 7.
அதிஷ்ட திகதிகள் : 29,3.

**கும்பம்:**
3 இல் வியாழன் உள்ளதாலும் கிரகஸ்தான பலம் குன்றி உள்ளதாலும் கருமங்கள் யாவும் தடைப்படும். முயற்சிகள் யாவும் முடக்கமடையும். நோய் துன்பங்கள் காணப்படும். சதய, புரட்டாதி நட்சத்திரம் உள்ளவர்கள் கவனமாக நடந்து கொள்ள வேண்டிய வாரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : சாம்பல்; எண்: 9.
அதிஷ்ட திகதிகள் : 27, 3.

**மீனம்:**
2 இல் வியாழன் உள்ளதும் 7 1/2 சனி பாதிப்பு குறைவதும் கல்வியில் முன்னேற்றம் காட்டும். தொழில் இருப்பிட வசதிகள் பெருகும். குடும்ப சிறப்பு மகிழ்ச்சி பொங்கும். புதிய முயற்சிகள் நல்ல பலனைத் தரும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், சனி.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண்: 3.
அதிஷ்ட திகதிகள் : 1,3.

## நில்-கவனி-முன்னேறு

'ஒருவனுடைய வாயை அடைத்து விட்டதினால் அவனை வென்று விட்டதாக ஆகிவிடாது' என்று மார்லி பிரபு கூறியிருக்கிறார்.

சிலர் கோபமாக கத்திப் பேசினால் தான் தன்னிடம் அதிகாரம் இருக்கிறது என்று மற்றவர்கள் ஒத்துக்கொள்ளுவார்கள் என்று தவறாக முடிவு கட்டி அனைத்து நேரமும் கோபமாகவும் உணர்ச்சி வசப்பட்டும் பலமாகக் கத்திப் பேசி வருவதை பழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.

மற்றவர்களைவிட தனக்குத்தான் அனைத்து விஷயங்களும் தெரியும் என்று காட்டிக் கொள்ளுவதற்காக தனக்குத் தெரியாத விஷயங்களையும் பற்றிப் பேசி தன் அறிவின்மைக்கு விளம்பரம் கொடுத்து முடிவில் நிறைய அவமானத்தையும் வேதனையையும் பலர் கண்டிருக்கிறார்கள்

கொடூரமாக நடந்து கொள்ளுவது, வெறுத்து அலட்சியப்படுத்துவது போன்ற குணங்கள் தனக்கு மதிப்பையும் மரியாதையையும் வாங்கித் தருவதாக பலர் தவறாக நினைத்து வருகிறார்கள். இப்படிப்பட்ட குணங்களைக் கொண்டவர்கள் தாங்களும் சந்தோஷமாக வாழ்ந்து வருவதில்லை.



மற்றவர்களையும் இவர்கள் சந்தோஷமாக வாழ அனுமதிப்பதில்லை.

சாந்தம், தயை, பொறுமை, அன்பு, பாசம், தியாகம் போன்ற குணங்களில்தான் நல்ல விளைவுகளை உருவாக்கும் மாபெரும் சக்திகள் ஒளிந்து கொண்டிருக்கின்றன.

மற்றவர்களுடைய துன்பங்களைத் துடைத்து அவர்களுக்கு சந்தோஷம் தரும்படி உங்களிடம் பேச்சு அமையும் படி பார்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் பேச்சில் அன்பு கலந்திருக்கும் படி பார்த்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லி முடித்தவுடன் தொடர்ந்து 'வளவள'வென்று பேசிக் கொண்டிருக்காமல் பேச்சை முடித்துக் கொள்ளுங்கள்.

மற்றவர்களுக்கு சந்தோஷம் தரும் படியாகவோ அல்லது மன அமைதியைத் தரும் படியாகவோ உங்களிடம் பேசுவதற்கு எந்த ஒரு விஷயமும் இல்லாவிட்டால் தொடர்ந்து பேசி மற்றவர்களுடைய நேரத்தை வீணாக்காதீர்கள்.

அனைவரும் மற்றவர்களுடைய துயரங்களைப் போக்கும்படி பேசி வந்தால், நல்ல காரியங்களைச் செய்யும் படி ஊக்குவித்து வந்தால், சந்தோஷமான சூழ்நிலை உருவாவதை நாம் காண முடியும்.

## முரசின் 300 பரிசுமழையில் வெற்றியீட்டியவர்கள் இவர்கள்தான்!

251. எஸ்.செல்வமலர், இல. 21,பாத்திமா வீதி, கந்தானை.
252. கவிதா லோகநாதன், இல. 363, நுவரெலியா வீதி, புசல்லாவ.
253. வி.கௌரி, பிளக்வூட் இல.2.த.வி, நிக்கபொத.
254. வே.உதயகுமார், டவுன்சைட் தோட்டம், வெளிமடை.
255. ஜே.சுந்தரவாணன், சென்லெனாட்ஸ் எஸ்டேட், ஆள்கரனோயா.
256. கே.ஜே.புஸ்பராஜ், 66, எஞ்சல் இல்லம், குடாகம, ஹட்டன்.
257. எ.ஃப்.என்.ஜவ்பர், இல. 145, கல்பொக்கை வீதி, வெலிகாமம்.
258. ஏ.ஜி.றினோஸா பேகம், எம். 2/2, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10.
259. பானு பார்த்திபன், இல. 14ஏ, 2வது மாவத்தை, அருப்பொல, கண்டி.
260. கே.எம்.ராபியா, இல. 9/10, மஹவல வீதி, இரத்தினபுரி.
261. எம்.எ.ஃப்.பாத்திமா பர்வீனா, இலங்கை மின்சார சபை விடுதி, மூதூர்.
262. க.துஸ்யந்தி, இல. 29/5, சிறி சித்தார்த்த வீதி, கிருலப்பனை.
263. செ.பிரேமவதனி, இல.72ஏ, ஸ்ரீ மஹிந்த தர்ம மாவத்தை, தெமட்டகொடை.
264. தி.விஜயகரன், அராலி வீதி, சங்கானை, யாழ்ப்பாணம்.
265. றபீக் றம்சிதா, அல்லை நகர்-05, தோப்பூர்.
266. கே.சகாயமேரி, இல. 6,2ம் ஒழுங்கை, கல்லடி, மட்டக்களப்பு.
267. என்.என்.பேகம், இல.29/3,ஹெகித ஒழுங்கை,வத்தளை.
268. ச.மகேஸ்வரி, வைத்தியசாலை, செட்டிகுளம், வவுனியா.
269. ஜே.மதுமலர், இல. 93/3, குமாரகம இடம், தலவாக்கலை.
270. ஜே.அஞ்சலீனா, இல.67,சி.வி.யு வீதி, திருகோணமலை.
271. இரா.சிவகௌரி, மல்லிகை தீவு, மல்வத்தை. கி.மா.
272. வெ.செல்வபவன், 'சகுந்தலம்' மைலனி, சுன்னாகம்.
273. இ.கிருபாகரன், மீனாகொல்ல தோட்டம், கலமுதுன குரூப், தொளஸ்பாகை.
274. சுமதினி சாமித்தம்பி, இல. 203, புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை.
275. ச.கணேசமூர்த்தி, கோயில் போரதீவு தெற்கு, பெரியபோரதீவு. கி.மா.
276. றொசானி யோகநாதன், இல.95/3,விஸ்றவைக் வீதி,கொழும்பு-15.
277. கே.மகாதேவன், 23, பிரதான வீதி, ஆண்டிமுனை, உடப்பு, சிலாபம்.
278. பி.நவஜோதி, 271, 3ம் கட்டை, பசறை வீதி பதுளை.
279. இ.ஜமீலா, 19, 2ம் குறுக்குத்தெரு, புத்தளம்.
280. ஜே.எம்.அமீர், 13, வீடமைப்புத் திட்டம், மானம்பொடை, உக்குவலை.
281. ஆர்.அசோக்குமார், 19/144, பாம் வீதி, மட்டக்குளி.
282. எஸ்.ஐஸ்வர்யா தேவி, 18/ஏ, வலகஹவெல, அப்புத்தளை.
283. எ.விஜயசுந்தரம், பிரதேச செயலகம், சம்மாதுறை.
284. ப.சரவணமுத்து, 6, ஜெயசுந்தர மாவத்தை, குருநாகல்.
285. து.விஜயகௌரி, 3ம் யுனிட் பாரதி நகர்,யோகபுரம்,மல்லாவி.
286. சீ.பாலச்சந்திரன், கோபாலபுரம், நிலாவெளி,திருகோணமலை.
287. நா.சிவராமன், நகரசபை விடுதி, கண்டிவீதி, வவுனியா.
288. ஏ.சித்தி சபீலா, எம்.ஆர்.கேம்ப், காரைதீவு, புத்தளம்.
289. ரி.சாமிலா, அக்கலை தோட்டம், அபரகல பிரிவு. பொரகஸ்.
290. ச.ராஜேஸ்வரி, 131, ஆலடி, பாற்குழி வீதி, தோணிக்கல், வவுனியா.
291. கு.விமலேஸ்வரன், 63 சி, 1ம் ஒழுங்கை, உக்கிலாங்குளம், வவுனியா.
292. செ.சுகந்தினி, பி.எஸ்.சி ஒழுங்கை, மகா இறம்பைக்குளம், வவுனியா.
293. எஸ்.றஸானி, 36/3, எட்நியுஸ் வீதி, நீர்கொழும்பு.
294. ஜே.பி.செல்லர், 111, பலனசேன, கொச்சிக்கடை.
295 எஸ்.சந்திரதாசன், பள்ளிமுனை, மன்னார்.
296. அஸீஸா காதர், 53, அரிசன் ஜோன்ஸ் வீதி, மாத்தளை.
297. மா.பொன்னுசங்கர், இல. 2,தமிழ் வித்தியாலயம்,நாவலப்பிட்டி.
298. எம்.பாத்திமா, 619/46, பிறிமன் மாவத்தை, அநுராதபுரம்.
299. ஆர்.சிங்காரம், 42,பழைய சோனக தெரு,கொழும்பு-12.
300. எ.எம்.சித்தீக், 132,எஸ்.எல்.எஸ்.சி.வீதி,இறக்காமம்.



படிப்பகம்

www.padippakam.com

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## சேலைத் தெரிவு

## வர்ணமும் உள்ளமும்



பெண்கள் பெரும்பாலும் தேர்வு செய்யும் ஆடை சிவப்புக் கலராகத்தான் இருக்கிறது என்கிறது உலகளாவிய புள்ளி விவரம் ஒன்று.

இத்தகைய சிவப்பு வர்ணத்தை விரும்பும் பெண்கள் தன்னம்பிக்கை, உத்வேகம், சிறந்த முடிவு ஆகிய குணங்களைக் கொண்டவர்களாகத் திகழ்கிறார்களாம். மஞ்சள், செம்மஞ்சள் வர்ணத்தை விரும்புகிறவர்கள் அன்பு, அழகு, என்பவற்றுடன் மகிழ்ச்சிகரமாகத் திகழ்கிறார்கள் எனவும், பச்சை, நீலத்தைத் தேர்வு செய்பவர்கள் தீவிர ஆலோசகராகவும் காணப்படுகிறார்கள் என்று அதே ஆய்வு கூறுகிறது.

* பொதுவாக கறுப்பாய் இருக்கும் பெண்கள் பளிச் நிற உடைகளைத் தேர்வு செய்யாமல், வெள்ளையும் மஞ்சளும் கலந்த மற்றும் இளம் வர்ண சேலைகளைத் தேர்வு செய்வது நல்லது. மேட்சிங் ஆடைகள் இவர்களுக்கு கூடுதல் அழகு சேர்க்கும்.
* நன்கு சிவந்த நிறமுடைய பெண்கள் சிவப்பு, பச்சை, கறுப்பு, நீலம் என எந்தச் சேலையாக இருந்தாலும் அழகைத் தரும். அகன்ற கரை வைத்த சேலைகள் மென்மேலும் பொலிவு தரும்.
* மாநிறமாக இருப்பவர்கள் சேலையின் வர்ணத்தை விட, டிசைன்களுக்கு அதிக முக்கியத்துவம் தந்து தேர்வு செய்ய வேண்டும்.
* அலுவலகங்களில் வேலை பார்க்கும் பெண்கள் இளம் வர்ண சேலையுடன் அலுவலகம் செல்வது அழகு தரும். மாலை விருந்தில் கலந்து கொள்ளும் பெண்கள் 'பளிச்' நிற சேலைகள் அணிவது அழகு சேர்க்கும்.
* இத்தகைய சேலைகளைத் தேர்வு செய்யும் போது இரவில் கடைக்குச் செல்லாமல் பகலில் சென்று வாங்குவதே நல்லது. வாங்கிய சேலையை பாதுகாப்பதும் முக்கியம். அதைவிட முக்கியம் அதன் மடிப்பு கலையாமல் அழகுற அணிவது.

## நடையா இது நடையா



இந்த நடைப்பயிற்சி இருக்கிறதே! இது இயற்கையாகவே உடலுக்கு மிக மிகத் தேவையான ஓர் உடற்பயிற்சி.

இந்த வகை நடைப் பயிற்சியானது இரத்த ஓட்டத்தை அதிகரித்து, உடலைச் சுறுசுறுப்படையச் செய்கின்றது. மனிதனின் தேவையற்ற உடல் எடையைக் குறைக்கின்றது.

அங்கங்களை அழகாக வடிவமைப்புக் குக்கொண்டு வருகிறது. இதயம், எலும்புகள் பலம் பெற வழி வகுக்கின்றது.

இருதய நோய் உள்ளவர்களும், இடுப்பு, முதுகுவலி உள்ளவர்களும் தினந்தோறும் நடைப்பயிற்சி செய்வது மிக மிக நல்லது.

நடைபயிலும்போது கைகள் அசைவதால் அது நெஞ்சுப் பகுதிக்கு அழகு சேர்க்கின்றது. மனப் பாரம் குறைகின்றது.

கோபம், சோகம் போன்ற உணர்ச்சிகள் மட்டுப்படுகின்றன. உடலில் உள்ள கொழுப்பும் குறைகின்றது.

நீரிழிவு நோயாளிகள் சாப்பிட்ட பிறகு நடந்தால் ஓரளவு அவர்களின் உடலில் உள்ள சீனியின் அளவு குறையும். காரணம் இத்தகைய நோயுள்ளவர்கள் சாப்பிட்டதும் அவர்களது உடலில் சீனியின் அளவு கூடியிருக்கும்.

பல வயதான பிரபலங்கள் கூட தினமும் காலையில் நடைப் பயிற்சி செய்வதை வாடிக்கையாக வைத்திருக்கிறார்கள்.

## வாங்க! செருப்பு வாங்கலாம்



ஒரு கடையில் செருப்பு வாங்கும்போது... அதைப் போட்டுக் கொண்டு 10 அடியாவது நடந்து பார்த்து வாங்க வேண்டும், என்பதுடன் இந்தச் செய்தி தொடங்குகின்றது.

சல்வார் கமீஸ் அணியும் பெண்களுக்கு பெல்ட் அளவிலான வார்கள் கொண்ட உயர்ந்த குதிச் செருப்புகள் அழகாக இருக்கும்.

பாவாடை சட்டை அணியும் பெண் களுக்கு முன்பக்கம் மூடிய 'கட் ஷூ' அழகாக இருக்கும்.

சேலை அணியும் பெண்களுக்கு 'ஷூ'க்களைத் தவிர எந்தச் செருப்பும் அழகு தான்.

ஜீன்ஸ், ரீ-சேர்ட் அணியும் பெண்களுக்கு காலின் பின் பாகமும், முன் பக்கத்தில் நடுப்பாகமும் மறைத்த செருப்பே அழகு. அதாவது விரல்கள் வெளியே தெரியும் செருப்பு.

கர்ப்பிணிப் பெண்கள் ஒரு அங்குலத்திற்கு மிகாத எந்த உயர்ந்த குதிச்செருப்பையும் அணியலாம்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்



மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** FY

பெயர்:.............................

முகவரி:.............................

.............................

தொழில்:.............................

கையொப்பம்:.............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 03-07-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## கண்ணீரில் கரைந்த இரவுகள்

**93** புவனா

ரிட்ஸ் ஹொட்டலில் இருந்து டயானாவும் டோடியும் பென்ஸ்-S280 ரக நவீன காரில் புறப்பட ஏற்பாடு செய்யப்பட்டது.

ரிட்ஸ் ஹொட்டலுக்கு வந்து தங்கும் பிரமுகர்களது பாவனைக்காக நவீனரக கார்கள் பல இருந்தன. அதில் ஒன்றுதான் பென்ஸ்-S280.

இந்தக் காருக்கும் சுவையான ஒரு வரலாறு இருக்கிறது.

1997ம் ஆண்டு ஜனவரியில் ரிட்ஸ் ஹொட்டலின் வாயிலில் இந்த கார் நிறுத்தப்பட்டிருந்தது.

திடீரென்று காரைக்காணவில்லை. மர்மான முறையில் மறைந்துவிட்டது.

அராபியர்கள் போன்று உடை தரித்திருந்த மூன்றுபேர் துப்பாக்கிகள் சகிதம் காருக்குள் ஏறினார்கள். சாரதியை இழுத்து வெளியே எறிந்தார்கள். வண்டியைக் கிளப்பிக் கொண்டு பறந்துவிட்டனர்.

இனிமேல் அந்தக் கார் திரும்பக் கிடைக்காது என்றே ரிட்ஸ் ஹொட்டல் நிர்வாகிகள் கருதினார்கள். பொலிசில் புகார் செய்தும் மூன்று வாரங்களாக எத்தகைய துப்பும் கிடைக்கவில்லை.

ஆனால் மூன்று வாரங்களின் பின்னர் மகிழ்ச்சியான தகவல் கிடைத்தது. மொன்றியல் என்ற இடத்தில் கார் அநாதரவாகக் கிடந்தது.

கிடந்தது என்றுதான் சொல்ல வேண்டும். அதன் நான்கு சக்கரங்களும் அகற்றப்பட்டிருந்தன. மின் இணைப்புக்கள், எலத்திரோன் சாதனங்கள் களவாடப்பட்டிருந்தன.

அதனை பொறுப்பேற்று பாரிஸ் நகர பென்ஸ் விற்பனை முகவர் ஒருவர் சீரமைத்துக் கொடுத்தார்.

இவ் வண்டி சிறியரக வண்டியாக தோன்றியபோதும் இது போன்ற வண்டிகளைச் செலுத்த பாரிஸ் நகர பொலிஸாரின் பிரத்தியேக அனுமதிப்பத்திரம் பெறுவது அவசியம்.

அதற்கான அனுமதிப்பத்திரம் ரிட்ஸ் ஹொட்டலின் சாரதிகள் பலரிடம் இருந்தது. ஆனால் டோடியின் நம்பிக்கைக்குரிய ஹென்றி போலிடம் அது இல்லை.

அதனை செலுத்தும் பயிற்சியை ஹென்றி போல் பெற்றிருந்தார். ஆனால் அனுமதிப் பத்திரம் பெறாது இருந்துவிட்டார்.

எனவே குறிப்பிட்ட வண்டியை செலுத்துமாறு டோடி கோரியபோது அவர் உண்மையைக் கூறியிருக்கலாம்.

தன்மேல் நம்பிக்கை வைத்துள்ள டோடியிடம் அதனைக் கூறினால் மதிப்பு சற்றுக் குறைந்து போகுமோ என்றுகூட ஹென்றி போல் எண்ணியிருக்கலாம்.

### துரித ஏற்பாடுகள்

டயானாவும்-டோடியும் புறப்படுவதற்கான திட்டங்கள் துரிதகதியில் தீட்டப்பட்டன.

தனது திட்டங்களால் டயானாவையும் ஆச்சரியத்தில் ஆழ்த்த விரும்பினார் டோடி.



ஹோட்டலில் இருந்து புறப்படும்போது



காருக்குள்



வேகமாக விரையும் பென்ஸ்

படப்பிடிப்பாளர்களை ஏமாற்றி பாரிஸ் நகரில் தனது வலிமையைக் காண்பிக்க ஆசைப்பட்டார்.

ரிட்ஸ் ஹொட்டலின் முன்புறம் இரு வண்டிகள் தயாராகின. முன்னால் நின்ற ரேஞ்ச் ரோவரை ஜூன் பிராங்கொயிஸ் முஸா செலுத்துவார். அதில் டோடியின் மெய்க்காப்பாளரான கெஸ்விங் பீல்ட் ஏறிக்கொள்வார்.

அடுத்ததாக நிற்கும் பென்ஸ்-600 ரக வண்டியை பிலிப் டௌர் நியூ என்பவர் செலுத்துவார்.

இந்த இரு வண்டிகளும் ஹொட்டலின் முன்புற வாயில் ஊடாக, கூட்டமாக நிற்கும் பத்திரிகையாளர்களுக்கு போக்குக் காட்ட வேண்டும்.

டயானாவும், டோடியும் அவற்றில் செல்வதாகப் படப்பிடிப்பாளர்களை நம்பவைக்க வேண்டும்.

அதனால் தம்மில் ஒரு பகுதியினரை பின்புற வழியைக் கண்காணிக்க அனுப்பிவைத்தார்கள்.

முன்புறம் காத்து நின்றவர்களும், பின்புறம் கண் காணித்தவா களும் தமக்கிடையே செல்லுலர் தொலைபேசி ஊடாக அடிக்கடி தொடர்பு கொண்டனர்.

முன்புறம் இரு வாகனங்கள் தயாராகும் செய்தி பின்புற வாயிலில் கண்காணித்தவர்களுக்கு எட்டியது.

பென்ஸ்-S280 பின்புற வாயிலில் வந்து நிற்பதை அவர்கள் கண்டனர். சாரதி ஆசனத்தில் ஹென்றி போல் அமர்ந்திருந்தார்.

டயானாவின் மெய்காப்பாளர் ரீஸ்-ஜோன்ஸ் வண்டியில் ஏறத்தயாராக நின்றார்.

அப்போது நேரம் நள்ளிரவு 12.15. டோடியும், டயானாவும் பின்புற வாயில் வழியாக ஓட்டமும் நடையுமாக வந்து பென்ஸில் தங்களைத் திணித்துக் கொண்டனர்.

கண் காணித்த படப்பிடிப்பாளர்கள் தமக்கு நெருக்கமான ஏனைய படப்பிடிப்பாளர்களுக்கு மட்டும் அத் தகவலை அனுப்பினார்கள்.

அதேநேரம் முன்புற வாயில் வழியாகவும் இரு வாகனங்களும் புறப்பட்டு துரித வேகத்தில் சென்றன.

### துரத்தல்

விஷயம் தெரியாத சில படப்பிடிப்பாளர்கள் அந்த இரண்டு வாகனங்களையும் துரத்த ஆரம்பித்தனர்.

மோட்டார் சைக்கிள்களிலும், கார்களிலும் துரத்தல் நடந்தது. இரண்டு வாகனங்களும் டோடியின் இல்லம் இருக்கும் பாதையில் போக்குக் காட்டிச்சென்று கொண்டிருந்தன.

இதேநேரம் டயானா-டோடி பயணம்செய்த பென்ஸ் பயங்கர வேகத்தில் பாரிஸ் நகர சாலைகளில் வழுக்கிக் கொண்டு பறந்தது.

'தரைப் பறப்பு' என்று அந்த வேகத்தை வர்ணிக்கலாம். தனது எஜமானரான டோடிக்கும், அவரது காதலியான டயானாவுக்கும் தன் திறமையை காண்பிக்க ஆவலுற்றார் ஹென்றி போல்.

### பின்புறமும் காத்திருந்தனர்

ஹொட்டலின் முன்புறம் அவ்வாறு பாவனை காட்டப்பட்டுக் கொண்டிருக்கையில், பின்புற வழியாக பென்ஸ்-S280 நழுவிப் பறந்துவிடும்.

டோடியின் இந்தத் திட்டம் அப்படியே நிறைவேறியிருந்தால், அன்றைய விபத்துக்கே இடமிருந்திருக்காது. இளவரசியை உலகம் இழந்திருக்காது.

ஆனால் படப்பிடிப்பாளர்கள் கில்லாடிக்கு கில்லாடியாக இருந்தனர். ரிட்ஸ் ஹொட்டலை விட்டு பின்புறவழியாக நழுவச் சந்தர்ப்பம் இருக்கிறது என்று சந்தேகித்தனர்.

தம்மை படப்பிடிப்பாளர்கள் பின் தொடர்வதையோ, தமது வேகத்துக்கு ஈடுகொடுத்து வந்து கொண்டிப்பதையோ காருக்குள் இருந்தவர்கள் முதலில் கவனிக்கவில்லை.

பென்ஸின் வேகத்தை திடீரென்று குறைக்க வேண்டி ஏற்பட்டது. போக்குவரத்து சைகை விளக்கு கம்பத்தில் சிவப்பு ஒளிர்ந்து கொண்டிருந்தது.

அந்த சைகைக்காக காரை நிறுத்திய போதுதான் உள்ளே இருந்தவர்களுக்கு உண்மை புரிந்தது. தம்மால் படப்பிடிப்பாளர்களை ஏமாற்ற முடியவில்லை என்று தெரிந்தது.

சைகைக்காக நிறுத்தப்பட்ட காரை படப்பிடிப்பாளர்களது மோட்டார் சைக்கிள்கள் மொய்த்துக் கொண்டன.

ஹொட்டலில் இருந்து 200 யார் தூரத்துக்குள் படப்பிடிப்பாளர்கள் அவர்களை சூழ்ந்து கொண்டனர்.

டோடி நிலை குலைந்து போனார். அவருக்கு தன் திட்டம் தோற்றுப்போனது அவமானமாகவும் இருந்தது.

சிவப்பு விளக்கு எரிந்துகொண்டே இருந்தது. பச்சைக்காக காத்திருக்க பொறுமையில்லை. போக்குவரத்து விதியைப் புறக் கணித்து காரைக் கிளப்பினார் ஹென்றி போல். 'என் எச்சரிக்கையையும் மீறிப் போகிறாயே' என்று கூறுவதுபோல சிவப்பு விளக்கு நோக்கியது.

டோடியின் இல்லத்துக்கு செல்வதற்கு பல பாதைகள் இருந்தன. வழமையாகச் செல்லும் பாதையில் இரவு நேரத்தில் போக்குவரத்து குறைவாகவே இருக்கும்.

கோர்ஸ்லாரீனி என்ற இடத்தை அடைந்ததும், தனக்கு முன்பாக 600 மீட்டர்வரை நீளமான நேரிய பாதை இருப்பதைக் கண்டார் ஹென்றி போல்.

வண்டியை மேலும் வேகமாக்கி படப்பிடிப்பாளர்களிடமிருந்து தப்புவதற்கு இதுதான் தக்க தருணம் என்று அவர் மூளை கட்டளையிட்டது.

வேகத்தை அதிகப்படுத்தினார். வேகம்... வேகம்...வேகம்... அது மரண வேகமாக மாறிக் கொண்டிருந்தது.

(அடுத்த வாரமும் வரும்)


**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**

**காரைதீவு வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான்

**வை. சந்திரரூபி,**
வெட்டுவாய்க்கால் வீதி, காரைதீவு-12.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

**அம்மன் ஜுவல்ஸ்-முரசு இணைந்து வழங்கும்**

**வைர மோதிரப் போட்டி**

* முதலாவது அதிஷ்டசாலியின் அழகிய விரல்களுக்கு வைர மோதிரம் பரிசாகக் காத்திருக்கிறது.
* 25 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
* 16 வாரங்கள் மட்டும் பரிசுக் கூப்பன்களை சேகரித்தால் போதும்.
* பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் இதில் பங்கு கொள்ளலாம்.
* இங்கு வெளியாகும். பரிசுக் கூப்பன்களை தொடர்ந்து சேகரியுங்கள். நாம் அனுப்புமாறு அறிவித்த பின்னர் அனுப்பலாம்.


அம்மன்-முரசு வைர மோதிரப் போட்டி




படிப்பகம்

www.padippakam.com





> சக்திதனை நாசி நித்தம் முகரும்-அதைச்
> சக்தி தனக்கே கருவி யாக்கு- சிவ
> சக்தி திருச் சுவையினை நுகரும்-சிவ
> சக்தி தனக்கே எமது நாக்கு.
>
> -சுப்பிரமணிய பாரதியார்.

பாப்பா முரசு சிறுகதை

# நல்லவர்

ஓர் ஊரில் வேலன் என்ற இளைஞன் ஒருவன் இருந்தான். அவன் தனது வாழ்நாளில் நல்லதை நினைத்ததே கிடையாது. அத்துடன் தீய செயல்களான பொய் பேசுதல், திருடுதல் போன்ற வற்றிலும் ஈடுபட்டு வந்தான்.

ஒருநாள் அயலூருக்குச் சென்று திரும்பும் வழியில் அவன் ஒரு முனிவரைக் கண்டான். நேரே அவரிடம் சென்று,

"சுவாமி! எனக்கு வருமானம் தரக்கூடிய தொழில் இல்லாமல் கஷ்டப்படுகிறேன். எனக்கு நிம்மதியே இல்லை. எனக்கு நீங்கள்தான் ஒரு நல்ல வழியைக் கூறவேண்டும்!" என்று கேட்டான்.

"தீய செயல்களை விடுத்து நல்ல செயல்களைச் செய்து வா. உனக்கு நல்ல வழி பிறக்கும்," என்று கூறினார் முனிவர்.

"சுவாமி! தீய செயல்களை விட்டு விடுகிறேன். எனக்கு நல்ல செயல்கள் செய்து பழக்கமில்லையே," என்று சொன்னான்.

அதற்கு முனிவர், "அப்படியென்றால், நல்ல மனிதர் ஒருவரின் முகத்தைத் தினமும் பார்த்துவிட்டு உன் அன்றாட வேலைகளை ஆரம்பி. நல்லது நடக்கும்!" என்று கூறி அனுப்பினார்.

வேலன் நடந்து போகும்போது, 'நம் வீட்டிற்கு எதிரில் குடியிருக்கும் பண்டிதர் மிகவும் நல்லவர். நாளை முதல் அவர் முகத்தைப் பார்த்துவிட்டுத்தான் வேலையை ஆரம்பிக்க வேண்டும்' என்று நினைத்தான்.

மறுநாள் காலை வேலன் எழுந்து பார்த்தபோது, பண்டிதர் எங்கோ போய்க் கொண்டிருந்தார். அவரது முதுகுதான் தெரிந்தது.

பண்டிதர் முகத்தைத் திருப்பாமல் சென்று கொண்டிருந்தார். எப்படியாவது அவரது முகத்தைப் பார்த்துவிட வேண்டும் என்று வேலனும் அவரைப் பின்தொடர்ந்தான்.

அப்போது பண்டிதர் குனிந்து நிலத்தில் எதையோ பொறுக்கினார். பின் அவர் நிமிர்ந்தார். அவர் நிமிர்ந்தபோது அவரது முகத்தைப் பார்த்துவிட்டான் வேலன். பார்த்த சந்தோசத்தில்,



"பார்த்து விட்டேன். நான் பார்த்து விட்டேன்" என்று சத்த மிட்டான். வேலனின் குரலைக்கேட்ட பண்டிதர், "வேலா! நீ பார்த்து விட்டாயா? நான் நிலத்தில் விழுந்து கிடந்த நாணயங்களை எடுத்ததை நீ பார்த்தால் உனக்கும் இதில் அரைவாசியைத் தருகிறேன்!" என்று சொல்லி அவனிடம் கொஞ்ச நாணயங்களைக் கொடுத்தார்.

பண்டிதர் கொடுத்த நாணயங்களை வாங்கி சட்டைப் பையில் போட்டுக்கொண்டான். 'நல்லவர் முகத்தைப் பார்த்ததற்கே இவ்வளவு பலன் கிடைக்கிறது. நான் நல்ல செயல்கள் செய்து நல்லவனாக நடந்தால் எவ்வளவு பலன் கிடைக்கும்!' என எண்ணிய படி வீடு திரும்பினான் வேலன்.

# அதிசயம் - ஆனால் உண்மை!



→ இங்கிலாந்தில் லூயிஸ் நகரத்தில் 1880ம் ஆண்டு ஒரு குதிரைப் பந்தயம் நடந்தது. இதன் முடிவு விநோதமாக இருந்தது. என்ன முடிவு தெரியுமா? 3 குதிரைகள் ஒரே சமயத்தில் முதலாவதாக வந்தன.



↑ அவுஸ்திரேலியாவில் ஹோர்ஷம் என்ற இடத்தில் கட்டடம் கட்ட வைக்கப்பட்டிருந்த மரச் சட்டங்கள் தீப்பற்றி எரிந்து சாம்பலாயின. இதில் விந்தை என்னவென்றால் பெரு வெள்ளத்தில் மூழ்கியிருந்த இம்மரச்சட்டங்கள் எரியும்போது பெரு மழையும் பெய்து கொண்டிருந்தது.




↘ எகிப்தில் வாழ்ந்த பேகலாரி என்ற செல்வந்தர் தங்கம் மற்றும் வெள்ளிக் கோப்பைகளில்தான் மது அருந்துவார். இதில் அதிசயம் யாதெனில் ஒரு முறை உபயோகித்த கோப்பையை மறுமுறை பயன்படுத்த மாட்டார்.

# பாடசாலைச் செய்திகள்



* கிராமப்புறப் பகுதிகளில் இலவசக் கல்வியளிக்கும் பாடசாலைகள் முதன் முதலாக நெதர்லாந்து நாட்டில்தான் தொடங்கப்பட்டன.
* ஞாயிற்றுக் கிழமை இயங்கும் பாடசாலைகள் 'வேல்ஸ்' நாட்டில்தான் முதன் முதலாகத் தொடங்கப்பட்டன.
* 'கிண்டர் கார்டன்' எனப்படும் பாலர் வகுப்புப் பாடசாலை முதன் முதலாக 1837ம் ஆண்டு ஜெர்மனியில் தொடங்கப் பட்டது.
* ஆண்-பெண் இருபாலாரும் சேர்ந்து படிக்கும் பாடசாலைகள் முதன் முதலாக இலண்டன் நகரில் தொடங்கப்பட்டன.
* உலகின் முதல் நவீன பல்கலைக் கழகம் கி.பி. 1088ம் ஆண்டு இத்தாலி நாட்டில் உள்ள போலங்கா நகரில் தொடங்கப்பட்டது.

# எப்படி தெரியுமா?



எமது உடலில் வெட்டுக்காயம் ஏற்பட்டால் இரத்தம் வரும். பின் சில நிமிடங்களில் இரத்தம் வருவது நின்று.. இரத்தம் உறைந்து விடும். இது எப்படி என்று உங்களுக்குத் தெரியுமா?

இரத்தத்தில் ஃபைபர்னோஜன் என்னும் நார்ப்புரதம் உள்ளது. இது வெளிக் காற்றுப் பட்டதும் ஒருவலைபோல பின்னிக்கொண்டு, இரத்தம் வெளிவருவதைத் தடுத்து விடுகிறது.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **03.07.1999.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **302**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 300

**பரிசுக்குரியவர்:**
தியாகலிங்கம், திருராஜ்கண்ணா,
மட்/ புனிதமைக்கல் கல்லூரி, மட்டக்களப்பு.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எச். நிஷார்ணி, புதிய கல்லடி, மட்டக்களப்பு. | என். நஸ்றா மும்தாஜ், அரபா முஸ்லிம் வித்தியாலயம், கள்ளஞ்சியாகம, காகம. |
| பே. தினேஸ்குமார், கோளாவில் விநாயகர் மகா வித்தியாலயம், அக்கரைப்பற்று. | த. சுமித்திரன், பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, பம்பலப்பிட்டி. |
| பி. ஜீவராசா, விநாயகர் ம.வி.,மட்/ கிரங்குளம். | எம். அசான், சாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம். |
| ரி. கிருஸ்ணசாமி தர்ஷினி, சென்.ஜோசப் த.ம.வி., மஸ்கெலியா. | பாத்திமா நிஷ்மா நஜீம், ஒக்ஸ்,',போட் சர்வதேச பாடசாலை, பலாங்கொடை. |
| ச. துஷாந்தினி, ஹைலன்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன். | மாணிக்கராஜா சாயிதரன், ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி, திருகோணமலை. |

# விடுகதைகளும் விடைகளும்

1. ஏற்றி வைத்து அணைத்தால் எரியும்வரை மணக்கும்.
   அது என்ன?
2. தழுவுவதும் அவனே, தாக்குவதும் அவனே.
   அவன் யார்?
3. தட்டினாலும் ராகம், தடவினாலும் ராகம்.
   அது என்ன?
4. அடுக்கிவைத்த அழகுக்கோர்வை, ஆட்டம் கண்டால் அழகு போச்சு.
   அது என்ன?
5. காலையிலும் மாலையிலும் மாறி மாறிச் சிரிப்பார்கள்.
   அவர்கள் யார்?
6. நெருப்பில் வெந்தவனுக்கு நீண்ட ஆயுள்.
   அவன் யார்?
7. ஒரு பக்கப் பற்களால் ஒன்றை ஒன்ப தாக்குவான்.
   அவன் யார்?
8. ஆளுக்கு ஒரு அடையாளம், அதுவே இதனது பிரதானம்.
   அது என்ன?
9. பாடத் தெரிந்தவன் பாட்டுக்கு பாம்பும் வரும்.
   அது என்ன?
10. கோட்டைக்குள்ளிருந்து வெளியே வராதவன் கோடி உத்தரவுகள் பிறப்பிப்பான்.
    அவன் யார்?

## விடைகள்

1. ஊதுபத்தி 2. காற்று 3. ஆர்மோனியம் 4. பற்கள் 5. தாமரை-அல்லி 6 இரும்பு 7. ரம்பம் 8. கைரேகை 9. தவளை 10. நாக்கு

தொகுப்பு: ஏ. அகல்யா.

# முள்ளம் பன்றித் தாக்குதல்



முள்ளம்பன்றியை எதிரிகள் தாக்க வந்தால், முட்களை உசுப்பி ஒருவிதமான ஒலியைக் கிளப்பும். அதையும் மீறித் துரத்தினால்தான், துரத்தி வரும் விலங்கினை தன் உடலிலுள்ள முட்களால் தாக்குகின்றது.

உண்மையில் முள்ளம்பன்றிகள் தம் உடலில் உள்ள முட்களை வீசி எறிவதில்லை. அவை தமது வாலைத்தூக்கி நிலத்தில் அடிக்கும். அந்த வேகத்தில்தான் முட்கள் பறந்து சென்று எதிரி விலங்கின் உடம்பில் தைக்கின்றன.

எனினும் எதிரி விலங்குகளிடமிருந்து முள்ளம்பன்றிகளை அவற்றின் முட்கள்தான் காக்கின்றன.

# நீளமான பெயர்



திபெத் நாட்டின் ஆன்மீகத் தலைவர் தலாய் லாமாவின் முழுப் பெயரையும் இலகுவில் சொல்லிவிட முடியாது. அவரது பெயர் அவ்வளவு நீளம்.

'ஜெஸ்டம் ஜம்பல் சுவாங் லாப் ஷாங் பிஷி டென்சிங் இயாட்ஷா சிகன் வங்கூர் ஷூம்பா கெட்வுன் மபால் தேபல் ஷாங்கோ' என்பது தான் அவரது முழுப்பெயர்.

உலகிலேயே மிக நீளமான பெயர் கொண்டவர் இவராகத்தான் இருக்கும்.

## இப்படிப் பார்த்தால் ஆள். தலைகீழாய்ப் பார்த்தால்....?



வரைந்தவர்: எலி

# லேடீஸ் ஹாற்

ஆல்ப்ஸ் மலைத் தொடரில் படத்தில் இருப்பது போன்ற கல்தூண்கள் காணப்படுகின்றன. இவையனைத்தும் இயற்கையாகவே உருவானவை.



இந்தக் கல் தூண்கள் ஒவ்வொன்றும் 30 மீட்டர் உயரமானது. அடிப்பகுதி பருத்தும் மேலே செல்லச் செல்ல குறுகியும், தலைப் பகுதியில் தொப்பியைக் கவிழ்த்தது போன்றும் இவை காணப்படுகின்றன.

இக் கல் தூண்களை 'லேடீஸ் ஹாற்' (LADIES HAT)என்று குறிப்பிடுகின்றனர். இவற்றின்மீது அழகிய டிசைன்கள் இயற்கையாக அமைந்துள்ளன.

இந்தக் கல்தூண்கள், பல வருடங்களுக்கு முன் பாறைகளாக இருந்து மழையாலும், காற்றாலும் அரிக்கப்பட்டு இப்படி உருவாகியிருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.


படிப்பகம்

www.padippakam.com



## சேலைத் தெரிவு

## வர்ணமும் உள்ளமும்



பெண்கள் பெரும்பாலும் தேர்வு செய்யும் ஆடை சிவப்புக் கலராகத்தான் இருக்கிறது என்கிறது உலகளாவிய புள்ளி விவரம் ஒன்று.

இத்தகைய சிவப்பு வர்ணத்தை விரும்பும் பெண்கள் தன்னம்பிக்கை, உத்வேகம், சிறந்த முடிவு ஆகிய குணங்களைக் கொண்டவர்களாகத் திகழ்கிறார்களாம். மஞ்சள், செம்மஞ்சள் வர்ணத்தை விரும்புகிறவர்கள் அன்பு, அழகு, என்பவற்றுடன் மகிழ்ச்சிகரமாகத் திகழ்கிறார்கள் எனவும், பச்சை, நீலத்தைத் தேர்வு செய்பவர்கள் தீவிர ஆலோசகராகவும் காணப்படுகிறார்கள் என்று அதே ஆய்வு கூறுகிறது.

* பொதுவாக கறுப்பாய் இருக்கும் பெண்கள் பளிச் நிற உடைகளைத் தேர்வு செய்யாமல், வெள்ளையும் மஞ்சளும் கலந்த மற்றும் இளம் வர்ண சேலைகளைத் தேர்வு செய்வது நல்லது. மேட்சிங் ஆடைகள் இவர்களுக்கு கூடுதல் அழகு சேர்க்கும்.
* நன்கு சிவந்த நிறமுடைய பெண்கள் சிவப்பு, பச்சை, கறுப்பு, நீலம் என எந்தச் சேலையாக இருந்தாலும் அழகைத் தரும். அகன்ற கரை வைத்த சேலைகள் மென்மேலும் பொலிவு தரும்.
* மாநிறமாக இருப்பவர்கள் சேலையின் வர்ணத்தை விட, டிசைன்களுக்கு அதிக முக்கியத்துவம் தந்து தேர்வு செய்ய வேண்டும்.
* அலுவலகங்களில் வேலை பார்க்கும் பெண்கள் இளம் வர்ண சேலையுடன் அலுவலகம் செல்வது அழகு தரும். மாலை விருந்தில கலந்து கொள்ளும் பெண்கள் 'பளிச்' நிற சேலைகள் அணிவது அழகு சேர்க்கும்.
* இத்தகைய சேலைகளைத் தேர்வு செய்யும் போது இரவில் கடைக்குச் செல்லாமல் பகலில் சென்று வாங்குவதே நல்லது. வாங்கிய சேலையை பாதுகாப்பதும் முக்கியம். அதைவிட முக்கியம் அதன் மடிப்பு கலையாமல் அழகுற அணிவது.

## நடையா இது நடையா



இந்த நடைப்பயிற்சி இருக்கிறதே! இது இயற்கையாகவே உடலுக்கு மிக மிகத் தேவையான ஓர் உடற்பயிற்சி.

இந்த வகை நடைப் பயிற்சியானது இரத்த ஓட்டத்தை அதிகரித்து, உடலைச் சுறுசுறுப்படையச் செய்கின்றது. மனிதனின் தேவையற்ற உடல் எடையைக் குறைக்கின்றது.

அங்கங்களை அழகாக வடிவமைப்புக் குக்கொண்டு வருகிறது. இதயம், எலும்புகள் பலம் பெற வழி வகுக்கின்றது.

இருதய நோய் உள்ளவர்களும், இடுப்பு, முதுகுவலி உள்ளவர்களும் தினந்தோறும் நடைப்பயிற்சி செய்வது மிக மிக நல்லது.

நடைபயிலும்போது கைகள் அசைவதால் அது நெஞ்சுப் பகுதிக்கு அழகு சேர்க்கின்றது. மனப் பாரம் குறைகின்றது.

கோபம், சோகம் போன்ற உணர்ச்சிகள் மட்டுப்படுகின்றன. உடலில் உள்ள கொழுப்பும் குறைகின்றது.

நீரிழிவு நோயாளிகள் சாப்பிட்ட பிறகு நடந்தால் ஓரளவு அவர்களின் உடலில் உள்ள சீனியின் அளவு குறையும். காரணம் இத்தகைய நோயுள்ளவர்கள் சாப்பிட்டதும் அவர்களது உடலில் சீனியின் அளவு கூடியிருக்கும்.

பல வயதான பிரபலங்கள் கூட தினமும் காலையில் நடைப் பயிற்சி செய்வதை வாடிக்கையாக வைத்திருக்கிறார்கள்.

## வாங்க! செருப்பு வாங்கலாம்



ஒரு கடையில் செருப்பு வாங்கும்போது... அதைப் போட்டுக் கொண்டு 10 அடியாவது நடந்து பார்த்து வாங்க வேண்டும். என்பதுடன் இந்தச் செய்தி தொடங்குகின்றது.

சல்வார் கமீஸ் அணியும் பெண்களுக்கு பெல்ட் அளவிலான வார்கள் கொண்ட உயர்ந்த குதிச் செருப்புகள் அழகாக இருக்கும்.

பாவாடை சட்டை அணியும் பெண் களுக்கு முன்பக்கம் மூடிய 'கட் ஷூ' அழகாக இருக்கும்.

சேலை அணியும் பெண்களுக்கு 'ஷூ'க்களைத் தவிர எந்தச் செருப்பும் அழகு தான்.

ஜீன்ஸ், ரீ-சேர்ட் அணியும் பெண்களுக்கு காலின் பின் பாகமும், முன் பக்கத்தில் நடுப்பாகமும் மறைத்த செருப்பே அழகு. அதாவது விரல்கள் வெளியே தெரியும் செருப்பு.

கர்ப்பிணிப் பெண்கள் ஒரு அங்குலத்திற்கு மிகாத எந்த உயர்ந்த குதிச்செருப்பையும் அணியலாம்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** FY

பெயர்:.........................

முகவரி:.........................

.........................

தொழில்:.........................

கையொப்பம்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 03-07-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## கண்ணீரில் கரைந்த இரவுகள்

93

புவனா

ரிட்ஸ் ஹொட்டலில் இருந்து டயானாவும் டோடியும் பென்ஸ்-S280 ரக நவீன காரில் புறப்பட ஏற்பாடு செய்யப் பட்டது.

ரிட்ஸ் ஹொட்டலுக்கு வந்து தங்கும் பிரமுகர்களது பாவனைக்காக நவீனரக கார்கள் பல இருந்தன. அதில் ஒன்றுதான் பென்ஸ்-S280.

இந்தக் காருக்கும் சுவையான ஒரு வரலாறு இருக்கிறது.

1997ம் ஆண்டு ஜனவரியில் ரிட்ஸ் ஹொட்டலின் வாயிலில் இந்த கார் நிறுத்தப்பட்டிருந்தது.

திடீரென்று காரைக்காணவில்லை. மர்மான முறையில் மறைந்துவிட்டது.

அராபியர்கள் போன்று உடை தரித்திருந்த மூன்றுபேர் துப்பாக்கிகள் சகிதம் காருக்குள் ஏறினார்கள். சாரதியை இழுத்து வெளியே எறிந்தார்கள். வண்டியைக் கிளப்பிக் கொண்டு பறந்துவிட்டனர்.

இனிமேல் அந்தக் கார் திரும்பக் கிடைக்காது என்றே ரிட்ஸ் ஹொட்டல் நிர்வாகிகள் கருதினார்கள். பொலிசில் புகார் செய்தும் மூன்று வாரங்களாக எத்தகைய துப்பும் கிடைக்கவில்லை.

ஆனால் மூன்று வாரங்களின் பின்னர் மகிழ்ச்சியான தகவல் கிடைத்தது. மொன்றியுல் என்ற இடத்தில் கார் அநாதரவாகக் கிடந்தது.

கிடந்தது என்றுதான் சொல்ல வேண்டும். அதன் நான்கு சக்கரங்களும் அகற்றப்பட்டிருந்தன. மின் இணைப்புக்கள், எலத்திரோன் சாதனங்கள் களவாடப்பட்டிருந்தன.

அதனை பொறுப்பேற்று பாரிஸ் நகர பென்ஸ் விற்பனை முகவர் ஒருவர் சீரமைத்துக் கொடுத்தார்.

இவ் வண்டி சிறியரக வண்டியாக தோன்றியபோதும் இது போன்ற வண்டிகளைச் செலுத்த பாரிஸ் நகர பொலிஸாரின் பிரத்தியேக அனுமதிப்பத்திரம் பெறுவது அவசியம்.

அதற்கான அனுமதிப்பத்திரம் ரிட்ஸ் ஹொட்டலின் சாரதிகள் பலரிடம் இருந்தது. ஆனால் டோடியின் நம்பிக்கைக்குரிய ஹென்றி போலிடம் அது இல்லை.

அதனை செலுத்தும் பயிற்சியை ஹென்றி போல் பெற்றிருந்தார். ஆனால் அனுமதிப் பத்திரம் பெறாது இருந்துவிட்டார்.

எனவே குறிப்பிட்ட வண்டியை செலுத்துமாறு டோடி கோரியபோது அவர் உண்மையைக் கூறியிருக்கலாம்.

தன்மேல் நம்பிக்கை வைத்துள்ள டோடியிடம் அதனைக் கூறினால் மதிப்பு சற்றுக் குறைந்து போகுமோ என்றுகூட ஹென்றி போல் எண்ணியிருக்கலாம்.



ஹோட்டலில் இருந்து புறப்படும்போது



காருக்குள்

### துரித ஏற்பாடுகள்

டயானாவும்-டோடியும் புறப்படுவதற்கான திட்டங்கள் துரிதகதியில் தீட்டப்பட்டன.

தனது திட்டங்களால் டயானாவையும் ஆச்சரியத்தில் ஆழ்த்த விரும்பினார் டோடி.



வேகமாக விரையும் பென்ஸ்

படப்பிடிப்பாளர்களை ஏமாற்றி பாரிஸ் நகரில் தனது வலிமையைக் காண்பிக்க ஆசைப் பட்டார்.

ரிட்ஸ் ஹொட்டலின் முன்புறம் இரு வண்டிகள் தயாராகின. முன்னால் நின்ற ரேஞ்ச் ரோவரை ஜூன் பிராங்கொயிஸ் முஸா செலுத்துவார். அதில் டோடியின் மெய்க்காப்பாளரான கெஸ்விங் பீல்ட் ஏறிக்கொள்வார்.

அடுத்ததாக நிற்கும் பென்ஸ்-600 ரக வண்டியை பிலிப் டௌர் நியூ என்பவர் செலுத்துவார்.

இந்த இரு வண்டிகளும் ஹொட்டலின் முன்புற வாயில் ஊடாக, கூட்டமாக நிற்கும் பத்திரிகையாளர்களுக்கு போக்குக் காட்ட வேண்டும்.

டயானாவும், டோடியும் அவற்றில் செல்வதாகப் படப்பிடிப்பாளர்களை நம்பவைக்க வேண்டும்.

### பின்புறமும் காத்திருந்தனர்

ஹொட்டலின் முன்புறம் அவ்வாறு பாவனை காட்டப்பட்டுக் கொண்டிருக்கையில், பின்புற வழியாக பென்ஸ்-S280 நழுவிப் பறந்துவிடும்.

டோடியின் இந்தத் திட்டம் அப்படியே நிறைவேறியிருந்தால், அன்றைய விபத்துக்கே இடமிருந்திருக்காது. இளவரசியை உலகம் இழந்திருக்காது.

ஆனால் படப்பிடிப்பாளர்கள் கில்லாடிக்கு கில்லாடியாக இருந்தனர். ரிட்ஸ் ஹொட்டலை விட்டு பின்புறவழியாக நழுவச் சந்தர்ப்பம் இருக்கிறது என்று சந்தேகித்தனர்.

அதனால் தம்மில் ஒரு பகுதியினரை பின்புற வழியைக் கண்காணிக்க அனுப்பிவைத்தார்கள்.

முன்புறம் காத்து நின்றவர்களும், பின்புறம் கண் காணித்தவர்களும் தமக்கிடையே செல்லுலர் தொலைபேசி ஊடாக அடிக்கடி தொடர்பு கொண்டனர்.

முன்புறம் இரு வாகனங்கள் தயாராகும் செய்தி பின்புற வாயிலில் கண்காணித்தவர்களுக்கு எட்டியது.

பென்ஸ்-S280 பின்புற வாயிலில் வந்து நிற்பதை அவர்கள் கண்டனர். சாரதி ஆசனத்தில் ஹென்றி போல் அமர்ந்திருந்தார்.

டயானாவின் மெய்காப்பாளர் றீஸ்-ஜோன்ஸ் வண்டியில் ஏறத்தயாராக நின்றார்.

அப்போது நேரம் நள்ளிரவு 12.15. டோடியும், டயானாவும் பின்புற வாயில் வழியாக ஓட்டமும் நடையுமாக வந்து பென்ஸில் தங்களைத் திணித்துக் கொண்டனர்.

கண் காணித்த படப்பிடிப்பாளர்கள் தமக்கு நெருக்கமான ஏனைய படப்பிடிப்பாளர்களுக்கு மட்டும் அத் தகவலை அனுப்பினார்கள்.

அதேநேரம் முன்புற வாயில் வழியாகவும் இரு வாகனங்களும் புறப்பட்டு துரித வேகத்தில் சென்றன.

### துரத்தல்

விஷயம் தெரியாத சில படப்பிடிப்பாளர்கள் அந்த இரண்டு வாகனங்களையும் துரத்த ஆரம்பித்தனர்.

மோட்டார் சைக்கிள்களிலும், கார்களிலும் துரத்தல் நடந்தது. இரண்டு வாகனங்களும் டோடியின் இல்லம் இருக்கும் பாதையில் போக்குக் காட்டிச்சென்று கொண்டிருந்தன.

இதேநேரம் டயானா-டோடி பயணம்செய்த பென்ஸ் பயங்கர வேகத்தில் பாரிஸ் நகர சாலைகளில் வழுக்கிக் கொண்டு பறந்தது.

'தரைப் பறப்பு' என்று அந்த வேகத்தை வர்ணிக்கலாம். தனது எஜமானரான டோடிக்கும், அவரது காதலியான டயானாவுக்கும் தன் திறமையை காண்பிக்க ஆவலுற்றார் ஹென்றி போல்.

தம்மை படப்பிடிப்பாளர்கள் பின் தொடர்வதையோ, தமது வேகத்துக்கு ஈடுகொடுத்து வந்து கொண்டிப்பதையோ காருக்குள் இருந்தவர்கள் முதலில் கவனிக்கவில்லை.

பென்ஸின் வேகத்தை திடீரென்று குறைக்க வேண்டி ஏற்பட்டது. போக்குவரத்து சைகை விளக்கு கம்பத்தில் சிவப்பு ஒளிர்ந்து கொண்டிருந்தது.

அந்த சைகைக்காக காரை நிறுத்திய போதுதான் உள்ளே இருந்தவர்களுக்கு உண்மை புரிந்தது. தம்மால் படப்பிடிப்பாளர்களை ஏமாற்ற முடியவில்லை என்று தெரிந்தது.

சைகைக்காக நிறுத்தப்பட்ட காரை படப்பிடிப்பாளர்களது மோட்டார் சைக்கிள்கள் மொய்த்துக் கொண்டன.

ஹொட்டலில் இருந்து 200 யார் தூரத்துக்குள் படப்பிடிப்பாளர்கள் அவர்களை சூழ்ந்து கொண்டனர்.

டோடி நிலை குலைந்து போனார். அவருக்கு தன் திட்டம் தோற்றுப்போனது அவமானமாகவும் இருந்தது.

சிவப்பு விளக்கு எரிந்துகொண்டே இருந்தது. பச்சைக்காக காத்திருக்க பொறுமையில்லை. போக்குவரத்து விதியைப் புறக்கணித்து காரைக் கிளப்பினார் ஹென்றி போல். 'என் எச்சரிக்கையையும் மீறிப் போகிறாயே' என்று கூறுவதுபோல சிவப்பு விளக்கு நோக்கியது.

டோடியின் இல்லத்துக்கு செல்வதற்கு பல பாதைகள் இருந்தன. வழமையாகச் செல்லும் பாதையில் இரவு நேரத்தில் போக்குவரத்து குறைவாகவே இருக்கும்.

கோர்ஸ்லாரீனி என்ற இடத்தை அடைந்ததும், தனக்கு முன்பாக 600 மீட்டர்வரை நீளமான நேரிய பாதை இருப்பதைக் கண்டார் ஹென்றி போல்.

வண்டியை மேலும் வேகமாக்கி படப்பிடிப்பாளர்களிடமிருந்து தப்புவதற்கு இதுதான் தக்க தருணம் என்று அவர் மூளை கட்டளையிட்டது.

வேகத்தை அதிகப்படுத்தினார். வேகம்... வேகம்...வேகம்... அது மரண வேகமாக மாறிக் கொண்டிருந்தது.

(அடுத்த வாரமும் வரும்)

**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**

**காரைதீவு வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**வை. சந்திரரூபி,**
வெட்டுவாய்க்கால் வீதி, காரைதீவு-12.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


**அம்மன் ஜுவல்ஸ்-முரசு இணைந்து வழங்கும்**

**வைர மோதிரப் போட்டி**

* முதலாவது அதிஷ்டசாலியின் அழகிய விரல்களுக்கு வைர மோதிரம் பரிசாகக் காத்திருக்கிறது.
* 25 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
* 16 வாரங்கள் மட்டும் பரிசுக் கூப்பன்களை சேகரித்தால் போதும்.
* பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் இதில் பங்கு கொள்ளலாம்.
* இங்கு வெளியாகும். பரிசுக் கூப்பன்களை தொடர்ந்து சேகரியுங்கள். நாம் அனுப்புமாறு அறிவித்த பின்னர் அனுப்பலாம்.


அம்மன்-முரசு கா வைர மோதிரப் போட்டி




படிப்பகம்

www.padippakam.com





சக்திதனை நாசி நித்தம் முகரும்-அதைச்
சக்தி தனக்கே கருவி யாக்கு- சிவ
சக்தி திருச் சுவையினை நுகரும்-சிவ
சக்தி தனக்கே எமது நாக்கு.

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# நல்லவர்



ஓர் ஊரில் வேலன் என்ற இளைஞன் ஒருவன் இருந்தான். அவன் தனது வாழ்நாளில் நல்லதை நினைத்ததே கிடையாது. அத்துடன் தீய செயல்களான பொய் பேசுதல், திருடுதல் போன்ற வற்றிலும் ஈடுபட்டு வந்தான்.

ஒருநாள் அயலூருக்குச் சென்று திரும்பும் வழியில் அவன் ஒரு முனிவரைக் கண்டான். நேரே அவரிடம் சென்று,

"சுவாமி! எனக்கு வருமானம் தரக்கூடிய தொழில் இல்லாமல் கஷ்டப்படுகிறேன். எனக்கு நிம்மதியே இல்லை. எனக்கு நீங்கள்தான் ஒரு நல்ல வழியைக் கூறவேண்டும்!" என்று கேட்டான்.

"தீய செயல்களை விடுத்து நல்ல செயல்களைச் செய்து வா. உனக்கு நல்ல வழி பிறக்கும்," என்று கூறினார் முனிவர்.

"சுவாமி! தீய செயல்களை விட்டு விடுகிறேன். எனக்கு நல்ல செயல்கள் செய்து பழக்கமில்லையே," என்று சொன்னான்.

அதற்கு முனிவர், "அப்படியென்றால், நல்ல மனிதர் ஒருவரின் முகத்தைத் தினமும் பார்த்துவிட்டு உன் அன்றாட வேலைகளை ஆரம்பி. நல்லது நடக்கும்!" என்று கூறி அனுப்பினார்.

வேலன் நடந்து போகும்போது, 'நம் வீட்டிற்கு எதிரில் குடியிருக்கும் பண்டிதர் மிகவும் நல்லவர். நாளை முதல் அவர் முகத்தைப் பார்த்துவிட்டுத்தான் வேலையை ஆரம்பிக்க வேண்டும்' என்று நினைத்தான்.

மறுநாள் காலை வேலன் எழுந்து பார்த்தபோது, பண்டிதர் எங்கோ போய்க் கொண்டிருந்தார். அவரது முதுகுதான் தெரிந்தது.

பண்டிதர் முகத்தைத் திருப்பாமல் சென்று கொண்டிருந்தார். எப்படியாவது அவரது முகத்தைப் பார்த்துவிட வேண்டும் என்று வேலனும் அவரைப் பின்தொடர்ந்தான்.

அப்போது பண்டிதர் குனிந்து நிலத்தில் எதையோ பொறுக்கினார். பின் அவர் நிமிர்ந்தார். அவர் நிமிர்ந்தபோது அவரது முகத்தைப் பார்த்துவிட்டான் வேலன். பார்த்த சந்தோசத்தில்,

"பார்த்து விட்டேன். நான் பார்த்து விட்டேன்" என்று சத்தமிட்டான். வேலனின் குரலைக்கேட்ட பண்டிதர், "வேலா! நீ பார்த்து விட்டாயா? நான் நிலத்தில் விழுந்து கிடந்த நாணயங்களை எடுத்ததை நீ பார்த்ததால் உனக்கும் இதில் அரைவாசியைத் தருகிறேன்!" என்று சொல்லி அவனிடம் கொஞ்ச நாணயங்களைக் கொடுத்தார்.

பண்டிதர் கொடுத்த நாணயங்களை வாங்கி சட்டைப் பையில் போட்டுக் கொண்டான். 'நல்லவர் முகத்தைப் பார்த்ததற்கே இவ்வளவு பலன் கிடைக்கிறது. நான் நல்ல செயல்கள் செய்து நல்லவனாக நடந்தால் எவ்வளவு பலன் கிடைக்கும்!' என எண்ணியபடி வீடு திரும்பினான் வேலன்.

## அதிசயம் - ஆனால் உண்மை!



இங்கிலாந்தில் லூயிஸ் நகரத்தில் 1880ம் ஆண்டு ஒரு குதிரைப் பந்தயம் நடந்தது. இதன் முடிவு வினோதமாக இருந்தது. என்ன முடிவு தெரியுமா? 3 குதிரைகள் ஒரே சமயத்தில் முதலாவதாக வந்தன.



அவுஸ்திரேலியாவில் ஹோர்ஷம் என்ற இடத்தில் கட்டடம் கட்ட வைக்கப்பட்டிருந்த மரச் சட்டங்கள் தீப்பற்றி எரிந்து சாம்பலாகின. இதில் விந்தை என்னவென்றால் பெரு வெள்ளத்தில் மூழ்கியிருந்த இம்மரச்சட்டங்கள் எரியும்போது பெரு மழையும் பெய்து கொண்டிருந்தது.




எகிப்தில் வாழ்ந்த பேசுலாரி என்ற செல்வந்தர் தங்கம் மற்றும் வெள்ளிக் கோப்பைகளில்தான் மது அருந்துவார். இதில் அதிசயம் யாதெனில் ஒரு முறை உபயோகித்த கோப்பையை மறுமுறை பயன்படுத்த மாட்டார்.

## பாடசாலைச் செய்திகள்



* கிராமப்புறப் பகுதிகளில் இலவசக் கல்வியளிக்கும் பாடசாலைகள் முதன் முதலாக நெதர்லாந்து நாட்டில்தான் தொடங்கப்பட்டன.
* ஞாயிற்றுக் கிழமை இயங்கும் பாடசாலைகள் 'வேல்ஸ்' நாட்டில்தான் முதன் முதலாகத் தொடங்கப்பட்டன.
* 'கிண்டர் கார்டன்' எனப்படும் பாலர் வகுப்புப் பாடசாலை முதன் முதலாக 1837ம் ஆண்டு ஜெர்மனியில் தொடங்கப் பட்டது.
* ஆண்-பெண் இருபாலாரும் சேர்ந்து படிக்கும் பாடசாலைகள் முதன் முதலாக இலண்டன் நகரில் தொடங்கப்பட்டன.
* உலகின் முதல் நவீன பல்கலைக் கழகம் கி.பி. 1088ம் ஆண்டு இத்தாலி நாட்டில் உள்ள போலங்கா நகரில் தொடங்கப்பட்டது.

## எப்படி தெரியுமா?



எமது உடலில் வெட்டுக்காயம் ஏற்பட்டால் இரத்தம் வரும். பின் சில நிமிடங்களில் இரத்தம் வருவது நின்று.. இரத்தம் உறைந்து விடும். இது எப்படி என்று உங்களுக்குத் தெரியுமா?

இரத்தத்தில் ஃபைபர்னோஜன் என்னும் நார்ப்புரதம் உள்ளது. இது வெளிக் காற்றுப் பட்டதும் ஒருவலைபோல பின்னிக்கொண்டு, இரத்தம் வெளிவருவதைத் தடுத்து விடுகிறது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 03.07.1999.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 302
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 300

**பரிசுக்குரியவர்:**
தியாகலிங்கம், திருராஜ்கண்ணா,
மட்/ புனிதமைக்கல் கல்லூரி, மட்டக்களப்பு.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எச். நிஷார்ணி, புதிய கல்லடி, மட்டக்களப்பு. | என். நஸ்றா மும்தாஜ், அரபா முஸ்லிம் வித்தியாலயம், கள்ளஞ்சியாகம, காகம. |
| பே. தினேஸ்குமார், கோளாவில் விநாயகர் மகா வித்தியாலயம், அக்கரைப்பற்று. | த. சுமித்திரன், பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, பம்பலப்பிட்டி. |
| பி. ஜீவராசா, விநாயகர் ம.வி.,மட்/ கிரங்குளம். | எம். அசான், சாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம். |
| ரி. கிருஸ்ணசாமி தர்ஷினி. செ்ன்.ஜோசப் த.ம.வி., மஸ்கெலியா. | பாத்திமா நிஷ்மா நஜீம், ஒக்ஸ்.்போட் சர்வதேச பாடசாலை, பலாங்கொடை. |
| ச. துஷாந்தினி, ஹைலன்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன். | மாணிக்கராஜா சாயிதரன், ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி, திருகோணமலை. |

## விடுகதைகளும் விடைகளும்

1. ஏற்றி வைத்து அணைத்தால் எரியும்வரை மணக்கும். அது என்ன?
2. தழுவுவதும் அவனே, தாக்குவதும் அவனே. அவன் யார்?
3. தட்டினாலும் ராகம், தடவினாலும் ராகம். அது என்ன?
4. அடுக்கிவைத்த அழகுக்கோர்வை. ஆட்டம் கண்டால் அழகு போச்சு. அது என்ன?
5. காலையிலும் மாலையிலும் மாறி மாறிச் சிரிப்பார்கள். அவர்கள் யார்?
6. நெருப்பில் வெந்தவனுக்கு நீண்ட ஆயுள். அவன் யார்?
7. ஒரு பக்கப் பற்களால் ஒன்றை ஒன்ப தாக்குவான். அவன் யார்?
8. ஆளுக்கு ஒரு அடையாளம், அதுவே இதனது பிரதானம். அது என்ன?
9. பாடத் தெரிந்தவன் பாட்டுக்கு பாம்பும் வரும். அது என்ன?
10. கோட்டைக்குள்ளிருந்து வெளியே வராதவன் கோடி உத்தரவுகள் பிறப்பிப்பான். அவன் யார்?

### விடைகள்

1. ஊதுபத்தி 2. காற்று 3. ஆர்மோனியம் 4. பற்கள் 5. தாமரை-அல்லி 6 இரும்பு 7. ரம்பம் 8. கைரேகை 9. தவளை 10. நாக்கு

தொகுப்பு: ஏ. அகல்யா.

## முள்ளம் பன்றித் தாக்குதல்



முள்ளம்பன்றியை எதிரிகள் தாக்க வந்தால், முட்களை உசுப்பி ஒருவிதமான ஒலியைக் கிளப்பும். அதையும் மீறித் துரத்தினால்தான், துரத்தி வரும் விலங்கினை தன் உடலிலுள்ள முட்களால் தாக்குகின்றது.

உண்மையில் முள்ளம்பன்றிகள் தம் உடலில் உள்ள முட்களை வீசி எறிவதில்லை. அவை தமது வாலைத்தூக்கி நிலத்தில் அடிக்கும். அந்த வேகத்தில்தான் முட்கள் பறந்து சென்று எதிரி விலங்கின் உடம்பில் தைக்கின்றன.

எனினும் எதிரி விலங்குகளிடமிருந்து முள்ளம்பன்றிகளை அவற்றின் முட்கள்தான் காக்கின்றன.

## நீளமான பெயர்



திபெத் நாட்டின் ஆன்மீகத் தலைவர் தலாய் லாமாவின் முழுப் பெயரையும் இலகுவில் சொல்லிவிட முடியாது. அவரது பெயர் அவ்வளவு நீளம்.

'ஜெஸ்டம் ஜம்பல் சுவாங் லாப் ஷாங் பிஷி டென்சிங் இயாட்ஷா சிகன் வங்கூர் ஷூம்பா கெட்வுன் மபால் தேபல் ஷாங்கோ' என்பது தான் அவரது முழுப்பெயர்.


உலகிலேயே மிக நீளமான பெயர் கொண்டவர் இவராகத்தான் இருக்கும்.

## லேடீஸ் ஹாற்

ஆல்ப்ஸ் மலைத் தொடரில் படத்தில் இருப்பது போன்ற கல்தூண்கள் காணப் படுகின்றன. இவையனைத்தும் இயற்கையாகவே உருவானவை.

இந்தக் கல் தூண்கள் ஒவ்வொன்றும் 30 மீட்டர் உயரமானது. அடிப்பகுதி பருத்தும் மேலே செல்லச் செல்ல குறுகியும், தலைப் பகுதியில் தொப்பியைக் கவிழ்த்தது போன்றும் இவை காணப்படுகின்றன.

இக் கல் தூண்களை 'லேடீஸ் ஹாற்' (LADIES HAT)என்று குறிப்பிடுகின்றனர். இவற்றின்மீது அழகிய டிசைன்கள் இயற்கையாக அமைந்துள்ளன.



இந்தக் கல்தூண்கள், பல வருடங்களுக்கு முன் பாறைகளாக இருந்து மழையாலும், காற்றாலும் அரிக்கப்பட்டு இப்படி உருவாகியிருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

### இப்படிப் பார்த்தால் ஆள். தலைகீழாய்ப் பார்த்தால்....?



விடை: எலி

www.padippakam.com

காவரின் வாயை உடைத்த இன்ஸ்பெக்டர் பலராமன் உள்ளே நான்காய் மடித்து வைக்கப்பட்டிருந்த கடிதத்தை வெளியே எடுத்தார்.

கம்ப்யூட்டரில் ப்ரிண்ட் அவுட் எடுத்த தாள் அது. மடிக்கப்பட்ட தாளுக்குள் சுக்கல் சுக்கலாய் கிழிக்கப்பட்ட ஒரு ஃபோட்டோவின் துணுக்குகள்.

பலராமன் அந்த ஃபோட்டோவின் துணுக்குகளைப் பத்திரமாய் ஒரு பேப்பரில் கொட்டிக் கொண்டு, அந்த பிரிண்ட் அவுட் தாளில் கொட்டை எழுத்துக்களில் பதிவாகியிருந்த வாசகங்களைப் படித்தார்.

பிரதாப்!

**குட்பை டு யூ. நீ எனக்குக் கொடுத்த உன் ஃபோட்டோ உனக்கே திரும்பி வருகிறது, சுக்கல் சுக்கலாய். கிழிபட்டது உன் ஃபோட்டோ மட்டுமல்ல. என் இதயமும் கூடத்தான்.**

இப்படிக்கு,
அன்பில்லாத,
பூவிழி.


இன்ஸ்பெக்டர் பலராமன் தனக்குப் பக்கத்தில் நின்றிருந்த ஏ.ஓ.குருமூர்த்தியைத் திரும்பிப் பார்த்தார். அந்த பிரிண்ட் அவுட் தாளைக் காட்டிக் கொண்டே கேட்டார்.

"யார் அந்த பிரதாப்...?"

"தெரியலையே ஸார்... லெட்டரையும், கிழிக்கப்பட்டிருக்கிற இந்த ஃபோட்டோவையும் பார்க்கும் போது இது ஏதோ காதல் விவகாரம் மாதிரித் தெரியுது..."

பலராமன் கிழிபட்ட அந்த ஃபோட்டோத் துணுக்குகளைப் பொருத்திப் பார்க்க முயன்றார். ஃபோட்டோ சின்னச் சின்னத் துண்டுகளாய் கிழிபட்டிருந்ததால் அந்த முயற்சி ஆரம்பத்திலேயே தோற்றுப் போயிற்று.

"இதை மெதுவாய்த்தான் பொருத்திப் பார்க்க வேண்டும்." சொன்ன



பலராமன் அந்த ஃபோட்டோ துணுக்குகளையும், லெட்டரையும் அதே கவரில் போட்டுப் பத்திரப்படுத்திக்கொண்டு குரு மூர்த்தியை ஏறிட்டார்.

"இப்படியொரு காதல் விவகாரம் பூவிழிக்கு இருக்கிறது அவளோட வீட்டுக்குத் தெரியாதுன்னு நினைக்கிறேன். தெரிஞ்சிருந்தா பூவிழியோட அப்பா நீலமேகம் சொல்லியிருப்பார்."

"ஒரு வேளை மறைச்சிருந்தா.....?"

"எதுக்கும் ஃபோன் பண்ணிக் கேட்டுடலாம்" பலராமன் அதே அறையின் மூலையில் இருந்த டெலிஃபோனை நோக்கிப்போய், வீட்டிலிருந்த நீலமேகத்துக்கு டயல் செய்தார். உடனே அவர் லைனில் கிடைத்தார்.

"மிஸ்டர் நீலமேகம், நான் இன்ஸ்பெக்டர் பலராமன் பேசறேன். ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ். நீங்க இப்போ இருக்கிற மனநிலையில் உங்களைத் தொந்தரவுபடுத்தறது சரியில்லைத்தான். இருந்தாலும் உங்க மகள் பூவிழி சம்பந்தமா சில விஷயங்களை உடனே க்ளாரிஃபை பண்ணிசிட்டா மேற்கொண்டு நடத்தும் விசாரணைக்கு அது ரொம்பவும் உதவியாக இருக்கும்..."

மறுமுனையில் நீலமேகம் குரல் தழதழத்தார். "இன்ஸ்பெக்டர்! என்னோட டாட்டர் பூவிழி யார்க்கும் மனசளவில்கூட தீங்கு நினைக்காதவ. அவளை இப்படிக் குரூரமா கொலை பண்ண யார்க்கு எப்படி மனசு வந்ததுன்னு தெரியலை. கொலையாளி யாராக இருந்தாலும் உடனடியா கண்டுபிடிக்கப்படணும்ங்கிறதுதான் என்னோட இப்போதைய ஆதங்கம்."

"உங்க ஒத்துழைப்புக்கு ரொம்பவும் நன்றி மிஸ்டர் நீலமேகம். இப்ப நான் பூவிழியோட ஆபீஸ் கன்ஸல்டன்ஸி க்யூப்பிலிருந்து பேசிட்டிருக்கேன். ஆபீஸில் பூவிழியோட டேபிளை சோதனை போட்ட போது ஒரு லெட்டரும், சுக்கல் சுக்கலாய்க் கிழிக்கப்பட்டிருந்த ஓர் இளைஞனின் புகைப்படமும் கிடைச்சது. அந்த இளைஞரோட பேர் பிரதாப். லெட்டரில் இருந்த வாசகம் இதுதான். படிக்கிறேன் கேளுங்க. 'பிரதாப்! குட் பை டு யூ! நீ எனக்குக் கொடுத்த உன் ஃபோட்டோ உனக்கே திரும்பி வருகிறது, சுக்கல் சுக்கலாய். கிழிபட்டது உன் ஃபோட்டோ மட்டும் அல்ல; என் இதயமும் கூடத்தான். இப்படிக்கு அன்பில்லாத பூவிழி."

நீலமேகம் மறுமுனையில் பதறினார்.

"இன்ஸ்பெக்டர்...! இது என்ன புதுப்பிரச்சனையாய் இருக்கிறது...?"

"எந்த ஒரு கேஸையும் இன்வெஸ்டிகேட் பண்ணும்போது புதிது புதிதாய் விஷயங்கள் வெளிப்படுவதைத் தவிர்க்க முடியாது. உங்க பொண்ணோட காதல் விவகாரம் நிஜமாகவே உங்களுக்குத் தெரியாதா?"

"தெரியாது... ஆனா..."

"ஆனா.... என்ன... சொல்லுங்க..."

"காதல் விவகாரம்னு நீங்க சொன்னதால போன மாசம் நடந்த ஒரு விஷயம் என்னோட ஞாபகத்துக்கு வருது."

"சொல்லுங்க..."

"போன மாசம் வீட்டுக்கு வேண்டிய சில பர்னிச்சர் சாமான்களை வாங்கிறதுக்காக ஒரு வுட் கிராஃப்ட் கடைக்குப் போயிருந்தோம். நாங்க ஆட்டோவில் கிளம்பிப் போயிட்டிருக்கும்போதே ஒரு மாருதி ஜென் எங்க ஆட்டோவை ஃபாலோ பண்ணிட்டு வந்தது. நாங்க பர்னீச்சர் மார்ட்டுக்குப் போய் மெட்டீரியல்ஸ் பார்த்துட்டிருக்கும் போது கடைக்குக் கொஞ்சம் தள்ளி அந்தக் கார் நின்னுட்டிருந்தது. ட்ரைவிங் சீட்டில் இருந்த இளைஞன் கண்ணாடியைப் பாதி இறக்கி விட்டுட்டு பூவிழியையே பார்த்துசிட்டு இருந்தான். பொதுவாகவே நானும் பூவிழியும் வெளியே கிளம்பினா இந்த மாதிரித் தொந்தரவுகள் வர்றதுண்டு. அதை நானும் சரி, பூவிழியும் சரி பொருட்படுத்தவே மாட்டோம்.... ஆனா அன்னிக்கு கார்ல வந்த இளைஞன் எம்மனதுக்கு ஒரு நெருடலா இருந்தான்."

"நெருடலான்னா... எப்படி...?"

"பூவிழியும் அந்த இளைஞனை ஜாடை ஜாடையா பார்த்த மாதிரி இருந்தது."

கிரைம் சக்கரவர்த்தி
ராஜேஸ்குமார்

பலராமன் ஆர்வமானார்.

"பூவிழியே அந்த இளைஞனைப் பத்தி ஏதாவது சொல்லுவாளான்னு நினைச்சேன். அவ கடைசி வரைக்கும் சொல்லலை. நானும் அந்த விஷயத்தை அதோடு விட்டுட்டேன். பட் பூவிழியைப் பற்றி ஒரு விஷயத்தை உங்க கிட்ட சொல்லியாகணும் இன்ஸ்பெக்டர்... பூவிழி அப்படி யாரையாவது காதல் பண்ணியிருந்தா அதை என்கிட்ட சொல்லியிருப்பா. ஏன்னா அவளுக்கு நான்

**இதுவரை**

**பாக்கியத்தின் மகள் வர்ணாவின் நாய் பிங்கிக்கு 'டிஸ்டெம்பர்' எனப்படும் கொடிய நோய் வருகிறது. அதனை காப்பாற்றவே முடியாது என்று டாக்டர்கள் கைவிரிக்கின்றனர். ஆனால் அந்த நாய் அதிசயமாக உயிர் பிழைக்கிறது. இதேவேளை, சொர்ணம், நீலமேகம் தம்பதியின் மகள் பூவிழி கொலையாகிறாள். போலீஸ் விசாரிக்கிறது.**

**இனி...**

மாப்பிள்ளை பார்க்கிற விஷயம் நல்லாவே தெரியும்..."

"நீங்க சொல்றதிலிருந்து எனக்கு ஒரு விஷயம் புரியுது மிஸ்டர் நீலமேகம். பூவிழி யாரையோ லவ் பண்ணியிருக்கா. ஆனா அந்தக் காதல் ஏதோ ஒரு காரணத்தால ஃபெய்லியராகியிருக்கலாம். அந்த தோல்வியின் எதிரொலிதான் இந்த குட்பை லெட்டரும், சுக்கல் சுக்கலாய் கிழிக்கப்பட்ட ஃபோட்டோவும். காதல் தோல்வியடைஞ்ச பின்னாடி அதை உங்க கிட்ட சொல்ல வேண்டிய அவசியம் இல்லையே..."

"யூ... ஆர்.... கரெக்ட் இன்ஸ்பெக்டர்....! பூவிழி தன்னோட லெட்டர்ல குறிப்பிட்டிருக்கிற பிரதாப், அன்னிக்கு மாருதி ஜென்னில் வந்த இளைஞனாகக் கூட இருக்கலாம்...."

"அந்த சம்பவத்துக்குப் பிறகு அந்த இளைஞனை நீங்க பார்க்கலையா?"

"இல்லை..."

"அந்த இளைஞனை மறுபடியும் பார்த்தா உங்களாலே ஐடெண்டிஃபை பண்ணிக்க முடியுமா?"

"கஷ்டம்தான்... காரின் பாதிக்கண்ணாடி வழியா தெரிஞ்ச அவனோட முகத்தைத்தான் பார்த்தேன். பட் அவன் யாரங்கிறதை கண்டு பிடிக்க ஒரு வழி இருக்கு. அந்த மாருதி ஜென்னோட கார் நெம்பர் ஃபேன்ஸி நெம்பர். PY 2000. கார் நெம்பர் மனசுல பதியற மாதிரி சுலபமா அதை ஞாபகம் வெச்சுக்க முடிஞ்சது..."

"இந்தத் தகவல் போதும் மிஸ்டர் நீலமேகம். ஒரு மணி நேரத்துக்குள்ளே அந்த இளைஞனை மடக்கிடுவோம். பூவிழி கேஸ்ல இப்போ புதுசா ஒரு வெளிச்சம் அடிச்சிருக்கு. இந்த வெளிச்சத்திலேயே கொலையாளி யாரங்கிறதை கண்டு பிடிச்சுடலாம்..."

சந்தோஷமாய் ரிஸீவரைச் சாத்தினார் இன்ஸ்பெக்டர் பலராமன்.

***

டாக்டர் ஈஸ்வரைப் பார்த்து பிங்கி உர்ர்ர்ரென்று தன் சின்னஞ்சிறு ஊசி முனைப் பற்களைக் காட்டி உறுமியதும், வர்ணா அதைச் சட்டென்று கையில் எடுத்துக் கொண்டாள்.

டாக்டர் ரத்னவேல் வர்ணாவை வியப்பான பார்வையால் நனைந்து கொண்டே கேட்டார்.

"என்னமோ இது.. நாய்க்கு என்னாச்சு, ஏன் இப்படி உறுமுது?"

வர்ணா ஈஸ்வரைப் பார்த்துப் புன்னகைத்தாள். "டாக்டர்...! பிங்கிக்கு யாராவது கூலிங்க்ளாஸ் போட்டுகிட்டு அதைத் தொட்டா பிடிக்காது. க்ளாஸை ரிமூவ் பண்ணிட்டு பிங்கியைத் தொட்டுப் பாருங்க..."

டாக்டர் ஈஸ்வர், தான் அணிந்திருந்த குளிர் கண்ணாடியைக் கழற்றி சர்ட் பாக்கெட்டில் வைத்துக் கொண்டு பிங்கியைத் தொட்டார். அது காதுகளைத் தாழ்த்திக் கொண்டு வாலை ஆட்டியது.

ஈஸ்வர் சொன்னார்.

"பொதுவா நாய்கள் இப்படி இருக்காது. கூலிங்க்ளாஸ் போட்டா இந்த நாய்க்கு ஏன் பிடிக்காது? இதுக்கு ஏதாவது காரணம் இருக்கா...?"

"காரணம் என்னவாக இருக்கும்னு எனக்கு சொல்லத் தெரியலை டாக்டர். ஒரு நாள் என் ப்ரெண்ட் ஒருத்தி கூலிங்கிளாஸ போட்டுக்கிட்டு வீட்டுக்கு வந்தா. அவளை இது உள்ளேயே விடலை. ஒரே குரைப்பும், உறுமலும்தான். அவ க்ளாஸை கழற்றின பிறகு அமைதியாயிடுச்சு. நானே கூலிங்க்ளாஸ் போட்டுகிட்டாலும்கூட உறுமும்."

ஈஸ்வர் பிங்கியைக் கையில் வாங்கினார். "நாய் கொஞ்சம் பெக்குலியர் டைப்பாத்தான் இருக்கும் போலிருக்கு... மொதல்ல இதனோட பிளட்டை டெஸ்ட் பண்ணிப் பார்க்கணும்..."

"நாயை நல்ல பிடிச்சுக்கோம்மா..."

வர்ணா, பிங்கியை ஈஸ்வரிடமிருந்து வாங்கி மார்போடு அணைத்தபடி பிடித்துக் கொள்ள, ரத்னவேல் நாயின் பின்புறத்தில் ஊசியை சொருகி மெல்ல இழுக்க கண்ணாடி ஸிரிஞ்சில் ரத்தம் ஏறியது.

ரத்தம் பார்வைக்குக் கிடைத்ததும் ரத்னவேலும், ஈஸ்வரும் அதிர்ந்து போய் நிமிர்ந்தார்கள்.

பிங்கியின் ரத்தம் சிவப்பாய் இல்லை. ஊதா நிறம். (தொடர்ந்து வரும்)

## நடிகை ஸ்ரீவித்யா தன் அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறார்




இது வேலைக்குச் சென்று குடும்ப பாரத்தைச் சுமக்கும் எல்லாப் பெண்களுக்குமே நேரும். அப்போது தான் வசமாக யாரிடமாவது மாட்டிக்கொள்வார்கள்.

அம்மா சொன்னதெல்லாம் புத்தியில் உறைக்கவில்லை. அப்போதுதான் அம்மா இன்னொரு யோசனையையும் சொன்னார்... "இதோபார்... ஒரு மூணுமாசம், படமே ஒத்துக்காதே. நான் கொடுக்கற கூழோ, கஞ்சியோ குடிச்சிட்டு வீட்டோடு இரு" என்றார்.

அப்பொழுதுதான் 'அபூர்வ ராகங்கள்' படம் ரிலீஸ் ஆனநேரம். என் மார்க்கெட் உச்சத்தில் இருந்தது. நடிகர், தயாரிப்பாளர் பாலாஜி வந்து 'தியாகம்' படத்துல சிவாஜிக்கு ஜோடியாக நடிக்கத் தேதி கேட்கிறார். ஒரு நடிகைக்கு வாழ்க்கையின் மிகப் பெரிய லட்சியமே, சிவாஜி சாரோட நடிக்கிறதுதான். நானோ பிடிவாதமா மறுத்துட்டேன்.

தேவர் ஃபிலிம் ஸார், பி.மாதவன் சார்லாம் வந்து தேதி கேட்கிறாங்க. 'முள்ளும் மலரும்' படத்தில் ரஜினி ஜோடியாக நடிக்க எனக்கு வாய்ப்பு வந்தது. நான் மறுத்த பிறகுதான் 'படாபட் ஜெயலட்சுமி' நடித்தார்.

அம்மா சொன்னதை ஜார்ஜிடம் சொன்னதும், "நான் உன்னைத்தான் விரும்பறேன். 'வித்யா'ங்கிற நடிகையை அல்ல. அது உங்கம்மாவுக்குப் புரியணும். அதனால நீ நடிக்காதே" என்றார்.

அம்மாவிடம் அவரைப் பற்றி நிரூபித்து என் திருமணத்திற்கு சம்மதம் வாங்க, வந்த படங்களையெல்லாம் நிராகரித்தேன்.

என்னைச் சிக்க வைக்கிற வலையை நானே எடுத்து என்மீது சுற்றிக் கொண்டேன்.


'அபூர்வ ராகங்கள்' படத்தில் ரஜினியுடன்

### சிக்கல்

ப்ரியமுள்ள வாசகர்களே!

ஒரு தர்மசங்கடமான சூழ்நிலையில் தற்போது உங்களை சந்திக்கிறேன். செய்தித்தாள்களைப் படிக்கிற வாசகர்களுக்கு என் நிலை புரிந்திருக்கும்.

நான் உழைத்துச் சம்பாதித்துக் கட்டிய வீட்டிலிருந்து என் கணவரால் விரட்டியடிக்கப்பட்ட கதையைத்தான் உங்களோடு இத்தனை வாரங்களாகப் பகிர்ந்துகொண்டு வந்தேன்.

"என் வீட்டை மீட்பதற்காக நான் வழக்கு தொடர்ந்துள்ளேன். வழக்கு முடியும்வரை நான் எதுவும் பேசமாட்டேன். வழக்கு முடியட்டும்." என்று சொல்லியிருந்தேன். பல வருடப் போராட்டத்திற்கு பிறகு வழக்கில் எனக்குச் சாதகமாகத் தீர்ப்பு வந்தது.

அந்தச் செய்தியைப் பார்த்துவிட்டு சுதாங்கன் என்னை எழுதச் சொன்னார்.

அதன் பின்தான் இந்தத் தொடர். முன்பு (1987ல்) ஏற்பட்ட அதே சிக்கல் இப்போது மீண்டும் வந்திருக்கிறது.

தீர்ப்பை எதிர்த்து ஜார்ஜ் தாமஸ், அதாவது என் 'கணவர்', உயர்நீதிமன்றத்தில் அப்பீல் செய்து இடைக்காலத் தடை வாங்கியுள்ளார்.

இந்தத் தொடரில், நான் சொன்ன, [illegible]

**ஸ்ரீவித்யா**

பாதகமாகப் போய்விடக்கூடாது. நான் சட்டத்தை மதிப்பவள். நீதி தேவதையின் கருணை எனக்கு கிடைக்கும் என்கிற நம்பிக்கை நிச்சயம் எனக்குண்டு. வழக்கு முடிந்ததும், நிச்சயம் மறுபடியும் எழுத வருவேன்.

அதேசமயம், இன்னொரு விஷயத்தையும் உங்கள் முன், தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஓரிரு வாரத்திற்கு முன், ஜார்ஜ் ஒரு பிரபல வாரப் பத்திரிகையில் என்னைப் பற்றியும், என் தாயாரைப் பற்றியும் மிகவும் தரக்குறைவான முறையில் பேட்டி அளித்திருந்தார்.

கோர்ட்டில் பலர் முன்னால் சொன்னதை இப்போது பத்திரிகை வாயிலாகச் சொல்லியிருக்கிறார். அவ்வளவுதான். அவருடைய விமர்சனத்தைப் பற்றி நான் கவலைப்படவில்லை.

ஆனாலும் வாசகர்களுக்கு உண்மையைத் தெளிவுபடுத்த வேண்டியது என் கடமை.

'பலருடன் தொடர்புடையவள்' என்று என்னைப் பற்றி சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்டப் பெண்ணை எதற்காக இவர் திருமணம் செய்து கொண்டார்– தவறான பெண், வசதி இல்லாத ஏழைப் பெண்ணாக இருந்தால்தியாக உள்ளத்துடன் இவர் திருமணம் செய்து கொண்டிருப்பாரா?

சரி, என்மீது அனுதாபப்பட்டு பெருந்தன்மையோடு எனக்கு வாழ்க்கை கொடுத்தார் என்றே வைத்துக் கொள்வோம். அப்படிப்பட்ட கணவருக்கு நான் உண்மையாக இல்லை என்று தெரிந்தவுடனேயே என்னை விவாகரத்து செய்திருக்க வேண்டியது தானே?

'நடத்தை கெட்ட மனைவி வேண்டாம்' என்கிறபோது அவள் தவறான வழியில் சம்பாதித்த பணம் மட்டுமே வேண்டியிருந்ததா?

அந்தப் பணத்தில்தானே ஒன்பது வருடங்கள் இவர்கள் குடும்பம் வாழ்ந்தது. எப்படி அத்தனை வருடங்கள் ஒரு தவறான பெண்ணுடன் வாழ்ந்தார்?

அப்படிச் செய்யாததற்குக் காரணம், நான் 'பொன் முட்டையிடுகிற வாத்து' கணவன் என்கிற போர்வையில் வசதியாக வாழவும், என் சொத்துக்களை அபகரிக்கவும் அவர் போட்ட திட்டம்தான் எங்கள் திருமணம். என் வெகுளித்தனத்தை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டார்.

வீட்டை விட்டு வெளியேறியதும் நான்தான் 'விவாகரத்து வேண்டும்' என்று வழக்கு தொடர்ந்தேன். இரண்டரை வருடங்களுக்கு மேலாக விவாகரத்து வழக்கில் அவர் மனுச் செய்யவேயில்லை.

அந்தத் தீர்ப்பும் எனக்கு சாதகமாகி விடும் என்று தெரிந்ததும் மனுச் செய்தார். விவாகரத்து கிடைத்துவிட்டால் என் வீட்டின் மீது அவருக்குள்ள உரிமை போய் விடும் என்பதால் இன்றுவரை வழக்காடிக் கொண்டிருக்கிறார்.

### புலம்பல்

இந்த உண்மையெல்லாம் தெரிந்து கொள்ளாமல் வழக்கில் தோற்றுப் போன ஒருவரின் புலம்பலைப் பாரம்பரியம் மிக்க பத்திரிகை வாங்கிப் போட்டிருக்கிறது.

என் தரப்பு வாதத்தைக் கேட்க வேண்டும் என்கிற அடிப்படை பத்திரிகை தர்மத்தைக்கூட கடைப்பிடிக்க அவர்களுக்குத் தோன்றவில்லை.

இதில் வேடிக்கை என்னவென்றால் ஜார்ஜிடம் பேட்டி எடுக்க அவருடைய தொலைபேசி என்னை என்னிடமே கேட்டதுதான்!

நான் விசாரித்தபோது "ஒரு மோசடி வழக்கு அவர் மீது உள்ளது; அதை விசாரிப்பதற்காகப் போகிறோம்" என்றார் அந்த நிருபர்.

'வீட்டை ஜப்தி செய்யப்போகிறார்கள்' என்று என் தாயார் இவரிடம் பணம் கேட்டதாகச் சொல்லியிருக்கிறார் ஜார்ஜ். அப்படிப்பட்ட நிலை எப்போதும் வந்ததில்லை.

வீட்டின் பேரில் எல்.ஐ.சி.யில் கடன் இருந்தது. அதை வாங்கியவர் அங்கே பணத்தைக் கட்டிவிட்டு வீட்டை வாங்கிக் கொண்டார் என்பதுதான் உண்மை. ஜார்ஜ் தயாரித்த படத்தில் நான் நடித்துக்கொண்டிருந்தேன். அதற்கான சம்பள பணத்தைத்தான் என் தாயார் கேட்டார்.

ஒருபுறம் நீதிமன்றத்தில் தடை; இன்னொருபுறம்: கோர்ட்டை நம்பாமல் எனக்கு வேண்டியவர்களுக்கு, சுதாங்கன் உட்பட பலருக்கும் மிரட்டல்கள். என்னைப் பலவீழக்ச் செய்கிற முயற்சியில் அந்தப் பெரிய பத்திரிகையின் பேட்டியும் ஒன்று. ஆனால், இதற்கெல்லாம் நான் பயப்படமாட்டேன்.

கடவுள் நம்பிக்கை அதிகம் உள்ளவள் நான். எல்லாவற்றையும் அவன்மீது போட்டுவிட்டு மீண்டும் விரைவில் உங்களைச் சந்திக்கிறேன்.

'இந்த வழக்கிலும் நான் வெற்றிபெற எனக்காகப் பிரார்த்தனை செய்யுங்கள்.' என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

வருத்தத்துடன் தற்காலிகமாகப் பிரியும் உங்கள் தோழி!

ஸ்ரீவித்யா.


படிப்பகம்

www.padippakam.com

**தமிழ் நாட்டின் முற்போக்கு எழுத்தாளர் ஜெயகாந்தன். அவரது எழுத்துக்கள் உலகப் பிரசித்தமானவை. பலகோடி வாசக நெஞ்சங்களை வசீகரம் செய்தவை.**

**மு.க.சுருக்கம்**

**அனந்தராமன் ஒரு பத்திரிகையாளன். அவனது மனைவி கோகிலா. இருவருக்கும் இடையே மன ஒற்றுமை நிலவவில்லை. இருவருக்கு இடையேயும் மனஸ்தாபங்கள் ஏற்படுகின்றன. கோகிலாவின் பால்ய நண்பன் அவளை சந்திப்பதும் அனந்தராமனுக்கு பிடிக்கவில்லை.**

**இனி...**

# 08

# கோகிலா என்ன செய்து விட்டாள்?

# ஜெயகாந்தன்

அவள் வழக்கம் போல அவனுக்குக் காபி கொண்டு வந்தாள். அவன் மௌனமாகக் காபியைக் குடித்துக் கொண்டே இடையில் ஒரு முறை விழி உயர்த்தி அவளைப் பார்த்தான். அப்போதுதான் அவன் திடீரென்று அவளிடம் அப்படிக் கேட்டான்:

'நாம ரெண்டு பேரும் மனசுக்குப் பிடிக்காத....."

அதற்கு ஓர் இங்கிதமான பதிலை அவள் சொல்லக் கூடுமென்று நப்பாசையினாலேயே அப்படிக் கேட்டான். அதைத் தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் இப்போது எண்ணிப் பார்த்து 'எவ்வளவு பட்டாலும் எனக்குப் புத்தி வருவதில்லை' என்று தன்னைத்தானே நொந்து கொண்டான்.

அவன் ஆபீசுக்கு வந்த பிறகு வேறு மனிதனானான். சென்ற வார அனுபந்தத்தில் அவனது பகுதியாகிய உலகத்தின் மீது ஒரு கண் கட்டுரைக்கு வந்திருந்த கடிதங்களைப் படித்தபோது தனது சொந்த வாழ்க்கையின் அவமானங்களையெல்லாம் மறந்து தனது அறிவு ஜீவிதத்தின் பெருமைகளில் மூழ்கிப் போனான். அந்தப் போதையிலேயே இந்த வாரக் கட்டுரையை எழுதி முடித்தான்.

அச்சுயந்திரங்களின் ஆரவாரம் மிகுந்த ஆபீஸ் வாழ்க்கை எவ்வளவு அமைதியாக- நிம்மதியாக- சுகமாக இருக்கிறது என்று எண்ணியபடியே மீண்டும் பொருமலும் முணு முணுப்பும் சோகமும் கண்ணீரும் மிகுந்த தனது அகவாழ்க்கைக்குத் தன்னைப் பலியிட்டுக் கொள்ள ஆயத்தமாகி அவன் வீட்டுக்குப் புறப்பட்டான்.

இப்படிப்பட்ட புயலடித்த பிறகு கொஞ்ச நாட்களுக்கு அவன் தாம்பத்திய வாழ்க்கையில் ஒரு அமைதி நிலவும். அந்த அமைதியே மற்றொரு புயலுக்குச் சூசகம் என்று அவர்களுக்குப் புரிந்தாலும்கூட அந்த அமைதியில் அவர்கள் இருவருமே ஒரு வகை மனநிறைவு காண்பார்கள்.

மாலையில் வீடு திரும்பும்போது அவன் மனம் அமைதியாக இருந்தது. அவளிடம் போய்த் தனது வேலை மாற்ற உத்தரவு குறித்துப் பேசவேண்டும் என்று ஆர்வத்தோடும், அதன் மூலம் தனது வாழ்க்கையிலேயே ஒரு புதிய திருப்பம் ஏற்படலாம் என்று நம்பிக்கையோடும் அவன் வீட்டுக்குப் போனான்.

'முதலில் அந்த உத்தரவுக்காகத் தனது கோபத்தை அவளிடம் காட்டிக் கொள்ள வேண்டும். அவள் அதற்காகச் சமாதானம் கூறித் தன்னைச் சாந்தப் படுத்துவாள் பின்னர் அவளுக்காக வேண்டி இதைத் தான் ஒப்புக் கொள்வதாக-அதுதானே உண்மை-அவளை உணரச் செய்ய வேண்டும்' என்றெல்லாம் யோசித்தவாறே அவன் வீட்டை அடைந்தான்.

தான் சம்பந்தப்பட்ட எந்த விஷயத்திலும் தானாக ஒரு முடிவுக்கு வரமுடியாமல் தன்னை அவளிடம் கட்டுப்படுத்திக் கொண்டு தனது நிலைமையை எண்ணி அதற்காக ஒரு புறம் மகிழ்ச்சியும் அதை அவள் புரிந்து கொள்ளவில்லையே என்பதற்காக ஒரு புறம் வருத்தமும் கொண்டு குனிந்த தலையுடன் மாடிப்படிகளில் ஏறிக்கொண்டிருந்தபோது... அந்தப் படிக்கட்டின் வளைந்து திரும்பும் திருப்பத்தில் நின்று யதேச்சையாகத் தலை நிமிர்ந்து பார்க்கையில் தன் வீட்டுக்கதவு பூட்டப்பட்டு இருப்பது கண்டு முதலில் ஒரு வித எரிச்சலும் அதைத் தொடர்ந்து திடீரென நெஞ்சிலடைத்த திகிலுமாய் அனந்தராமன் ஸ்தம்பித்து நின்றான்!"



'...ஓ! கோகிலா என்ன செய்து விட்டாள்!'

"மாமா, அம்மா சாவி குடுத்தா."

யந்திரம் போல் திரும்பிய அனந்தராமன் கீழ்ப்படியில் நின்று தன்னை நோக்கிச் சாவியை நீட்டிய வண்ணம் ஏறிவரும் சிறுமியை எதிர்கொண்டு இரண்டு படி இறங்கி வந்து அந்தச் சாவியை வாங்கிக் கொண்டான். அவனது பார்வை அந்தச் சிறுமியை விலகிக் கீழ் வீட்டுச் சன்னலருகே நின்றிருந்த வீட்டுக்கார அம்மாளை அணுகி, 'வேறு ஏதாவது விசேஷம் உண்டா?' என்று கேட்கத் தவித்தது. வீட்டைத் திறந்து பார்த்தால் அந்த விசேஷம் தெரிந்து விடாதா என்ற எண்ணம் வந்ததும் அவன் உடலில் ஒரு அவசரம் மிகுந்தது. தனது உள்ளில் விளைந்த அவசரம் வெளியே தெரியாதவாறு குனிந்த தலையுடன் அவன் மெதுவாகவே படியேறி மேலே சென்றான். அந்தச் சிறிய முன் ஹாலில் பிரவேசித்த உடனேயே அந்த விசேஷம் அவனுக்கு விளங்கிவிட்டது.

ஹாலில் போடப்பட்டிருந்த பிரம்பு நாற்காலிகளிலே எழுதி எழுதிக் கசக்கி எறிந்த இரண்டு மூன்று காகிதப் பந்துகள் கிடந்தன. அனந்தராமன் தனது கையிலிருந்த தோல்பையை அந்த நாற்காலியின் நடுவே கிடந்த சிறிய மேஜையில் மேல் வைத்த பின் அந்தக் கசக்கல்களில் ஒன்றை எடுத்துப் பிரித்துப் பார்த்தான்.

'அன்புள்ள...' என்று ஆங்கிலத்தில் எழுத ஆரம்பித்து 'இல்லை' என்பதுபோல் அதை அடித்துக் கிறுக்கி இருந்தது.

மற்றொரு காகிதத்தை எடுத்தான். அதில் மொட்டையாக ஆரம்பித்திருந்தது. 'நான் போகிறேன். எங்கே போயிருப்பேன் என்று உங்கள் இஷ்டப்படி நீங்கள் முடிவு செய்து கொள்ளலாம்' என்று எழுதி அதுவும் கிறுக்கப்பட்டிருந்தது.

மற்றொன்று, என்னவென்று புரிந்து கொள்ள முடியாமல் பல சுக்கல்களாகக் கிழித்து இறுகப் பிசையப்பட்டு இருந்தது.

ஆனால் அதில் அவள் நிறையவே எழுதியிருந்தாள். அந்தச் சுக்கல்களைப் பிரித்துச் சேர்த்து ஒட்டிப் படித்துப் பார்க்க அவனுக்குப் பொறுமையும் இல்லை; அது அவசியமென்றும் தோன்றவில்லை. எனவே அந்தக் குப்பைகளையெல்லாம் ஒன்று திரட்டிப் பொறுக்கி எடுத்து மூலையில் இருந்த குப்பைக் கூடையில் எறிந்துவிட்டு அறைக்குச் சென்றான்.

அவளுடைய அந்தப் பீரோதிறந்து கிடந்தது. அதை அவள் மூட மறந்து இருக்க வேண்டும். அல்லது மூட வேண்டிய அவசியம் இல்லை என்று விட்டிருக்கவேண்டும். அந்த வெற்றுப் பீரோவைப் பார்க்கையில் மூல விக்கிரகம் களவு போன கோயிலைத் தரிசிப்பது மாதிரி அவனது உணர்ச்சிகள் ஒரு சூன்யத்தைத் தொட்டு உணர்ந்தன.

அந்த அறையில் கட்டப்பட்டிருந்த-சதா நேரமும் தோரணம் கட்டியது போல் அவளது துணிமணிகள் தொங்கிக் கொண்டிருக்கும்-அந்தப் பிளாஸ்டிக் கொடி வெறிச் சென்று கிடந்தது.

அந்த ரூமின் மறு கதவைத் திறந்து எட்டிப் பார்த்தான்.

சில மணி நேரங்களுக்கு முன் இந்த வீட்டில் ஒரு பெண் இருந்தாள் என்பதன் ஒரு சுவடுகூட இல்லாமல் அது ஒரு பிரம்மச் சாரியின் விடுதிபோல் காட்சி அளித்தது. அவன் மீண்டும் திரும்பித் தன் அறைக்கு வந்தான்.

அறையுள் ஜன்னல் ஓரமாய்க் கிடந்த அந்த டிரெஸிங்டேபிளில் அந்த இரட்டைப் போட்டோ பிரேமுக்குக் கீழே ஒரு கவர் இருந்தது: வழக்கமாக அதன்மீது இறைந்து கிடக்கும் எந்த அலங்காரச் சாதனமும் இப்போது இல்லை. அந்த டபிள் பிரேம் போட்ட ஸ்டாண்டில் தனித்தனியே செருகி வைக்கப்பட்டிருந்த அந்த இரண்டு படங்களில் ஒன்றை அவள் எடுத்துச் செல்ல மறந்து விட்டாளா? அல்லது விரும்பினால் அவனே எடுத்து எறியட்டும் என்று விட்டு விட்டாளா?

அவன் டிரெஸிங் டேபிளின் டிராயரை இழுத்துப் பார்த்தான். அதில் அவன் ஷேவிங்செட் மட்டும் இருந்தது. திறந்த டிராயரை மூடுவதற்கு முன் அவனது கை அந்த ஃபோட்டோ பிரேமை எடுத்தது. சற்று நேரம் அவளை அவன் உற்றுப் பார்த்தான். அந்தப் படம் அவர்களது திருமணத்திற்கு முன்பு எடுக்கப்பட்ட படம். அந்த முகத்தில் தவழ்கின்ற அந்தப் பிரபை, அவள் உள்ளே சுடர் விட்டுக் கொண்டிருந்த எதிர்கால வாழ்க்கையைப் பற்றிய கனவுகளின் பிரதிபலிப்பு! அவனது படம்கூட ரொம்ப காலத்துக்கு முன்பு எடுக்கப்பட்டதுதான். முரண்பாடுகளற்ற ஞானத்தின் கம்பீரம் மட்டுமே அந்த முகத்தில் குடிகொண்டிருந்தது.

'இப்போது எல்லாம் பழங்கதை!'

அவன் இரண்டு படங்களையும் மாறி மாறிப் பார்த்தான். அந்தக் கவரின்மீது ஒரு சுமைக்காக வைத்திருந்த அதை மீண்டும் டிரெஸிங் டேபிளின்மீது வைக்கும் போது, சுமை நீங்கியதால் பறந்து கீழே விழுந்திருந்த அந்தக் கவரைக் கையிலெடுத்தான். டிரெஸிங் டேபிளின் மீது பொருத்தியிருந்த கண்ணாடியில் தெரிந்த தனது பிம்பத்தைச் சற்று வெறித்து நோக்கினான்.

'ஓ! கோகிலா என்ன செய்து விட்டாள்?' என்று தன்னையறியாமல் முனகும் தனது உதடுகளின் அசைவைக் கண்ணாடியில் பார்த்தபோதுதான், தான் ஏதோ முனகிக் கொள்வதாக மட்டுமே அவனால் உணர முடிந்தது. தனது முகம் மிகவும் பரிதாபகரமாய் மாறித் திக்கற்ற வெறுமையில் கிடந்து தேம்பும் ஒரு குழந்தையைப் போல் தோற்றமளிப்பதைக் கண்டு தன்னிரக்க உணர்ச்சியினால் தனது கண்கள் கலங்குவதையும் அவனது கண்கள் கண்டன.

(கோகிலா.... தொடரும்)

---

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.**

**17**

# அரங்கம் அந்தரங்கம்

## கவியரசு கண்ணதாசன்

அவன் ஆசையோடு அதைச் சாப்பிட்டான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் கண்கள் இருளத் தொடங்கின; முகம் வேர்த்தது; நாக்கு குளறியது.

உடனே அதே அறையிலிருந்த டெலி ஃபோனை எடுத்தாள் கற்பகம். கமலநாதனுக்கு டெலிஃபோன் செய்தாள்.

கமலநாதன் வருவதற்குள் பிணமாகச் சுருண்டு விழுந்தான் ராஜசேகரன்.

கமலநாதன் உள்ளே நுழைந்தவுடனேயே கற்பகம் அழுதாள்.



முதலில் உண்மையைச் சொல்லிவிட நினைத்தாள். 'உண்மையைச் சொன்னாலும் கமலநாதன் காப்பாற்றுவார்' என்பது அவளுக்குத் தெரியும். ஆனாலும் ஒரு பொய்யைச் சொன்னாள்.

"எங்கிருந்தோ கேக் வாங்கிக்கொண்டு வந்து சாப்பிட்டார். இப்படி சுருண்டு விழுந்து விட்டார்." என்றாள்.

கமலநாதனுக்கு விஷயம் புரியாதா? அவரும் அந்த வீட்டில் ஊடாடுபவர்தானே?

"உண்மையைச் சொல்லுங்கள், அதனால் பரவாயில்லை. நான் காப்பாற்றுகிறேன்" என்றார்.

கற்பகம் பயந்துகொண்டே உண்மையைச் சொல்லிவிட்டாள்.

இப்போது ரகசியம் ராஜசேகரன் கையிலிருந்து கமலநாதன் கைகளுக்குப் போய்விட்டது.

கமலநாதனுக்கு வெகு நாட்களாக கற்பகத்தின்மீது ஒரு கண் உண்டு. ஆகவே கற்பகத்தைக் காப்பாற்றித் தன் கைக்குள் வைத்துக்கொள்ள முடிவு செய்தார். ஆம்புலன்சுக்கு டெலிஃபோன் செய்தார். சடலம் பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டது.

கமலநாதன் அந்த வழக்கைப் பதிவு செய்யும்போதே, 'தெருவில் சுருண்டு கிடந்ததாக'ப் பதிவு செய்தார்.

டாக்டர்களின் பரிசோதனைக்குப் பிறகு, 'அதிகம் குடித்ததால் மரணம் அடைந்ததாக'ப் பஞ்சாயத்தார் தீர்ப்பளித்தார்கள்.

"உங்களை நான் என்றைக்கும் மறக்க மாட்டேன்." என்று சொன்ன கற்பகம், ஒரு இலட்சம் ரூபாய்கள் கொண்ட ஒரு சூட்கேஸை அவரது கையில் கொடுத்தாள்.

அன்றைக்கு அது போதும் போல கமலநாதனுக்குத் தோன்றிற்று: ஆனால், 'என்றைக்காவது கற்பகம் வேண்டும்' என்ற எண்ணம் அவரது மனதை விட்டு நீங்கவில்லை.

❁❁❁

கல்யாணமாகாத பெண்ணொருத்தி பிற ஆடவன் முன் நின்று பேசப்பயப்படுவாள்.

தெருவில் நடக்க வேண்டிய அவசியம் வந்தால் தாய்க்குப் பின்னால் மறைந்து கொள்வாள்; வீட்டிலே கதவுக்குப் பின்னால் மறைந்து கொள்வாள்.

வயதான மூதாட்டிகள்கூட, 'பிற ஆடவன் தன்னைப் பார்க்கிறான்' என்று தெரிந்தால், ஏற்கனவே சரியாக இருந்த முந்தானையைச் சரிசெய்து கொள்வார்கள்.

பண்பாடு தமிழ்ச் சமுதாயத்தின் முதல் அங்கம்.

'வாழ்க்கைச் சுகம்' என்பது நாலு வேலிகளுக்குள் அடங்கியதே தவிர, காட்டாற்று வெள்ளம் அல்ல.

வசதியில்லாத காரணத்தால், முப்பது நாற்பது வயதுவரைக் கூடக் கல்யாணமாகாமல் கண்ணீர் வடிக்கும் பெண்கள் உண்டு.

ஆயினும் அவர்கள் கண் தவறிப் பார்த்ததில்லை; கால் தவறி விழுந்ததில்லை.

தனிமையின் துயரத்தை உணரக்கூடியவர்கள்தான் அவர்களும், எவ்வளவுதான் துயரம் என்றாலும், தத்துவத்தை மறந்து லஜ்ஜை கெட்ட நிலையில் இருந்ததில்லை.

விஞ்ஞானம் வசதிகளை வளர்த்தது. வசதிகள் ஆடம்பர நாகரிகத்தை வளர்த்தன; ஆடம்பர நாகரிகம் அடிப்படைப் பண்பாடுகளைச் சீர்குலைத்துவிட்டது.

இராமனையே தேடியிருந்த சீதை, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்புவரை தமிழகத்தின் ஒவ்வொரு வீட்டிலும் குடியிருந்தாள்.

பழைய சமுதாய அமைப்பு அற்புதமாக இருந்தது. பெண்கள் சத்தம்போட்டுச் சிரிப்பதைக் கேட்பதே அபூர்வமாக இருந்தது. அந்நாளில் ரவிக்கை போடும் வழக்கம் கூட இருந்ததில்லை.

ரவிக்கை இல்லாமலேயே முந்தானையால் உடம்பை மூடியிருந்தாலும், தங்கள் அங்கங்களைப் பிறர் கண்களுக்கு வைப்பதில்லை, அந்நாளைய பெண்கள்.

கூந்தலைப் பின்னிக் கொண்டை போடுவது, ஒரு குழந்தை பிறக்கிற வரையிலேதான்; பிறகு தன் தாய்மையை வெளிப்படுத்த அள்ளிச் செருகிக் கொள்வாள் பழமைப்பெண்.

கனகாம்பரங்களும், நீலாம்பரங்களும், காகிதப் பூக்களும் அந்நாளில் இல்லை.

மல்லிகை, முல்லைப்பூக்கள் மணம்பரப்பிக் கணவனை வசியம் செய்தன.

தாய்மை நிரம்பிய நிலையிலேதான், ஒரு பெண் தன் கணவனோடு பத்துபேர் முன்னிலையில் பேசுவாள்; அது வரையில் அவள் பேசுவதில்லை.

'கணவனும் மனைவியும் எப்போது பள்ளியறையில் இருந்தார்கள்' என்று மாமியாருக்குக்கூடத் தெரியாது. மனைவி, தம் உறவுப் பெண்களோடு தூங்கிக்கொண்டிருப்பாள். கணவன் தனியாகத் தூங்கிக் கொண்டிருப்பான். நள்ளிரவில் ஒரு கனைப்புச் சத்தம் கேட்கும். அவ்வளவுதான்; கணவனும் மனைவியும் தனியறையில் சந்திப்பார்கள். சிறிது நேரத்தில் இருவரும் அவரவர் படுக்கைக்கு வந்து விடுவார்கள்.

இவையெல்லாம் ஏன்?

"வீட்டில் கல்யாணமாகாமல் இருக்கும் கன்னிப்பெண்களுக்கு எந்தவிதமான உணர்ச்சியும் வந்துவிடக்கூடாது." என்பதற்காக.

தாம்பத்திய உறவு புனிதமானது.

அதன் நோக்கமே ஒரு குழந்தையின் ஜனனம்தான். அதனால்தான் ஆண் பெண் இந்திரியங்களை 'ஜனநேந்திரியங்கள்' என்றழைத்தார்கள்.

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. பழமைக்குப்பேர்போன கிராமங்கள்- அந்த கிராமங்களில் பக்திக்குப் பேர்போன கோவில்கள். பழைய முறையில் உறுதியாகக் கட்டப்பட்ட கட்டடங்கள் அந்தக் கட்டடங்களைப் போலவே உறுதியாக இருந்த பெண்மை- பல்லாயிரம் ஆண்டுகாலத் தமிழகத்தில் எல்லா ஜாதியினரிடையேயும் பெரும் பண்பாடு நிலவியது.

குடிப்பவனை ஊர் வெறுக்கும்; சபையில் சேர்க்காது.

கூத்தியாள் வைத்திருப்பவன், அவளை ஊருக்கு வெளியேதான் வைத்திருப்பான்.

(அந்தரங்கம் வரும்)

> இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!
>
> அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.
>
> இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!
>
> நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.
>
> இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.
>
> –கண்ணதாசன்–



படிப்பகம்

www.padippakam.com

# எல்லையைத் தேடி

ஆச்சியும் அப்புவும் அந்த உறுதிக் கட்டோடு 'கோடு'ம், வீடும் என்று அலைந்த நாள்கள், என் நினைவுத் திரையில் அலை யலையாய் எழுந்து மோத நான் பிறந்த மண்ணில், என் வீட்டின்' முன்னே நிற்கி றேன்.

வீடு என்ற பெயரோடு அனைத்தும் சிதைந்து, அரைகுறைச் சுவர்களுடன் காட்சி தந்தது என் வீடு.

அந்தப் பிரதேசத்தில் அனைத்து வீடுகளுமே, போரின் அநர்த்தங்களால் சிதைந்தே போயிருந்தன.



வீட்டின் முற்றத்தில் செழிப்பழிந்து கிடந்த, செவ் விளநீர்த் தென்னமரம், அதன் குருத்திழந்த கோலத்தில் வாடிக்கிடந்தது.

ஆச்சியின் சீதனச் சொத்து. அக்காவுக்குச் சீதனமாக மாறியபோது ஏற்பட்ட காணிப் பிரச்சனையால் நாங்கள் பட்ட அவலங்கள் எல்லாமே எனக்குத் துயர நினைவு களையே மீட்டுத் தந்தன.

அக்காவுக்குக் கணவராக வந்த என்னுடைய அத் தார், தனக்குச் சீதனமாகக் கிடைத்த வீட்டை விற்கப் புறப்பட்டபோதுதான் பிரச்சனையே பெரிதானது.

நாங்கள் பிறந்து வளர்ந்த வீடு. செல்வமும் சிறப்பும் சேர எம்மையெல்லாம் வளர்த்தெடுத்த மனை.

அதனை வாழ்நாளெல்லாம் பேணிக்காக்க வேண் டும்! என்பதில் ஆச்சியும் அப்புவும் கொண்ட உறுதியால், அத்தார் வீடு காணியை விற்க முற்பட்ட போதெல்லாம், சண்டையும் சச்சரவுமாய் அந்தச் சுற்றயல் முழுவதுமே வேடிக்கை பார்க்கும் விடயங்களாகி விட்டிருந்தன.

அக்காவும் அத்தாரும் பெற்ற சீதனத்தைப் பாதுகாத் துச் சீவனம் பண்ண வேண்டும் என்ற விருப்பில், அப்புவும் ஆச்சியும் வீட்டையும் காணியையும் எவருக்கும் விற்க விடாமல் தடை போட்டே வந்தனர். ஆனால், வீட்டையும் காணியையும் விற்று ஏதாவது வியாபாரம் தொடங்க வேண்டும், என்ற ஆசையோ அத்தாரின் மனதில் நிறையவே இருந்தது. அதனால் அத்தார் தனது விருப்பத்திற்குத் தடையாய் நின்ற ஆச்சியோடும் அப்புவோடும் தினந்தினம் சச்சரவு.

அப்பு தானாகவே தனித்து நின்ற வண்டில் மாடு கட்டி, மணற்றுறையிலிருந்து மணல் ஏற்றி வந்ததையும், சீமெந்து கிடைக்காத அந்த நாட்களில் சுண்ணாம்புக்கல் கொண்டு காளவாயிலிருந்து சுண்ணாம்பு கொண்டு வந்ததையும் அவர் சுவைபடச் சொல்லியதைக் கேட்டி ருக்கிறோம்.

பல்வேறு வசதிகளைக் கொண்டதாக எங்கள் வீடு இல்லாவிட்டாலும், எங்கள் வீடு அழகான, அளவான வீடு என்பதில் அப்புவுக்கும் ஆச்சிக்கும் ஒரு உயர்வான மனநிறைவு.

அப்பு அதனைத் தன் முயற்சியால் கட்டி முடித்தி ருந்தார், என்பதை எண்ணும் போதெல்லாம் எங்களுக்கும் ஒரு பெருமைதான்.

ஒரு நாள், அத்தாரோடு ஏற்பட்ட வாய்ச் சண்டை கைச்சண்டையாகி அப்புவுக்குத் தலையிற் காயம், ஆச்சி "குய்யோ முறையோ" என்று கூக்குரலிட்டு ஊரைக் கட்டி நியாயம் கேட்டாள்.

இத்தனையும் ஏன்? "அக்காவுக்குச் சீதனமாய்க் கொடுத்ததை அவளும் புருசனும் என்ன செய்தாத்தான் நமக்கென்ன என்று விட்டுவிட வேண்டியது தானே." இவ்வாறு பலரும் பலமுறை அப்புவுக்குச் சொல்லிப் பார்த்து விட்டார்கள்.

அப்பு கேட்கவில்லை.

'நான் வியர்வை சிந்தி வளர்த்த தென்ன மரங்கள், என் உழைப்பால் விளைந்த வீடு வாசல் எல்லாவற்றையும் என் கண்முன்னாலேயே, வேறொருவர் வந்து அனுபவிக்க விடக்கூடாது,' என்பதில் அப்பு பிடிவாதமாகவே இருந்தார்.

மகளுக்குச் சீதனமாக எழுதிக் கொடுத்திருந்தாலும், மகளும் மருமகனும் தமது காணியில்-வீட்டில் மங்கலகரமாக மகிழ்வோடு எல்லாவற்றையும் அனு பவித்து வாழவேண்டும், என்ற விருப்பத் தால் அதனை 'வித்துச் சுட்டுத் தின்ன' அனுமதிக்கக் கூடாது என்பதில் உறுதியா கவே இருந்தார்.

தனது பொருள் தனது பரம்ப ரைக்கே பயன்தர வேண்டும், என்ற ஆசையில் தனது சொத்துக்களை வேறெ வருக்கும் விற்று இழக்கும் விருப்பமும் அவரிடம் சற்றேனும் இருக்கவில்லை.

தான் கட்டிப் பாதுகாத்த வீட்டையும் காணியையும் சொத்துக்களையும் மேலும்

## நெடுந்தீவு மகேஷ்

வளர்த்துப் பயன்பெற வேண்டும், என்ற விருப்பத்தால், உரிமையால், அவர் மேற்கொண்ட செயற்பாடுகளால், அக்காவுடனும் அத்தாருடனும் பொருதிச் சண்டையிட்டுக் கோடும், கச்சேரியுமென்று அலைந்துலைந்த நாட்களில் நாங்கள் தனித்திருந்து அழுதகோலம் இப்பொழுதும் நினைவுக்கு வந்தன.

எல்லைகள் குறித்து, முத்திரை ஒட்டி, எழுதி முடித்திருந்த காணி உறுதியின்படி இன்று எல்லைகளைத் தேடுகிறேன். அடையாளங்கள் எதனையுமே காண வில்லை.

பிரதான வீதியில் ஓரத்தே நின்று, எங்கள் வீட்டையும் காணியையும் எனது கண்களை விசிறித் தேடிப் பார்க் கிறேன்.

எல்லைகள் மறைந்து, காணிகளில் தோற்றங்கள் சிதைந்து, பரந்த செடி கொடிகளால் காடாகிப் போன தென்னவோ எங்கள் நிலங்கள்தான். இப்படி ஆகிப் போன வீட்டையும் காணியையும், இப்பொழுது அப்பு பார்த்தால், ஏங்கிப் போவார்.

தன் சொத்து சுகங்களைக் காத்துச் சொர்க்கத்தில் வாழ வேண்டும் என்று கனவு கண்ட அப்புவின் ஆசையும், ஆர்வமும் கருகிக் கிடப்பதைக் காணு கிறேன்.

வீட்டையும் காணியையும் விற்று வியாபாரம் பண்ணத் துடித்த அத்தாரும் அக்காவும் காணாமற் போன கதையை இப்பொழுது எவருமே, ஆச்சரியமாகக் கேட்கப் போவதில்லை.

எல்லாமே கனவுகளாகக் கானல் நீரைத் தேடி ஓடிக் களைத்த கதையாகப் போய்விட்டனவோ.

அப்புவோ மாறாட்டத்தோடு, கொழும்பில் ஒரு குடிசையின் கோடியில்...

திடீரென அயலில் கேட்ட வேட்டுச் சத்தம் என்னைத் தொடர்ந்தும் அவ்விடத்தில் நிற்க விடாமல் கலைத்தது.

நான் ஒதுங்க ஓர் இடம் தேடி ஓடியபடி...! ●

# ராமசாமி

"மண்ணுக்கு மரம்பாரமா
மரத்துக்குக்கிளை பாரமா
பெற்றெடுத்த குழந்தை தாய்க்குப் பாரமா?"

சோபனா பாடிக்கொண்டே உடலைத் தரையில் தேய்த்துக்கொண்டு நகர்ந்தாள். தெருவில் வருவோரார் போவோர்களிடம் கை நீட்டிப்பிச்சை கேட்டாள். இரண்டு கால்களும் முழங்காலுக்குக் கீழே சூம்பித் தொய்ந்து கிடந்தன.

அழகான அந்தச் சிறுமியைப் பார்த்துச் சிலர் "ஐயோ பாவம்," என்றனர். சிலர் அவளை ஏளனம் செய்தனர்.

"ஏய் பெற்றெடுத்த குழந்தை தாய்க்குப் பாரமான்னு இனிமே பாடாத. நீ பாரமா இருக்கிறதாலதானே உங் கம்மா உன்னப் பிச்சை எடுக்க விட்டா; அதனால பாட்டை மாத்திக்க, சோபனான்னு உன்னக் கூப்பிடுறாங்க இந்தப் பேருகூட உனக்குப் பொருத்தமில்ல!" அவர்கள் சொல்லிவிட்டுச் சிரித்தபோது சோபனாவின் முகம் வாடிச்சிறுத்தது.

அவள் ஒரு பெட்டிக் கடையின் ஓரத்தில் உட்கார்ந் தாள். உண்மையில் அவளுக்குத் தன்னைப் பெற்றவர்கள் யாரென்று தெரியாது. விவரந்தெரிந்தது முதல் ராமசாமி தான் அவளை வளர்த்தான். அவனை விட்டால் அவ ளுக்கென்று யாருமில்லை.

தன் சூம்பிய கால்களைப் பரிதாப மாகப் பார்த்தாள் சோபனா. தன்னை எல்லோரும் நொண்டி நொண்டி என்று அழைப்பதை எண்ணியதும் அவள் கண் களில் நீர்முட்டியது. தன் அம்மா யார்? அப்பா யார் என்று ராமசாமி அண்ண னிடம் எப்படியாவது கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று பிடிவாதமா யிருந்தாள்.



ராமசாமி பெட்டிக் கடைக்குப் பொருட்கள் வாங்கிக் கொண்டு வந்தான். சோபனா சோகமாய் அமர்ந்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டான். "ஏன் நீ பிழைப் புக்குப் போகலியா?" சோபனாவின் மௌனம் அவனைத் திகைப்பிலாழ்த் தியது.

"உனக்கு என்ன ஆச்சு? ஏன் சொக மில்லையா?" ராமசாமி ஆதரவோடு கேட்டான்.

"என் அம்மா யாரு? அப்பா யாரு?" கேட்டுவிட்டு சோபனா ஓவென்று அழு தாள்.

சோபனாவுக்கு என்ன பதில் சொல்வதென்று ராமசாமிக்குத் தெரிய வில்லை. சோபனா அவனருகில் அவன் பதிலுக்காகக் காத்திருந்தாள்.

ராமசாமி பழசை அசை போட்டுப் பார்த்தான். பிரபல மில் முதலாளி கங்கா தரன் அவன் கண்முன் தோன்றினார்.

அவருடைய மனைவி மகேஸ்வரி, மகன் வாசு, இந்தக் குடும்பத்தின் எடுபிடி ஆளாக வேலை பார்த்தவன் இந்த ராமசாமி.

அந்த வீட்டுக்குச் சமையல்காரியாக இருந்தாள் அஞ்சலை. ராமசாமி அவளைத் தங்கையாக நேசித்தான். தன்னைப் போல அவளும் ஓர் அனாதை என்று எண்ணியதும் ஏக்கப் பெருமூச்சு ஒன்று அவனைவிட்டு வெளியேறியது.

இடுப்புச் சாறனுக்குள் செருகியிருந்த பீடியை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டு புகையை உறிஞ்சி நினைவுகளில் மிதந்தான்.

—•••—

அன்று ஞாயிற்றுக்கிழமை. பாடசாலைக் கலை விழா ஒன்றில் கலந்து கொள்வதற்காகக் கங்காதரனும் மனைவியும் மதிய போசனத்தின் பின்னர் சென்று விட்டனர்.

திடீரென்று வானம் கறுத்தது. சோவென்று மழை கொட்டத் தொடங்கியது. அஞ்சலை தெப்பமாய் நனைந்து உடை உடலோடு சிக்க உள்ளே வந்து கொண்டிருந்தாள்.

"அஞ்சலை, ஒனக்கென்ன பைத்தியமா? இந்த மழையில ஒண்ணும் சொல்லிக்காம எங்கிட்டுப்போனே?"

"மாரி கடன் வாங்கி ரொம்ப நாளாச்சி. அதான் கேப்பமின்னு போனன் மழை புடிச்சிரிச்சி அண்ணே."

"சரி சரி போயி ஒடம்ப நல்லாத் துவட்டு புள்ள. இல்லேன்னா சீக்குப்புடிச் சிடும்." ராமசாமி கவலையுடன் கடிந்தான். ஆடை மாற்றுவதற்காக அஞ்சலை அவசர அவசரமாக அவள் அறைக்குள் நுழைந்தாள்.

ஆயிரந்தேள் ஒன்றாகக் கொட்டிய அதிர்ச்சியில் அவள் அலறத் திறந்தவாயை ஒரு முரட்டுக் கரம் மூடியது. அந்தக்கரம் வாசுவுக்குச் சொந்தமானது.

வெளியே ஓடிவரத்துடித்த அஞ்சலையை அணுங்குப் பிடியாகப் பிடித்துக்கொண்டான் வாசு. அந்த இருபத்தி மூன்று வயது இளங்குருத்து சில நிமிஷங்களில் குரங்கின் கைப் பூமாலை ஆயிற்று.

வாசு வெளியேறியதையும் அறியாதவ ளாய் அஞ்சலை அழுது புரண்டாள். யாரிடம் முறையிடுவதென்று நெடு நேரமாக சிந்தித்தவள் ஒரு முடிவுக்கு வந்தாள். தன் ஆடையைச் சரிசெய்துகொண்டு ராமசாமியிடம் ஓடிய அஞ்சலை,

"அண்ணே! அண்ணே! சின்ன ஐயா என்னக் கெடுத்திரிச்சி" என்று கதறிய வேகத்தில் அடிபட்ட புறாவாய் அவன் காலடியில் விழுந்தாள்.

அணுகுண்டு வெடித்த அதிர்ச்சியில் பேசமறந்த ராமசாமி அவளுடைய கலைந்த கோலத்தைக் கண்டு நடுங்கினான். "நெசமாவா...?" அவன் வாய் முணுமுணுத் தது.

அஞ்சலையின் தலை மேலுங்கீழுமாய் அசைந்தது. மழை முற்றாக நின்றுவிட்டிருந்தது. கங்காதரனும் மனைவியும் உள்ளே வந்ததைக்கூட அவர்கள் இருவரும் காணவில்லை.

"அஞ்சலை, ராமசாமி" கங்காதரனின் காட்டுக் கூச்சல் அவர்கள் இருவரையும் அதிரவைத்தது. இரு வரும் நடுங்கியபடி கங்காதரன் முன் வந்து நின்றார்கள்.

"ஏய் ராமசாமி, நீ எதுக்கு அஞ்சலையிட காம்ப றாக்குள் போன?" கங்காதரனின் கேள்வியில் அனல் தெறித்தது.

"ஐயா என்ன சொல்றீங்க?" ராமசாமி அதிர்ச்சியில் குழம்பினான். அஞ்சலை குறுக்கிட்டு "சாமி சத்தியமா சொல்றேங்க; சின்னய்யாதான்...." என்று சொல்லி முடிக்கு முன் வாசுவின் கை அவள் கன்னத்தில் பளார் என்று மோதியது.

"நான் கண்ணால கண்டன் நீயும் ராமசாமியும் காம்பறாவுள் இருந்ததை. உன் கோலத்தைப் பார்!" என்று உளறினான் வாசு.

"எல்லாம் வாசு சொன்னான். ராமசாமி ஒண்ணு செய்! அஞ்சலைய நீ கட்டிக்க, இல்லேன்னா எங்க குடும்பமானம் காத்தில போகும்." மகனின் குணம் தெரிந்த மகேஸ்வரி பழியை ராமசாமியில் சுமத்தினாள்.

அன்று இரவே ராமசாமி அந்த வீட்டை விட்டுப்

## ரூபராணி

புறப்பட்டுவிட்டான். அதன் பிறகு அஞ்சலை என்ன ஆனாள் என்று அவன் அறியவில்லை. ஆனாலும் அடிக்கடி அவள் நினைவு அவனுக்குள் வந்து போகும்.

எதிரேயிருந்த குப்பைத் தொட்டியருகே ராமசாமி யின் பார்வை பதிந்தது. அங்கே சுருண்டு கிடந்தது நாய்க்குட்டி ஒன்று. அவன் இதயம் வேகமாகத் துடித்தது.

சோபனாவையும் அந்த நாய்க்குட்டியையும் மாறி மாறிப் பார்த்தான். பூவிழுந்த அவன் கண்களில் இருந்து வடிந்த நீர் அவன் நரைத்த தாடியை நனைத் தது. அந்த நாய்க்குட்டி கிடந்த இடத்தில்தான் சோபனா வைக் கண்டெடுத்து வளர்த்தான் ராமசாமி.

அவளுடைய ஊனம் அவனுக்குப் பாரமாகப் பட வில்லை. ஒருவேளை அது அஞ்சலை பெற்ற பிள்ளையாய் இருக்குமோ என்று எண்ணினான். நினைவுகளில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்ட ராமசாமி.

சோபனாவைத் திரும்பிப் பார்த்தான். அவள் உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்தாள். அவன் மனசு அவளுக் காக ஒரு அம்மாவையும் அப்பாவையும் அவனுக்குள் சிருஷ்டித்தது. ●

# உளமை

அந்த அரண்மனை போன்ற வீட்டிற்கு வெளியே நிற்கத் தொடங்கி இரண்டு மணித் தியாலங்கள் ஆகின்றது.

சந்தான லெட்சுமியின் கால்கள் மட்டுமல்ல, உணர்வுகளும் கடுப்பாகிக் கொண்டிருந்தது.

வெளியில் சென்ற சட்டத்தரணி, 'செக்கல்' பட்டும் வீடு திரும்புவதாகவும் இல்லை; 'உள்ளே வந்து இருங்கள்' என்று வீட்டுக்காரி சொல்வதாகவும் இல்லை.

உணர்வுகள் மரணித்த நிலையில் நிற்கை யில்,

அந்திக் கருக்கலை கிழித்துக்கொண்டு வந்த அந்த வாகனத்திற்கு வழிவிட்டு மரியாதையுடன் ஒதுங்கி நிற்பதில் ஓர் மகிழ்ச்சி, சந்தானலெட் சுமிக்கு.

வாகனத்தை விட்டிறங்கி அவளை உள்ளே அழைத் தார் சட்டத்தரணி. நின்ற நிலையிலே சந்தானலெட்சுமி யிடம் பிரச்சனையை வினவினார்.

"ஐயா! என்ர புருஷனை சுட்டுக் கொண்டதில இருந்து, இரண்டு புள்ளைகளையும் காப்பாத்த வேண்டிய பொறுப்பு என்ர தலையில விழுந்திட்டு. அதுவும் இரண்டு பேரும் திறமாயும் படிக்குதுகள். இந்த நிலையிலதான் நான் இந்த சாராயம் விற்கிற தொழிலை செய்தநான்! அதுதான் ஐயா, பொலிசு புடிச்சு வழக்காக்கிட்டானுகள். நாளையண்டைக்கு வழக்கு! நீங்கதான் பேசணும்!" மெதுமெதுவாக தன் சாரீரத்தைக் குறைத்துக் கொண்டே கூறினாள் சந்தானலெட்சுமி.

"நீ ஒண்டுக்கும் பயப்படவேண்டாம். இதப்போல எத்தனை வழக்குகளைக் கண்ட நான். உடைச்சுக் காட்டிறன்."



## கனகசபை தேவகடாட்சம்

சட்டத்தரணியின் வீர வசனங்களை கேட்டதும், தன்னை அறியாமலே சேலைத் தலைப்பில் நான்காய் மடித்துக் கட்டியிருந்த முடிச்சை அவிழ்த்து அந்த பண நோட்டைக் கொடுத்தாள்.

—★—

நீதிமன்றம் ஆரம்பமாவதற்காய் பரபரத்துக் கொண்டிருந்தது.

சட்டத்தரணி அருகே சந்தானலெட்சுமி நின்றி ருந்தும் அவளைக் கவனியாது தன் பணியிலும், புதிய 'கட்சி'க்காரர்களை பிடிப்பதிலும் மும்முர மாய் இருந்தார்.

கை கட்டி வாய் புதைத்து மெதுவாய் கேட்டாள். "ஐயா! என்ர வழக்கு இருக்கு."

நிமிர்ந்து நோக்கிய சட்டத்தரணி "ஓம். ஓம். நினைவிருக்கு! அதுசரி என்ன வழக்கு?"

அதிர்ந்து விட்டாள் சந்தான லெட்சுமி.

அவளது கணவனின் மரண சேதிக்குப்பின் ஏற்பட்ட இரண்டாவது அதிர்ச்சி அது!

'என்ன மனிசன் இவர்? கை நீட்டி காசு வாங்கிட்டு' என எண்ணியவாறு அரையும் குறையுமாய் அவசரத்துடன் வழக்குப் பிரச்ச னையை, அவரிடம் கூறிக் கொண்டிருக்கையில் நீதி மன்றம் ஆரம்பமாகிவிட்டது. அவளின் பெயர் கூவி அழைத்தாயிற்று. குற்றவாளிக் கூண்டில் அவள்.

மெதுவாக அவள் அருகே வந்த சட்டத் தரணி அவள் காதில் ஊதினார்.

"கேஸ் பெரிசு! ஒன்றுமே சொல்லாமல் குற்றத்தை ஒப்புக் கொள்." சந்தானலெட்சுமியின் தலையில் ஆயிரம் கண்ணி வெடிகள் வெடித்ததுபோன்ற உணர்வு.

திகைத்து நின்ற அவளின் உள்ளம் மட்டும் ஊமையாகவில்லை. அது பேசியது.

"எம்போன்றவர்களுக்கு இந்நாட்டில் என்றுமே விடுதலை இல்லை." ●

## அரபுக் கவிதை

# காதலின் மீதி

நாளாக ஆக அவை
மழை கொண்ட
கருமேகங்களாக!

அவை ஓய்வெடுக்கக்கூடாது
அந்த அமைதியை
அனுபவிக்கக் கூடாது
என்று முடிவெடுத்தேன்!

அவற்றை எரித்தேன்!
விலை மதிக்க முடியாத
அந்தக் காதலின் மீதியை
தீப்பிழம்புகள் நுகர்ந்தன.

எங்கள் கதையின்
எல்லா அம்சங்களையும்
சுவடுகளின்றி அழித்தன!

அந்த நெருப்புக்கு நடுவில்
எனது ஆன்மாவையும்
எரித்து விட்டேன்!

எனது உணர்வின்
சாம்பல்கள் அவளுடைய
உணர்வின்
சாம்பல்களுக்காகத்
துக்கம் கொண்டாடுகின்றன.

காதலின்
மென்மையான நிறம்
தேய்வடைந்தது!
போதும் இந்த வலி!

இருந்தாலும்
மீதமிருக்கும்
உணர்வுகளால்
நான் இறந்து
கொண்டிருக்கிறேன்!

கூட்டமாய் மனதுக்குள்
வந்து அந்த நினைவுகள்
என்னைப் பிடித்து
ஆட்டுகின்றன!

இருட்டு
என் தூக்கத்தைக்
கடத்தியபோது
அந்த நீண்ட அழகற்ற இரவில்
அவளுடைய கடிதங்கள்
தனது கனவுகளோடு
ஓய்வெடுப்பதை நினைத்தேன்.

இப்ராஹிம் நாஜி-எகிப்து
தமிழில்- நிர்மலா சுரேஷ்

www.padippakam.com

# மருந்து



"நெஞ்சுக்குள் இருந்து
சுடுகிறாய்!
பஞ்சுக்குள் பற்றிய
நெருப்பானாய்!

வஞ்சகா! எங்கே நீ
சென்றாயோ?
கொஞ்ச வா என்று
அழைத்தாயே!
வஞ்சி என்னை நீ
கொஞ்சி வதைத்தாயே!

இதழ்களில் நீ
தீ வைத்தாயே!
இடையினில் நீ
கை வைத்தாயே!

கை தவழ்ந்த போது
மெய் மறந்து போனேன்.

சங்கு சுட்டாலும்
வெண்மை தரும்!
தேகம் சுட்டால்தான்
சொர்க்கம் தரும்!

சுடவைத்தவனும் நீதான்
சொர்க்கம்
காட்டித் தந்தவனும் நீதான்!

நெஞ்சில் நீ புரள
பஞ்சில் நெருப்பாக
தேகம் தானெரிய

மஞ்சம் தான் நசிய
காமம் பனையளவாய்
பஞ்சம் இன்றி வளர
கொஞ்சிக் கலந்தோமடா
வஞ்சகா! கூடிக்
களித்தோமடா!"

அந்தப்புரத்தில்
மன்னன் மகள்!
அந்த சுந்தரக் கள்ளிக்கு
நெஞ்சுக்குள் அந்தரிப்பு!

காதலன் தளபதி
போர்க்களம் புகுந்தான்!

'வருவதற்கு நாளாகும்
இன்பம் தருவதற்கும்
நாளாகும்' என்று
மடல்தான் வந்தது.

தடந்தோள் வீரன்
கடும் தொலை தூரத்தில்!
கிடந்தாள் கட்டழகி
கடும் துயர் பள்ளத்தில்!

"பாருக்குள் போரை
படைத்தவன் யார்?"
என்று சினந்தாள்.

கூடவே செல்லத்தான்
நாடியே நின்றாள்.

'போர்க் களத்துக்கு
பெண் எதற்கு?
பூப் பறிக்கவா
புன்னகை புரியவா?
காப்பு அணிந்த கரத்துக்கு
காக்கும் தொழில் எதற்கு?"

கேலியாக
கேள்விகள்!

'பெண் என்றால்
மென் பொருளா?

பெண் என்றால்
கொஞ்சத்தான் வருவீர்களோ
மிஞ்ச விடமாட்டீர்களோ?

வெஞ்சமர்க் களத்திலும்
பெண் சமர் புரிவாள்!
தாயாகவும் இருப்பாள்
தருக்கருக்கு
பேயாகவும் இருப்பாள்!"

அவள் உறுதியாய்
வார்த்தைகளால் உரைத்தாள்.

"உன் சொற்கள்
நாளை பலிக்கலாம்!
உன் எண்ணம்
உரத்து ஜெயிக்கலாம்!

இன்று அதற்கொரு
காலம் கனியவில்லை!
இன்று அதற்கொரு
வேளை வரவில்லை!"

புன்னகைத்து கூறிவிட்டு
போயே விட்டான்!

தனிமையில் இருந்தவள்
தவிப்பினில் விழுந்தாள்.

'பூமியைவிட்டு இரவு
பிரிய மறுத்தால்
பகல் வருவதெப்படி?

## இலக்கிய நயம்

வந்த பகல்
தங்கிவிட்டால்
இரவு வருவதெப்படி?

இரவும்-பகலும்
வந்து போனால்தான்
நாள் பூர்தியாகிறது!

உறவும், பிரிவும்
வந்து போனால்தான்
வாழ்க்கை நேர்த்தியாகிறது!

இனிப்பு திகட்டும்போது
கசப்பு வேண்டியிருக்கிறது!
உறவு திகட்டாதிருக்கவே
பிரிவு எட்டிப்பார்க்கிறது!'

மனதுக்குள்
சமாதானப் போச்சுவார்த்தை
நடந்து கொண்டிருந்தது!

காதலனுக்கு சார்பாக
மனது
தீர்பளித்து மகிழ்ந்தது!

'வேண்டுமென்றா பிரிந்தான்?
தீண்ட வரும் பகையை
தோண்டிப் புதைத்து விட்டுவர
வேண்டுமென்றுதானே பிரிந்தான்'
என்று கூறியது மனது.

"மனமே!
கட்சி மாறிவிட்டாயா
நீயும்?
என்னைவிட்டு
பட்சியாய் பறந்துவிட்டாயா
நீயும்?"

மனது சொன்னது:
"நீ மட்டும் என்னவாம்
காதலரைக் கண்டுவிட்டால்
ஆளே மாறிவிடுவாயே!
யாவும்தான்
மறந்துவிடுவாயே!"

'காணாதபோது
கோபம் வருகிறது!
கண்டதும் நெஞ்சில்
தாபம் வருகிறது!

பார்க்காத போது
குற்றம் தெரிகிறது!
பார்க்கின்றபோது
சுற்றமே மறக்கிறது!

எட்டத்தில் இருக்கும்போது
விம்பு வருகிறது!
கிட்டத்தில் இருக்கும்போது
நோன்பு முறிகிறது!

தொடத் தொட
உள்ளே
கதவு திறக்கிறது!

படபட என்று
மூச்சு துடிக்கிறது!

மறுப்புக்கள் எல்லாம்
மாயமாய் மறைகிறது!

விருப்புக்கள் எல்லாம்
வேகமாய் வளர்கிறது!

அவருக்குள் என்னை
நான் தொலைக்க,
எனக்குள் தன்னை
அவர் தொலைக்க-இந்த
பூவுக்குள் புயலடிக்கிறது!'

இன்ப நினைவுக்குள்
உருகிப் போனாள்!

வினாவை எறிந்து
அவளை வீழ்த்திய மனது
கனாக் காணும் அவளை
கண்டு சிரித்தது!

"சிரிக்காதே மனதே
சிரிக்காதே!"
என்றாள் சீற்றமாக.

"என்ன செய்ய
சொல்கிறாய்
என் எஜமானி?"
என்றது மனது.

"காதல் நோயால்
கடும் துயர் உற்றேன்!
இதற்கு மருந்தொன்று
அறிந்து சொல்வாயா?!

## தருவது ரசிகன்

என் மனத்துயர்
ஆறச் செய்வாயா?!"
என்று கேட்டாள்.

மனது எங்கு
போகும்?
காதல் நோய்க்கு
மருந்தும் காதல்தானே!

காதலிக்கு மருந்து
காதலன்!
காதலனுக்கு மருந்து
காதலி!

மனதிடம் மருந்து கேட்கும்
காதலியை திருவள்ளுவரும்
நம் முன் நிறுத்துகிறார்:

"நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே
-எனைத்தொன்றும்
எவ்வ நோய் தீர்க்கும் மருந்து"

அதிகாரம்: 125 பாடல்: 1241

## சிந்தியா பதில்கள்

☞ அவுஸ்திரேலியா அணியின் வெற்றி பாகிஸ்தானின் எதிர்பாராத வீழ்ச்சி, என்ன காரணம்?

த.வேணுகோபால், கொழும்பு-07.

லீக் ஆட்டங்களில் தடுமாறிய அவுஸ்திரேலிய அணி சூப்பர் சிக்ஸின் பின்னர் அபாரபலம் பெறத் தொடங்கிவிட்டது! அரையிறுதியில் முஷ்டியை மடக்கிக் காண்பித்தது! இறுதிப் போட்டியில் முஷ்டியால் ஓங்கிக் குத்திவிட்டது! பாகிஸ்தான் அணியின் பொறுமை இன்மையும் அதன் படுதோல்விக்குக் காரணம்! ஆனால் 300 ஓட்டங்களை பாகிஸ்தான் அணி குவித்திருந்தால்கூட அவுஸ்திரேலிய அணி துரத்திப் பிடித்திருக்கும். அந்தளவுக்கு அதன் துடுப்பாட்ட வரிசை படு உறுதி!

●⁂●

☞ விடுதலைப் புலிகள் ஜனநாயகத்திற்காகப் போராடுவதாக தொண்டா கூறியுள்ளாரே?

கே.நிவாஸ், வத்தளை.

அவர் சொல்வது சரி, செய்வது...?

●⁂●

☞ 'ஆனந்த பூங்காற்றே' படத்தில் மாளவிகா அசப்பில் ரோஜாவை நினைவூட்டுகிறாரே?

சி.தர்மகுலசிங்கம், சிலாபம்.

பாதி ரோஜா. மீதி மீனா என்கிறார்கள். மள மளவென்று படங்கள் குவிகின்றன!

●⁂●



'ரோஜாவனம்' படத்தில் மாளவிகா

☞ அரசியல் தலைவர், தொண்டர் என்ன வித்தியாசம்?

பி.காயத்திரி, பண்டாரவளை.

தலைவர் கழுத்துக்கு தொண்டர் மாலையிடுவார்; அதே பூமாலையை தொண்டரின் காதில் மாட்டுவார் தலைவர்.

●⁂●

☞ அண்மையில் வெளியான படங்களில் பார்க்கக் கூடிய படம் எது?

திருமதி நல்லம்மா நாதன், மட்டக்களப்பு.

குடும்பத்தோடு கண்டு களிக்கக்கூடிய படம்: 'ஆனந்த பூங்காற்றே'. பாடல்களும் இதம்! படமும் இதம்!

●⁂●

☞ சிந்தியா! எத்தனுக்கு எத்தன் எப்படி இருப்பான்?

வி.இலியாஸ், மன்னார்.

ஒருவன் கள்ள நோட்டு எத்தனை ரூபாயாய் அடிப்பது என்று தெரியாமல் 15 ரூபாயாய் அடித்தான்.

அதில் ஒரு நோட்டை எடுத்துச் சென்று கடைக்காரரிடம் சில்லறை கேட்டான். அந்தக் கடைக்காரன் நோட்டை உற்றுப் பார்த்துவிட்டு, "ஒரு ரூபாய் குறையும் பரவாயில்லையா?" என்று கேட்டான்.

அவனும் 'நம்ம நோட்டு கள்ள நோட்டுத்தானே? ஒரு ரூபாய் குறைந்தால்தான் என்ன?' என்று நினைத்தபடி "பரவாயில்லை ஒரு ரூபாய் குறைத்தே தா" என்றான்.

கடைக்காரன் அந்த 15 ரூபாய் நோட்டைப் பெற்றுக்கொண்டு இரண்டு 7 ரூபாய் நோட்டைக் கொடுத்தான்.

●⁂●

☞ உலகக் கிண்ணப் போட்டிகளில் நீர் எதிர்பார்த்தது என்ன? எதிர்பாராதது என்ன?

இ.தயாளன், வவுனியா.

இலங்கை, இந்திய அணிகள் கிண்ணம் பெறும் தரத்தில் இல்லை என்று கூறினோம். பலித்தது!

இம்முறை ஸிம்பாப்வே கிண்ணத்தை தட்டிக்கொள்ளுமோ என பரவலாக பேசப்பட்டபோது, 'ஸிம்பாப்வே சிறந்த அணிதான் ஆனால் கிண்ணம் பெறும் நிலை இல்லை' என்றோம். பலித்தது!

பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையேதான் கிண்ணம் பெறுவதற்கு கடும்போட்டி நிகழும் என்றோம்! பலித்தது!

பாகிஸ்தானுக்கு கிண்ணம் பெறும் சாத்தியம் அதிகம் என்றோம்! ஏமாற்றம்!

தொடர் ஆட்ட நாயகன் குளூஸ்னர் என்றோம்! பலித்தது!

●⁂●

☞ தமிழ்க்கட்சிகளது தலைமைகள் தமிழ் மக்களின் இன்னல்களை ஜனாதிபதிக்கு எழுதும் கடிதத்துக்கான கருப்பொருளாக மட்டும்தானே நினைக்கின்றன?

கே.சற்குணம், காரைதீவு.

ராஜா ஒருவர் கனவு கண்டார். ஒரு கொழுத்த எலி. ஒரு நோஞ்சான் எலி. இரண்டும் போராடிக் கொண்டிருந்தன. இன்னொரு எலி தூங்கிக்கொண்டிருந்தது.

இந்த மூன்று எலிகள் பற்றிய கனவுக்கு என்ன பொருள்? என்று தன் மந்திரிகளிடம் கேட்டார் மன்னர். யாருக்கும் பதில் தெரியவில்லை. பொது மக்களுக்கு தண்டோரா அடித்து, 'சரியான பதில் சொல்பவர்களுக்கு 'பரிசு' என்று அறிவித்தனர்.

ஒருவயதான மூதாட்டி வந்து "அரசே! உங்கள் கனவுக்கு நான் விளக்கம் சொல்கிறேன். உங்கள் கனவில் வந்த கொழுத்த எலி உங்கள் பிரதம மந்திரி. எல்லாவற்றிலும் ஊழல் செய்து கொழுத்திருப்பவர். நோஞ்சான் எலி மக்கள். எல்லாவற்றையும் இழந்து வாடுபவர்கள்.

தூங்கிக்கொண்டிருக்கும் எலி வேறு யாருமல்ல, இந்த நாட்டில் நடக்கும் கொடுமைகளைப் பற்றி அக்கறைப்படாமல் தூங்கிக் கொண்டிருக்கும் அரசரான நீங்கள் தான்!" என்று கூறினார்.

தமிழ்க் கட்சிகளும் தூங்கிக்கொண்டிருக்கும் குறுநில அரசர்கள்தான்!

●⁂●

☞ ஷங்கரின் 'முதல்வன்' எப்போது வெளிவருகிறது?

ஆர்.காவ்யா, கொழும்பு-08.

தீபாவளிக்கு. மேலதிகமாக தகவல் ஒன்று: மனிஷாவை 'அழகான ராட்சஸி' என்று வர்ணித்து பாட்டெழுதச் சொன்னாராம் ஷங்கர்.

'அழகான ராட்சஸியே! அடி நெஞ்சில் குதிக்கிறியே! முட்டாசு வார்த்தையிலே பட்டாசு வெடிக்கிறியே, அடி மனச அருவாமனையில அறுக்கிறாயே! நீராக நானிருந்தா ஒன் நெஞ்சில் நான் இறங்கி கூரான உன் நெஞ்சில் குதிச்சு அங்கே குடியிருப்பேனே..." என்று எழுதி முடித்தாராம் வைரமுத்து. நல்லவேளை மனிஷாவுக்கு தமிழ் தெரியாது.

●⁂●

☞ சமீபத்தில் ரசித்த கவிதை ஒன்று கூறுங்களேன்?

எம்.வைஷ்ணவி, கொழும்பு-06.

'அமர்களம்' படத்திற்காக வைரமுத்து எழுதியுள்ள பாடலின் கவிதைத்தனமான வரிகளைப் படித்தேன்; சுவைத்தேன். இதோ உங்களுக்கும் அந்தத் தேன்:

"காற்றில் ஏறி பாட்டு
பாடப் போகிறேன்-ஒரு
கானம்பாடி வானம் பாடியாகிறேன்.
வெண்ணிலாவில் தண்ணீர் உண்டு
கேட்கிறேன்.
நிலாவில் சென்று
நீரருந்தப் போகிறேன்.
மூன்று லோகம் கண்டு வாழப்
போகிறேன்.
முந்நூறு ஆண்டு இளமை
வாங்கப் போகிறேன்.
இந்தப் பூமி பழைய பூமி
அல்லவா-ஒரு
புதிய பூமி சலவை செய்து
கொண்டு வா!

ஆதி மனிதன் நல்ல மனிதன்
அல்லவா! ஒரு
ஜாதியற்ற மனித ஜாதி
கொண்டு வா?
உலகம் தூங்க
ஒற்றைப் படுக்கை
கொண்டு வா-அங்கு
உறங்கவைக்கும்
எந்தன் பாடல் அல்லவா?"

●⁂●

☞ 'மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை' என்று அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே கூறியுள்ளாரே?

க.நவரத்தினம், நீர்கொழும்பு.

அதனை அவர் ஜனாதிபதியிடம் அல்லவா அழுத்திக் கூறவேண்டும்?

●⁂●

☞ செம்மணி புதைகுழி விஷயத்தில் நீதி கிடைக்குமா?

ம.எட்வேர்ட், கொழும்பு-06.

கிடைக்கும் என்பார் கிடைக்காது!

ஸ்போர்ட்ஸ்

# இது இரண்டாவது முறை

ஏழாவது உலகக் கோப்பையை அவுஸ்திரேலிய அணி கைப்பற்றியதன் மூலமாக 2வது தடவையாகக் கோப்பையைக் கைப்பற்றிய அணியாகத் திகழ்கிறது. இதற்கு முன் மேற்கிந்தியத் தீவுகள் அணிதான் கோப்பையை இருமுறை கைப்பற்றி இருந்தது.



நடந்து முடிந்த இந்த ஏழாவது உலகக் கோப்பையில் நிகழ்த்தப்பட்ட சில சாதனைகள் இதோ:

அரை இறுதி மற்றும் இறுதிப் போட்டிகளில் ஆட்ட நாயகன் விருதை அவுஸ்திரேலியாவின் ஷேன் வோர்ன் பெற்றார். இதன் மூலம் 1983 உலகக் கோப்பைப் போட்டிகளின் போது அரை இறுதி, இறுதிப் போட்டிகளில் ஆட்ட நாயகன் விருதைப் பெற்று சாதனை படைத்த இந்தியாவின் மொஹிந்தர் அமர்நாத்தின் சாதனையைச் சமப்படுத்தினார் ஷேன் வோர்ன்.

இன்னொரு சாதனையும் ஷேன் வோர்னுக்குச் சொந்தமானது. ஓர் உலகக் கோப்பைப் போட்டியில் அதிக விக்கெட்டுக்களைச் சாய்த்தவர் வரிசையில் வோர்னும் சேர்ந்தார். இந்த உலகக் கோப்பைப் போட்டியில் இவரும், நியூஸிலாந்தின் ஜெஃப் அலட்டும் 20 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளனர்.

உலகக்கோப்பைப் போட்டியில் அதிக தடவை ஆட்ட நாயகன் விருதை மேற்கிந்தியத் தீவுகளின் விவியன் றிச்சர்ட்சும், இங்கிலாந்தின் கிரஹாம் கூச்சும் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர். இவர்கள் இருவரும் 5 முறை ஆட்டநாயகன் விருதைப் பெற்றுள்ளனர். இந்த உலகக் கோப்பைப் போட்டியின் போது, இவர்களுடன் இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கரும் இணைந்துள்ளார்.

1992ம் ஆண்டு உலகக் கோப்பைப் போட்டியில் இருந்து தொடர் நாயகன் விருது வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. 1992ல் நியூஸிலாந்தின் மார்ட்டின் குரோவும், 1996ல் இலங்கையில் சனத் ஜெயசூரியவும் தொடர் நாயகன் விருதைப் பெற்றனர். இம்முறை தொடர் நாயகன் விருதை தென்னாபிரிக்காவின் லான்ஸ் குளூஸ்னர் பெற்றார்.

உலகக் கோப்பைப் போட்டிகளில் 1000 ஓட்டங்களை இந்தியாவின் சச்சின் டெண்டுல்கரும் (1059) அவுஸ்திரேலியாவின் மார்க் வோவும் (1004) இம்முறை கடந்தார்கள். இதற்கு முன் உலகக் கோப்பைப் போட்டிகளில் பாகிஸ்தானின் ஜாவெட் மியண்டாட்டும் (1083), மேற்கிந்தியத் தீவுகளின் விவியன் றிச்சாட்சுமே (1013) 1000 ஓட்டங்களைக் கடந்தவர்கள்.

## 11 சதங்கள்

நடந்து முடிந்த உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் 11 சதங்கள் அடிக்கப்பட்டுள்ளன. லீக் போட்டிகளில் 4 சதங்களும் (இந்த 4 சதங்களும் இந்திய வீரர்களால் எடுக்கப்பட்டன.), சுப்பர் சிக்ஸில் 6 சதங்களும், அரையிறுதியில் ஒரு சதமும் அடிக்கப்பட்டன.

இந்த உலகக் கோப்பையில் பெறப்பட்ட சதங்களின் விபரம் வருமாறு:

| வீரர் | ஓட்டம் | எதிரணி |
|---|---|---|
| 1. சௌரவ் கங்குலி (இந்தியா) | 183* | இலங்கை |
| 2. ராகுல் ட்ராவிட் (இந்தியா) | 145 | இலங்கை |
| 3. சச்சின் டெண்டுல்கர் (இந்தியா) | 140* | கென்யா |
| 4. நீல் ஜோண்சன் (ஸிம்பாப்வே) | 132* | அவுஸ்திரேலியா |
| 5. ஸ்டீவ் வோ (அவுஸ்திரேலியா) | 120* | தென்னாபிரிக்கா |
| 6. சயீட் அன்வர் (பாகிஸ்தான்) | 113* | நியூஸிலாந்து |
| 7. ராகுல் ட்ராவிட் (இந்தியா) | 104* | கென்யா |
| 8. மார்க் வோ (அவுஸ்திரேலியா) | 104 | ஸிம்பாப்வே |
| 9. சயீட் அன்வர் (பாகிஸ்தான்) | 103 | ஸிம்பாப்வே |
| 10. ஹெர்ஷெல் கிப்ஸ்(தென்னாபிரிக்கா) | 101 | அவுஸ்திரேலியா |
| 11. அஜய் ஜடேஜா (இந்தியா) | 100* | அவுஸ்திரேலியா |

## இவர் தான் அவர்



கலைஞர் மு.கருணாநிதி


படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி

## புதிய ஆகமம் 06

ஆண்டவருடைய திருக் குமாரர் தான் இயேசுபிரான் என்பதை யூத மக்களில் பெரும்பாலானோர் ஏற்க மறுத்தனர். ஆனால் யூதா மற்றும் இஸ்ரயேல் நாடுகளைச் சூழவுள்ள நாடுகளில் வாழ்ந்த ஏராளமான மக்கள் இயேசுவை ஆண்டவரின் திருக் குமாரரே என்று திட்டவட்டமாக நம்பினர்.

இயேசுவையும் சீடர்களையும் பின் தொடர்ந்து அவர்கள் போகுமிடமெல்லாம் மக்கள் சென்றனர். இவர்களுள் பெரும்பாலானோர் நோய்களாலும் கெட்ட பசாசுகளாலும் பீடிக்கப்பட்டவர்கள். பசியாலும் தாகத்தாலும் வாடிய ஐயாயிரம் பேர்வரை அங்கு திரண்டிருந்தனர். அவர்கள் அனைவரும் இயேசு பெருமானையே பார்த்த வண்ணம் இருந்தனர். தனது சீடர்களுள் ஒருவரான பிலிப்பு என்பவரை தன்னிடம் அழைத்த இயேசு, "இத்தனை பேருக்கும் உணவளிக்க எங்கிருந்து அப்பம் வாங்கலாம்?" என்று பிலிப்பிடம் கேட்டார்.

பிலிப்போ செய்வதறியாது- பதில் சொல்ல- முடியாது தவித்தார். அப்போது மற்றொரு சீடரான அந்திரேயா வந்து, மக்கள் கூட்டத்தில் இயேசுவின் போதனைகளைச் செவிமடுக்க வந்திருக்கும் ஒரு சிறுவனிடம் ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் இருப்பதாகக் கூறினார். இத்தனை ஆயிரக்கணக்கான மக்களுக்கு இவ்வளவும் எவ்வாறு காணப் போகிறது, எஞ்று அந்திரேயா கலங்கினார்.

திசை காட்டும் கருவியாக விளங்கினார். இதனால் போலி வேடதாரிகளாக- ஆண்டவருடைய பெயரைச் சொல்லி அகப்பட்டதைச் சுருட்டி, தங்கள் வாழ்க்கையை வளம்படுத்திக் கொண்டிருந்தவர்களுக்கு பொறாமையும் கோபமும் அதிகரித்தன. இவர்கள் பரிசேயர் மற்றும் திருச்சட்ட ஆசிரியர்கள் ஆகியோருடன் சேர்ந்து கொண்டு இயேசு பெருமானுடைய நற்காரியங்களைக் கண்டிக்கத் தலைப்பட்டனர்.

### குணமளிக்கும் குளம்

யூதர்களின் திருவிழா ஒன்றில் கலந்து கொள்வதற்காக இயேசுபிரான் எருசலேம் நகர் சென்றிருந்தார். அங்கு ஐந்து மண்டபங்களுடன் ஒரு குளமும் இருந்தது. இக்குளத்து நீருக்கு நோய்களைக் குணமாக்கும் சக்தி இருப்பதால் அம் மண்டபத்தில் எப்போதும் பலவித- நீங்காத நோயாளிகளும் வந்து படுத்திருப்பார்கள். இக்குளத்து நீர் கலக்கமில்லாமல் தெளிவாக இருந்தால் அதனால் பலனில்லை. தேவதூதர்கள் எவராவது வந்து அந்நீரைக் கலக்குவார்கள். அப்போது கலங்கிய அந்நீரில் முதன் முதலில் யார் இறங்குகிறாரோ, அவரின் நோய்- எத்தகையதாக இருப்பினும் அந்நோய் முற்றாகக் குணமடைந்துவிடும்.

இக்குளக்கரையில் இருந்த மண்டபம் ஒன்றில் முப்பத்தெட்டு ஆண்டுகளாக நடக்க முடியாத ஒரு நோயாளி படுத்திருந்தார்.

குளம் கலங்கும்போது நீ முந்தி, நான் முந்தி என்று பலரும் முன்னோடிச் சென்று குளத்தில் விழ முயற்சிப்பார்கள். முதலில் விழுந்தவர் குணமடைந்து சுகதேகியாக அகன்று விடுவார். ஏனையோர் ஏமாற்றமடைவர். இதே நிலையில்தான் அந்த நடமாட முடியாத நோயாளி முப்பத்தெட்டு வருடங்களைக் கடத்திவிட்டார்.

அந்த நோயாளியின் அருகில் இயேசு போனார். அவருடைய மகிமையை அறிந்திராத நோயாளி, கருணை பொழியும் அந்தத் தெய்வீகத் திருவுருவைக் கண்டதும் இரு கைகளையும் கூப்பி வணங்கினார். அவரைப் பார்த்த இயேசுபிரான், "உம்முடைய நோய் நீங்க வேண்டும் என்று விரும்புகிறீரா?" என்று கேட்டார்.

"ஆமாம்!" என்று நம்பிக்கையுடன் பதிலளித்த அந்நோயாளி, "ஆனால் குளம் கலங்கும்போது என்னை இக்குளத்தில் இறக்கிவிட எவரும் இல்லை. இந்நிலையில் வேறு எவராவது இறங்கி நீராடி விட்டு பூரண குணமடைந்து திரும்புவதைப் பார்த்துப் பார்த்து வேதனை அடைவதைத் தவிர வேறு வழி எனக்குக் கிட்டவில்லையே!" என்று தழுதழுத்த குரலில் கூறி விம்மினார்.

### குணமடைந்த நோயாளி

காருண்யவானான இயேசு அந்த மனிதரிடம் குனிந்து நின்றபடி, "நீர் நலம் பெற விரும்புகிறீரா?" என்று மறுபடியும் கேட்டார். அவரும் நம்பிக்கை மனத்தை அழுத்த தலையை அசைத்தார்.

இயேசுபிரான் அந்நோயாளியைப் பார்த்து, "எழுந்திரு! உம்முடைய படுக்கையை எடுத்துக்கொண்டு இங்கிருந்து போ!" என்று கூறினார். அந்த மனிதர் தன் நோய்துன்பங்கள் அத்தனையும் நீங்கியவராக எழுந்து படுக்கையை எடுத்துக்கொண்டு கனவேகமாக, அவ்விடத்தைவிட்டு அகன்றார்.

இந்த அதிசயத்தை அங்கு குழுமியிருந்த பல நூற்றுக்கணக்கானோரும் காண நேர்ந்தது. அன்று ஓய்வுநாள். ஆலயத்தில் யூதர்கள் அதிகமாக இருந்தனர். ஓய்வு நாளன்று ஒருவர் படுக்கையை எடுத்துக்கொண்டு செல்வதைக் கண்டு, "திருச்சட்ட விதிகளை மீறியுள்ளான் இவன்," என்று குற்றஞ்சாட்டினார்கள். அவனிடம் சென்று சிலர், "இன்று ஓய்வுநாளல்லவா? சட்டங்களை மீறி இப்படி நீ படுக்கையைத் தூக்கிக்கொண்டு செல்லலாமா?" என்று அதிகார தோரணையில் விசாரித்தனர்.

சூது வாதற்ற அந்த மனிதர், "எத்தனையோ வருடங்களாக நோய் வாய்ப்பட்டுக் கிடந்த என்னைக் குணமடைய வைத்தவரே, படுக்கையை எடுத்துக்கொண்டு போம்!" என்றார். யூதர்கள், அவ்வாறு குணமடைய வைத்தவர் யார் என்று வினவியபோது அந்த நோயாளியால் இயேசுவை அடையாளம் காட்ட முடியவில்லை.

இயேசுதான் அந்நபரைக் குணமாக்கி விட்டு படுக்கையை எடுத்துக்கொண்டு செல்லுமாறு ஓய்வு நாளான இன்று கூறியிருக்கிறார் என்பதனை அறிந்து, இயேசுபிரான் மீது 'திருச்சட்டத்தை மீறுபவர்' என்று குற்றம் சுமத்தினார்கள்.

### தந்தையும் தனயனும்

இயேசுபிரான், அறியாமையினால் அகக் கண்களை மூடிய அந்த யூதர்களைப் பார்த்து, "என் தந்தை இன்றும் செயலாற்றுகிறார்! ஆகவே நானும் செயலாற்றுகிறேன். தந்தையிடம் காணும் செயல்களையே தனயனும் செய்கிறார். தந்தை தனது மகன்மீது கொண்ட அன்பின் காரணமாக, தனது செயல்களையே பின்பற்றுமாறு மகனுக்கு வழிகாட்டுகிறார். இறந்தவர்களையே எழுப்பி உயிரளிக்கிறார் தந்தை. தமக்கு அளிக்கும் மதிப்பையும் மரியாதையையும், மகனுக்கும் அளிக்க வேண்டும் என்பதே ஆண்டவரின் எதிர்பார்ப்பு. ஆண்டவரின் குமாரருக்கு மதிப்பளிக்காதவர்கள் ஆண்டவரையே மதிக்காதவர்களாகிறார்கள்!" இவ்வாறு பல கருத்துக்களை இயேசு பெருமான் கூறினார்.

இக் கருத்துக்களைக் கேட்டுக்கொண்டிருந்த யூதர்களில் பலருக்கு, அவர் கூறிய கருத்தினை உணரும் சக்தி இருக்கவில்லை. "கடவுளுடைய குமாரன் தான் என்று கூறுவதன் மூலம் தன்னையே கடவுளுக்கு நிகராக இந்த மனிதன் கூறுகிறானே! இவனை இவ்வாறு விட்டால், ஆண்டவருக்கு விரோதமான செயல்களில் மென்மேலும் ஈடுபட்டு, மக்கள் அனைவரையும் துன்மார்க்கத்திலீடுபட வைத்து விடுவான்!" என்று அவர்கள் கொதிப்படைந்தனர். இயேசுவுக்கு விரோதமான பிரசாரங்களை மேற்கொண்டனர். இருப்பினும் இயேசுவைப் பின்பற்றிச் செல்லும் எவரையும் அவர்களால் திசை திருப்ப முடியவில்லை.

இயேசுபிரானுக்கு எதிராக எழுந்த எத்தகைய குற்றச்சாட்டுக்களும் அவரை எதுவும் செய்யவில்லை. அவர் தொடர்ந்து மக்களுக்கு நற்போதனைகளைப் புகட்டியும் நோய்துன்பங்களில் உழன்றோரைக் குணப்படுத்தியும் தமது பணிகளைத் தொடர்ந்து செய்தார்.

மோசேயும் பின்னர் யோவானும் எழுதி வைத்தபடி இறைவனிட்ட பணியினை நிறைவேற்றத் தோன்றியவர் தானே என்பதை நிரூபித்து மக்களைத் தன்பால் ஈர்த்தவண்ணமிருந்தார்.

# ஐந்து அப்பமும் மூன்று மீனும்



அந்த உணவினைக் கொண்டுவந்த சிறுவனைத் தன்னிடம் அழைத்துவரும்படி இயேசு கேட்டுக்கொண்டார். சிறுவனும் வந்தான்.

### எல்லோருக்கும் உணவு

இரு சிறு கூடைகளில் ஐந்து அப்பங்களும் மீன்களும் தனித்தனியாக வைக்கப்பட்டிருந்தன. தமது சீடர்களைப் பார்த்து, மக்களை ஒழுங்காக அமர்ந்திருக்க ஏற்பாடு செய்யுமாறு இயேசு கேட்டுக் கொண்டார். இரு கூடைகளிலிருந்த அப்பங்களையும் மீன்களையும் தனது கைகளில் ஏந்திக் கொண்டு மேல் நோக்கியவாறு ஆண்டவரைப் பிரார்த்தித்தார். மீண்டும் அப்பங்களையும் மீன்களையும் கூடைகளில் போட்டார். கூடைகள் இரண்டும் அப்பங்களாலும் மீன்களாலும் நிரம்பி வழியத் தொடங்கின.

அங்கு வந்திருந்தவர்கள் தங்களுடன் கொண்டு வந்திருந்த வெற்றுக் கூடைகளைச் சேகரித்து வந்த சீடர்கள் சிறுவனின் கூடைகளில் தானாகவே பெருக்கெடுத்துக் கொண்டிருந்த அப்பங்களையும் மீன்களையும் சேகரித்தனர். பசியுடன் காத்திருந்த சகலருக்கும் அப்பங்களும் மீன்களும் பங்கிடப்பட்டன. சகலருக்கும் வயிறார உணவு கிடைத்தது. கூடைகளிலிருந்து உணவு எடுக்க எடுக்க தொகை பெருகிக்கொண்டிருந்ததே தவிர எதுவும் குறையவில்லை.

இவ்வாறு ஐயாயிரம் பேருக்கு உணவு வழங்கிய பின்னரும் பன்னிரண்டு கூடைகளில் உணவு மிஞ்சியிருந்தது. அங்கிருந்த அத்தனை பேரும் "மக்களை மீட்க இறைமகனார் வரப் போகிறார்!" என்று ஏற்கனவே தீர்க்கதரிசிகள் அறிவித்திருந்தபடி, "இவரே அத்தேவகுமாரன்" என்பதை திட்டவட்டமாக அறிந்துகொண்டனர்.

இயேசு பெருமான், திக்கற்ற மக்களுக்குத்

### இராஜகுமாரன்

ஒருநாள் இரவாகி இருள் சூழ்ந்துவரும் வேளையில் கடலைக்கடந்து கப்பல் நாகுமுக்குச் செல்ல இயேசுவும் சீடர்களும் புறப்பட்டனர். கடற்கரையிலிருந்த படகுகளில் சீடர்களை முன்பாகச் செல்லுமாறு இயேசு கேட்டுக்கொண்டார். அவர்கள் கடலில் சென்று கொண்டிருக்கும்போதுதான், கரையிலிருந்த அத்தனை படகுகளையும் தாங்களே எடுத்து வந்துவிட்டமையினால், 'இயேசுபிரான் பயணம் செய்ய வேறுபடகு எதுவும் இல்லையே!' என்று கவலை கொள்ளத்தலைப்பட்டனர்.

அப்போது கடற்கரையில் ஓர் ஒளிக்கதிர் தோன்றி கடலில் வேகமாக வந்து கொண்டிருப்பதை சீடர்கள் கண்டார்கள்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை [பு.ஆ] 03 விடை:** சகாரிய, எலிஸபேத்து.

**பரிசு பெறுவோர்:**

| | |
|---|---|
| 1. **பர்சானா சாதிகின்,** 67/ஏ உடதலவின்னை ம.கே, கடுகஸ்தொட்ட. | 3. **ஏ.பி.அப்துல்கௌபர்,** ஆர்.எம், நகர், பொத்துவில்-02. |
| 2. **றொபேட்சன் செல்வநாயகம்,** மாகலைத் தோட்டம், சாமிமலை. | 4. **ஆர்.சுரதிஸ்,** க/கலா பொக்க.த.வி., மடுல்கெல. |
| 5. **ஜே.தேவாசீர்வாதம்,** ஏஞ்சல் இல்லம், 66 குடாகம, அட்டன். | |

**திருமறை (பு ஆ) 06 வினா :-** இயேசுவின் போதனைகளைக் கேட்க எத்தனை பேர் கூடியிருந்தனர்?

ஜூலை.03 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:

**திருமறை பு.ஆ.06–தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

# காலை எழுந்ததும் படிப்பு

**ஆயிரமாவது அறிக்கை வெளியிட்ட அரசியல் விவேகி, ஜனநாயகம் என்றால் 'ஆயுதம் ஏந்தாமை' என்ற புதுவிளக்கம் கண்ட புரவலர் அவர்களுடன் நேர்காணல்.**

**கே: இந்த சாதனைக்கு என்ன காரணம்?**

தலை: என் சுறுசுறுப்புத்தான் காரணம். அத்தோடு தினசரி காலையில் பத்திரிகை படிக்கும் பழக்கமும் காரணம்.



**கே: சற்று சுருக்கமாக விளக்குவீர்களா?**

தலை: காலையில் எழுந்ததும் பல் துலக்க முன்னர் பத்திரிகைகளை படிப்பேன். அன்று பலரையும் கவரக்கூடிய பிரச்சனை எதுவென்று விவேகத்துடன் கண்டுபிடிப்பேன். பின்னர் பல்துலக்கும்போது யார் யார் முகவரிக்கு அறிக்கை எழுதி பத்திரிகைகளுக்கு கொடுக்கலாம் என்று சிந்திப்பேன்.

**கே: நீங்கள் கொடுத்த அறிக்கைகள் எதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லையே?**

தலை: தமிழ் மக்களுக்கு பொறுமை அவசியம். பொறுத்தார் அரசாள்வார். ஆகவே, நம்பிக்கையோடு தமிழர்கள் தூங்கலாம். அவர்களை எங்குகொண்டு நிறுத்த வேண்டுமோ அங்கு கொண்டு போய் நிறுத்தத்தான் போகிறேன்!

**கே: ஆயிரம் அறிக்கைவிட்ட இந்த சாதனை நாளில் நீங்கள் யாருக்கு நன்றி சொல்ல விரும்புகிறீர்கள்?**

தலை: இத்தனை அறிக்கைகளையும் பொறுமையோடு படித்து அமைதிகாக்கும் மக்களுக்கு நன்றி கூறவேண்டும்.

**கே: தாங்கள் விடும் ஒவ்வொரு அறிக்கையையும் படித்துவிட்டு எல்லோரும் நினைவில் வைத்திருக்கிறார்கள் என்றா நினைக்கிறீர்கள்?**

தலை: (மர்மப் புன்னகையுடன்) நினைவில் வைத்திருக்கக் கூடாது என்பதுதானே என் ஆசை. மக்களது மனங்களில் எந்தச் சுமையும் இருக்கக்கூடாது என்று ஆசைப்படுபவன் நான். அதனால் நாங்கள் அவ்வப்போது விடுக்கும் அறிக்கைகளையும், வாக்குறுதிகளையும் மனதில் சுமந்து கஷ்டப்படுவானேன்?

**கே: தங்கள் அறிக்கைகளை தரம், பொருள் அறியாது தாராளமாக வெளியிட்ட செய்தி ஊடகங்களுக்கு நன்றி சொல்லவில்லையா?**

தலை: நான் ஏன் சொல்லவேண்டும்? அவர்கள் அல்லவோ நன்றி கூறவேண்டும். செய்தி ஊடகங்களின் எண்ணிக்கைகள் அதிகமாகிவிட்டதால் செய்திகளுக்கு எங்களைத்தான் நாடுகிறார்கள். நாம் சும்மா இருந்தாலும் நம் வாயைக் கிளறி தவிர்க்க முடியாமல் புளுகவைப்பதும் அவர்கள்தான். செய்திப் பஞ்சம், செய்திப் போட்டி என்பவற்றால் அல்லல்படும் செய்தி ஊடகங்களுக்கு அள்ள அள்ளக் குறையாத அறிக்கைச் சுரங்கமாக என்னைப் போன்றவர்கள் இருப்பதுதானே சாலச் சிறந்தது?! என்ன கூறுகிறீர்?

**கே: ஆம்! ஆம்! உங்கள் அடுத்த சாதனை இலக்கு யாதோ?**

தலை: இன்டர் நெட்டில் அம்மையாருக்கு தினசரி அறிக்கை அனுப்புவது! உடனுக்குடன் பிரச்சனைகளை அவர் கவனத்திற்கு கொண்டு செல்லுவது?

**கே: அவரது செயலாளர்களுக்கு வேலை காலியாகப் போகிறதா?**

தலை: கிண்டல் வேண்டாம்! சுண்டல் கிடைத்தால் கூட அதனையும் வாங்கி வயிற்றில் போடும் பக்குவம் தமிழ் மக்களுக்கு ஏற்படவேண்டும்! பொறுமை! பொறுமை! பொறுமை! அதுவே பெருமை! நன்றி- வணக்கம்.

### கா.பூ.கந்தசாமியார் ரசித்த குறும்பு: உங்களுக்கும் உதவும் பாருங்கள்!






"வேறொண்ணுமில்ல. பையன் கிரிக்கெட் மூட்ல இருக்கான். அதான் நாலுபேர் பார்க்க வந்திருக்காங்கறதை இப்படி சொல்றான்..."

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

www.padippakam.com

Regd. as a News Paper at the G.P.O.(QD/40/NEWS/99)




அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை: 105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு–06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331


பாகிஸ்தான் அணியின் எழுச்சிக்கு காரணமான அதிரடி வீரர் இன்சமாம். 29 வயது. ஆனால் பெரும் தேகம். முகத்தில் மட்டும் குழந்தைத் தனம். சட்டென்று கோபம் வரும்.

அவுஸ்திரேலியா, சிம்பாப்வே அணிகளிடம் சொந்த மண்ணிலேயே தோல்வி கண்டு காயம்பட்டிருந்தது பாகிஸ்தான் அணி.

அந்தக் காயத்திலிருந்து மீண்டு உலகக் கோப்பை போட்டிகளில் நிமிர்ந்து நிற்க வைத்த தூண்களில் இன்சமாம் பெயரைக் கட்டாயம் சேர்க்க வேண்டும்.

பாகிஸ்தானில் பைசாலபாத்தில் பிறந்தவர். வலது கை துடுப்பாட்ட வீரர். சிறந்த பந்து தடுப்பாளர். தற்போது தேகம் சற்று ஒத்துழைக்க மறுக்கிறது.



# அதிரடி




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


சட்டென்று குனிந்து தெளிந்து ஆட உடல் ஒத்துழைப்பு அவசியம். அதனால் அடுத்த நூற்றாண்டில் நடக்கப்போகும் உலகக் கிண்ணப் போட்டியில் பங்கு கொள்ள இயலாமல் போகலாம்.

இம்முறை உ.கி.போட்டிகளுக்கு முன்பு 172 இன்னிங்ஸ் விளையாடி 5 ஆயிரத்தி 867 ஓட்டங்களை குவித்துள்ளார். சராசரி 39.39. ஆறு சதம். 41 அரைச் சதம். அதிக பட்சம் 137.

மும்முறை உலகக் கோப்பை போட்டிகளில் சிலர் தவிர இன்சமாம் பிரகாசித்தார். விக்கெட்டுக்களுக்கிடையே ஓடி ஓட்டம் சேகரிப்பதில் மட்டும் சற்று தடுமாறிப்போனார். அதிலும் மொகின்கானுக்கு ஈடுகொடுப்பது லேசான காரியமா? ஆயினும் தன் பருத்த உடலை தூக்கிக் கொண்டு அணிக்காக இன்சமாம் அயராது போராடியதை பாகிஸ்தான் அணி ரசிகர்கள் மறக்கமாட்டார்கள்.

# குளியல்




திறந்த வெளியில் குளியல் தொட்டியில் இருந்து குளித்துக் கொண்டிருக்கிறார் இந்த இளைஞர் என்று தான் பார்ப்பவர்கள் கருதுவார்கள்.

ஆனால் அது வல்ல; வியட்நாமில் உயிரியல் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கான பணம் திரட்டும் நோக்குடன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழக மாணவன் ஆண்டி கென்ற் என்பவர் கையாளும் யுக்தி இது.

இத்தொட்டிக்குள் தண்ணீரில்லை. பதிலாக பால், முட்டை, பழச்சாறு ஆகியவற்றைக் கொண்ட கலவையைத் தொட்டியில் நிரப்பி 24 மணி நேரம் அதில் குளித்துச் சாதனை செய்துள்ளார்.

இச் சாதனை மூலம் பெறப்பட்ட நிதி ஆய்வுக்கு பயன்படுத்தப்படவுள்ளது. குளியல் புது ரகம். ○

# உறுதி



அவுஸ்திரேலிய அணிக்கு இம்முறை உலகக் கிண்ணப் போட்டியில் முதுகெலும்பாக இருந்த பந்து வீச்சாளர்களில் ஒருவர் மெக்ராத். முழுப்பெயர் கிளன் டொனால்ட் மெக்ராத்.

அவுஸ்திரேலியாவில் கிரிக்கெட் இல்லாத ஊரில் பிறந்து, தன் விடா முயற்சியால் கிரிக்கெட் உலகில் முத்திரை பதித்து வருகிறார்.

இம்முறை உலகக் கிண்ணப் போட்டியில் அவுஸ்திரேலிய அணி கப்டன் ஒரு உத்தியைக் கடைப்பிடித்தார். போட்டிகளில் கலந்து கொள்ளும் ஏனைய அணி வீரர்களை கவனித்து, அவர்களது பலம், பலவீனத்தை எடைபோடச் சொன்னார்.

டெண்டுல்கர், லாரா ஆகியோரை கவனித்தவர் மெக்ராத். கப்டனின் உத்திக்கு கைமேல் பலன்.

மேற்கிந்திய கப்டன் லாராவை களத்தை விட்டு தூக்கிப் போட்டது மெக்ராத் வீசிய பந்து. அதுபோல இந்தியப் புயல் டெண்டுல்காரின் விக்கெட்டும் மெக்ராத்தின் பந்தில் எகிறியது.


இரு அணிகளுமே அவுஸ்திரேலியாவிடம் தோற்பதற்கு மெக்ராத்தின் பந்து வீச்சுத்தான் சிந்து பாடியது.

மெக்ராத் உலகக் கோப்பை போட்டிக்கு முன்பாக 86 போட்டிகளில் விளையாடி 122 விக்கெட்டுக்களை கொய்திருக்கிறார்.

நான்கு விக்கெட்டுக்களுக்கு மேல் 7 தடவைகள் சாய்த்திருக்கிறார்.

29 வயதான மெக்ராத்துக்கு துடுப்பாட்டம் மட்டும் எட்டாப் பொருத்தம். மொத்தம் 49 ஓட்டங்கள் மட்டுமே சேகரித்திருக்கிறார்.

அடுத்த நூற்றாண்டின் உலகக் கிண்ணப் போட்டியிலும் மெக்ராத்தின் பந்து பேசும்.



# பேரழிவு

குண்டு வீச்சால் உருக்குலைந்த பகுதியல்ல. இயற்கையின் கோரத் தாக்குதலின் விளைவுதான் இது.

கடந்த மார்ச் மாதம் அமெரிக்க லூசியானா மாநிலத்தை பயங்கர சூறாவளி தாக்கியது. சூறாவளி கடந்து சென்ற பாதையில் உள்ள பென்ரன் என்னும் ஊரில் சுமார் நான்கு மைல் தூரப்பகுதி பயங்கரமாக தாக்கப்பட்டது.

அப் பிரதேசத்திலுள்ள வீடுகள் மற்றும் கட்டடங்கள் அனைத்தும் அடி அத்திவாரத்துடன் பிடுங்கி எறியப்பட்டன. சில வீடுகளை தூக்கி மற்ற வீடுகளுக்கு மேல் வைத்து விட்டும் போனது.

ஆனாலும் உடமைகளோடு விளையாடிய சூறாவளி மக்களின் உயிர்களோடு பெரிதாக விளையாடவில்லை. ஆக, ஆறுபேர் மட்டுமே உயிரிழந்தனர். ஆனால் ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தனர்.

இயற்கையின் கோரத்தாண்டவத்தை கச்சிதமாக சித்தரிக்கிறதல்லவா இப்படம்.

அமெரிக்காவின் குண்டு வீச்சால் பல நாடுகள் பேரழிவுகளை சந்தித்தன. அமெரிக்காவிலோ இயற்கையின் தாக்குதல். ○

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



விதுனா - விதுரா 20.06.1999

*வாழ்க வளமுடன்*

சாவகச்சேரி மீசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடா ரொரென்டோவில் வசிப்பவர்களுமான விக்கினேஸ்வரன்-கோகிலா தம்பதிகளின் அருந்தவப் புதல்விகள் விதுனா, விதுரா இரட்டையர்கள் தமது 1வது பிறந்த தினத்தை Canada Toronto விலுள்ள இல்லத்தில் (20.06.99) கொண்டாடினார்கள்.

இவர்களை அன்பு அப்பா, அம்மா, லிரோஷன் அண்ணா, மீசாலையில் இருக்கும் அம்மப்பா, அம்மம்மா, பூட்டிமார், அப்பப்பா, அப்பம்மா சுவிஸில் இருக்கும் சுதா மாமா, இத்தாலியிலுள்ள ரவிமாமா, அத்தை, சித்திமார்கள், பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமன்மார், மாமிமார், அண்ணன்மார், தம்பிமார் நல்லூர்க் கந்தன் அருள்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.